R.R. 351/55/71
ASO(B)
1029

வெளியீடு—26—7—1970]
Issued—26—7—1970]

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1969 ஆகஸ்ட் 14

Thursday, 14th August 1969

தொகுதி XXI—எண் 1

Volume XXI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

ய211,31 N69
N69. 91. 1—3
122525

உள்ளடக்கம்

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் ..	i-iv
தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	v
தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்	i-xii
1. இரங்கல் தீர்மானங்கள்.—	
(i) காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களின் மறைவு குறித்து	1-17
(ii) காலஞ்சென்ற வேளாண்மை அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்களின் மறைவு குறித்து ..	
2. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்	17-34

A 84—(1)

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) : கீழ்க்** கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்கு களின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளி நாட்டில் வாழும் இந்தியர், அகதிகள் இடம் பெயர்ந்தவர்கள்.

4. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மைத் துறை, அரிசன நல அமைச்சர்) : கீழ்க்கண்ட** துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீன் வளம், சுற்றுலா.

5. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பிற்பட்டோர் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசாங்க அச்சகம்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரி அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்குதுறை.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : **தொழில்கள்,** ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்கு கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் waqufs.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : கூட்டுறவு, போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, வெளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்.

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம் சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரத் துறை, இரவலர்கள், அநாதை இல்லங்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu

SARDAR UJJAL SINGH.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production, Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in-charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries and Tourism.

5. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax, Agricultural Refinance and Ports.

11. THE HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accommodation Control, Approved Schools and Vigilance Services.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forest and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட், பி.ஏ., பி.எல்.,

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ந. தருமலிங்கம்.
திரு. செஞ்சி வெ. முனுசாமி.
திரு. ப. மகாதேவன்.
திரு. கரு. சீமைச்சாமி.
திரு. சி. கோவிந்தராஜன்.
திரு. அ. லெ. சுப்பிரமணியம்.

சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. து. நடராசன், எம்.ஏ.,பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி,
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை.

உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
1	அப்துல் கபூர் சாகிப், எம்.	இராணிப்பேட்டை
2	ஆதித்தனார், சி. பா. (அமைச்சர்) ..	ஸ்ரீவைகுண்டம்
3	அக்னிராஜு, எஸ்.	திருப்பரங்குன்றம்
4	அழகமுத்து, து. ப. (அரசாங்க .. தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) ..	உப்பிலியாபுரம்
5	அழகர்சாமி, சோ.	கோயில்பட்டி
6	அழகுதேவர், எஸ்.	சிவகாசி
7	அலங்காரம், மு.	கடலாடி (செ. வ.)
8	ஆனந்தன், மு.	ரிஷிவந்தியம் (செ. வ.)
9	ஆண்டி என்ற குருசாமி, கு.	ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ. வ.)
10	அண்ணாமலை, சி. வி. எம்.	கடம்பத்தூர்
11	அண்ணாமலை, வி. டி.	பெரனமல்லூர்
12	அரங்கநாதன், ஆர். என்.	சோளிங்கபுரம்
13	அரங்கண்ணல், இராம.	மயிலாப்பூர் (சென்னை மாநகரம்)
14	அரசு, அ. பொ.	திருவொற்றியூர்
15	ஆறுமுகம், அ.	எடப்பாடி
16	ஆறுமுகம், எஸ்.	வீரபாண்டி
17	ஆலடி அருணா, வி.	ஆலங்குளம்
18	ஆசைத்தம்பி, ஏ. வி. பி.	எழும்பூர் (சென்னை மாநகரம்)
19	ஆதிமூலம், டி. எஸ்.	சேரன்மகாதேவி
20	பாலன், எம். சி.	நாகர்கோயில்
21	பாலகிருஷ்ணன், ஏ. கோ.	வானூர் (செ. வ.)
22	பலராமன், இல.	கணியம்பாடி
23	பாலசுப்பிரமணியம், எ.	திண்டுக்கல்
24	பெள்ளிகௌடர், ஜெ.	கூனூர்
25	பாரதி மோகன், கோ.	குத்தாலம்
26	பூபதி, எம்.	கோயம்புத்தூர்-கிழக்கு
27	பூவராகன், கோ.	விருத்தாசலம்
28	போஜன், கே.	உதகமண்டலம்
29	சீமைச்சாமி, கரு.	மானாமதுரை
30	சிதம்பரநாத நாடார், எ.	கொளச்சல்
31	சின்னராஜி சி. கே.	திருப்பத்தூர்
32	சின்னச்சாமி, மு.	ஈரோடு
33	சின்னசாமி, வி.	ஏர்க்காடு (ஆ. வா.)
34	சித்தன், என். எஸ். வி.	திருமங்கலம்
35	தனுஷ்கோடி, பி. எஸ்.	திருவாரூர் (செ. வ.)
36	தருமலிங்கம், ந.	திருத்துறைப்பூண்டி

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
37	துரைராஜ், சு. ம.	திருவள்ளூர் (செ. வ.)
38	துரைபாண்டியன், எஸ்.	நாங்குனேரி
39	துரைராஜ், பி.	சங்கரன்கோவில் (செ. வ.)
40	துரைசாமி, சு.	திருப்பூர்
41	துரையரசன், ஆ.	அறந்தாங்கி
42	எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் .. துணைத் தலைவர்) ..	திருச்செந்தூர்
43	இளம்வழுதி, இரெ.	கடலூர்
44	எல்லப்பன், பி. எஸ்.	அச்சரப்பாக்கம் (செ. வ.)
45	கணேசன், எல்.	ஒரத்தநாடு
46	கணேசன், எஸ்.	செம்பனார்கோவில்
47	ஜார்ஜ். வ.	பத்மநாபபுரம்
48	ஞானசம்பந்தம், கொ. இரா.	நாகப்பட்டினம்
49	கோமதிசங்கர தீட்சிதர், க.	அம்பாசமுத்திரம்
50	கோபால், எம்.	குன்றத்தூர் (செ. வ.)
51	கோவிந்தன், கே. ஆர்.	தாரமங்கலம்
52	கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்)	செய்யாறு
53	கோவிந்தராசன், ம. சொ.	மதுரை-சென்ட்ரல்
54	கோவிந்தராசன், சி.	நெல்லிக்குப்பம்
55	கோவிந்தராஜன், வி. எஸ்.	புரசவாக்கம் (சென்னை மாநகரம்)
56	கோவிந்தராசுலு, கே.	கோயம்புத்தூர்-மேற்கு
57	கோவிந்தராசன், ஆ.	புவனகிரி
58	ஹபிபுல்லா பேக், டாக்டர்	ஹார்பர் (சென்னை மாநகரம்)
59	ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை மாநகரம்)
60	இளஞ்செழியன், வீ. சர.	விராலிமலை
61	இராசரத்தினம், டி.	ஸ்ரீபெரும்புதூர்
62	ஜேம்ஸ், ஜே.	திருவட்டார்
63	ஜானகியம்மாள், திருமதி கே. பி. ..	மதுரை-கிழக்கு
64	ஜயராஜ், பி.	நன்னிலம் (செ. வ.)
65	ஜயராமன், கி.	சேலம்-1
66	ஜெயராமன், பி.	பெர்னம்பட்டு (செ. வ.)
67	கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. ..	ஜெயங்கொண்டம் (செ.வ.)
68	கனகசபை, ரா.	சிதம்பரம்
69	கந்தசாமி கவுண்டர், செ.	அரவக்குறிச்சி
70	கந்தசாமி எம்.	குளித்தலை
71	கந்தசாமி படையாச்சி, மு.	உளுந்தூர்ப்பேட்டை
72	கண்ணன், எம். ஆர்.	பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்)
73	கண்ணப்பன், எம்.	கிணத்துக்கடவு
74	கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. ..	திருவாடானை

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
75	கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்)	சைதாப்பேட்டை (சென்னை நகரம்)
76	கருப்பையா, ஆ.	கங்கைகொண்டான் (செ. வ.)
77	கருப்பையா, ஆர்.	அரியலூர்
78	கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்)	சத்தியமங்கலம்
79	காசிராமன், நா.	கும்பகோணம்
80	கதிரவன், க. மு.	தென்காசி
81	கேசவலு, தே.	கள்ளக்குறிச்சி
82	கிட்டப்பா, என்.	மாயூரம்
83	கொளத்தூர் கோதண்டம்	மதுராந்தகம்
84	கோதண்டராமன், வி. கே.	குடியாத்தம்
58	கோதண்டராமையா, கே. எஸ்.	உத்தனப்பள்ளி
86	கிருஷ்ணமூர்த்தி, கு.	பழனி (செ. வ.)
87	கிருஷ்ணமூர்த்தி, சி.	கொடவாசல்
88	கிருஷ்ணமூர்த்தி, மு.	பேராவூரணி
89	கிருஷ்ணன், அ.	மங்களூர் (செ, வ.)
90	கிருஷ்ணன், ஈ. ஆர்.	சேலம்-2
91	கிருட்டிணன், நா.	காஞ்சீபுரம்
92	கிருஷ்ணசாமி கவுண்டர், ர.	அவினாசி
93	குமாரசாமி, கே. என்.	பல்லடம்
94	குப்பம்மாள், திருமதி சி.	போளூர்
95	மாதவன், செ. (அமைச்சர்)	திருப்பத்தூர்
96	மகாதேவன், ப.	கன்யாகுமரி
97	மலைச்சாமி, பெ.	மேலூர்
98	மலைக்கண்ணன், வீ.	இளையாங்குடி
99	மணி, கே. பி. எஸ்.	சீர்காழி (செ. வ.)
100	மணி, எம். எஸ்.	திருச்சிராப்பள்ளி-1
101	மணி, வி. எஸ். எஸ்.	ஆத்தூர்
102	மாணிக்கவாசகம், இரா.	தொண்டாமுத்தூர்
103	மணியன், பி. எஸ்.	சோழவந்தான்
104	மாரிமுத்து, அ.	ஆடுதுறை
105	மாரிமுத்து, எ. ஆர்.	பட்டுக்கோட்டை
106	மாரிமுத்து, மு.	தலைவாசல் (செ. வ.)
107	மார்டின், டி.	சாத்தான்குளம்
108	மருதாசலம், என்.	பேரூர் (செ. வ.)
109	மதியழகன், கே. எ. (அமைச்சர்)	ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்)
110	மெய்யப்பன், சா.	காரைக்குடி
111	மேத்தா, எம்.	பெரியகுளம்
112	மூக்கையா தேவர், பி. கே.	உசிலம்பட்டி
113	முனுசாமி கௌண்டர், பி. எம்.	கிருஷ்ணகிரி

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
114	முனுசாமி, ரா. ரா.	மேல்மலையனூர்
115	முனியாண்டி, எ.	நிலக்கோட்டை (செ. வ.)
116	முனு ஆதி.	திருப்போரூர்
117	முருகையன், புலவர் க.	திருவையாறு
118	முருகையன், எஸ்.	கலசபாக்கம்
119	முருகேசன், க.	பாலக்கோடு
120	செஞ்சி முனுசாமி, வெ.	செஞ்சி
121	முத்தையா, கே. கே.	கடலூர்
122	முத்தையா, மு.	ஓட்டப்பிடாரம் (செ. வ.)
123	முத்துலிங்கம், எஸ்.	வந்தவாசி (செ. வ.)
124	முத்துசாமி, பா, க.சி.	பெண்ணகரம்
125	முத்துசாமி, மா. (அமைச்சர்)	நாமக்கல்
126	முத்துச்செல்வன், பு. செ.	முசிறி
127	நாச்சிமுத்து, நா.	ஒட்டன்சத்திரம்
128	நாகலிங்கம், பா	பொன்னேரி (செ. வ.)
129	நாகசுந்தரம், ஆர்.	திருச்சிராப்பள்ளி-2
130	நல்லசிவன், க. ர.	மொடக்குறிச்சி
131	நல்லசாமி, தோ. மு.	கரூர்
132	நஞ்சன், சி.	கூடலூர் (செ, வ.)
133	நரசிம்மன், எ. சி.	ஆரணி
134	நாராயணன், இரா.	வரகூர்
135	நடராசன், மு. க. து.	லால்குடி
136	நடராஜன், ஜி.	காட்பாடி
137	நடராசன், ஈ. எம்.	அந்தியூர்
138	நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்)	திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்)
139	பச்சையப்பன், எஸ். பி.	சங்கராபுரம்
140	பழனி, சி	ஓமலூர் (செ. வ.)
141	பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம் (செ. வ.)
142	பழனிவேல் ராஜன்	தேனி
143	பன்னீர்செல்வம், எம்.	ஆம்பூர் (செ. வ.)
144	பரமசிவம், பி. என்.	பொங்களூர்
145	பரமசிவம், எஸ்.	ஆண்டிப்பட்டி
146	பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ்.	தஞ்சாவூர்
147	பட்டாபி நாயுடு, எ.	காவேரிப்பட்டணம்
148	பீர் முஹமது, ஹாஜி, ம. மு.	மேலப்பாளையம்
149	பெரியசாமி, பெ.	ராசிபுரம்
150	பெருமாள், எ. ஆர்.	கரியாப்பட்டி
151	பொன்னம்பலம், புலவர் பொ.	திருமயம்
152	பொன்னப்ப நாடார், ஆர்.	விளவங்கோடு
153	பொன்னுமலை, தி.	பனமரத்துப்பட்டி
154	ராஜா, எ. எம்,	பவானி
155	ராசகோபால், க. மு,	உத்திரமேரூர்

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
156	ராஜமன்னுர், எஸ். எ.	வாணியம்பாடி
157	இராசாங்கம், மா.	கம்பம்
158	ராஜாங்கம், என்.	குறிஞ்சிப்பாடி (செ. வ.)
159	ராஜவேலு, டி. எ, ...	திருச்செங்கோடு
160	ராமச்சந்திர துரை, ரா.	கந்தர்வக்கோட்டை
161	இராமச்சந்திரன், க. ந.	ஆண்டிமடம்
162	ராமச்சந்திரன், எம். ஜி.	பரங்கிமலை
163	இராமச்சந்திரன், எஸ்.	பண்ருட்டி
164	ராமலிங்கம், என்.	ஸ்ரீரங்கம் (செ. வ.)
165	இராமமூர்த்தி, க.	திண்டிவனம்
166	இராமன், மு.	கண்டமங்கலம் (செ. வ.)
167	ராமன், ஓ. பி. (அமைச்சர்)	மேலூர்-தெற்கு (செ. வ.)
168	இராமராசன், வ. க.	பவானிசாகர் (செ. வ.)
169	இராமசாமி, இ.	வால்பாறை (செ. வ.)
170	ராமசாமி கவுண்டர், கே. எஸ். ..	கோபிச்செட்டிப்பாளையம்
171	ராமசாமி, எஸ். ஜே.	அரக்கோணம்
172	இராசு, ஜே. எஸ்.	பெரம்பலூர்
173	இரத்தினசபாபதி, மு.	விளாத்திகுளம்
174	ரெத்தினதேவர், ரா.	முதுகுளத்தூர்
175	சாதிக்பாட்சா, எஸ். ஜே. (அமைச்சர்) ..	உடுமலைப்பேட்டை
176	சகாதேவன் கண்டர், கே.	தண்டராம்பட்டு
177	சாமிநாதன், கே. எஸ்.	வெள்ளக்கோயில்
178	சங்கரய்யா, என்.	மதுரை-மேற்கு
179	சந்தானம், பி. எஸ்.	செங்கம் (செ. வ.)
180	சாரதி, மா. பா.	வேலூர்
181	சத்தியவாணிமுத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) ..	பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்)
182	சீனிவாச நாயக்கர், ஆர்.	சாத்தூர்
183	சீனிவாசன், பெ.	விருதுநகர்
184	செல்லா கவுண்டர், அ.	சேந்தமங்கலம் (ஆ. வா.)
185	சேனுபதி, அ.	காங்கேயம்
186	சேதுராமன், சி.	சிவகங்கை
187	சண்முகம், எம்.	விழுப்புரம்
188	சண்முகசுந்தரம், அ. ப.	பொள்ளாச்சி
*189	சண்முகசுந்தரம், என்.	பெருந்துறை
190	சிறைமீட்டான் தொ. க.	பரமக்குடி
191	சிவஞானம், ம. பொ.	தியாகராயநகர் (சென்னை மாநகரம்)
192	சிவபெருமாள், க. ந.	ஆத்தூர்
193	சிவசாமி, மு. ச.	தூத்துக்குடி

* 20-8-1969ல் இயற்கை எய்தினர்.

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
194	சிவசுப்பிரமணியன், எஸ்.	காட்டுமன்னார் கோயில் (செ. வ.)
195	சோமசுந்தரம், ந.	வலங்கைமான் (செ. வ.)
196	சௌந்தரபாண்டியன், நா.	ராதாபுரம்
197	சௌந்தரபாண்டியன், பெ.	கிருஷ்ணராயபுரம் (செ. வ.)
198	சௌந்தரராஜ மூப்பனார், இரா. ..	பாபநாசம்
199	சுந்தரபாரதி, சௌடி எஸ்.	அருப்புக்கோட்டை
200	சீனிவாசன், க.	போடிநாயக்கனூர்
201	சுவாரெஸ், திருமதி எ.	நியமன உறுப்பினர்
202	சுப்பராஜா, எ. அ.	இராஜபாளையம்
203	சுப்பையா, ஆ. கு.	கோட்டூர் (செ. வ.)
204	சுப்பையா, கே. வி. (அமைச்சர்)	ஆலங்குடி
205	சுப்பையா முதலியார், எ. ஆர். ..	கடையநல்லூர்
206	சுப்பிரமணியம், அ. லெ.	திருநெல்வேலி
207	சுப்பிரமணிய கவுண்டர், எம். ..	தர்மபுரி
208	சுப்பிரமணியம், இ. எம்.	திருக்கோவிலூர்
209	சுரேந்திரன், எம்.	மேட்டூர்
210	சுவாமிநாத ஒடையார். த். சி. ..	மன்னார்குடி
211	சுவாமிநாதன், வை.	திருவெறும்பூர்
212	தம்பி நாயக்கர், பா.	வடமதுரை
213	தங்கப்பன், டி.	இராமநாதபுரம்
214	தவமணிதேவர், வி.	சேடப்பட்டி
215	தீர்த்தகிரி, ந.	ஊரூர் (செ. வ.)
216	தீர்த்தகிரி கவுண்டர், தி.	ஊத்தங்கரை
217	திம்மராய கவுண்டர், தி. சி.	நாட்ராம்பள்ளி
218	திப்பையா, டி. டி. எஸ்.	மேட்டுப்பாளையம்
219	வடிவேலு, எஸ். கே.	தொட்டியம்
220	வரதராஜன், என்.	வேடசந்தூர்
221	வேதாசலம், மு.	வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்)
222	வீரமணி, சி.	சங்கரி (செ. வ.)
223	வீராசாமி, ந.	ஆர்க்காடு
224	வேலப்பன், சி. வே.	கபிலமலை
225	வெள்ளத்துரை, எ.	வாசுதேவநல்லூர்
226	வேலுசாமி, பி.	சிங்கநல்லூர்
227	வெங்கடாசலதேவர், பெ.	வேதாரண்யம்
228	வெங்கடசாமி, பி.	ஹோசூர்
229	வேழவேந்தன், கா. (அமைச்சர்) ..	கும்மிடிபூண்டி
230	விஜயரகுநாத தொண்டமான், ஆர். ..	புதுக்கோட்டை
231	விஜயராஜ், தா.	திருவண்ணாமலை

தொடர் எண்.	உறுப்பினர்கள் பெயர்.			தொகுதி.
(1)	(2)			(3)
232	விநாயகம், கே.	..	..	திருத்தணி
233	விசுவநாதன், செ. கோ.	..	..	செங்கற்பட்டு
234	வில்லியம், எம்.	..	..	கிள்ளியூர்
235	வெற்றிடம்	..	..	முதுகையூர்

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

தொடர் எண்.	உறுப்பினர் பெயர்.		
(1)	(2)		
1	திரு. என். வி. நடராசன்	..	அமைச்சர்
2	திரு. ப. உ. சண்முகம்	..	அமைச்சர்
	திரு. எஸ். கோவிந்த சாமிநாதன்	..	தலைமை வழக்கறிஞர்

தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1969 ஆகஸ்ட் 14.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

காலஞ்சென்ற வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

(i) காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "1969, மே 3-ம் நாளன்று இந்தியக் குடியரசின் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் மறைந்ததையொட்டி, இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது ஆழ்ந்த அகன்ற கல்வியறிவும், நுண்ணிய புலமையும், செறிந்து, உயர்ந்த நாட்டுப்பற்றும் அவரை, அனைவரும் மேலோராக மதிக்கும் வண்ணம் செய்தன. வாழும் நாளில், பீடும், பெருமையும் நிறைந்த வாழ்வினராகத் திகழ்ந்தார். இறுதி நாளிலும் பிறர் கண்ணீர் வடிக்க மறைந்தார். தமது வாழ் நாளின் இறுதிவரை அவர் சற்றும் தளராது கடைப்பிடித்து வந்த உயரிய லட்சியங்களாகிய நாட்டுப்பற்று, நாட்டு ஒற்றுமை, சமயச் சார்பின்மை, மக்கள் தொண்டு முதலிய நற்பணிகளில் நம்மை நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வதே அவருடைய சீரிய நினைவுக்கு நாம் சூட்டும் சிறந்த புகழ் ஆரமாகும்.

அவரது மறைவால் வருந்தும் அவரது மாண்புறு துணைவியாருக்கும் குடும்பத்தின் ஏனையோருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், ஆறாத் துயரையும் தெரிவித்துக் கொள்கிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1969 ஆகஸ்ட் 14

(ii) காலஞ்சென்ற வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: "18—5—1969 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்கள் எதிர்பாராத வகையில் இவ்வுலகை நீத்து நம் அனைவரையும் பெருந் துயரத்தில் ஆழ்த்திவிட்டார். அப்பேதுறு நிலையினையொட்டி இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆடம்பரத்தின் நிழல் சிறிதும் படாத எளிமையும், எடுத்த காரியம் யாவினும் உண்மையாய் உழைக்கும் பாங்கும் தமிழ் மக்களின் பெரும் மதிப்பினை அவருக்குத் தேடித் தந்தன. இப் பண்புகள், அவரிடம் மாறுபட்ட கொள்கையுடையாரும் அவரைப் பெரிதும் மதிக்கும் வண்ணம் செய்தன. அவர் இயல்பாகவே அடக்கத்தின் உருவாகவும், பண்பு, பரிவு, அன்பு இவற்றின் நிலைக் களனாகவும் திகழ்ந்தார். வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் அவர் காட்டிய ஆர்வமும், அவரது அயராத உழைப்பும் இந்த மாநிலத்தின் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டு வரும் அமைதியான 'பசுமைப் புரட்சிக்குப்' பெரும் ஆக்கமளித்துள்ளன. அன்ன மாட்சியர் ஒருவரின் மறைவால், இம்மாநிலம் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காகப் பாடுபட்ட ஒரு பெருந்தகையை—ஒரு சிறந்த நிர்வாகியை—தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரை—இன்சொல் வழங்கும் இனியாரை—அன்புக்கும் எளிமைக்கும் உறைவிடமாம் ஒருவரை இழந்து விட்டது.

திருமதி கோவிந்தசாமிக்கும், அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், ஆறாத் துயரையும் தெரிவித்துக் கொள்கிறது." என்ற தீர்மானத்தையும் முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்கு மாத்திரம் அல்லாமல் இந்திய நாட்டு மக்களுக்கு இடிமேல் இடி விழுகின்ற செய்திகளாக இந்தச் செய்திகள் இருக்கின்றன என்பதனை நாம் அனைவரும் நன்றாக உணருகிறோம். மறைந்த பெரியவர், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் இந்தியாவிலேயே அமைதியின் வடிவமாகவும், அதே நேரத்திலே அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்ந்தார்கள். இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு அரும் சின்னத்தை உயிரோடு காட்டவேண்டு மானால் அது உத்தமர் காந்தியார் அவர்கள். அவர்களுக்குப் பிறகு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், அவர்களுக்குப் பிறகு லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், அவர்களுக்குப் பிறகு மறைந்த டாக்டர் ஜாகிர் உசேனைத்தான் இருந்தார்கள். அவர்களுடைய பேரிழப்பால் இன்று நாட்டில் எந்த அளவிற்குத் தலைகீழ் மாற்றங் கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் நாம் நன்றாக அறி வோம். டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களுடைய இழப்பு,

969- ஆகஸ்ட் 14] (திரு. மு. கருணாநிதி)

...செய்தியாக
ன்றைய ஒரு நாள் கண்ணீர் விட்டுக் கவலைப்படுகின்ற செய்தியாக
ட்டும் அல்லாமல், நீண்ட நாட்களுக்கு நினைத்து நினைத்துக்
கவலை கொள்ளத்தக்க செய்தியாகவும் உருவெடுத்துவிட்டது.
ஆகவே 'நிழலின் அருமை வெய்யிலில்தான் தெரியும்' என்பதைப்
போல் நிழலாகவே அவர்கள் இருந்த பெருமையை நாம்
அறிவோம். டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் சிறந்த பண்பாளர்,
அமைதியின் நிலைக்களன். அவர்கள் இன்று இல்லையே என்ற
வருத்தத்தில் இப்பேரவை பங்கு கொள்கிறது. அவர்களுடைய
குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்
கிறது.

டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் மறைந்துவிட்ட செய்தி வந்த அதே நாளிலேயே நம் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் இரண்டொரு மணி நேரத்திற்குள்ளாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்படக்கூடிய அளவிற்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொண்டும், தமிழ்நாட்டு மக்கள், அவர்கள் பிழைக்க வேண்டுமென்ற விழை வினைத் தெரிவித்தும், அவர்கள் பிரிய நேரிட்டது. இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் எளிமையும், இன்சொல் வழங்கும் இனிமையும், அன்புமுகத்தோடு பழகவேண்டுமென்ற உணர்வும் கொண்ட அவர்களை நாம் இழக்க நேர்ந்தது. அவர்கள் 1952-க்குப்பிறகு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உழைப்பாளர் கட்சியில் தன்னை அரும் பெரும் தொண்டராக மாற்றிக்கொண்டு, சட்ட மன்றத்திலே பணியாற்றுவதற்கு வெற்றிவாகையோடு வந்தார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளராக, மறைந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் பணி யாற்றி, தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளங்களை எல்லாம் கவர்ந்தார் கள். அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அன்பிற் குரியவராகவும், பெரியவராகவும் இருந்து, நல்லுரைகள் கூறி வழிநடத்திச் செல்லுகின்ற முறையிலே இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு பெரியவராக இருந்து, பெரியவர் என்ற முறையிலேயும், பழுத்த அனுபவசாலி என்ற முறையிலேயும் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தார்கள். அவர் களுடைய குடும்பம் மட்டும் அல்ல, நாங்கள் மட்டும் அல்ல, தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அவர்களுடைய மறைவிற்குக் கண்ணீர்விட்டார்கள். இந்தக் கண்ணீர் அவர்களை இழந்து தவிக்கின்றவர்களுக்கு ஓரளவிற்கு ஆறுதல் அளிக்கும் என்றாலும், அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை நாம் தொடர்ந்து நிறைவேற்றுவது அன்னாருக்கு நாம் தெரிவிக்கும் மரியாதை யாகும். அவர்களுடைய உற்றார் உறவினருக்கு இந்தப் பேரவை யின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

[1969 ஆகஸ்ட் 14

திரு. பி. ஜி. கருத்திருமன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவையின்முன் இருக்கும்படியான இந்த அனுதாபத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கும்படியான வகையிலே மிகவும் வருத்தத்துடன் ஆதரிக்கவேண்டியவனாக இருக்கிறேன். டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்திய நாட்டுக்கு மட்டு மல்ல, உலக மனித சமுதாயத்திற்கே பெருமையைத் தேடித் தரத்தக்க வகையில் உலகப் பிரஜையாக வாழ்ந்து வந்தார்கள். பாரத கண்டத்திலே உலகம் பாராட்டத்தக்க அளவிற்கு ஒருவராக அவர்கள் வாழ்ந்தார்கள். சுதந்திரப் போராட்ட காலத்திலே, பல இன்னல்களுக்கு இடையே ஜாதி மத பேதம் இல்லாமல் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகத் தியாகங்கள் செய்து, கல்வி ஆற்றல் உள்ளவராகவும், அன்பு உள்ளம் கொண்டவராகவும், பொறுப்பு உள்ளவராகவும், சிறந்த நிபுணராகவும் விளங்கினார்கள். அவர்கள் உப ஜனாதிபதியாக இருந்தபோது நம்முடைய நாட்டின் ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டிற்காகவும் உழைத்து மக்களுடைய வாழ்விற்கு ஒரு வழிகாட்டியாகவும் "ஆற்றலும், அறிவும், கல்வி அமைதியும் என்னு வேற்றுமை இவனோடில்லையாம்" என்று கம்பன் குறிப்பிட்டபடி வாழ்ந்தார்கள். அவர்கள் மறைந்தது இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, அகில இந்தியக் காங்கிரசுக்குப் பெரிய இழப்பாகும். காங்கிரஸ் கட்சிக்கு அவர்கள் பெரிய தூண் ஆகவும், வழிகாட்டியாகவும் இருந்து காங்கிரஸ் கட்சியிலே சுதந்திரப் போராட்டக் காலத்திலே பணியாற்றி இருந்தும்கூட, ஜனாதிபதியான உடனே கட்சிக்கு அப்பாற்பட்ட முறையிலே எல்லாக் கட்சிகளும் சமமான அந்தஸ்து பெறத்தக்க வகையிலே நடந்து வந்தார்கள். அவர்கள் மறைந்தது பாரத தேசத்திற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்குமே ஆறாத் துயரத்தை அளிப்பதாகும். ஒரு சிறந்த உலகப் பிரஜையை இழந்து விட்டோம். இந்த மாநிலச் சட்டசபைதான் கடைசியாக அனுதாபத் தீர்மானம் கொண்டு வருகிறது. மற்ற எல்லாச் சட்டசபைகளும் அனுதாபத் தீர்மானத்தை ஏற்கெனவே கொண்டுவந்து விட்டன. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அனுதாபத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும்கூட, மீண்டும் அவர்களை நினைவுபடுத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் இருக்கிறது. அவர்களுடைய குடும்பத்திற்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தச் சட்டசபை அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் நானும் பங்குகொண்டு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் மறைந்தவுடனேயே, உடல் நலக் குறைவுடன் நமது அருமை நண்பர், மறைந்த மாண்புமிகு அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும் திரு. கோவிந்தசாமி அவர்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருந்ததோ, அந்த அளவுக்குத் தொடர்பு எனக்கும் அவர்களுக்கும் இருந்தது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1969 ஆகஸ்ட் 14] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

திரு. கோவிந்தசாமி அவர்கள் 1952-ஆம் வருஷத்தில் முதன் முதலாகச் சட்ட மன்ற உறுப்பினராக வந்தார்கள். அப்பொழுது நானும் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும்படியான பாக்கி யத்தைப் பெற்றேன். அவர்கள் தொடர்ந்து, மாறி மாறி, சட்ட மன்ற உறுப்பினராக வந்துகொண்டிருக்கும்படியான சந்தர்ப்பத் தில், நானும் மாநிலச் சட்ட மன்றத்திலும், இந்தியப் பாராளு மன்றத்திலும் உறுப்பினராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். திரு. கோவிந்தசாமி அவர்கள் எதிர்கட்சி உறுப்பினராக இருந்த காலத்திலும்சரி, அமைச்சராக இருந்த காலத்திலும்சரி எனக்கும் அவருக்கும் இடையே இருந்த நட்பு எந்த விதத்திலும் குறையவில்லை என்பதை மிகவும் அன்புடன் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர் முதன் முதலில் அமைச்சராக வந்த சமயத்தில் உறுப்பினர்கள் விடுதியில் என்னைச் சந்தித்தார் கள். சந்தித்தவுடனேயே, என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு, மிகவும் பயந்தவொரு சுபாவம் உள்ளவராக, "நான் இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை; வந்துவிட்டேன்; இருந் தாலுங்கூட, உங்களுடைய ஒத்துழைப்பும், அன்பும், ஆதரவும் என்றும் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டது அவருடைய உயர்ந்த பண்புக்கு என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஒருவர் அமைச்சராக இருக்க லாம். சாதாரண அங்கத்தினராக இருக்கலாம். இரண்டுமே இல்லாமல் தனி மனிதராக இருக்கலாம். எந்தப் பதவி, எந்த அந்தஸ்தாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் பண்பாளராக யார் நடந்துகொள்ளுகிறார்களோ, அவர்கள்தான் சிறந்த நெறி யாளர்கள். பதவி வரலாம், போகலாம். பணம் வரலாம் போகலாம். பணமும் பதவியும் எவ்வளவுக்கெவ்வளவு உயருகிறதோ, அவ் வளவுக்கவ்வளவு பணிவும் கூடவே இருந்தால்தான் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் திரு. கோவிந்தசாமி அவர்கள். அவர் பதவிக் காலத்திலே பதவியைத் தவறாக உபயோகப்படுத்தினார் என்று நிச்சயமாகக் கூற முடியாது. அவர் பதவியில் இருந்த காலத்திலேகூட, எத்தனையோ சந்தர்ப்பங்களில் நான் தெரிவித்த ஆலோசனைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு, அன்போடு அவற்றை நிறைவேற்றி யிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். அந்த அளவுக்கு மிகச் சிறந்தவராகவும், மிக உயர்ந்தவ ராகவும் விளங்கினார்கள். அவர் அதிகமாக வயதாகிவிட்டவர் என்று சொல்ல முடியாது. இளம் வயதுதான். அந்த நிலையிலேயே நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

துரதிருஷ்ட வசமாக நம் நாட்டில் எவ்வளவோ திடீர் திடீரென்று எதிர்பாராத காரியங்களெல்லாம் நடந்துகொண்டு வருகின்றன. இந்திய தேசத்தின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் மறைந்துவிட்டார்கள். அதற்கு முன்னால் தமிழகத்தின் முலமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அண்ணாதுரை அவர்கள் நம் உள்ளத்திலெல்லாம் நிறைந்திருந்து, நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த நண்பர் அவர்கள் மறைந்தார்கள். ஆகவே, இப்படித் தொடர்ந்து துக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலும்கூட

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 14

மறைந்தவர்கள் எந்த லட்சியங்களுக்காக வாழ்ந்தார்கள், அவர்க
ளுடைய இழப்பு எத்தகையது என்பதை உணர்ந்து, தேசத்தின்
ஒருமைப்பாட்டுக்கும், தேச மக்களின் நல்வாழ்வுக்கும் நம்மை
அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும். அதுதான் குறிக்கோள்
என்பதை உணர்ந்து, முடிந்தவரையில் நாம் பாடுபட வேண்டும்.
காலஞ்சென்ற திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மனைவி
யாரும் குழந்தைகளும் மிகவும் அனுதாபத்துக்குரியவர்கள்.
அவருடைய குழந்தைகள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்
கொள்ளும் வயது வராதவர்கள். சிறு குழந்தைகள். திரு. கோவிந்த
சாமி அவர்கள், அனாதை (ஆர்ஃபன்) என்று சொல்லத்தக்க அந்த
நிலையில் இருந்த சாதாரண குடும்பத்தில் பிறந்து, உழைப்பால்
உயர்ந்து, அமைச்சர் பதவிக்கு வந்து, சிறந்த சேவை செய்து
கொண்டிருந்த நேரத்தில், காலதேவன் அவருடைய உயிரைப்
பறித்துக் கொண்ட நிலையில், அவருடைய குடும்பத்தார் படும்
கஷ்டத்தைப் போல் அவருடைய குழந்தைகள் படும் மன வேதனை
யைப் போல் எதுவுமே இருக்க முடியாது என்பதைப் பெற்றோர்
கள்தான் உணர்ந்து கொள்ள முடியும். அப்பேர்ப்பட்ட நிலை
யிலுள்ள அந்த அரும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குத்
தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அந்தக் கட்சியைச்
சார்ந்தவர்களும் மற்ற அன்பர்களும் சொன்னதை வரவேற்ப
துடன், அதைப் பூரணமாகச் செய்து, அனுதாபத்துக்குரிய அந்தக்
குடும்பத்தினரைப் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் கட்சியின் சார்பாகவும், தமிழ் மக்கள் சார்பாகவும்,
டாக்டர் ஜாகிர் உசேன், திரு. கோவிந்தசாமி ஆகியோரின்
மறைவு குறித்து என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: கனம் சபாநாயகர் அவர்களே,
கனம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கும்
இரு இரங்கல் தீர்மானங்களையும் எங்களுடைய சுதந்திராக்
கட்சியின் சார்பாக நாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கின்றோம்.

டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் பிறவியில் முஸ்லீமாக இருந்
தாலும், ஒரு சிறந்த இந்தியராகவே வாழ்ந்தார்கள். கல்வியிலே
மாபெரும் மேதை. முன்னாள் ராஷ்டிரபதி பதவியை அலங்கரித்த
டாக்டர் இராஜேந்திர பிரசாத், அதற்கு அடுத்தபடியாக
டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆகியவர்களுக்குக் குறைந்தவர்
அல்லர் என்று கருதப்படும் அளவுக்கு அந்தப் பதவியை அவர்
கட்சிப் பாகுபாடு இன்றி, உலக சரித்திரத்தில் இடம்பெறத்தக்க
அளவிற்கு அழகாக வகித்து வந்தார். வாஸ்தவத்திலேயே
டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் இன்னும் சில காலம் வாழ்ந்
திருந்து இந்த நாட்டில் நல்லதொரு அரசியல் பாரம்பரியத்தை
ஏற்படுத்தக்கூடிய தலைவர்களில் ஒருவராக விளங்கியிருக்க
வேண்டும். அன்னார் மறைந்தது குறித்து, எங்கள் கட்சியின்
சார்பாக, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1969 ஆகஸ்ட் 14] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

அதற்கு அடுத்தபடியாக, தமிழக அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி அவர்களின் மறைவாகும். திரு. கோவிந்தசாமி அவர்கள் சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்தவர்; கல்லூரிப் படிப்பு இல்லாதவர். என்றாலும், சட்டசபை நிர்வாகத்தில் நல்ல அனுபவஸ்தர். அவர் தம்முடைய சுய முயற்சியால், காலஞ்சென்ற மாமேதை, முன்னாள் முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்களுடைய நம்பிக்கைக்கு உரியவராக விளங்கினார். அவர் அத்தகைய உழைப்பாளர். அவர் 1957-ஆம் ஆண்டில் சட்டசபை மெம்பராக இருந்தார். அவரோடு நான் பழகியிருக்கிறேன், நண்பர் என்ற முறையில். அந்தக் காலத்தில் அவர் பேசும் போது தெரிவிக்கக்கூடிய காரியங்களையும், கருத்துக்களையும் அன்றுள்ள காங்கிரஸ் மந்திரிசபை—முக்கியமாக திரு. பக்தவத்சலம் அவர்களும் உன்னிப்பாகக் கவனித்து, அவருக்குத் தகுந்த பதில் அளிப்பார்கள். திரு. கோவிந்தசாமி அவர்கள் சட்டசபைத் துறையில் மிகவும் அனுபவம் உள்ளவர்கள். கேள்வி நேரத்தில் மெம்பர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நல்ல தகவல்களைக் கொடுக்க வேண்டும் என்று பிரயாசைப் படுவார்கள். கேள்வி கேட்கும் மெம்பர்கள் கொஞ்சம் தவறாகக் கேள்வி கேட்டாலும், அவர்களுடைய மனத்தைப் புண்படுத்தக்கூடிய முறையில் ஏதாவது சொல்ல வேண்டும் என்று அவர் நினைக்கமாட்டார். பிரயாசைப் பட்டு, நல்ல தகவல்களைச் சேகரித்து அவர்களுக்குக் கொடுப்பார். அம்மாதிரி வழக்கத்தை இங்குள்ள எல்லா அமைச்சர்களும் இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன். திரு. கோவிந்தசாமி அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, இந்த டி. எம். கே. மந்திரிசபையில் இருந்து, நம்முடைய தமிழ்நாட்டுக்கு நல்ல சேவை செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால், அத்தகைய வாய்ப்பு நமக்குக் கிடைக்காமற்போனது வாஸ்தவத்திலேயே துரதிருஷ்டவசமானது. திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மறைவுக்கும், டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களுடைய மறைவுக்கும் எங்கள் சுதந்திராக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த வேதனையுடன்கூடிய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய இரண்டு தீர்மானங்களையும் மார்க்ஸிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக நான் வழிமொழிகின்றேன்.

ஜனாதிபதியாக இருந்து மறைந்த டாக்டர் ஜாகிர் உசேன் சிறந்த கல்விமான். உண்மையிலேயே நீண்ட காலம் பொதுத் தொண்டு செய்து முன்னுக்கு வந்த ஒரு பெரியவர். பழுத்த அரசியல் வாதி. சிறந்த ராஜதந்திரி. விரிவான மனப்பான்மை கொண்டவர். அவ்வளவு அதிசயமான, அரிய குணங்களைக் கொண்டு, மதச்சார்பற்ற முறையில் ஒரு ஜனாதிபதி எப்படிப் பங்காற்ற வேண்டுமோ அந்த முறையில் பங்கு ஆற்றியவர். தோற் றத்திலே, நடப்பிலே, பேச்சிலே ஆர்ப்பாட்டமில்லாத அடக்கம்

கொண்டவர். அவர் மறைந்தது நாட்டுக்கு மிகப் பெரிய இழப்
பாகும். அவருடைய குடும்பத்தாருக்கு எனது கட்சியின்
சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறை அமைச்சராக நம்மோடு
இருந்து, தமிழ்நாட்டுக்குச் சேவை செய்துவந்த மாண்புமிகு
கோவிந்தசாமி அவர்களுடைய மறைவு குறித்து நாம் எல்லோரும்
வருந்துகிறோம். வயதானவர் என்று அவரைக் குறிப்பிடுவதில்
அர்த்தமே இல்லை. அப்படியிருந்தால் நம்மில் பலர் இங்கே
இருக்க முடியாது போய்விடும். இந்த வயதிலேயே வயதான
வர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமே கிடையாது
அவர் பேச்சிலே ஆர்ப்பாட்டம் இல்லாமல், அமைதியும் அடக்கமும்
நிறைந்தவராக இருந்தவர். சேவையிலே நோக்கம் கொண்டிருந்
தவர். அவரது அரிய சேவை தமிழகத்திற்கு திடீரென்று வெட்
டப்பட்டு, அவரும் நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.
அவர் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய நெருக்
கடியை நிவர்த்திக்கப் போதுமான ஏற்பாட்டை முதலமைச்சர்
அவர்களும் அவர் சார்ந்த கட்சியும் செய்துவருவது நாம் அனை
வரும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய முக்கியமான
விஷயமாகும். அரிய நண்பர், சீரிய பண்பாளர், வேளாண்மைத்
துறை அமைச்சராகப் பணியாற்றிய மாண்புமிகு திரு. கோவிந்த
சாமி அவர்களுடைய குடும்பத்தாருக்கு எனது கட்சியின் சார்
சார்பாக, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இரங்
கல் தீர்மானங்களை ஆதரித்து, நான் சார்ந்திருக்கிற பிரஜா சோஷ
லிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன்
அவர்கள் இந்த நாட்டிலே ஒரு சிறந்த பண்பாளராக, கல்விமானாக
விளங்கினார் என்பது நாடு பூராவும் அறிந்த உண்மை அவர் இந்த
நாட்டினுடைய ஒற்றுமையின் சின்னமாக விளங்கினார். அதோடு
மட்டுமல்ல; தன்னுடைய இளமைக் காலம் முதலே இந்த நாட்டிலே
கல்விமுறை எப்படி இருக்க வேண்டுமென்பதை ஆராய்ச்சி செய்
வதில் தலைமையானவராக விளங்கினார். ஆனால் துரதிருஷ்ட
வசமாக அவர் இன்று நம்மிடையே இல்லை. இந்த நாட்டிலே கல்வி
முறை எப்படி இருக்க வேண்டுமென்று திட்டம் வகுத்தார்களோ,
அந்தத் திட்டம் இந்த நாட்டிலே நிறைவேற்றப்படவில்லை
யென்பதை, அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் குறிப்
பிட்டிருக்கிறார். ஆதாரக் கல்வியைப்பற்றி ஒரு மாநாட்டிலே
கலந்து கொண்டு தலைமைதாங்கி நடத்துகையிலே, அந்த
மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள். 'ஆதாரக் கல்வியின் தந்தை'
என்று அவரைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். உடனே தலைமைப்
பீடத்திலிருந்து அவர் எழுந்து, 'நான் இப்போது இருக்கிற ஆதாரக்
கல்வியின் தந்தை அல்ல. இனிமேல் வரப்போகிற ஆதாரக் கல்வி

யின் தந்தை' என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த நாட்டிலே ஒரு
நல்ல ஆதாரக் கல்வி அமைய வேண்டுமென்பதற்காக அவர் மிகவும்
பாடுபட்டார். ஆகவே, அவருக்கு நாம் செலுத்தும்
மரியாதை என்னவென்றால், அவர் எந்த ஆதாரக் கல்வி
திட்டத்திற்காகப் பாடுபட்டாரோ, அந்தத் திட்டத்தை அமல்
படுத்தி செயலுக்குக் கொண்டுவருவதுதான். கல்வி என்பது மாநில
அதிகாரத்திற்குட்பட்ட ஒன்றாக இருப்பதால், அவருடைய கல்விக்
கொள்கை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து, அதைத் தமிழகத
திலே அமல்படுத்தினால் அதுவே அவருக்கு நாம் செய்யக்கூடிய
பெருமையாகும், பாராட்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே அமைச்சராக இருந்த
மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்களைப்பற்றி அதிகமாக நான்
சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை இல்லை.
திரு. கோவிந்தசாமி அவர்கள் ஏழையாகவே பிறந்து, ஏழையாகவே
வளர்ந்து, ஏழையாகவே வாழ்ந்து, ஏழையாகவே மறைந்த ஓர்
உத்தமர். பொதுவாழ்க்கையிலே ஈடுபட்டு, தன்னுடைய வாழ்க்
கையை அர்ப்பணித்தவர்களில் அவர் ஒருவர். எந்தவிதமான
புகழையும் விரும்பாத தொண்டராக விளங்கிய ஒரு தலைவர். அவரை
நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய மறை
வினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு பிரஜா சோஷலிஸ்ட்
கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. க. ரா. நல்லசிவன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது
மதிப்பிற்குரிய இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஜாகிர் ஹுசேன்
அவர்களும், தமிழகத்து அமைச்சர் மாண்புமிகு திரு. கோவிந்த
சாமி அவர்களும் பல விஷயங்களிலே ஒன்றுபட்டவர்களாக
விளங்கி வந்திருக்கிறார்கள். இருவரும் சமுதாயத்தின் அடித்தளத்
திலே இருந்து வந்தவர்கள். இரண்டு பேருமே அன்புடையவர்
களாக விளங்கினார்கள். அதுமாத்திரமல்ல, அவர்களுடைய அறிவு
அனுபவத்திலே கிடைத்ததாகும். தங்கள் தங்கள் அளவிலே எந்த
அளவுக்கு அந்த அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்த
முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்தினார்கள். இரண்டு பேரும்
பின்தங்கிய சமூகத்திலே இருந்து வந்தவர்கள். நாம் அவர்களுக்கு
ஏதாவது ஞாபகார்த்தமாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால்,
பின்தங்கிய மக்களை, சட்டங்களின் மூலமோ, நடைமுறையின்
மூலமோ முன்னேற்ற வேண்டும் என்பதுவே ஆகும். பின்தங்கிய
மக்களை உயர்த்துவதுதான் மறைந்த அவர்களுக்கு நாம் செய்யும்
ஞாபகார்த்தமாகும். இந்த இரண்டு பெரிய தலைவர்களின் ஞாப
கார்த்தமாக இதைச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சம்யுக்த
சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, என் கட்சி
யின் சார்பாக மறைந்த தலைவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களை மனப்
பூர்வமாக ஆதரிக்கிறோம் என்று கூறி அமர்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 14

* **திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களை **ஆதரித்து நான் சார்ந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்**பில், மறைந்த மாமேதைகளுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள், இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடிய மாபெரும் வீரராக விளங்கினார். அதுமாத்திரமல்ல; இந்திய நாட்டில் முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் **இடையே கலகங்கள் நடந்த காலத்தில் அவர் ஒற்றுமையின் சின்ன**மாக இருந்து, இரண்டு வகுப்பு மக்களுக்கும் பொதுவான தலைவராக, தொண்டராகப் பணியாற்றினார் என்பதை யாரும் மறக்க **முடியாது. மனித இனத்திற்கே ஒற்றுமையின் சின்னமாக அவர் வாழ்ந்து காட்டினார். அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டிலே, தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட, இந்தியாவிலேயே போற்றிப்** புகழ்ந்த உலகத் தமிழர் மாநாட்டிலே அவர் ஆற்றிய அறிவுரைகள் என்றுமே மறக்க முடியாத சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அவர் மறைந்தது பாரத நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே மிகப் பெரிய நஷ்டமாக இருக்கிறது. மறைந்த **மேதைக்கு அஞ்சலி செய்து, அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு என்னுடைய கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனு**தாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் 1952-ம் வருஷம் முதன்முதலிலே சட்டமன்றத்திற்கு வந்து, எதிர்க்கட்சியில் இருந்து அரும்பெரும் பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருந்தவர்களை அன்றைய ஆளும் கட்சி வலைவீசிப் **பிடித்த நேரங்களில் எல்லாம் அவர் அதை எதிர்த்து, தன்னந்தனி**யாக, முற்போக்கு சுயேச்சை வாதிகள் என்ற குரூப்பை அமைத்துக் கொண்டு, ஐந்து வருஷகாலம் பணியாற்றியிருக்கிறார்கள். **அவர் பணியாற்றிய நேரங்களில் எல்லாம் விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் போராடி இருக்கிறார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. இன்றையதினம் ஆளும் கட்சியாக வந்த** பிறகும்கூட—விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாய அமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பிறகும், அவர் ஒரு விவசாயியாகவே **வாழ்ந்து காட்டினார். எந்தவிதமான ஆடம்பரமும் இல்லாமல்** வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். மற்றவர்களும் அவரது அடிச்சுவட்டிலே வாழ வழி செய்திருக்கிறார்கள். அவரிடத்திலே எந்த **விதமான கட்சி வேறுபாடுகளுக்கும் மாச்சரியங்களுக்கும் இடம்** இல்லை. அன்பான முறையில் பழகுவதற்கு ஏற்றவர். அப்படிப்பட்ட விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் **மறைந்தது மிகப் பெரிய நஷ்டமாகும். அவர்களுடைய மறைவு** விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்ட**மாகும். மறைந்த அவருக்கு அஞ்சலியைச் செலுத்தி, அவரை இழந்து நிற்கும் அவரது குடும்பத்திற்கு என்னுடைய அனுதாபத்**தைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

1 ஆகஸ்ட் 14]

ஹாஜி ம. மு. பீர். முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே,
சமுதியத் துணைக் கண்டத்திலே வாழ்கின்ற முடிசூடிய குடி
ளின் முதல் மகனாக, இந்தியத் திருநாட்டிலே தன்னுடைய
ங்கை அனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்ட பெருமகனாக,
நாட்டு மக்கள் சீரிய கல்விமுறையால் மேம்பட, அம்
யில் நாட்டு மக்களை வளர்ப்பதற்குரிய பணிக்குத் தம்மை
ணித்துக் கொண்ட பெருமகனாக விளங்கிய டாக்டர் ஜாகிர்
ன் அவர்களுடைய மறைவிற்கும், நம்முடைய தமிழ் நாடு
ரசின் வேளாண்மைத் துறை அமைச்சராக, இந்த நாட்டு மக்க
ளுடைய பசியையும் பஞ்சத்தையும் போக்குவதற்கு உரிய முறை
யில் பங்கெடுத்துப் பணியாற்றிய பங்காளராக விளங்கிய விவசாய
அமைச்சர் ஐயா, திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மறை
விற்கும், தமிழக முதலமைச்சர் கொண்டு வந்துள்ள இரங்கற்
தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில்
வழிமொழிகின்றேன். எங்களுடைய அனுதாபத்தையும் தெரிவித்
துக் கொள்கிறேன்.

நம்முடைய இந்தியக் குடியரசின் தலைவராகப் பணிபுரிந்த
டாக்டர் ஜனாப் ஜாகிர் ஹுசேன் அவர்கள் தூர நோக்கோடு, ஞாய
நோக்கோடு, தேசிய மனப்பான்மையோடு எந்த அளவுக்கு ஒரு
முஸ்லீம் திருமகன் இந்த நாட்டை நேசித்து சிறப்பாகப் பணி
யாற்ற வேண்டுமோ அந்த அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்றி,
மற்றவர்களுக்கோர் இலக்கணமாகத் திகழ்ந்திருக்கிறார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று அருமை ஐயா—வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் கட்சிபேதமற்ற நிலையில் நாட்டின் விவசாயத்துறை வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான **யோசனைகளை யார் கூறினாலும், எந்த நேரத்தில் கூறினாலும்—பொதுக் கூட்டத்தில் கூறினாலும், கருத்தரங்கில் கூறினாலும், சட்ட மன்றத்தில் கூறினாலும்—யார் கூறினார்கள் என்பதைப் பார்க்காது** எந்தக் கருத்தோடு கூறுகிறார்கள், அதில் இருக்கின்ற உண்மை **என்ன என்பதைப் பார்த்து அந்த உண்மையை அடிப்படையாக** வைத்து இந்த நாட்டின் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய பல பணிகளைப் புரிந்திருக்கிறார்கள் என்பதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இறந்தார்மீது இருப்பார் இல்ல—இறப்பார்தான் இரங்கல் **தீர்மானம் கொண்டு வந்துள்ளோம் என்பதை நாம் உணர்ந்தாலும்** அவர்கள் நம்மைவிட்டுச் சென்றுவிட்டார்களே என்ற நிலையில் **நாம் பெரிதும் வேதனை அடைகின்றோம். "ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காலவரைக்கு உட்படுத்தியே நாம் உலகிற்கு அனுப்புகின்றோம். அந்தக் காலவரையரை முடிந்ததும் நாமே நம்மிடம்** அழைத்துக் கொள்வோம். யாரும் எதுவும் தடை செய்ய முடியாது" என்று வேத வசனம் நமக்கு விளக்கம் தந்தாலும் அதை **ஏற்று மனம் அமைதி கொள்ள முடியவில்லை, என்றாலும் கால**

[ஹாஜி ம. மு. பீர்முஹம்மது] [1969 ஆகஸ்ட்

மாவதால் ஏற்படும் இழப்பைக் காலம் தான் ஈடு செய்ய முடி நாம் இறைவனிடம் இருந்தே வந்தோம். இறைவனிடமே வோம்.

இந்தியத்தின் மக்களாட்சித் தலைவராகி
என்னத்தால் செயலினால் நாட்டு மக்கள்

சிந்தையிலே கொலுவிருந்த சாஹிர் ஹுசைன்
சிறகடித்து விண்ணேகிச் சென்று விட்டார்;

எந்தமிழர் நாட்டுக்குத் தமிழ்நா டென்றே
எழிலோடு பெயரிட்ட மன்னர் மன்றை!

செந்தமிழ்நா டெனுந்திருப்பேர் இருக்கு மட்டும்
சிறப்பான நின்பெயரும் உடனி ருக்கும்.

அமைதிக்கே அடைக்கலந்தான் தந்த தோற்றம்
அப்பழுக்கே இல்லாத பொதுமை நோக்கர்

குமைகின்ற பகைவர்க்கும் கருணை காட்டும்
கொடை நெஞ்சம் குளிர்ப்பார்வை இனிய சொல்லும்

அமைந்திட்ட அருளொழுகும் வாழ்வை வாழ்ந்தீர்;
அஃதெல்லாம் மண்ணறையுற் புதையப் போமோ

தமைத்தாமோர் தத்துவமாய் மாற்றி வாழ்ந்தோர்
தார்மீகம் பெற்றிங்கே வாழ்வோ ரன்றே.

வேளாண்மைத் துறையமைச்சாய் இந்த மன்றில்
வீற்றிருந்த கோவிந்தசாமி யென்னும்

ஏழைமகன் நேராளன் இறந்து விட்டான்
இரங்குங்கள் என்றேகிப் பறந்துவிட்டான்;

காலையிளஞ் சூரியனில் கமலப் பூதான்
கட்டவிழும் புன்சிரிப்பின் சொந்தக் காரன்

ஆலைவிட்ட புகையாக விண்ணில் தோய்ந்தான்
அண்ணனுக்குத் துணையிருக்க அங்கே சென்றான்.

கறையற்ற கரம்பெற்றான் கருணை என்னும்
கடல் கொண்ட நெஞ்சத்தான் பொருளை மட்டும்

சிறையிட்டுச் சேர்க்கின்ற திறமை யற்றான்
செழிப்புடனே இந்நாட்டு மக்கள் வாழ

குறைநீக்கி வேளாண்மைத் துறைவளர்த்தான்
குடும்பத்தை வறுமையிடம் ஒப்படைத்தான்

மறைவிடத்தே சதித்திட்டம் தீட்ட மாட்டான்
மறைந்திட்டான் வரலாற்றில் மன்ன வனான்.

1969 ஆகஸ்ட் 14] [ஹாஜி ம. மு. பீர்முஹம்மது]

இறைவனிடம் வேண்டுதல்

வையமென்னும் கூத்தரங்க மேடை ஏறி
வாழ்வென்ற நாடகத்தை ஆடச் சொல்லி

பொய்யென்ற மெய்தந்தாய் போகச் சொன்னாய்
பொதுவாழ்வில் இருக்கின்ற சிலரை மட்டும்

கையாடல் செய்வ துந்தன் கருணை யாமோ
காவலனே! தாயவனே! இறைவா! உன்னை

கையேந்தி வேண்டுகின்றோம் இந்த நாட்டில்
கண்போன்ற தலைவரெல்லாம் நீடு வாழ!

என்ற பிரார்த்தனையோடு இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சார்பாக இரங்கல் தீர்மானங்களை வழிமொழிந்து என் உரையை நிறைவுபடுத்திக் கொள்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களை ஏற்று தமிழரசுக் கழகத்தின் சார்பில் என் அஞ்சலியை மறைந்த குடியரசுத் தலைவருக்கும், வேளாண்மைத் துறை அமைச்சருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானத்தை முன்மொழிந்த முதல்வர் தெரிவித்ததைப்போல டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களுடைய மறைவு நமக்கு எவ்வளவு பெரிய இழப்பு என்று நினைக்கிறபோது—அதை ஈடு செய்கின்ற நிலையில் ஏற்படுகிற பல இடுக்கண்களை நினைத்தால்தான் அவர்களுடைய மறைவு எவ்வளவு பெரிய இழப்பு என்பது நினைப்புக்கு வருகிறது.

நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

என்றார் வள்ளுவர். டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள் தம்முடைய மேலான ஒழுக்கத்தாலும், அடக்கத்தாலும், தான் ஆற்றிய சேவையாலும் நம்மிடையே மிகமிக உயர்ந்து விளங்கினார்கள். விடுதலைப் போராட்டத்தில் நமக்குக் கிடைத்த மாணிக்கங்களுள் ஒருவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன். விடுதலைப் போராட்டக் காலத்தில் நம்முடைய தலைவர்களாக விளங்கியவர்களில் சிலர் பின்னரும் தங்கள் கட்சிக்குத் தலைவர்களாக விளங்கி வந்தார்கள். சிலர் கட்சிக்குத் தலைவராக விளங்கியதோடு கட்சிக்கு அப்பாற்பட்ட மற்றவர்களுக்கும் தலைவராக இருந்தார்கள். விடுதலைப் போராட்டம் நமக்குத் தந்த செல்வங்களில், கட்சியிலும் தலைவராக, கட்சிக்கு அப்பாற்பட்ட மற்றவர்களுக்கும் தலைவராக விளங்கியவர்களில் கடைசியாக இருந்தவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் என்பது அவருடைய மறைவுக்குப் பிறகு இப்போது நடக்கிற முறைகளைப் பார்த்தாலே தெரியும்.

[ம. பொ. சிவஞானம்] [1969 ஆகஸ்ட் 14

டாக்டர் ஜாகீர் ஹுசேன் இந்தியக் குடியரசுத் தலை... தேர்தலுக்கு ஒரு கட்சியின் சார்பில் வேட்பாளராக நின்ற... மாற்றுக் கட்சியினர்களும் ஜனநாயக சம்பிரதாயப்படி வேறொ... வரை வேட்பாளராக நிறுத்தினர் என்றாலும், யாரும் எந்... கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், டாக்டர் ஜா... ஹுசேனுக்கு கொள்கையில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 53 கே... மக்களின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நமது பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் அன்பர் திரு... மாரிமுத்து அவர்கள் சொன்னதுபோல, அவர் கல்வியின் நிலையமாக... இருந்தார். காந்தியடிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும்போது ஒரு அமைச்சரவையைப் போன்று ஒவ்வொரு துறைக்கும் ஒரு நிபுணரை விட்டிருந்தார். சர்வதேச அரசியல் என்றால் ஜவஹர்லால் நேரு, தீண்டாமை, மதுவிலக்கு என்பதற்கு ராஜாஜி, கட்சிக் கட்டுப்பாடு, உள்துறைக்கு வல்லபாய் படேல், விவசாயத்திற்கு ராஜேந்திர பிரசாத், அதேபோல கல்வித்துறைக்கு டாக்டர் ஜாகீர் ஹுசேனை வைத்திருந்தார்.

இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்துவிட்ட தலையாய கொடுமை தாய்மொழியைப் பின்னுக்குத் தள்ளியது அந்நிய மொழியை முன்னுக்குக் கொண்டு வந்தது. மொழியால் இழந்த இழப்பைக் காட்டிலும்—கல்விக்கும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாது—உழைப்புக்கும் அறிவுக்கும் பொருத்தமில்லாது—கல்வி கற்றவர்கள் ஒரு சாதி, உடலால் உழைப்பவர்கள் ஒரு சாதி என்பதாகப் பிரித்துவிட்ட தீங்கை அவர்கள் வெளியேறிய பிறகும்கூட நீக்க முடியவில்லை. அதை நீக்குவதற்காகத்தான் சுதந்திரம் பெற்ற பிறகு ஆதாரக் கல்வி என்பதே கொண்டுவரப்பட்டது. டாக்டர் ஜாகீர் ஹுசேன் அவர்கள் ஆதாரக் கல்வியைக் கொண்டுவர எத்தனையோ பாடுபட்டார்கள். ஆயினும் ஆதாரக் கல்வி அந்த வட்டாரத்தினராலேயே கைவிடப்பட்டது. இன்று டாக்டர் ஜாகீர் ஹுசேன் மறைவுக்கு இரங்கற் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற நாம், அந்தப் பெருமகனுக்கு எழுப்பும் நினைவுச் சின்னமாக—தொழிற் கல்வியும், அறிவுக் கல்வியும் சேர்ந்த ஒரு கல்வித் திட்டத்தை எப்படி அமைக்கலாம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுவே இன்று செலுத்துகிற அஞ்சலிக்குப் பயன் உடையதாக இருக்கும்.

தமிழக அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மறைவு எதிர்பாராத ஒன்று. அதுபற்றி மற்றவர்கள் சொன்ன கருத்துக்களில் எல்லாம் வார்த்தைக்கு வார்த்தை கலந்துகொள்கிறேன். அவர் வேளாண் குடியில் பிறந்தார். வேளாண்துறை அமைச்சராக இருந்தார். வன்னியர் சமூகம் என்றாலே வேளாண்மை சமூகமாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். சாதி பாகுபாட்டில் நம்பிக்கை இல்லாத கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்—பின்தங்கிய வன்னியர் சமூகம் முன்னேற்றம் அடைய பின்தங்கிய மற்ற சமூகங்களும் முன்னேற்றம் அடையப் பாடுபட்டார். பின்தங்கியவர்கள்

1969 ஆகஸ்ட் 14] [ம. பொ. சிவஞானம்]

...ன்னேற்றம் அடையக் கைகொடுப்பதன் மூலம்தான் சாதியற்ற ...தாயத்தை அமைக்க முடியும் என்கிற தத்துவத்தைக் ...ண்டிருந்தார். அந்தப் பெருமகனாரின் மறைவுக்கும் வருந்தி ...சலி செலுத்திக்கொள்கிறேன்.

திரு. கே. பி. [redacted]எஸ். மணி : மதிப்பிற்குரிய சபாநாயகர் ...ளே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ...டு வந்திருக்கின்ற இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் நான் ...ந்திருக்கின்ற இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக வழி ...மொழிகிறேன். டாக்டர் ஜாகீர் ஹுசேன் அவர்கள் இந்தியக் குடியரசினுடைய ஜனாதிபதியாக இருந்து ஜனாதிபதிக்கு இலக்கணம் இருக்கிறதென்றால் அதற்கு இலக்கணம் வகுத்த பெருமை அவர்களுக்கு உண்டு என்பதைச் சொல்லால் மட்டுமல்ல, பத்திரிகைகளின்மூலம் மட்டுமல்ல, நேரடியாகவே நாங்கள் அனுபவித்தோம். கடந்த ஆண்டு நம்முடைய எஸ்டிமேட்ஸ் கமிட்டி டெல்லி சென்றிருந்தபோது அவர்களைக் காண வேண்டுமென்று சென்று இருந்தோம். நாங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்றால் தமிழ்நாட்டில் இருந்து நாங்கள் போகிறோமே, எத்தகைய உபசாரம் இருக்குமோ, பார்த்துவிட்டு அனுப்பிவிடுவார்களோ என்று நினைத்தோம். ஆனால் அவர்கள், அவர்களுடைய எளிமையை எங்களுக்குக் காட்டி, எங்களுடன் இருந்து விருந்துண்டு, எங்களோடு அளவளாவி, எங்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு, எந்தப் பதவியில் இருந்தாலும், எந்த அதிகாரம், எந்தப் புகழ் இருந்தாலும் தன்னை மனிதன் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். அறிவுத் திறன், ஆற்றல் பொருந்திய அவர்கள் மனிதன் பட்டம், பதவி, அதிகாரம் உள்ளவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்கள். அப்படிப்பட்டவரை இழந்துவிட்டோம்; அந்த இழப்புக்கு ஈடு செய்ய முடியாமல் எப்படித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அவர்களுடைய பெருமையைச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் பலரில் சிலராக இல்லை; சிலரில் ஒருவராக வாழ்ந்தார் என்று சொல்லலாம். அவரைப் பிரிந்துவிட்ட அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சராக விளங்கிய திரு. அ. கோவிந்தசாமி அவர்கள் மறைந்துபோனதைப் பற்றி நினைக்கும்பொழுது மிகவும் துயரமாக இருக்கிறது. அவருக்கு அரசியல் வாழ்க்கையிலே நண்பர்கள் இருக்கலாம்; நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் திருமணம் செய்வித்து தந்தைக்குத் தந்தையாக இருந்த அவர்களை நான் எப்படி மறக்க முடியும்? என்னுடைய திருமணத்தை நடத்திவைத்து ஒன்றிரண்டு நாட்கள் திருமணம் முடிந்தபிறகுகூட உடன் இருந்தார்கள். அவர்கள் அமைச்சராக விளங்கிய போதுகூட ஏதாவது விஷயங்கள் சொன்னால் தெரியாத விஷயங்களைத் தர்க்க ரீதியாக விளக்கி,

சகோதரருக்குச் சகோதரராகவும், அமைச்சருக்கு அமைச்சரா வுட இருந்து வந்தார்கள். அவர்களைப்பற்றி இன்னும் அதிகமாக கூறவேண்டுமானால் எளிமையின் சிகரமாக விளங்கினார்கள். எ ஒருவர் தனக்குப் பட்டம் பதவி வந்தாலும் இருந்த இடத்தைத் திரும்பிப் பார்த்து, பிறந்த இடத்திற்கும் இருந்த இடத்திற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்த்து, அதைச் செய்வ வழிகாட்டியாக இருந்தார்கள் என்று சொன்னால் மிகையாகா. அவர்களை இழந்துவிட்டோம். அவர்களைப் பிரிந்துவிட குடும்பத்தினரை நினைக்கும்பொழுது பயங்கரமாக இருக்கிறது. தன்னை ஈன்றெடுத்த பசு இறந்தபிறகு புல் மேயமுடியாமலும் பால் பெறமுடியாமலும் எப்படி ஒரு கன்று இருக்கிறதோ அந்த நிலையிலே அவர்களுடைய குடும்பம் இருக்கிறது. அவர்களை வாழ வைக்க முடியாமல் அவர்கள் தனக்காக வசதிகள் செய்து கொள்ளாமல் சாதாரண மனிதராக எப்படி இருந்தார்களோ அதே நிலையிலேயே இறந்துவிட்டார்கள். அவர்கள் நாட்டுக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்துவிட்டு தனக்காகச் செய்து கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். அத்தகைய தியாக புருஷரை இழந்துவிட்டது நாட்டிற்குப் பெரு நஷ்டம் என்று சொல்லி அவர்களுடைய குடும்பத்தினருக்கும் துணைவியாருக்கும் அனுதாபம் தெரிவிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை வழிமொழிந்து முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்து மறைந்துவிட்ட டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள் பரந்த மொழியறிவும், இலக்கிய அறிவும் நிறைந்த அவர்களுடைய உள்ளத்தில் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் எவ்வளவு சிறந்த இடம் அளித்திருந்தார்கள் என்பதை சென்ற ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் அவர்கள் ஆற்றிய உரையும், அதற்கு முன்பாக அவர்கள் இந்தப் பேரவையில் நாமெல்லாம் கண்குளிரக் காணத்தக்க வகையில் காட்சியளிக்கும் வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து இங்கே ஆற்றிய உரையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் பெருமை தேடித்தந்த தலைவர்களில் சிறந்த தலைவராக விளங்கிய அவர்களுடைய பிரிவு இந்திய நாட்டிற்கும், உலகத்திற்கும் பெரிய இழப்பாகும். அவர்களுடைய குடும்பத்தினருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. அ. கோவிந்தசாமி அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் தெரிவித்ததைப்போன்று காட்சிக்கு எளியவராகவும், கடுஞ்சொல் இல்லாதவராகவும், தன்னிடத்திலே வருகின்ற கட்சித் தோழர்கள், குறைவேண்டியும் முறைவேண்டியும் தன்னிடத்திலே வருகின்ற பொதுமக்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகிய அத்தனை பேர்களுடனும் எவ்வளவு இனிமையோடு பழகினர் என்பதும், குறைகளையெல்லாம் நீக்க

செயலாற்றவேண்டிய அதிகாரிகளோடு எந்த அளவுக்கு இனிமையாகப் பழகினர்கள் என்பதும் நாடறிந்த செய்தியாகும். அவர்களின் இழப்பு தமிழகத்திற்குப் பெரிய இழப்பாகும். அவர்களுடைய குடும்பத்தினருக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கின்ற இரங்கல் தீர்மானங்கள் ...க்கின்ற இந்தப் பேரவையின் அனுதாபத்தோடு என்னுடைய ...பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கின்ற முறையில் பேரவையின் உறுப்பினர்கள் எல்லாரும் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்துநிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்துநிற்க, மாண்புமிகு முதலமைச்சரவர்களால் முன்மொழியப் பட்ட இரங்கல் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த திரு. ஜாகீர் ஹுசேன் அவர்களுக்கும், திரு. அ. கோவிந்தசாமி அவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்திப் பேரவையை ஒற்றிவைக்கிறேன். பேரவை மீண்டும் 16—8—1969-ஆம் நாள் சனிக்கிழமையன்று காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

2. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

% 1. Notification issued with G.O. Ms. No. 2399, Home, dated the 20th August 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the car bearing registration number MDB 5501 belonging to Thiru Hugh Oswell, Vaigneur, Care of Agricultural College and Research Institute, Coimbatore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

% 2. Notification issued with G.O. Ms. No. 2482, Home, dated the 30th August 1968, in regard to exemption from payment of tax leviable in respect of certain vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, South Arcot District. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

% 3. Notification issued with G.O. Ms. No. 1848, Revenue, dated the 23rd September 1968, in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 448 of 1961, dated the 19th January 1961, published at page 160 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 1st February 1961. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

% 4. Notification issued with G.O. Ms. No. 1435, Local Adm tration, dated the 23rd July 1968, in regard to an amendment to conduct of Election of Municipal Councillors Rules 1962 publ with the Rural Development and Local Administration Depa Notification S.R.O. No. A-899 of 1962, dated the 19th October at pages 1-23 of the Part V of the Extraordinary issue of the *George Gazette,* dated the 20th October 1962. [Laid on the T the House under section 304 (*d*) of the Madras District Munici Act, 1920 (Madras Act V of 1920).]

% 5. Notification issued with G.O. Ms. No. 2383, Revenue, the 13th December 1968, in regard to an amendment to Pubilc (Polic Department Notification No. 173, dated the 20th November 1935, published at page 1 of the *Fort St. George* Gazette, Extraordinary dated the 20th November 1935. [Laid on the Table of the House under section 10 (4) of the Madras Betting Tax Act, 1935 (Madras Act XX of 1935).]

% 6. Notification issued with G.O. Ms. No. 2501, Public Works (Electricity), dated the 29th November 1968, in regard to an amendment to the Madras Electricity (Taxation on Consumption) Rules, 1964. [Laid on the Table of the House under section 17 (2) of the Madras Electricity (Taxation on Consumption) Act, 1962 (Madras Act 4 of 1962).]

% 7. Notification issued with G.O. Ms. No. 1242, Rural Development and Local Administration, dated the 26th June 1968, in regard to certain amendments to the conduct of Election of Corporation Councillors Rules, 1962 published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A. 898 of 1962, dated the 18th October 1962 at pages 1-24 in Part V of the Extraordinary issue of the *Fort St. George Gazette,* dated the 20th October 1962. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919).]

% 8. Notification issued with G.O. R. No. 1303, Revenue, dated the 6th November 1968, in regard to exemption from the liability to entertainments tax, the benefit film shows in aid of the Flag Day Celebrations during the period up to 30th June 1969 in the City of Madras and in the districts. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]

% 9. Notification issued with G.O. Ms. No. 1989, Rural Development and Local Administration, dated the 28th September 1968, in regard to extensions of term of office of the Councillors of Municipal Councils up to the noon of the 28th February 1969. [Laid on the Table of the House under section 6 of the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Act, 1963 (Madras Act 22 of 1963).]

% 10. Notification issued with G.O. Ms. No. 1266, Revenue, dated the 24th June 1968, in regard to an amendment to the Madras Agricultural Income-tax Rules, 1955 published with the Revenue Department ...ration, dated the 17th December 1955 at pages 649-665 of the

Rules Supplement to Part I of the *Fort St. George Gazette,* dated the ...t December 1955. [Laid on the Table of the House under ...ion 61 (3) of the Madras Agricultural Income-Tax Act, 1955. Madras Act V of 1955).]

% 11. Notification issued with G.O. Ms. No. 35, Rural Development and Local Administration, dated the 7th January 1969, in regard ...t of certain amendments to the conduct of Election of Municipal ...illors' Rules, 1962. [Laid on the Table of the House under ...n 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 ...dras Act V of 1920).]

% 12. Notification issued with G.O. Ms. No. 2941, Home, dated the 5th October 1968, in regard to an amendment to the Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940 at pages 1 to 40 of the *Fort St. George Gazette,* Extraordinary, dated the 30th March 1940, namely the assignment of new registration mark. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

% 13. Notification issued with G.O. Ms. No. 2460, Agriculture, dated 17th August 1968, in regard to market area and notified market areas for regulation of trade in respect of groundnut, tamarind, cane-jaggery and gingelly in certain taluks of Dharmapuri district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

% 14. Notification issued with G.O. Ms. No. 2108, Revenue, dated the 31st October 1968, in regard to an amendment to Public (Police) Department Notification No. 173, dated the 20th November 1935, published at page 1 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 20th November 1935 relating to increase in rate of tax on electric totalizators from 12 per cent to 15 per cent. [Laid on the Table of the House under section 10 (4) of the Madras Betting Tax Act, 1935 (Madras Act XX of 1935).]

% 15. Notification issued with G.O. Ms. No. 2136, Revenue, dated 2nd November 1968, in regard to an amendment to Public (Police) Department Notification No. 173, dated the 20th November 1935, published at page 1 of the *Fort St. George Gazette,* Extraordinary, dated the 20th November 1935, relating to increase in rate of tax on book makers from 12 per cent to 15 per cent. [Laid on the Table of the House under section 10 (4) of the Madras Betting Tax Act, 1935 (Madras Act XX of 1935).]

% 16. Notification issued with G.O. Ms. No. 1886, Public (Tamil Development-1), dated the 20th September 1968, in regard to introduction of Tamil in the offices of the General Purposes Engineering Workshops under the Department of Industries and Commerce with effect on and from the 2nd October 1968. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]

% 17. Notification issued with Memorandum No. 129224 67-11, dated the 6th November 1968, in regard to an amendme Furnishing of Security by Officers and Servants Rules issued with Revenue Department Notification S.R.O. No. A-1039 of 1961, d the 23rd September 1961, published at pages 1077-1078 of Pa the *Fort St. George Gazette,* dated the 25th October 1961. [the Table of the House under section 116 (3) of the Madra Religious and Charitable Endowments Act, 1959 (Madras Ac 1959).]

% 18. Notification issued with G.O. Ms. No. 2936, Agric dated the 5th October 1968, in regard to notification of certain for soil conservation under the Madras Land Improvement Sche Act, 1959. [Laid on the Table of the House under section 44 of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras 31 of 1959).]

% 19. Notification issued with G.O. Ms. No. 3353, Home, d the 12th November 1968, in regard to exemption from paymen tax leviable in respect of vehicle bearing registration number M 9490 belonging to the United Nations International Childr Emergency Fund and assigned to the Primary Health Centr Mallasamudram. [Laid on the Table of the House under section 1 (2) of the Madras Motor Vehicles Taxation Act 1931 (Madras Ac III of 1931).]

% 20. Notification issued with G.O. Ms. No. 1662, Rura Development and Local Administration, dated the 17th August 196 in regard to an amendment to the conduct of Election of Corporatio Councillors Rules, 1962, published with the Rural Development an Local Administration Department Notification S.R.O. No. A-898 o 1962, dated the 18th October 1962 at pages 1—24 in Part V of th Extraordinary issue of the *Fort St. George Gazette,* dated the 20t October 1962. [Laid on the Table of the House under section 348 (d of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Ac IV of 1919).]

% 21. Balance Sheet, Profit and Loss Account of the Madra State Warehousing Corporation for the year 1967. [Laid on the Tabl of the House under section 31 (11) of the Warehousing Corporatio Act 1962).]

* 22. Notification issued with G.O. P. No. 2314, Revenue, date 5th December 1968, in regard to an amendment relating to the rate o tax leviable on precious stones under the Madras General Sales Ta Act, 1959 (Madras Act I of 1959). [Laid on the Table of the Hous under section 53 (5) of the Madras General Sales Tax Act, 195 (Madras Act I of 1959).]

* 23. Notification issued with G.O. Ms. No. 2484, Home, date 30th August 1968, in regard to exemption from the payment of ta leviable in respect of vehicle bearing registration number MDB 592 belonging to the United Nations International Children's Emergenc Fund and assigned to the District Medical Officer, Coimbatore. [Lai on the Table of the House under section 11 (2) of the Madras Moto Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

* 24. Notification issued with G.O. P. No. 1063, Revenue, dated e 22nd May 1968, in regard to certain amendments with reference the recommendations of the Sub-committee of the State Sales Tax dvisory Committee to the Madras General Sales Tax Rules, 1959, lished with Revenue Department notification S.R.O. No. A-1941, d the 28th March 1959 at pages 232-280 of the Rules Supplement rt I of the *Fort St. George Gazette,* dated the 1st April 1959. d on the Table of the House under section 53 (5) of the Madras eral Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

* 25. Notification issued with G.O. Ms. No. 1441, Revenue, dated e 22nd July 1968, in regard to certain amendments to the Revenue Department Notification III No. 199 of 1964, dated the 21st May 1964, published at page 1 of Part III of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 22nd May 1964, regarding setting up check posts in the Commercial Taxes Department. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

* 26. Notification issued with G.O. P. No. 2373, Revenue, dated the 12th December 1968, in regard to an amendment to the Second Schedule of the Madras General Sales Tax Act, 1959, in regard to the mill-made silk fabrics from the list of declared goods by the Central Government. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

* 27. Notification issued with G.O .Ms. No. 235, Revenue, dated the 10th February 1969, in regard to appointment of Thiru M.A. Jamal Hussain, District and Sessions Judge, Chingleput, to be the Chairman of the Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

* 28. Notification issued with G.O. Ms. No. 3789, Industries, Labour and Housing (Labour), dated the 13th November 1968, in regard to exemption granted to the beedi industrial premises from sections 18, 21, 26, 27 and 31 of the Act for a further period from 30th May to 30th June 1968. [Laid on the Table of the House under section 41 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958)].

* 29. Notification issued with G.O. Ms. No. 2010, Rural Development and Local Administration, dated the 3rd October 1968, in regard to the withdrawal of certain roads from the control of the Municipal Councils and taking over by Government for maintenance during 1968-69. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

* 30. Notification issued with G.O. Ms. No. 1874, Revenue, dated the 25th September 1968, in regard to certain amendments to the Levy of Fees for Service of Processes and Notices Rules, published with Revenue Department Notification S.R.O. No. A-654 of 1961, dated the 2nd June 1961 at page 671 of Part V of the *Fort St. George*

Gazette, dated the 21st June 1961. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959)].

* 31. Notification issued with G.O. Ms. No. 268, Rural D[illegible]ment and Local Administration, dated the 18th February [illegible] regard to nomination of Member, Legislative Assembly, Pe[illegible] to be a member of the Kodaikanal Township Committee for a p[illegible]e, ending with the 30th September 1969. [Laid on the Table of [illegible] House under section 304 (*d*) of the Madras District Municipalities [illegible] 1920 (Madras Act V of 1920)].

* 32. Notification issued with G.O. Ms. No. 3222, Home, [illegible] the 31st October 1968, in regard to an amendment to the Madra[illegible] Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959 published with Home Department Notification S.R.O. No. A-1580 of 1959, dated the 4th March 1959 at pages 116-161 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 18th March 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937)].

* 33. Notification issued with G.O. Ms. No. 1511, Revenue, dated the 31st December 1968, in regard to exemption from liability to entertainments tax, the exhibition of the film 'Mahatma', a biographical documentary on the life of Mahatma Gandhi. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

* 34. Notification issued with G.O. Ms. No. 518, Agriculture, dated the 23rd February 1968, in regard to amendment to Timber Transit Rules for Nilgiris district to regulate the Transit of Timber in the Revenue districts and forest divisions. [Laid on the Table of the House under section 64-A of the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882)].

* 35. Notification issued with G.O. Ms. No. 3640, Home, dated the 11th December 1968, in regard to exemption from payment of tax leviable in respect of certain vehicles belonging to Island of Peace, Agricultural Project, etc, Kalakad, Tirunelveli district. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

* 36. Notification issued with G.O. Ms. No. 1104, Home, dated 15th April 1968, in regard to exemption from payment of Tax leviable in respect of Light Motor Vehicles, not covered by permits and plying between Madras and Kerala States. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

* 37. Notification issued with G.O. Ms. No. 892, Home, dated 28th March 1968 in regard to collection of tax at reduced rate in respect of the Ambulance Van MDO 5592 belonging to the Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti, Thanjavur district. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras M[illegible] Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

* 38. Notification issued with G.O.R. No. 1480, Revenue, dated [illegible]e 19th December 1968, in regard to exemption from the liability to [illegible]e entertainments tax, the benifit film show arranged by Madras State [illegible]jasthan Famine Relief Committee held on 22nd December 1968 at [illegible]nd Theatre. [Laid on the Table of the House under section 16 (4) [illegible]e Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of [illegible])].

*39. Notification issued with G.O. P. No. 1064, Revenue, dated [illegible]d May 1968, in regard to an amendment to the Madras General [illegible]es Tax Rules, 1959 published with the Revenue Department Notification S. R. O. No. A-1941, dated the 28th March 1959 at pages 232-[illegible]80 of the Rules supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959. [Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

*40. Notification issued with G. O. Ms. No. 1887, Agriculture, dated the 14th June 1968, in regard to market areas and notified market areas for the markets at Virudhunagar, Rajapalayam, etc., in respect of chillies. [Laid on the Table of the House under section 29(4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959)].

*41. Notification issued with G.O. Ms. No. 148, Rural Development and Local Administration, dated the 29th January 1969, in regard to dissolution of Somadevanpatti Village Panchayat in Chingleput district and holding of fresh elections. [Laid on the Table of the House under section 179(4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].

* 42. Notification issued with G.O. Ms. No. 1660, Rural Development and Local Administration, dated the 17th August 1968, in regard to extension of Term of Office of the Councillors of the Corporation of Madras up to the noon of the 1st day of November 1968. [Laid on the Table of the House under section 348(d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919)].

@ 43. Notification issued with G.O.P. No. 1817, Revenue, dated the 19th September 1968, in regard to certain amendments to the Madras Sales of Motor Spirit Taxation Rules, 1939, published with the Revenue Department Notification No. 274, dated the 25th March 1939 at page 1-7 of the *Fort St. George Gazette*, Extraordinary, dated the 25th March 1939. [Laid on the Table of the House under section 29 (2) of the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939 (Madras Act VI of 1939)].

@ 44. Notification issued with G.O. Ms. No. 3316, Home, dated the 8th November 1968, in regard to notification of certain employments as essential services for the purposes of the Madras Buildings (Lease and Rent Control) Act, 1960 (Madras Act 18 of 1960). [Laid on the Table of the House under section 34 (4) of the Madras Buildings (Lease and Rent Control) Act, 1960 (Madras Act 18 of 1960)].

@ 45. Notification issued with G.O. Ms. 144, Local Administration, dated 28th January 1969 in regard to certain amendments to the Conduct of Election of Municipal Councillors Rules, 1962. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

@ 46. Notification issued with G.O. Ms. No. 1778, Publi (Services-A), dated the 2nd September 1968 in regard to certai amendments to the Madras Public Service Commission Regulation 1954, published with Public (Services) Department Notificati No. 50, dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of *Fort St. George Gazette*, dated the 9th June 1954, relating to Madras State Legislative Assembly and Council Secretariat Se [Laid on the Table of the House under Article 320 (5) of the stitution of India)].

@ 47. Notification issued with G.O. Ms. No. 1490, Pu (Services-A), dated the 12th July 1969, in regard to certain ame ments to the Madras Public Service Commission Regulations, 19 published with Public (Services) Department Notification No. 50 dated the 5th May 1954, at pages 759 to 768 of Part I of the *Fort St George Gazette*, dated the 9th June 1954 relating to the Madras High ways Engineering Subordinate Service. [(Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India)]

@ 48. Notification issued with G.O. Ms. No. 2112, Publi (Services-A), dated the 25th October 1968 in regard to an amendmen to the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954, at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 for inclusion of certain posts of the Madras Town Planning Subordinate Service within the Commission's purview. [(Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India)].

@ 49. Notification issued with G.O. Ms. No. 330, Rural Development and Local Administration, dated the 26th February 1969 in regard to exclusion of Ramankulam and Pirakudi village of Thirupuvanam Panchayat Union of East Ramanathapuram District Development District and inclusion of East Madurai District Development District. [(Laid on the Table of the House under section 14 (3) of the Madras District Development Councils Act, 1958 (Madras Act XVIII of 1958)].

@ 50. Notification issued with G.O.P. No. 59, Revenue, dated the 8th January 1969 in regard to cancellation of the Revenue Department Notification III No. 429 of 1964, dated the 26th September 1964, published at page 1998 of Part III of the *Fort St. George Gazette*, dated the 28th October 1964. [(Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

@ 51. Notification issued with G.O. Ms. No. 191, Revenue, dated the 6th February 1969 in regard to exemption from the provision of section 34 of the Madras Hindu Religious and Charitable Endowments Act 1959 to Sri Dattatreya Math alias Siddheswari Peetam, Courtallam, Tenkasi Taluk, Tirunelveli District. [Laid on the Table of the House under section 116(3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959)].

@ 52. Notification issued with Memorandum No. 126859|J-2|68-3 Revenue, dated the 11th December 1968 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1431 of 1965, dated the

30th March 1965 published at pages 588-593 of Part II-Section I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 31st March 1965. [(Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

@ 53. Notification issued with Memorandum No. 121486|J-2|68-2 Revenue, dated the 12th December 1968 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 2995 of 1967, dated the 22nd June 1967, published at page 1219 of Part II-Section I of the *Fort St. George Gazette*, dated the 28th June 1967. [(Laid on the Table of the House under Section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

@ 54. Notification issued with G.O.P. No. 2380, Revenue, dated the 13th December 1968 in regard to cancellation of the Revenue Department Notifications III No. 81 of 1967 and III No. 82 of 1967, dated the 8th February 1967, published at page 256 of Part III of the *Fort St. George Gazette*, dated the 15th February 1967. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

@ 55. Notification issued with G.O.P. No. 2381, Revenue, dated the 13th December 1968 in regard to exemption from sales tax for the sale products by the Pilot Demonstration Rehabilitation Centre for Blind and Optical Aid Evaluation Unit, Madurai Medical College [(Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

@ 56. Notification issued with G.O. Ms. No. 159, Revenue, dated the 30th January 1969 in regard to appointment of a date for the enforcement of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 to certain inam Estates in Nanguneri Jeermadam. [(Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

@ 57. Notification issued with G.O. Ms. No. 531, Rural Development and Local Administration, dated the 24th March 1969 in regard to certain amendments to the Conduct of Election of Municipal Councillors Rules, 1962. [(Laid on the Table of the House under section 304(*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

@ 58. Notification issued with G.O. Ms. No. 105, Rural Development and Local Administration, dated the 21st January 1969 in regard to re-division of wards and reservation of seats in Alandur Municipality. [(Laid on the Table of the House under section 304(*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act, V of 1920)].

@ 59. Notification issued with G.O. Ms. No. 182, Revenue, dated the 5th February 1969 in regard to an amendment to the rules published at pages 840-846 of Part V of the *Fort St. George Gazette*, dated the 2nd August 1961. [(Laid on the Table of the House under section 29(3) of the Madras (Transferred Territory Incorporated and Unincorporated Devaswoms) Act, 1959 (Madras Act 30 of 1959)].

@ 60. Notification issued with G.O. Ms. No. 508, Rural Development and Local Administration, dated the 21st March 1969, in regard to Resignation of Thiru G. Ramachandran, I.A.S., Official Member and appointment of Thiru S. Venkitaramanan, I.A.S., as Official M Public of the Madras State Khadi and Village Industries Board. [(the Table of the House under section 3 (2) (*a*) and 29 (3 Madras Khadi and Village Industries Board Act, 1959 (Ma te, dated 18 of 1959)]. s Liquor

@ 61. Notification issued with G.O. Ms. No. 223, Revenue uor to the 10th February 1969 in regard to an amendment to the in the Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Rules, the published at Pages 70 to 95 of Part V of the *Fort St. George* G 14th Extraordinary, dated the 15th February 1965. [(Laid on the Ta ction of the House under section 50(5) of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963)].

£ 62. Notification issued with Government Memorandum No. 28777 CT III-2|68-13, Revenue, dated the 17th January 1969, in regard to certain amendments to the Revenue Department Notification III No. 85 of 1968, dated the 19th December 1967, published at page 25 of Part III of the *Fort St. George Gazette*, dated the 10th January 1968. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

£ 63. Notification issued with G.O. R. No. 405, Revenue, dated the 11th April 1969, in regard to exemption from liability to entertainment tax, the film shows connected with the Festival of Anna Films at Children's Theatre, Madras, for one week from 13th April 1969 in aid of the Chief Minister's Drought Relief Fund. [Laid on the Table of the House under section 16(4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

£ 64. Notification issued with G.O. P. No. 90, Revenue, dated the 17th January 1969, in regard to exemption from liability to tax on sales made to United Nations Development Programme for its official use. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

£ 65. Notification issued with G.O. P. No. 89, Revenue, dated the 17th January 1969, in regard to exemption from liability to tax in respect of the sales of peanut butter to the public by the Mobile Food and Nutrition Extension Units of the Government of India. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

£ 66. Notification issued with G.O. No. 2379, Revenue, dated the 13th December 1968, in regard to cancellation of Revenue Department Notification III Nos. 460 and 461 of 1967, dated the 3rd August 1967, published at page 1271 of Part III of the *Fort St. George Gazette*, dated the 23rd August 1967. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

£ 67. Notification issued with G.O. No. 2329, Revenue, dated the 10th December 1968, in regard to an amendment to the Revenue Department Notification III No. 85 of 1968, dated the 19th December 1967, published at page 25 of Part III of the *Fort St. George Gazette*,

dated the 10th January 1968. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

miss Extrac 68. Notification issued with G.O. Ms. No. 374, Revenue, dated House th February 1969, in regard to certain amendments to the Act IV Agricultural Income Tax Rules, 1955, published with the Department Notification, dated the 17th December 1955, at $ 839-665 of the Rules Supplement to Part I of the *Fort St. George* the 5th dated the 21st December 1955. [(Laid on the Table of the Depart under section 61(3) of the Madras Agricultural Income Tax March 1955 (Madras Act V of 1955)].

Georg a ch 69. Notification issued with G.O. Ms. No. 3441, Agriculture, of the 26th November 1968, in regard to certain amendments to the Madras Sandalwood Transit Rules, 1967, published with the Agriculture Department Notification S.R.O. No. A-363 of 1967, dated the 18th March 1967, at pages 335-345 of Part V of the *Fort St. George Gazette*, dated the 26th April 1967. [(Laid on the Table of the House under section 64-A of the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882)].

£ 70. Notification issued with G.O.P. No. 356, Revenue, dated the 21st February 1969, in regard to exemption from liability to sales tax in respect of Sales of Tamil Nadu Government Raffle tickets. [Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

£ 71. Notification issued with G.O. Ms. No. 27, Revenue, dated the 4th January 1969, in regard to coming into force of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, in the inam estate of Tirumalaikolundupuram estate of Tirunelveli district. [Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

£ 72. Notification issued with G.O. Ms. No. 603, Rural Development and Local Administration, dated the 31st March 1969, in regard to time-limit for submission of application for licence and exemption from the use of buildings (not being existing public buildings) as public buildings and existing public buildings under the Madras Public Buildings (Licensing) Act, 1965. [Laid on the Table of the House under section 25(4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965)].

£ 73. Notification issued with G.O. Ms. No. 643, Rural Development, dated the 3rd April 1969, in regard to re-constitution of members of Madras State Khadi and Village Industries Board. [(Laid on the Table of the House under section 29(3) of the Madras State Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959)].

£ 74. Notification issued with G.O. Ms. No. 526, Rural Development and Local Administration, dated the 22nd March 1969, in regard to exemption of Cinema buildings from the provisions of the Madras Public Buildings (Licensing) Act, 1965, for a period of three years from 1st April 1969. [(Laid on the Table of the House under section 25(4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965)].

£ 75. Notification issued with G.O. Ms. No. 411, Rural Development and Local Administration, dated the 6th March 1969, in regard to certain amendments ot Engineering qualification prescribed under rule 11 of the Madras Public Buildings (Licensing) Rules, 1966. [Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965)].

£ 76. Notification issued with G.O. Ms. No. 2922, Home, dated the 4th October 1968, in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, in respect of serving of liquor to holders of permits in Forms F.P. 1 and F.A. 4 for consumption in the premises of non-proprietory clubs, published at pages 3-121 [illegible] Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 14th September 1960. [(Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937)].

£ 77. Notification issued with G.O. Ms. No. 2829, Home, dated the 25th September 1968, in regard to amendments to rule 8 (b) and Form D-Id of the Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish Rules, 1959, published at pages 116-161 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 18th March 1959. [(Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).].

£ 78. Notification issued with G.O. Ms. No. 817, Revenue, dated the 17th April 1969, in regard to coming into force of certain provisions of Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, in Sankarankoil and Tenkasi taluks. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

£ 79. Notifications issued with Memorandum No. 17799-J2|69-3, Revenue, dated the 23rd April 1969, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated the 12th March 1965, published at pages 1-6 of Part II—Section 1 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th March 1965. [(Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

£ 80. Notification issued with G.O. Ms. No. 2523, Rural Development and Local Administration, dated the 17th December 1968, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification III No. 1241 of 1966, dated 30th August 1966, published at page 1762 of Part III of the *Fort St. George Gazette*, dated the 28th September 1966, for exemption of certain buildings from the provisions of the Madras Public Buildings (Licensing) Act, 1965 for six years. [(Laid on the Table of the House under section 25(4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965)].

£ 81. Notification issued with Memorandum No. 140755|TI|68-1, Revenue, dated the 3rd January 1969, in regard to settlement notification published at pages 960-969 of the *Fort St. George Gazette*, dated 5th June 1969. [Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)].

£ 82. Notifications issued with G.O. Ms. No. 29, Home, dated the 4th January 1969, in regard to certain amendments to Madras Motor Vehicles Rules, 1940, for delegating powers to Deputy Transport Commissioner, published at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

$ 83. Notification issued with G.O. Ms. No. 2312, Revenue, dated the 5th December 1968, in regard to an amendment to the Revenue Department Notification S.R.O. No. A-1797 of 1959, dated the 23rd March 1959, published at pages 454-455 of Part I of the *Fort St. George Gazette*, dated the 25th March 1969, relating to the shifting of a check post. [Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

$ 84. Notification issued with G.O. Ps. No. 677, Revenue, dated the 24th March 1969, in regard to exemption from payment of sales tax to Agriculturists and Agricultural Co-operative Societies for manufacturing and sale of compost manure. [(Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

$ 85. Notification issued with G.O. Ms. No. 436, Revenue, dated the 1st March 1969, in regard to an amendment to the Madras Land Reforms (Compensation for Surplus Land) Rules, 1966, published with Revenue Department Notification S.R.O. No. A-32 of 1967, dated the 29th December 1966 at pages 26-29 of Part V of the *Fort St. George Gazette*, dated the 4th January 1967. [(Laid on the Table of the House under section 112(2) of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961)].

$ 86. Notification issued with G.O.P. No. 708, Revenue, dated the 31st March 1969, in regard to an amendment to First Schedule for Levy of Single-point Tax to fuel gas. (Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

$ 87. Notification issued with G.O. Ps. No. 40, Revenue, dated the 6th January 1969, in regard to exemption from payment of sales tax on the sales of reading books including students exercise note books. [Laid on the Table of the House under section 53(5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].

$ 88. Notification issued with G.O. Ms. No. 550, Agriculture, dated the 25th February 1969, in regard to notified Market at Kadambuliyur of South Arcot district in respect of cashewnut. [Laid on the Table of the House under section 29(4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959)].

$ 89. Notification (Preliminary) issued with G.O. Ms. No. 359, Rural Development and Local Administration, dated the 1st March 1969, in regard to draft of certain amendments to the Conduct of Election of Municipal Councillors Rules, 1962. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

[1969 ஆகஸ்ட் 14

§ 90. Notification issued with G.O. Ms. No. 549, Rural Development and Local Administration, dated the 25th March 1969, in regard to postponement of the revision work till October 1969, in certain Municipalities and in respect of the Kodaikanal Township. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

§ 91. Notification issued with G.O. Ms. No. 1553, Home, dated the 29th May 1968, in regard to an amendment to Madras Motor Vehicles Rules, 1940, in respect of stoppage of goods vehicles by checkpost staff, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

§ 92. Notification issued with G.O. Ms. No. 2640, Home, dated the 11th September 1968, in regard to an amendment to Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

§ 93. Notification issued with G.O. Ms. No. 758, Rural Development and Local Administration, dated the 22nd April 1969, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 95 of 1966, dated the 5th April 1966, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 6th April 1966. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].

§ 94. Notification issued with G.O. R. No. 287, Revenue, dated the 14th March 1969, in regard to exemption from entertainments tax in connection with the festival of Soviet films in India under the Indo-U.S.S.R. Cultural Exchange Programme to be held at the Safire Theatre from 14th to 20th March 1969. [Laid on the Table of the House under section 16(4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

§ 95. Notification issued with G.O. R. No. 593, Revenue, dated the 24th May 1969, in regard to exemption from payment of entertainments tax, the benefit film shows 'Nadodi Mannan' on 25th May 1969 at Ram Theatre, Kodambakkam and 'Deivathai' on 8th June 1969 at Children's Theatre, Madras in aid of the family of the late Thiru A. Govindasamy, Minister for Food and Agriculture. [Laid on the Table of the House under section 16(4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

§ 96. Notification issued with G.O. No. 2330, Revenue, dated the 10th December 1968, in regard to empowering of powers to Personal Assistant to Municipal Commissioner and the Revenue Officer (Gazetted) of Special Grade Municipalities to inspect the Cinema theatres within their respective jurisdiction. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

1969 ஆகஸ்ட் 14]

97. Notification issued with G.O. Ms. No. 111, Home, dated the 18th January 1969 in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MSZ 6168 belonging to the United Nations International Children's Emergency Fund. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

98. Notification issued with G.O. Ms. No. 2412, Home, dated the 21st August 1968 in regard to exemption from payment of tax in respect of vehicle bearing registration number MSCOT 154, belonging to the United States Agency for International Development Mission to India. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

99. Notification issued with Memorandum No. 126856-T3|68-2, Revenue, dated the 2nd January 1969 in regard to an amendment to settlement notification published at pages 355-360 of Part II—Section I of the *Fort St. George Gazette*, dated the 9th March 1968. [Laid on the Table of the House under Section 26 (2) of the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Madras Act 30 of 1964).]

100. Notification issued with G.O.P. No. 336, Revenue, dated the 19th February 1969 in regard to cancellation of notification, reducing the rate of tax on Braided Cords and Tapes published at page 1574 of Part II—Section I of the *Fort St. George Gazette*, dated the 22nd August 1962. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

101. Notification issued with G.O. Ms. No. 449, Revenue, dated the 1st March 1969 in regard to coming into force of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) on the first day of April 1969 in Ramanathapuram and Tirunelveli District. [Laid on the Table of the House under Section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

102. Notification issued with G.O. Ms. No. 975, Revenue, dated the 12th May 1969 in regard to coming into force of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) on the first day of July 1969 in the D. Edayapatti inam estate in Kulitalai taluk of Tiruchirappalli district. [Laid on the Table of the House under Section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

103. Notification issued with G.O. Ms. No. 551, Agriculture, dated the 25th February 1969 in regard to regulation of Trade under the Madras Agricultural Produce Markets Act 1959 (Madras Act 23 of 1959) for inclusion of Melur, Madurai and Tirumangalam taluks for the purchase and sale of paddy, cotton, groundnut and chillies. [Laid on the Table of the House under Section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras 23 of 1959).]

$ 90. Notification issued with G.O. Ms. No. 549, Rural Development and Local Administration, dated the 25th March 1969, in regard to postponement of the revision work till October 1969, in certain Municipalities and in respect of the Kodaikanal Township. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

$ 91. Notification issued with G.O. Ms. No. 1553, Home, dated the 29th May 1968, in regard to an amendment to Madras Motor Vehicles Rules, 1940, in respect of stoppage of goods vehicles by checkpost staff, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

$ 92. Notification issued with G.O. Ms. No. 2640, Home, dated the 11th September 1968, in regard to an amendment to Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

$ 93. Notification issued with G.O. Ms. No. 758, Rural Development and Local Administration, dated the 22nd April 1969, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 95 of 1966, dated the 5th April 1966, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 6th April 1966. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].

$ 94. Notification issued with G.O. R. No. 287, Revenue, dated the 14th March 1969, in regard to exemption from entertainments tax in connection with the festival of Soviet films in India under the Indo-U.S.S.R. Cultural Exchange Programme to be held at the Safire Theatre from 14th to 20th March 1969. [Laid on the Table of the House under section 16(4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

$ 95. Notification issued with G.O. R. No. 593, Revenue, dated the 24th May 1969, in regard to exemption from payment of entertainments tax, the benefit film shows 'Nadodi Mannan' on 25th May 1969 at Ram Theatre, Kodambakkam and 'Deivathai' on 8th June 1969 at Children's Theatre, Madras in aid of the family of the late Thiru A. Govindasamy, Minister for Food and Agriculture. [Laid on the Table of the House under section 16(4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

$ 96. Notification issued with G.O. No. 2330, Revenue, dated the 10th December 1968, in regard to empowering of powers to Personal Assistant to Municipal Commissioner and the Revenue Officer (Gazetted) of Special Grade Municipalities to inspect the Cinema theatres within their respective jurisdiction. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

97. Notification issued with G.O. Ms. No. 111, Home, dated the 18th January 1969 in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MSZ 6168 belonging to the United Nations International Children's Emergency Fund. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

98. Notification issued with G.O. Ms. No. 2412, Home, dated the 21st August 1968 in regard to exemption from payment of tax in respect of vehicle bearing registration number MSCOT 154, belonging to the United States Agency for International Development Mission to India. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

99. Notification issued with Memorandum No. 126856-T3|68-2, Revenue, dated the 2nd January 1969 in regard to an amendment to settlement notification published at pages 355-360 of Part II—Section I of the *Fort St. George Gazette,* dated the 9th March 1968. [Laid on the Table of the House under Section 26 (2) of the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Madras Act 30 of 1964).]

100. Notification issued with G.O.P. No. 336, Revenue, dated the 19th February 1969 in regard to cancellation of notification, reducing the rate of tax on Braided Cords and Tapes published at page 1574 of Part II—Section I of the *Fort St. George Gazette,* dated the 22nd August 1962. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

101. Notification issued with G.O. Ms. No. 449, Revenue, dated the 1st March 1969 in regard to coming into force of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) on the first day of April 1969 in Ramanathapuram and Tirunelveli District. [Laid on the Table of the House under Section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

102. Notification issued with G.O. Ms. No. 975, Revenue, dated the 12th May 1969 in regard to coming into force of certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) on the first day of July 1969 in the D. Edayapatti inam estate in Kulitalai taluk of Tiruchirappalli district. [Laid on the Table of the House under Section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

103. Notification issued with G.O. Ms. No. 551, Agriculture, dated the 25th February 1969 in regard to regulation of Trade under the Madras Agricultural Produce Markets Act 1959 (Madras Act 23 of 1959) for inclusion of Melur, Madurai and Tirumangalam taluks for the purchase and sale of paddy, cotton, groundnut and chillies. [Laid on the Table of the House under Section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras 23 of 1959).]

104. Annual Report of the Madras State Khadi and Village Industries Board for 1967-68. [Laid on the Table of the House under Section 24 (3) of the Madras Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959).]

105. Tamil Nadu Government's Review and the Third Annual Report and Statement of Accounts of the Madras State Industrial Development Corporation Limited for the year ended 31st March 1968. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

106. Notification issued with G.O. Ms. No. 875, Rural Development and Local Administration, dated the 27th April 1968 in regard to an amendment to the rules relating to appointment and punishment of officers and servants of Municipal Councils published at pages 453 and 454 of Part I-A of the *Fort St. George Gazette,* dated the 1st September 1936. [Laid on the Table of the House under Section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

B. Reports, Notifications and other Papers.

& 1. The Tamil Nadu Practitioners of Homeopathy Bill, 1969 (L.A. Bill No. 11 of 1969).

* 2. Notification issued with G.O. Ms. No. 1787, Revenue, dated the 12th September 1968 in regard to draft notification, for the settlement of Bilalam and Pasipalli villages lying in Dhenkanikottah sub-taluk, Dharmapuri district.

* 3. Notification issued with G.O. Ms. No. 1970, Revenue, dated the 11th October 1968 in regard to the date of coming into force of the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Act, 1968.

* 4. Notification issued with G.O. Ms. No. 1775, Revenue, dated the 9th September 1968 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the mortgage deed to be executed in favour of Egmore Benefit Society, Madras.

* 5. Notification issued with G.O. Ms. No. 1996, Revenue, dated the 16th October 1968 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deed to be executed by the Salem Rotary Club, Salem in favour of Municipal Council.

* 6. Notification issued with G.O. Ms. No. 2039, Revenue, dated the 23rd October 1968 in regard to certain amendments to the Central Sales Tax (Madras) Rules, 1957, published with the Revenue Department Notification S.R.O. No. A-1335 of 1957, dated the 27th February 1957 of Part I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 28th February 1957.

@ 7. Erratum issued with Government Memorandum No. 2544, M. Ward|68-2, Rural Development and Local Administration, dated the 9th January 1969 to the Notification 11-2 No. 47 of 1968, dated the 28th December 1967, relating to reservation of seats and re-division of wards in Tiruvellore Muncipality, published at pages 57-59 of Part II—Section 2 of the *Fort St. George Gazette,* dated the 24th January 1968.

@ 8. Notification issued with G.O. Ms. No. 209, Public Works (Electricity), dated the 12th February 1969 in regard to an amendment to the rules published with Public Works (Electricity) Department Notification S.R.O. No. A-5559 of 1958, dated the 9th August 1958, at pages 363-364 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette,* dated the 20th August 1968 under the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948).

@ 9. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council during the period from the 25th January to 31st March 1969.

@ 10. Notification issued with Memorandum No. 53342-J2|68-7, Revenue, dated the 19th December 1968 in regard to issue of certain errata to the Revenue Department Notification published at pages 558-593 of Part II—Section 1 of the *Fort St. George Gazette,* dated the 31st March 1965 and pages 669-672 of Part II—Section 1 of the *Fort St. George Gazette,* dated the 14th April 1965.

£ 11. Notification issued with G.O. Ms. No. 2941, Industries, Labour and Housing (Labour), dated the 21st August 1968 in regard to draft amendment to Schedule II to the Workmen's Compensation Act, 1923 (Central Act VIII of 1923).

£ 12. Notification issued with G.O. Ms. No. 2486, Industries, Labour and Housing, dated the 9th July 1968 in regard to certain amendments to the Madras Industrial Disputes Rules, 1958 published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-8258 of 1958, dated the 18th December 1958 at pages 1—25 of Part I of the *Fort St. George Gazette,* dated the 27th December 1958.

£ 13. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 27th to 29th January 1969 and from 21st February to 31st March 1969.

£ 14. The Madras Contingency Fund (Amendment) Ordinance 1969 (Tamil Nadu Ordinance No. 2 of 1969).

$ 15. Notification issued with G.O. P. No. 23, Revenue, dated the 4th January 1968 in regard to certain amendments to the Central Sales Tax Rules, 1957, published with the Revenue Department notification S.R.O. No. 1385, of 1957, dated the 27th February 1957, at pages 1-10 of Part 1 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 28th February 1957.

$ 16. Notification issued with G.O. Ms. No. 193, Industries, Labour and Housing (Labour), dated the 21st January 1969 in regard to an amendment to the Madras Employees State Insurance (Medical Benefit) Rules, 1954, published with Industries, Labour and Co-operation Department Notification, dated the 16th August 1954, at pages 297-312 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette,* dated the 8th September 1954.

$ 17. Notification issued with G.O.P. No. 662, Revenue, dated the 21st March 1969 in regard to cancellation of Revenue Department Notification S.R.O. No. A-7614 of 1957, dated the 12th December 1957, published in the Extraordinary issue of Part I of the *Fort St. George Gazette,* dated the 13th December 1957 under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956).

$ 18. Notification issued with G.O. Ms. No. 2283, Revenue, dated the 28th November 1968 in regard to exemption from payment of stamp duty under the Indian Stamp Act, 1899 to be executed in favour of the Nehru Memorial College of Tiruchirappalli District.

$ 19. Notification issued with G.O. Ms. No. 2372, Revenue, dated the 12th December 1968, in regard to exemption from levy of stamp duty in respect of mortgage deed to be executed by the State Electricity Board under the Indian Stamp Act, 1899, for taking loan from the Life Insurance Corporation.

$ 20. Notification issued with G.O. Ms. No. 1947, Revenue, dated the 8th October 1968 in regard to exemption from stamp duty in respect of loan bonds to be executed under the Indian Stamp Act, 1899 for the Scheme Students Aid Fund.

† 21. The Madras Electricity (Taxation on Consumption) Amendment Ordinance 1969 (Tamil Nadu Ordinance No. 3 of 1969).

22. Notification issued with G.O. Ms. No. 484, Revenue, dated the 5th March 1969 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the settlement deeds to be executed in favour of Pulavar Pa. Subramaniam Tamil Kalluri at Mohanur, Namakkal taluk for opening of a college in Namakkal.

23. Notification issued with G.O. Ms. No. 785, Revenue, dated the 11th April 1969 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of gift deed to be executed in favour of the Government for the transfer of the management of the school for the blind, Puthur, Tiruchirappalli from the District Health Association to the Government.

24. Notification issued with G.O.P. No. 24, Revenue, dated the 4th January 1969 in regard to reduction in rate of tax to 3 per cent in respect of sales of goods made of leather, or canvas or a combination of leather and canvas.

** 25. The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 4 of 1969).

26. The Report of the Commission of Inquiry, Madras-Vettaikaranpudur Episode, July 1967 by S. R. Kaiwar, I.C.S. (13th December 1967).

& Despatched on 16—4—1969.
% Despatched on 28—4—1969.
* Despatched on 5—6—1969.
@ Despatched on 10—7—1969.
£ Despatched on 21—7—1969.
$ Despatched on 30—7—1969.
† Despatched on 28—7—1969.
** Despatched on 5—8—1969.

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE

Sri R. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co. ,Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, ,Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. AIM BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

R.R. 493 / 70 (A 50 (B))
1029
11 NOV 1970

வெளியீடு—15—8—1970]
[Issued—15—8—1970]

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

சனிக்கிழமை, 1969 ஆகஸ்ட் 16

Saturday, 16th August 1969

தொகுதி XXI—எண் 2

Volume XXI—No. 2

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
[Price, 50 Paise]

தமிழ் நாட்டு ஆவணக் காப்பகம்
11 NOV 1970
எழும்பூர், சென்னை

உள்ளடக்கம்.

	பக்கங்கள்
1 நீத்தார் நினைவுக் குறிப்புகள் .. .. .. முன்னாள் உறுப்பினர்கள் சிலர் மறைவு குறித்து	35–36
2 வினாக்கள்—விடைகள்	36–59
3 முதலமைச்சர் விளக்கம். மத்திய போலீஸ் துறை பற்றிய வினாவிற்கு அளித்த விடை குறித்து. ..	59
4 அறிவிப்புகள்— (i) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்	59–60
(ii) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.	60
(iii) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்	127–128
5 அரசினர் மசோதா— தமிழ்நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா	60
6 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்	60–127
7 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்	129

தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 ஆகஸ்ட் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் சிலர் மறைவுகுறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவள்ளூர் பொதுத் தொகுதிக்காக 1952-ல் இருந்து 1957-வது ஆண்டு வரையிலும், பொன்னேரி பொதுத் தொகுதிக்காக 1957-ல் இருந்து 1962-வது ஆண்டு வரையிலும் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. வி. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் 7—4—1969 அன்று காலமானதற்கும்;

1957-ல் இருந்து 1962 வது ஆண்டுவரை தேனி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1964-ல் இருந்து சட்ட மேலவையில் மதுரை உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராக இருந்து வந்தவருமான திரு. என். ஆர். தியாகராஜன் அவர்கள் 27—4—1969 அன்று மறைந்து விட்டதற்கும்;

1957-ல் இருந்து 1962-வது ஆண்டு வரை சிவகங்கைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. டி. சுப்பிரமணிய ராஜகுமார் அவர்கள் 3—6—1969 அன்று காலமானதற்கும்;

1957-ல் இருந்து 1967-வது ஆண்டு வரை சென்னை வண்ணாரப் பேட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். மாயாண்டி நாடார் அவர்கள் 20—6—1969 அன்று காலமானதற்கும்;

1952-ல் இருந்து 1953-வது ஆண்டு வரை ஆலப்பட் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஆர். நாகன் கௌடா அவர்கள் 19—7—1969 அன்று மறைந்துவிட்டதற்கும்;

1937-ல் இருந்து 1939-வது ஆண்டு வரையிலும், 1946-ல் இருந்து 1952-வது ஆண்டு வரையிலும் எல்லூர் பொது, கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். பாபிநீடு அவர்கள் 24—7—1969 அன்று காலமானதற்கும்;

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 16

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்).

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Central Reserve Police.

*1. Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government is consulted by the Union Government whenever Central Reserve policemen are posted in this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி சென்ட்ரல் ரிசர்வ் போலீசைப்பற்றியது. மத்திய க்ஷேமநல காவல் படையினரைப்பற்றி என்று தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தப் படையை அனுப்பியிருக்கிறார்களா? இந்தப் படை அமைப்புப் பற்றி அரசாங்கம் என்ன கருத்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது மாநில அரசு, சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் உதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதற்காக அவர்கள் கோவையிலே முகாமிட்டார்கள். ஆனால் அவர்களை இந்தக் காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையில்லாமல் போய்விட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட அவர்கள் ஒரு முறை கொண்டுவரப்பட்டபிறகு, அவர்களை எந்தெந்த இடத்திலே எங்கே வைக்கவேண்டுமென்பது பற்றி இங்கே இருக்கிற இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் போன்றவர்களைக் கலந்து கொண்டு செய்யப்படுகிறதா? அல்லது முதல் அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த மத்திய போலீஸ் படை தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய இந்த மாநிலங்களுக்கு சோனல் அமைப்பாக இருக்கிறது. இந்தப் படை பெங்களூரிலே முகாம் செய்திருக்கிறது. மாநில அரசு தங்களுக்குத் தேவை என்று கூறுகிற நேரத்திலே வருகிறார்கள். மாநிலத்திலே

1969 ஆகஸ்ட் 16]

எந்த இடத்திலே வைப்பது, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவது என்பதுபற்றிய பொறுப்புகளெல்லாம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : மத்திய அரசு மாநிலங்களுக்கு மத்திய அரசு போலீசை அனுப்புவது மத்திய அரசு ஆதிக்கத்தின் அடையாளமே தவிர, வேறு அல்ல. மாநிலத்தின் உரிமையைப் பாதிக்கிற அளவில் இது இருப்பதாலே அவர்களை அனுப்பக் கூடாது என்ற முறையிலே சர்வ கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பு காங்கிரஸ் ஆண்ட நேரத்திலே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோதிலும், ரயில்வே ஊழியர் வேலை நிறுத்தத்தின்போதும் அப்போது இங்கிருந்த ஆட்சியாளர்கள் இங்கிருந்த போலீஸ் போதாததன் காரணமாக அவர்களை வரவழைத்திருந்தார்கள். மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கோரிப் பெறவேண்டுமென்று இருக்கிறது. சில நேரங்களிலே மத்திய அரசே அனுப்பலாம் என்றும் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நாம் கேட்டுப்பெறுவது அல்லாமல் அவர்களாகவே அனுப்புவதில்லை. அவர்களாக அனுப்பலாமா அல்லது மாநில அரசைக் கேட்டுக் கொண்டபிறகுதான் அனுப்பவேண்டுமா என்பது பற்றித் தீவிரமாக சிந்தித்து முடிவிற்கு வர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. சி. கோவிந்தராசன் : சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்குத்தான் உண்டு. எனவே, மாநில அரசு கேட்டால்தான் அனுப்பவேண்டும், அவர்களாகவே அனுப்பாமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்களும் கேட்டார்கள். அதைத் தீவிரமாகச் சிந்தித்து நல்ல முடிவை எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நக்சல்பாரி ஊடுருவலைத் தவிர்ப்பதற்காகத்தான் மத்திய அரசு இந்த அரசைக் கேட்காமல் வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நக்சல்பாரி ஊடுருவல் நம் மாநிலத்தில் மட்டும் அல்லாமல் இந்தியாவிலுள்ள வேறு மாநிலங்களிலேயும் இருப்பதாகத் தெரிகிறது. மத்திய அரசு தான் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : மாநில அரசு போலீசுக்கு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டு சட்டத்தைப் பாதுகாக்கிற ஆற்றல் இருக்கிற நேரத்திலே மத்திய அரசு அவர்கள் போலீசை அனுப்பவேண்டுமா? மத்திய அரசை எதிர்த்து நடக்கின்ற போராட்டங்களிலே மத்திய அரசு போலீஸ் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களே இந்த அதிகாரங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அதிகாரங்களை இன்னும் அவர்கள் பயன்படுத்தவில்லை. தேவைப்படுகிற நேரத்திலே நாம்தான் மத்திய போலீஸ் படையை வரவழைக்கின்ற நிலைமையை வைத்திருக்கிறோம். இந்த அதிகாரங்கள் அவர்களிடத்திலே இருக்கவேண்டுமா என்பதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. எ. வி. பி. ஆசைத்தம்பி: மத்திய அரசு நம்முடைய அனுமதி இல்லாமலேயே கோயம்புத்தூருக்குப் போலீஸ் படையை அனுப்பியதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய அனுமதி இல்லாமல் எந்தவிதமான போலீஸ் படையும் மத்திய அரசு அனுப்பக்கூடாதென்று தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நம்முடைய அனுமதி இல்லாமல் அனுப்பினார்கள் என்று சொல்லவில்லை. மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது நாம் கேட்டு அவர்கள் அனுப்பிவைத்தார்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. கா. மெய்யப்பன்: லா அண்டு ஆர்டர் ஸ்டேட் சப்ஜக்டாக இருக்கிற காரணத்தினால், மாநில அரசு கோரினால்தான் மத்திய அரசு அனுப்ப வேண்டும் என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கோரினால்தான் அனுப்ப வேண்டுமென்று கூறுகிறோம். நம்முடைய மாநிலம் அமைதியாக இருப்பதால், கோரினால்தான் அனுப்புவோம் என்று சொல்கிறார்கள். சில மாநிலங்களில் சட்டம் அமைதியைப் பாதுகாப்பதற்காக அவர்களாகவே அனுப்பவேண்டுமென்று வாதம் செய்கிறார்கள். நாம் இதைத் தீவிரமாக சிந்தித்து முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: மத்திய அரசு, மாநில அரசு சேர்ந்திருப்பது அரசுகள்தான். இது வேறு, அது வேறு என்றில்லாமல், தேவைப்படுகிறபோது, தேவையான அளவிற்கு வைத்துக்கொள்ளலாம் என்பதைப் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைத் தேவையான நேரத்தில் பரிசீலனை செய்வோம்.

THIRU T. MARTIN: Sir, the Hon. Chief Minister said that during the Central Government Servants' strike, this Government asked for the Central Police Force to go over to this State. May I know the reasons for the same?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏனென்றால், அந்த மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின்போது கட்டுமீறிய செயல் ஏதாவது நடைபெற்றுவிடக்கூடும் என்று முன்னெச்சரிக்கை

யாக இருக்க வேண்டியதும் இம்மாநிலப் போலீசினுடைய கடமையாகிறது. ஆகவேதான், அப்படி ஏதேனும் நேர்ந்துவிடுகிற நேரத்தில் அதிகமான பாதுகாப்பு தேவை என்பதற்காகத்தான், இங்கிருந்து சென்ற போலீஸ் படையோடு, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த போலீஸ் படையிலிருந்து 400 பேர் கொண்ட மூன்று கம்பெனிகளை வரவழைத்து, கோவைக்கு அருகாமையிலே வைத்துக்கொண்டார்கள்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: மத்திய அரசாங்கத்தால் அனுப்பப்படுகிற அந்தப் போலீஸ் படையினருக்கு ஆகும் செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா? அல்லது மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநில அரசு அதை வரவழைக்கின்ற நேரத்தில் மாநில அரசுதான் அவைகளை ஏற்றுக் கொள்ளுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நாம் கேட்டோ கேட்காமலோ மத்திய அரசு காவல் படை இங்கே வரக்கூடிய நேரத்தில், அதைக் கண்ட்ரோல் செய்யக்கூடிய அதிகாரம் அவர்களிடத்தில் தானே இருக்கிறது? அந்தக் கண்ட்ரோல் செய்யக்கூடிய அதிகாரம் நம்மிடத்தில் இல்லை என்பது உண்மைதானே?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உண்மைதான்.

Hindi Examinations.

*2 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether instructions have been issued by the Government to make Hindi Examinations at University Level optional from 1968?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தி கட்டளைச் சொற்கள் இருந்ததால் என்.சி.சி. பயிற்சியை இந்த அரசாங்கம் ரத்துசெய்து [illegible]. மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கற்பிக்கும் என்.சி.சி. படைப் பயிற்சியை இந்த அரசாங்கம் எப்போது திரும்பவும் தொடங்கும் என்பதை அறிவாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சபாநாயகர் அவர்களே, அடிப்படைக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. பெ. மலைச்சாமி: சபாநாயகர் அவர்களே, தமிழகத்தில் இந்தி மொழியைப் பரப்பும்பொருட்டு இங்கே இந்திப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடிப்படைக் கேள்விக்கு இது தொடர்புடையதில்லையென்றாலும், அப்படிப்பட்ட முயற்சி எதுவும் இருப்பதாக இந்த அரசுக்குத் தகவல் வரவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. Minister for Education be pleased to state whether the Government would allow students of this State who wish to seek appointments in North Indian States, to study Hindi as optional subject in High schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தில் பல்வேறு மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் இந்தி மொழியும் ஒரு விருப்பப் பாடமாக இருந்துகொண்டு வருகிறது. அதை எடுத்துப் படிக்க விரும்புகிறவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையிலும், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரைதான் அரசாங்கம் நேரடியாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறது. பல்வேறு பாடத் திட்டங்கள், மொழிகள், மற்றவைகளைப் பல்கலைக் கழகம்தான் முடிவு செய்கிறது. இப்பொழுதிருக்கும் நிலைமை, சென்ற பல ஆண்டுகளாக விருப்ப பாடங்களாகப் பல்வேறு மொழிகள் போதிக்கப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி, பெங்காலி, உருது, குஜராத்தி போன்றவைகளை விருப்பப் பாடங்களாகப் படிக்க ஏற்கனவே பல்கலைக் கழகத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு இல. பலராமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இந்தியைப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் தற்போது உண்டாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி அவர்கள் படிக்க வேண்டுமென்று சொன்னபோது தமிழக அரசு அதை மறுபரிசீலனை செய்து இந்தி படிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுவது போன்று அத்தகைய விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்தோ, பெற்றோர்களிடமிருந்தோ இந்த அரசுக்கு வரவில்லை.

விவசாய வருமானவரி.

*3 வினா—*திரு. வ. கு. சுப்பையா:* மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய வருமான வரி விகிதங்களை உயர்த்துவதாலும் வேறு வகையில் புதிய வரிகளை விதிக்கவும் மத்திய அரசு யோசனை கூறியதா?

(இ) இத்தகைய யோசனைகளைப்பற்றி தமிழக அரசின் முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, வேறு வகையிலாவது மத்திய அரசு வரியை விதித்து வருவாயைப் பெருக்க யோசனை கூறினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப்பட்ட எந்த விதமான யோசனையையும், விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில் சொல்லவில்லை. ஆனால், நாமே ஒரு முற்போக்கான கொள்கை இருக்கவேண்டும் என்ற காரணத்திற்காக, கடந்த வருஷத்தில் விவசாய வருமான வரி விதிப்பைப் பொறுத்து, 12½ ஏக்கர் என்று இருந்ததை 7½ ஏக்கர் என்ற அளவுக்குக் குறைத்தோம். கம்பவுண்டிங் செய்யும் முறையில் ஏற்கனவே இருந்ததைவிட இரண்டரை மடங்கு உயர்த்தியிருக்கிறோம் இதே சட்டமன்றத்தில். மாண்புமிகு உறுப்பினரும் அந்தப் பொறுக்குக் குழுவில் உறுப்பினராக இருந்தார். மாண்புமிகு நிதியமைச்சர் தான் அதற்குத் தலைவராக இருந்தார். நாமே அந்த முடிவை மேற்கொண்டோமே தவிர, இதில் யோசனை கூறவேண்டிய அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: இப்பொழுது நம்முடைய அரசு, புஞ்சைக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். விவசாய வருமான வரியை அதிகப்படுத்துவதன் மூலம், நஞ்சைக்கு இருக்கும் வரியை எடுத்து விடலாம் என்ற யோசனை இருந்தது தமிழக அரசுக்கு. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புஞ்சைக்கு இருந்த நில வரி எடுக்கப்பட்டுவிட்டது. நஞ்சைக்கான நில வரியை எடுக்க வேண்டும் என்பதும் இந்த அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தாலும், நீர்த் தீர்வையும் நில வரியும் ஒன்றாக இணைந்திருப்பதாலும் இதிலே பாரபட்சம் ஏற்படும் என்ற காரணத்தினாலும், அதை எப்படிச் செய்வது என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி புதுப்பிக்கப்பட்ட பின்னர், மொத்தத்தில் இப்பொழுது எத்தனை மடங்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப்பற்றித் தனிக் கேள்வி தேவை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் விவசாய வருமான வரி விதிப்பைத் தள்ளுபடி செய்ய அல்லது குறைக்க அரசாங்கம் ஏதாவது வகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில், நான் மகிழ்ச்சிகரமான செய்தியொன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வறட்சியான நிலைமை இருந்தபோதிலும்கூட, விவசாய வருமான வரி கொடுக்கிறவர்கள் வறட்சியானவர்கள் அல்லர். விவசாய வருமான வரி நல்ல முறையில் இந்த ஆண்டு செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், அதை வசூல் செய்வதிலே நல்ல திருப்திகரமான நிலைமையை அதிகாரிகள் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினரும் விவசாய வருமான வரிக் கட்டுபவராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. உண்மையாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலத்திற்கே தவிர, வரி வசூலைப் பொறுத்தவரையில், நல்ல வகையிலே வசூலாகியிருக்கிறது என்று வசூலாகிவிட்ட கணக்கைப் பொறுத்து நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, விவசாய வருமானம் இருந்தால்தான் வரி விதிக்கவேண்டுமே தவிர, ஆளைப் பொறுத்ததல்ல என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உணர வேண்டும். ஆளைப் பொறுத்து இல்லாமல், விவசாய வருமானம் இல்லையென்றால், அவர்களுக்கு "ரெமிஷன்" கொடுக்கவேண்டும் என்பது திட்டமாக இருக்கவேண்டும். விவசாய வருமான வரியின் மூலம் வருவாய் பெருகியிருக்கிறது என்றால், ஒரு புலவன் இங்கே ஞாபகப்படுத்துவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். "வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு" என்பதாக இருக்குமா என்பதைச் சர்க்கார் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது முன்னிருந்த அரசாங்கத்திற்குப் பொருந்துமானால், அது இந்த அரசாங்கத்திற்கும் பொருந்தும். ஆனால், இந்த நிலைமை அப்படி அல்ல. வருமானத்தைப் பொறுத்து, அதன் மீதுதான் விவசாய வருமான வரியேதவிர, ஆளைப் பொறுத்து அல்ல. விவசாய வரியைப் பொறுத்து, கடந்த ஆண்டுகளில் நிலுவை பாக்கி இருந்த நிலைமை மாறி, நல்ல முறையில் இலாக்கா செயல்பட்டதன் மூலம் அரசாங்கம் திருப்திப்படும் அளவுக்கு வசூலாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற மாதிரி நிலைமை எங்காவது இருந்தால், அந்த நிலைமைக்கான பரிகாரத்தைத் தேடுவதற்கும், அதற்கு விதிவிலக்கு அளிப்பதுச் சாத்தியமாக இருக்குமானால், அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்கவும் என்றைக்குமே தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : விவசாயம் செய்கிறவர்களுக்கு விவசாயச் செலவு அதிகரித்திருக்கிறது. எரு விலை உயர்வு, கூலி உயர்வு முதலியவற்றின் காரணமாக விவசாயச் செலவு அதிகரித்

திருப்பதால், கூலி விகிதத்தில் கிளர்ச்சி பண்ணாமல் இருப்பதற்காக, விவசாய வருமான வரியை ஒரு சிறிதளவு குறைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விவசாய வருமான வரியை இன்னும் ஏன் அதிகமாக்கவில்லை என்ற வகையில்தான் நாட்டில் பொதுவான கருத்து இருந்து வருகிறது. இதற்கென நியமிக்கப்பட்ட பொறுக்குக் குழு தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, விசாரித்ததில், உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு முன்னைக் காட்டிலும் சற்று அதிகமாக வரிப் போட வேண்டும் என்ற வகையில்தான் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வரியை உயர்த்துவதற்கு யோசனை சொன்னால் அதைப் பரிசிலனை செய்யலாமே தவிர, குறைப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசாங்கம் இதைப் பொறுத்த வரையில் ஈடுபடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பதில்சொல்லும்போது, விவசாய வருமான வரிக் கொடுப்பதிலே சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். கொடுக்கிறவர்கள் சந்தோஷமாக எந்த இடத்தில் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா ? வரி வசூலாகியிருக்கிறது என்பதில் சர்க்காருக்குச் சந்தோஷமாக இருக்கலாமேதவிர, வரிக் கொடுத்த விவசாயிகள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று எந்த இடத்திலிருந்து புள்ளி விவரங்கள் வந்தன என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொடுக்கிறவர்களுக்குச் சந்தோஷம் என்பதல்ல. கொடுக்கிறவர்களுக்குக் கொடுக்க முடிகிறது ; கொடுக்கச் சக்தி இருந்திருக்கிறது ; கொடுத்திருக்கிறார்கள் அந்த வகையில்தான் சொன்னேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் வரி விதிக்க வருமானத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக விசேஷ புதிய வரிகளை மாநில அரசு விதிக்க வேண்டுமென்ற ஆலோசனையை மத்திய அரசு கூறி இருக்கிறதா ? நம்முடைய அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசாங்கங்களின் பங்கு என்ற வகையில் அதிகமான வருவாயைத் தேட வேண்டுமென்ற முறையில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அது அதிக வரியின் மூலமாகவும் இருக்கலாம் அல்லது மற்ற வகையில் வருமானத்தைப் பெருக்குவதன் மூலமாகவும் இருக்கலாம். இவ்வளவு ரூபாய்க்கு நீங்கள் இந்த ஐந்து ஆண்டுகளில் வரி விதிக்க வேண்டுமென்று மத்திய அரசு யோசனை கூறியிருக்கிறது. வேறு சாத்தியக் கூறான வகையில் வருவாயைப் பெருக்க முயற்சி மேற்கொள்வதுடன், தவிர்க்க முடியாத நிலையில் யார் தாங்கக் கூடியவர்களோ அவர்கள்மீது வரி விதிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

[1969 ஆகஸ்ட் 16

Joint Parliamentary Committee on Scheduled Casts and Tribes.

*4 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Government has tendered any opinion to the Joint-Parliamentary Committee on Scheduled Castes and Scheduled Tribes which visited Madras about 16th September 1968?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, பார்லிமெண்டரிக் குழு முன்னால் மாநில அரசாங்கம் அளித்த அபிப்பிராயத்தைச் சட்டசபையின் மேஜையின் மேல்வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பார்லிமெண்டரிக் குழுவிடம் இந்த அரசாங்கம் எந்தவிதச் சிபாரிசும் செய்யவில்லை. என்றாலும் மத்திய அரசாங்கம் கேட்டதற்கிணங்கச் சில சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டரிக் குழுவிடம் இந்த அரசாங்கம் எந்தக் கருத்தும் கூறவில்லை.

Thiru T. MARTIN: Mr. Speaker, Sir, Backward Communities in this State enjoy certain educational concessions and reservation in admission to Government colleges like Medical Colleges. But unfortunately these concessions and reservations are being denied to Christian converts from the Backward Communities. May I request the Hon. Minister to state whether at least from the coming year the Government will take steps to abolish such discrimination which is being practised only on the ground of religion?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதைப் பற்றிப் பல முறை இந்த மன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்து அரிசன மக்கள் மதம் மாறிய பிறகு, கிறிஸ்தவர்கள் ஆகிவிட்ட பிறகு தீண்டாமையினால் அவதிப்படுகின்ற கொடுமைகள் அவர்களுக்கு இல்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு ரிசர்வேஷன் இல்லை என்று மத்திய அரசாங்கச் சட்டம் சொல்கிறது. மதம் மாறியவர்களுக்கு இந்த ரிசர்வேஷன் இல்லை போனாலும்கூட கல்வியில் உபகாரச் சம்பளங்கள், மற்றச் சலுகைகள் அனைத்தையும் நம்முடைய மாநில அரசாங்கம் செய்து கொடுத்து வருகிறது.

திரு. என். வரதராஜன்: ஜாதிச் சான்றுகள் பெறுகிறபோது, பள்ளர், பறையர், சக்கிலியர் என்று போடவேண்டுமென்ற நிலை இருப்பதால் அந்த மக்கள் மனம் புண்படுகிறது. ஆகவே, அவர்கள் எல்லாம் ஆதித் திராவிடர் என்று குறிப்பிட்டாலே போதும் என்று அரசு முடிவு எடுக்குமா?

1969 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதைப் பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்கனவே ஒரு சிபார்சை செய்திருக்கிறது. அந்த சிபார்சில் சண்டாளர்கள் (மதுரை மாவட்டம்), பஞ்சம சமூகம், பறையர், சாம்பவர் போன்ற சொற்கள் இழிவாகக் கருதப்படுவதால் இவர்களை "ஆதித் திராவிடர்" என்ற "சப்-காஸ்ட்"-டின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று கூறியிருக்கிறோம். அந்த வகையில் "பறையர்கள்" என்பவர்கள் "ஆதித் திராவிடர்கள்" என்ற "சப்-காஸ்ட்"-டின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களையும் அதே போன்று சேர்த்துக்கொள்வது மக்கள் தொகைக் கணக்கு எடுத்து முடிக்கப்பட்டபிறகு அதாவது அடுத்த ஆண்டு முடிவு செய்யப்படும். ஆகவே, இதைப்பற்றி இந்த அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. என். ராஜாங்கம்: இந்து மதத்திலிருந்து மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் மறுபடியும் இந்து மதத்திற்கே வந்து விட்டால் அவர்களுக்கு ரிசர்வேஷன் உண்டா? அப்படியானால் அவர்கள் மறுபடியும் இந்து மதத்திற்கு மாறி எத்தனை ஆண்டுகள் கழித்து ரிசர்வேஷனுக்கான தகுதியைப் பெற முடியும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்து அரிசனங்களாக இருப்பவர்கள் வேறு மதம் மாறி மீண்டும் இந்துக்களாக வந்தால் நிச்சயமாக இந்து அரிசனங்களுக்கு உள்ள எல்லாச் சலுகைகளும் கிடைக்கும். மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரை மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களுக்கும் ஒரு தலைமுறைக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: இன்றைக்கு இந்துவாக இருப்பவன் மறுநாள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்ட காரணத்தால், மத மாற்றம் ஏற்படுகிறதே தவிர, பொருளாதார நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. நம்முடைய இந்தியாவை செக்குலர் ஸ்டேட்—மதச் சார்பற்ற நாடு—என்று சொல்லும் நிலையில், மதம் மாறிய அரிஜனங்களுக்குச் சலுகை கிடைக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தும் வகையில், இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் முன்னரே சொன்னபடி கிறிஸ்தவ மதத்தில் இன்றைக்கு ஜாதி வித்தியாசம் கிடையாது. கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டால் அந்த மதத்தின்படி ஜாதி வித்தியாசம் கிடையாது. ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை; ஜாதி ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்த முறையில் கிறிஸ்தவ அரிசனங்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்க வேண்டுமென்ற முறையில் கிறிஸ்தவ அரிசன சங்கங்கள் மனுக்களைக் கொடுத்து வருகிறார்கள். மாநாடுகளைக் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்புகிறார்கள்.

வழக்கு மன்றத்திலேகூட வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் அதைக்குறித்து இதுவரை எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

Milo supplied in Sathuvachari area

*5. Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the milo supplied to family card holders in November 1968, in the Sathuvachari area, Vellore has been found, mixed with plastic beads of grain size?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பங்கீட்டு அட்டை வைத்துள்ளவர்களுக்கு விற்பனை செய்வதற்காக நியாயவிலைக் கடை வணிகர், திரு. சிதம்பரம் 29—10—1968 காலை மைலோ மூட்டை ஒன்றைப் பிரித்தார். அதில் தானிய அளவுள்ள பிளாஸ்டிக் மணிகள் இருப்பதைக் கண்டார். 30—10—1968 அன்று மறுபடியும் இன்னுமொரு மைலோ மூட்டையைப் பிரித்தபொழுது, அதிலும் பிளாஸ்டிக் மணிகளைக் கண்டார். மீதியுள்ள மூட்டைகளும் உடனடியாகச் சோதனை செய்யப்பட்டன. ஆனால், பிளாஸ்டிக் மணிகள் எவையும் அவற்றில் காணப்படவில்லை. மற்றக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மைலோ மூட்டைகளிலும் பிளாஸ்டிக் மணிகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக அவையும் உடனே பரிசோதிக்கப்பட்டன. அந்த மூட்டைகளில் பிளாஸ்டிக் மணிகள் காணப்படவில்லை. இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாய் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவற்றிலே பிளாஸ்டிக் மணிகள் இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடைக்காரர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?. உணவுப் பிரச்சினை ஜீவாதாரமான பிரச்சினை. ஆகவே, உணவுப் பொருளில் கலப்படம் செய்பவர்களைத் தண்டிக்க இன்னும் கடுமையான முறைகளைக் கையாள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் அளித்த விடையிலே, "இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாக ஏற்பட்டு இருக்கலாம்" என்று சொன்னேன்.

திரு. சா. மெய்யப்பன்: பிளாஸ்டிக் மணிகளின் உற்பத்திச் செலவு தானிய உற்பத்திச் செலவைவிட அதிகமாக இருக்குமாகையால் அது கலப்படச் சட்டத்தின்கீழ் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் சொல்லுகிறபடி பிளாஸ்டிக் மணிகளைத் தயார் செய்கிற செலவு அதிகமாக இருக்கிற காரணத்தால், இது தற்செயலாக ஏற்பட்டிருக்கும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இப்படி பிளாஸ்டிக் மணிகள் என்று மட்டுமல்லாமல், கல், மண் போன்றவற்றைக் கலப்படம் செய்கிறார்கள். கலப்படம் இல்லாத வஸ்துவே இல்லை என்ற நிலை

இருக்கிறது. ஆகவே, கலப்படம் செய்வது உற்பத்தி செய்யக் கூடிய இடத்தில் இருந்தாலும்சரி, அல்லது விற்கக் கூடிய இடத்தில் இருந்தாலும்சரி, கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் சர்க்கார் சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்த முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கலப்படச் சட்டத்தைப் பொறுத்தவரை சுகாதார அமைச்சருக்குக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: பிளாஸ்டிக் மணிகள் அகஸ்மாத்தாகக் கலந்து விட்டிருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில மாதங்களுக்கு முன்னால் பழனியில் இதே போன்ற புகார் வந்து அதைப்பற்றி அமைச்சருக்கு எழுதியதற்கு அதன்மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகவே, அதே போன்று இப்போது நடந்திருப்பதைப் பார்க்கும்போது இது தற்செயலாக நடந்தது அல்ல, வேண்டுமென்றே செய்யப் பட்டிருக்கிறது என்பதற்குத்தான் ஆதாரமாக இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரிக் கலப்படம் எந்த மட்டத்தில் நடைபெறுகிறது என்பதைக் கண்டு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பழனி சம்பவம்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தகவல் தெரிவித்தால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியும். பிளாஸ்டிக் மணிகளைத் தயாரிப்பதற்காகும் செலவு தானிய மணிகள் உற்பத்திக்காகும் செலவைவிட அதிகமாகும் என்ற காரணத்தால் அரசாங்கம் இது தற்செயலாக நடந்ததாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

விசைத்தறிகள்

*6 வினா.—திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் விசைத் தறிகள் (power-looms) மாவட்ட ரீதியாக எத்தனை?

(இ) மேற்கொண்டு விசைத் தறிகள் புகுத்தப்படுவதைத் தடுப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாட்டில் தற்பொழுது 20,645 அனுமதிக்கப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் 18,742 விசைத்தறிகளுக்கு மாவட்ட ரீதியாக உள்ள விவரம் பின்வருமாறு: 1956-ம் ஆண்டிற்குமுன் அங்கீகரிக்கப்பட்ட மீதியுள்ள 1,903 விசைத்தறிகளுக்கு மாவட்ட ரீதியாக உள்ள விவரம்பற்றித் தகவல் இல்லை.

[1969 ஆகஸ்ட் 16

மாவட்டத்தின் பெயர்.	விசைத்தறிகளின் எண்ணிக்கை.
1 கோயம்புத்தூர்	8,591
2 சேலம்	7,369
3 தருமபுரி	61
4 மதுரை	1,521
5 சென்னை	80
6 வட ஆர்க்காடு	181
7 ராமநாதபுரம்	387
8 திருச்சிராப்பள்ளி	136
9 தென் ஆர்க்காடு	31
10 கன்னியாகுமரி	5
11 செங்கல்பட்டு	14
12 திருநெல்வேலி	354
13 தஞ்சாவூர்	12
மொத்தம்	18,742

(இ) விசைத்தறிகள் புகுத்துவதுபற்றி அரசு முடிவு எடுக்கவில்லை.

திரு. என். சங்கரய்யா : தமிழ்நாட்டில் கைத்தறியாளர்கள் ஐந்து லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய காரணத்தினால் அவர்களது குடும்பத்தினர் 25 லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய நிலையில் திட்டக் கமிஷன் உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் சமீபத்தில்கூட 12,000 விசைத்தறிகளைத் தமிழக அரசு உடனடியாகப் புகுத்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு என்ன ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விசைத்தறி வேண்டுமா வேண்டாமா, விசைத்தறிகள் வருவதால் கைத்தறி பாதிக்கப்படுமா என்ற பிரச்னை பன்னெடுங் காலமாக நம் நாட்டில் பரிசீலிக்கப்பட்டு வருகிற ஒரு பிரச்னையாகும். ஆனால் தமிழ்நாட்டில் விசைத்தறி கூடாதென்று ஒரு கொள்கை பின்பற்றப்பட்டு வந்த காரணத்தினால் இன்றைக்கு மற்ற மாநிலங்களில் விசைத்தறிகளின் எண்ணிக்கை வளர்ந்து நம் கைத்தறித் துணிகள் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் உணர்ந்து வருகிறோம். ஆகவே விசைத்தறியை மீண்டும் எப்படிக் கொண்டுவரலாம், கைத்தறி நெசவாளர்கள் எந்தளவிற்குப் பாதிக்கப்படாது கொண்டுவரமுடியும் என்று அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் குறிப்பிட்டது நான்காவது திட்டத்தில் எல்லா மாநிலங்களுக்கும் எப்படி விசைத்தறிகளைக் கொடுப்பது என்பதுபற்றி அசோக்மேத்தா குழுவினர் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் 12,500 விசைத்தறிகள் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எப்படிக் கொண்டுவருவது என்பதுபற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

1969 ஆகஸ்ட் 16]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: விசைத்தறிகளைப் புகுத்தினால் தான் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு இக்கட்டான நிலைமையை நாம் சமாளிக்க முடியும். பிற மாநிலங்களோடு போட்டியிடுவதற்கும் அப்போதுதான் வகையாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா? அல்லது இப்போதிருக்கும்படியான கைத்தறி அப்படியே இருக்கவேண்டும் என்று கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு சிறந்த கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் அரசாங்கம் இப்போது பரிசீலித்து வருகிறது. விசைத்தறியைப் புகுத்துவதால் நம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதையும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் மிக அழகாக எடுத்துக் கூறியதுபோல் நாம் விசைத்தறியைப் புறக்கணிக்கிற காரணத்தினால் மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இருந்து விசைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் ஏராளமாக இந்த மாநிலத்திற்கு வந்து நம் கைத்தறி நெசவாளர்களின் துணிகள் விலைக்குப் போகாதிருக்கும் ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பது [illegible] உண்மை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் உள்ள மில்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதற்கு ஒரு காரணம் நம் நூல்கள் மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுக்குச் சென்று அங்கு துணிகளாக நெய்யப்பட்டு இங்கு [illegible] இந்தப் பாதிப்பு ஏற்பட்டது என்று தெரிய வருகிறது. 12,500 தறிகள் மட்டுமல்ல அதற்கு மேலும் தறிகள் புகுத்துவதால் கோவைப் பஞ்சாலைகளுக்கு நல்லதொரு பரிகாரம் செய்ய முடியும் என்பதை அரசு அறியுமா? ஆகவே, அதற்கான விரைவில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்தையும் அரசு மனதில் எடுத்துக்கொள்கிறது. நம் நாட்டில் நூற்பாலைகள் மட்டும் ஏராளமாக இருந்து [illegible] விசைத் தறிகள் குறைவாகவும் இருக்கிற காரணத்தினால் பக்கத்து வட மாநிலங்களையும் வெளி நாடுகளையும் உற்பத்தி செய்ய [illegible] வட நாட்டுச் சந்தைகளையும், வெளி நாட்டுச் சந்தைகளையும் எதிர் பார்த்து நிற்கும் சூழ்நிலை நம் நூற்பாலைகளுக்கு ஒரு பெரும் கேடாக இருப்பதை உணர்ந்து அதைப்பற்றி ஆராயும்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : [illegible] மில் நூல்களுக்கு மார்க்கெட் இல்லாது [illegible] நம் மாநிலத்தில் பெரிய அளவில் விசைத்தறி மையங்கள் அமைப்பதற்கான எல்லா வசதிகளையும் நம் அரசாங்கம் நன்கு ஆராய்ந்து ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப் பற்றி இக்காலையில் நடைமுறைக்குக் கொண்டுவரக் கூட்டுறவுத் துறையில், தனியார் துறையில், பொதுத் துறையில் நடைமுறைக்குக் கொண்டுவர [illegible] அழைத்து அரசு பரிசீலனை செய்தது. விசைத்தறிகளைக் கொண்டு

வருவோம் என்று நாம் நினைத்தாலும் அதன் காரணமாக உடனடியாகக் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்றளவிற்குக் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய கைத்தறியாளர்களையெல்லாம் அழைத்துப் பேசி முதல் கட்டமாக அவர்களுக்கு இந்த விசைத்தறியை விடவேண்டும், அவர்களது தொழில் எந்த அளவிலும் பாதிக்கக்கூடாது என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. விசைத்தறிகள் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டால் எவ்வளவு மடங்கு அதிகமாக வருமானம் வரும். நம் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் எப்படி செயல்படுத்தமுடியும் என்பதைத்தான் அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: விசைத்தறிகளை அதிகமாக அமைத்தால் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். கைத்தறி என்றவுடனேயே திருவள்ளுவர் ஞாபகம் தான் ஒவ்வொருவருக்கும் வருகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரது தொழில் பின்பற்றப்பட்டு வரும் இந்தக் காலத்தில் அந்தக் கைத்தறித் தொழிலையும் ஆதரிக்கவேண்டும். விசைத்தறியையும் புறக்கணிக்க முடியாது. இதற்கு ஒரு 'வயாமீடியா' என்னவெனில், விசைத்தறியில் இன்னின்ன ரகங்கள்தான் தயாரிக்க வேண்டும், கைத்தறியில் இன்னின்ன ரகங்கள்தான் தயாரிக்க வேண்டும் என்ற ஒரு விதியை சர்க்கார் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உறுப்பினர் அவர்கள் கைத்தறி நெசவுத் தொழிலைச் சேர்ந்தவர்கள். கைத்தறி நெசவாளர்களின் உண்மை நிலையை அவர்கள் படம் பிடித்துக் காண்பித்தார்கள். அதை ஒருக்காலும் இந்த அரசாங்கம் மறக்காது. கைத்தறி நெசவாளர்களுக்கு எள்ளளவேனும் துன்பம் விசைத்தறியைப் புகுத்துவதால் ஏற்பட்டால் அதற்குப் பரிகாரம் காண நாங்கள் தவற மாட்டோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தமிழகத்திற்கு விசைத்தறி வருவதால் கைத்தறிக்கு ஒரு நெருக்கடியான நிலை இருக்கிறது. அதே நோக்கில் பிற மாநிலங்களில் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வருகிற காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு விலை வீழ்ச்சியாகத்தினால் நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டாவது பெரிய தொழிலாக இருக்கிற கைத்தறித் தொழிலில் விசைத்தறியைப் புகுத்துவது அவசியந்தான் என்ற அடிப்படையில் சர்வ கட்சித் தலைவர்களையும் விரைவில் கூட்டி அரசு ஒரு முடிவிற்கு வருமா? அதற்குரிய முயற்சியில் அரசு விரைவில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னாலே சொன்னபடி, இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய எல்லாத் துறைத் தலைவர்களையும் அழைத்துப் பேசினோம். கூடியவரையில் எல்லோரும் ஒருமித்த கருத்தை, விசைத்தறி தேவை என்பதைச் சொல்லியிருக்-

கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்குள்ள சந்தேகமெல்லாம் விசைத்தறியைக் கொண்டு வருகிற காரணத்தினால் இப்போது எப்படி விசைத்தறி கொண்டு வராத காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதகம் இருக்கிறதோ அதே பாதகம், வேலையில்லாத் திண்டாட்டம் வரக்கூடாது, அதைத் தடுக்க, கைத்தறியாளர்களுக்கு விசைத்தறியை ஒதுக்கி, கூட்டுறவுத் துறையில் பெரும்பான்மையாக விசைத்தறியை ஒதுக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் தவிர்க்கப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் அத்தனைபேர்களுடையவும், அவர்கள் தனிப்பட்ட கருத்தையும் இப்போது அறிந்து வருகிறது. இன்று காலையில் எனக்குக் கிடைத்த தகவல்படி பெரும்பான்மையான கூட்டுறவு நெசவாளர்கள் இதை விரும்பியிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இதை முழுமையும் பெற்ற பின்னால் அரசு பரிசீலித்து ஒரு முடிவிற்கு வரும்.

திரு. நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது விசைத்தறியை மாவட்ட ரீதியாக ஒதுக்கும்போது கோவை மாவட்டத்திற்கு 8000-க்கு அதிகமாகவும், சேலம் மாவட்டத்திற்கு 7000-க்கு அதிகமாகவும், வடாற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவிலும் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மிகப் பழைய காலத்துக் கதை. இப்போது ஒதுக்கப்பட்டதல்ல. அங்கத்தினர் அவர்களின் மாவட்டத்திற்கு வேண்டுமென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் தரத் தயாராயிருக்கிறோம்.

Veeranam Water-supply Scheme

*7 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the villages lying off the route from Veeranam lake near Chidambaram to Madras will also be benefited by the water-supply scheme when water is taken to Madras from the Veeranam lake?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

DR. H. V. HANDE: Sir, in view of the extraordinary water scarcity in the City of Madras, will the Hon. Minister be pleased to tell us clearly as to how many days or months or years it will take for this work to be completed so that we can at least know when the water will start coming—whether it is next year or the year next? Will the Hon. Minister take us into his confidence and tell us the time when the water is likely to come to the Madras City from the Veeranam lake?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதல் கேள்வி சிதம்பரம் தாலுக்கா கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றி. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

வருவோம் என்று நாம் நினைத்தாலும் அதன் காரணமாக உடனடியாகக் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்றளவிற்குக் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய கைத்தறியாளர்களையெல்லாம் அழைத்துப் பேசி முதல் கட்டமாக அவர்களுக்கு இந்த விசைத்தறியை விடவேண்டும், அவர்களது தொழில் எந்த அளவிலும் பாதிக்கக்கூடாது என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. விசைத்தறிகள் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டால் எவ்வளவு மடங்கு அதிகமாக வருமானம் வரும். நம் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் எப்படி செயல்படுத்தமுடியும் என்பதைத்தான் அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: விசைத்தறிகளை அதிகமாக அனுமதித்தால் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். கைத்தறி என்றவுடனேயே திருவள்ளுவர் ஞாபகம் தான் ஒவ்வொருவருக்கும் வருகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரது தொழில் பின்பற்றப்பட்டு வரும் இந்தக் காலத்தில் அந்தக் கைத்தறித் தொழிலையும் ஆதரிக்கவேண்டும். விசைத்தறியையும் புறக்கணிக்க முடியாது. இதற்கு ஒரு 'வயாமீடியா' என்னவெனில், விசைத்தறியில் இன்னின்ன ரகங்கள்தான் தயாரிக்க வேண்டும், கைத்தறியில் இன்னின்ன ரகங்கள்தான் தயாரிக்க வேண்டும் என்ற ஒரு விதியை சர்க்கார் ஏற்படுத்தினால் நன்றாகயிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உறுப்பினர் அவர்கள் கைத்தறி நெசவுத் தொழிலைச் சேர்ந்தவர்கள். கைத்தறி நெசவாளர்களின் உண்மை நிலையை அவர்கள் படம் பிடித்துக் காண்பித்தார்கள். அதை ஒருக்காலும் இந்த அரசாங்கம் மறக்காது. கைத்தறி நெசவாளர்களுக்கு எள்ளளவேனும் துன்பம் விசைத்தறியைப் புகுத்துவதால் ஏற்பட்டால் அதற்குப் பரிகாரம் காண நாங்கள் தவற மாட்டோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தமிழகத்திற்கு விசைத்தறி வருவதால் கைத்தறிக்கு ஒரு நெருக்கடியான நிலை இருக்கிறது. அதே நோக்கில் பிற மாநிலங்களில் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருகிற காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு விலை வித்தியாசத்தினால் நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டாவது பெரிய தொழிலாக இருக்கிற கைத்தறித் தொழிலில் விசைத்தறியைப் புகுத்துவது அவசியந்தான் என்ற அடிப்படையில் சர்வ கட்சித் தலைவர்களையும் விரைவில் கூட்டுவித்து அரசு ஒரு முடிவிற்கு வருமா? அதற்குரிய முயற்சியில் அரசு விரைவில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னாலே சொன்னபடி, இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய எல்லாத் துறைத் தலைவர்களையும் அழைத்துப் பேசினோம். கூடியவரையில் எல்லோரும் ஒருமித்த கருத்தை, விசைத்தறி தேவை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்குள்ள சந்தேகமெல்லாம் விசைத்தறியைக் கொண்டு வருகிற காரணத்தினால் இப்போது எப்படி விசைத்தறி கொண்டு வராத காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதகம் இருக்கிறதோ அதே பாதகம், வேலையில்லாத் திண்டாட்டம் வரக்கூடாது, அதைத் தடுக்க, கைத்தறியாளர்களுக்கு விசைத்தறியை ஒதுக்கி, கூட்டுறவுத் துறையில் பெரும்பான்மையாக விசைத்தறியை ஒதுக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் தவிர்க்கப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் அத்தனைபேர்களுடையவும், அவர்கள் தனிப்பட்ட கருத்தையும் இப்போது அறிந்து வருகிறது. இன்று காலையில் எனக்குக் கிடைத்த தகவல்படி பெரும்பான்மையான கூட்டுறவு நெசவாளர்கள் இதை விரும்பியிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இதை முழுமையும் பெற்ற பின்னால் அரசு பரிசீலித்து ஒரு முடிவிற்கு வரும்.

திரு. நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது விசைத்தறியை மாவட்ட ரீதியாக ஒதுக்கும்போது கோவை மாவட்டத்திற்கு 8000-க்கு அதிகமாகவும், சேலம் மாவட்டத்திற்கு 7000-க்கு அதிகமாகவும், வடாற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவிலும் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மிகப் பழைய காலத்துக் கதை. இப்போது ஒதுக்கப்பட்டதல்ல. அங்கத்தினர் அவர்களின் மாவட்டத்திற்கு வேண்டுமென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் தரத் தயாராயிருக்கிறோம்.

Veeranam Water-supply Scheme

*7 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the villages lying on the route from Veeranam lake near Chidambaram to Madras, will also be benefited by the water-supply scheme when water is taken to Madras from the Veeranam lake?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

DR. H. V. HANDE: Sir, in view of the extraordinary water scarcity in the City of Madras, will the Hon. Minister be pleased to tell us clearly as to how many days or months or years it will take for this work to be completed so that we can at least know when the water will start coming—whether it is next year or the year next? Will the Hon. Minister take us into his confidence and tell us the time when the water is likely to come to the Madras City from the Veeranam lake?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மேலக் கேள்வி சிதம்பரம் தாலுக்கா கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றி, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 16

திரு. முனு ஆதி: வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவரும்போது எந்தெந்த மார்க்கமாக அது வருகிறதோ, நாஷனல் ஹைவேஸ் என்று வரும்போது இருபுறங்களிலுள்ள இடங்களுக்கு மாதத் தவணை கொடுத்து காலி செய்ய வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய காலம் கொடுக்கப்படும். தென் ஆற்காடு ஜில்லா, செங்கல்பட்டு ஜில்லா வழியாகத் தண்ணீர் கொண்டுவரப் படும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வந்தாலும், குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்ற எண்ணம் நிலவி வருகிறது. இதைப்போக்க சென்ற அரசாங்கம் ஜோலார்பேட்டையிலிருந்தும் சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தைக் கைவசம் வைத்திருந்தது. அந்தத் திட்டத்தையும் இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. அ. கு. சுப்பையா : ஐயா, காவிரியிலிருந்து வீராணம் ஏரி வழியாகச் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரப்போகிறது. எத்தனை கியூசெக்ஸ் காவிரியிலிருந்து எடுக்கப்படும், அதனால் ஏற்படும் அச்சத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வீராணத்திலிருந்து 75 கியூசெக்ஸ் எடுப்பதாக இருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரும் தண்ணீரைக் கிராமங்களுக்கு வழங்க முடியாவிட்டாலும் வழியிலிருக்கும் நகராட்சிகள், மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கும் உத்தேசம் உண்டா ? அவ்வாறான கோரிக்கைகள் திண்டிவனம், விழுப்புரம் பகுதியிலிருந்து வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோரிக்கைகள் வந்தன. ஆனால், தண்ணீர் கொடுப்பதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி நீர் கொண்டு வரும் திட்டத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும்பொழுது தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று அஞ்சப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அந்த அச்சத்தைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்னவென்று அறியலாமா ?

1969 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிச்சயமாக பாதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க சமீபத்தில் இந்தியாவிற்கு வந்த பிரெஞ்ச் நிபுணர்கள் கோஷ்டியார் சில நல்ல ஆலோசனைகளைக் கூறியிருப்பதாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அது, நம்முடைய அரசுக்கும் அப்படிப்பட்ட ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறதா ? அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது முடிவுகள் எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற ஆலோசனைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டன. அவைபற்றியும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், வீராணம் ஏரியில் முறையாக இருக்கும் தண்ணீர் எவ்வளவு ? இந்தத் திட்டம் நிறைவேறினால் எவ்வளவு இருக்கும் ? இப்படித் தண்ணீர் எடுப்பதனால் சிதம்பரம் தாலுக்காவில் நீர்ப்பாசனம் பாதிக்கப்படுமேயானால், தடை ஏற்படாதா ? உணவு உற்பத்திப் பெருக்கம் குறையாதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதுபற்றி சிதம்பரம் தாலுக்காவிலிருந்த வேளாண்மைப் பெருங்குடிமக்களை முன்னைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், அப்பொழுது இருந்த பொதுப்பணித்துறை அமைச்சராகிய நானும் கலந்து ஆலோசித்து, அதிகாரிகளைக் கூட்டி இரண்டு நாட்கள் விவாதித்தோம். அதற்குப்பிறகு சிதம்பரம் தாலுக்காவிலுள்ள விவசாயிகளும் வீராணத்திலிருந்து தண்ணீரை சென்னைக்கு எடுப்பதால் எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நெல்லிக்குப்பம் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்கள்

*8 வினா.—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் வட்டாரத்தில் (Block) உள்ள பஞ்சாயத்துக்களில் மாதாந்திரக் கூட்டமே நடைபெறாத பஞ்சாயத்துக்கள் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?

(உ) கூட்டங்கள் மாதந்தோறும் முறையாக நடைபெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) மாதாந்திரக் கூட்டமே நடைபெறாத ஊராட்சிகள் இல்லை.

(இ) எழாது.

(உ) ஒவ்வொரு ஊராட்சியிலும் மாதாந்திரக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும் என்பது குறித்து அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவருக்கு அவ்வப்பொழுது அறிவுரைகள் வழங்கி உள்ளார்கள். ஊராட்சிகளை ஆய்வு செய்கிறபோதும் பார்வையிடும்போதும் விதிகளின்படி மாதந்தோறும் கூட்டம் நடத்த வேண்டும் என்று தலைவர்கள் வலியுறுத்தப்பட்டு வருகிறார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, சில பல பஞ்சாயத்துக்களில் மாதாந்திரக் கூட்டம் அல்ல, பஞ்சாயத்துத் தேர்தல் முடிந்ததிலிருந்து இன்றுவரை கூட்டமே கூட்டப்படாத பல பஞ்சாயத்துக்கள் உண்டு. நானே கூற முடியும். இதனால் என்ன ஏற்படுகிறது என்றால், நடைபெறாத திட்டத்திற்கும் பணம் ஒதுக்கி பணம் கையாடல் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, திட்டவட்டமாக, மாதந்தோறும் கூட்டங்கள் நடைபெறுவதாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டாலும், உண்மையிலேயே கூட்டம் நடக்கவில்லையென்றால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நெல்லிக்குப்பம் வட்டாரத்தில் உள்ள ஊராட்சிமன்றங்களில் மாதாந்திர கூட்டமே நடைபெறாத ஊராட்சிமன்றம் எதுவுமே இல்லை என்பதைக் கனம் உறுப்பினரவர்களுக்கு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சிலபல மாதங்களுக்கு சில இடங்களில் நடைபெறாமல் இருக்கிறது என்றால் ஊராட்சி மன்றத்தில் நடத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. கூட்டம் நடத்தப்படாமல் கணக்குகள் எழுதப்படுமானால் ஆடிட் செய்யப்படும் நேரத்தில் தவறுகள் இருந்தால் உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் அறிந்த ஒன்றாகும். எந்த ஊராட்சிமன்றத்திலாவது அத்தகைய குறையிருந்தால் உறுப்பினரவர்கள் எழுத்து மூலமாக அறிவிப்பார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களில் மாதாமாதம் கூட்டம் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறதே தவிர பஞ்சாயத்துச் சட்டத்திலே கூட்டம் நடத்தவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையே என்று சொல்கிறார்கள். எனவே, சட்டத்தைத் திருத்தி அதற்கான வழி வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கூட்டம் நடத்தப்படவில்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.

THIRU T. MARTIN: There is apprehension in the minds of the public about the manner of election of office bearers to these Panchayats and Panchayat Union Councils. Therefore may I

request the Hon. Minister to state whether the Government have taken final decision regarding the manner of election of office-bearers viz., whether it should be direct or indirect electoin?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், வருஷா வருஷம் ஜமாபந்தி நடக்கிறபொழுது, உட்கார்ந்து ஒரேநாளில் கணக்குகள் எழுதி முடிக்கப்படுகின்றன. பஞ்சாயத்து ஆடிட் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த ஆடிட் நடக்கிற நேரத்திலே எழுதி முடிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இல்லையென்றால் தயவுசெய்து பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஊராட்சி வளர்ச்சி அதிகாரிகள் என்று இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஊராட்சியில் தணிக்கை செய்ய வேண்டுமென்று ஏற்பட்ட விதி முறைகள் இருக்கின்றன. எனவே, அவர்கள் கணக்குகளை எழுதுவதில்லை என்பதை முழுமையாக ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் மாதாமாதம் நடைபெறும் வேலைகளுக்கு அங்கிகாரம் பெற வேண்டும். அதற்காக, ஊராட்சிமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, இவை மீறப்பட்டிருக்குமானால், தனிப்பட்டமுறையிலே, எங்கே மீறப்பட்டிருக்கிறது என்பதை கனம் உறுப்பினரவர்கள் எடுத்துக்காட்டுவார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறாவிட்டாலும் கூட, ஊராட்சி மன்றத்தின் தலைவரின் செல்வாக்கினால், நடைபெறாத கூட்டத்தை நடைபெற்றதாக ஆக்கும் காரியம் நடைபெறுகிறதே, அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படிப்பட்ட தனி மனிதர்களின் செல்வாக்கைக் குறைக்கும் வகையிலே, முயற்சியெடுத்து, வருங்காலத்தில் நியாயமான ஆட்களைத் தேர்ந்தெடுக்க கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் முயற்சியெடுக்க வேண்டும்.

திரு. எ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, பஞ்சாயத்துக் கணக்குகளின் தணிக்கை ஈ.ஓ.பி.-யினால் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், அவர்கள் பஞ்சாயத்து யூனியனின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். எனவே, லோகல் ஃபண்ட் ஆடிட் மூலமாக தணிக்கை செய்தால் அந்தத் தணிக்கைகள் ஒழுங்காக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி மன்றங்களைத் தணிக்கை செய்யும் பொறுப்பை ஊராட்சி வளர்ச்சி அலுவலரும், நகர ஊராட்சிகளுக்கு டிவிஷனல் பஞ்சாயத்து ஆபீசரும் செய்கிறார்கள். இதை எல். எஃப்.-க்கு மாற்றிச் செய்ய வேண்டுமென்றால் ஆடிட் செய்ய வேண்டியதற்கே அந்தப் பணத்தைக் கட்ட வேண்டிய அளவில் நம்முடைய ஊராட்சிமன்றங்களின் நிதிநிலை இருப்பதால், இப்பொழுது அரசாங்கத்திற்கு அதுபற்றி எந்தவிதமான எண்ணமும் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, கிராமப்பஞ்சாயத்துக்களில் வேலை செய்தால், பஞ்சாயத்துத் தீர்மானத்தை தயாரிக்க வேண்டும், பாஸ் செய்ய வேண்டும். ஈ.ஓ.பி., யூனியன் எஞ்சினியர் மறுபரிசீலனை செய்து பாஸ் செய்ய வேண்டும். இப்படியே ஒவ்வொரு கட்டத்திலும் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. 50 ரூபாய் கூட தலைவருக்குச் செலவு செய்ய அதிகாரம் இல்லை. இதை உயர்த்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இப்பொழுது வறட்சி நிவாரண வேலைகள் துரிதமாக்கப்பட வேண்டுமென்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரே எஸ்டிமேட்டுகளை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எங்கேயாவது வேலைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் காலப்போக்கிலே தக்க முறையிலே சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் தயங்காது.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவைவர்களே, ஊராட்சி மன்றங்கள், மாதந்தோறும் கூட்டங்களைக் கூட்டாமலேயே, கூட்டப்பட்டதாகக் கூறி தீர்மானம் நிறைவேற்றி யூனியன்களுக்கும் அனுப்பப்படுகிறது. எனவே, இப்படித் தீர்மானங்களை அனுப்பினால், அவ்வாறு கூட்டம் நடைபெறாது தீர்மானங்களை அனுப்பாமலிருக்க பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அறிவிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஊராட்சி மன்றங்கள் அனுப்பும் தீர்மானங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பரிசீலித்து, தேவையானவற்றை மேற்கொள்ளவும், தேவையற்றவைகளை முடியாது என்று தெரிவிக்கவும் இப்பொழுது விதிமுறைகள் இருக்கின்றன. ஏதேனும் தவறுகள் இருந்தால், கனம் உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் விதிமுறைப்படி அனுப்புமாறு செய்யலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த வறட்சிக் காலங்களில்தான் கலெக்டர்களுக்கும் மாநகராட்சி ஊராட்சி அதிகாரிகளுக்கும் விசேஷ அதிகாரங்கள் கொடுத்து வேலை செய்வதாகச் சொன்னார்கள். அதைப்போல் சாதாரண நேரங்களிலும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு, அவசியம் என்று தேவைப்பட்டபோது அதைச் செய்வதற்கு அவர்களுக்கு இதே அதிகாரத்தைக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: வேலைகளை எடுத்துக் கொள்வதானால், அதற்கான திட்டங்கள் தயாரிக்க வேண்டும். அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும். அந்த திட்டங்களை மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரிக்க வேண்டும். அப்படி எல்லாம் செய்யாமல் நேரடியாக வேலைகளைச் செய்கிறோம் என்றால் பின்னாலே தணிக்கை செய்கிறபோது, அந்தக் குற்றத்தைச் சுட்டிக் காட்டி தலைவர் அவர்கள் அதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று, சர்சார்ஜ் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் இந்த விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. அதிலேதான் சில சமயம் காலதாமதம் ஏற்படுகிறது. என்றாலும் அவைகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

இந்து அறநிலையங்கள்

* 9. வினா.—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலைய நிர்வாகத்தை மாற்றியமைத்து மதத் தலைவர்களின் பொறுப்பில் கோவில்கள் நிர்வாகத்தை விட வேண்டுமென்று கோரி சேலத்தில் தமிழ் நாடு இந்து மிஷனைச் சேர்ந்தவர்கள் 22—7—1968-ல் உண்ணாவிரதமிருந்தது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில் இவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) சேலம், தமிழ்நாட்டு இந்து சமய நிறுவனம் வெளியிட்ட சிறு நூலில் கண்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஆய்வு செய்து பார்த்ததில், இந்தக் குற்றச்சாட்டுகளின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இந்த தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் அனைவரிடத்திலும் கிடையாது. ஒரு பகுதியினரிடத்தில்தான் இருக்கிறது. தேசத்திலே இன்றைக்கு பாங்கு தேசியமயம், தொழிற்சாலை தேசியமயம் என்பதைப்போன்று கொள்கையிலே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். கொள்கையைப்பற்றியோ, குற்றம் சம்பந்தமாகவோ சொல்ல வேண்டாம்.

திரு. எம். சுரேந்திரன் : கொள்கையிலே இந்த நம்பிக்கை உள்ளவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது நல்லது என்று பலராலும் கூறப்படுகிறது. அதேபோன்று தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் உள்ளவர்கள் இந்தக் காரியம் செய்வது சிறந்ததாக இருக்கும் என்று அரசாங்கம் கருதவில்லையா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி மன்றங்களைத் தணிக்கை செய்யும் பொறுப்பை ஊராட்சி வளர்ச்சி அலுவலரும், நகர ஊராட்சிகளுக்கு டிவிஷனல் பஞ்சாயத்து ஆபீசரும் செய்கிறார்கள். இதை எல். எஃப்.-க்கு மாற்றிச் செய்ய வேண்டுமென்றால் ஆடிட் செய்ய வேண்டியதற்கே அந்தப் பணத்தைக் கட்ட வேண்டிய அளவில் நம்முடைய ஊராட்சிமன்றங்களின் நிதிநிலை இருப்பதால், இப்பொழுது அரசாங்கத்திற்கு அதுபற்றி எந்தவிதமான எண்ணமும் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, கிராமப்பஞ்சாயத்துக்களில் வேலை செய்தால், பஞ்சாயத்துத் தீர்மானத்தை தயாரிக்க வேண்டும், பாஸ் செய்ய வேண்டும். ஈ.ஓ.பி., யூனியன் எஞ்சினியர் மறுபரிசீலனை செய்து பாஸ் செய்ய வேண்டும். இப்படியே ஒவ்வொரு கட்டத்திலும் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. 50 ரூபாய் கூட தலைவருக்குச் செலவு செய்ய அதிகாரம் இல்லை. இதை உயர்ந்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இப்பொழுது வறட்சி நிவாரண வேலைகள் துரிதமாக்கப்பட வேண்டுமென்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரே எஸ்டிமேட்டுகளை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எங்கேயாவது வேலைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் காலப்போக்கிலே தக்க முறையிலே சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் தயங்காது.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்கள், மாதந்தோறும் கூட்டங்களைக் கூட்டாமலேயே, கூட்டப்பட்டதாகக் கூறி தீர்மானம் நிறைவேற்றி யூனியன்களுக்கும் அனுப்பப்படுகிறது. எனவே, இப்படித் தீர்மானங்களை அனுப்பினால், அவ்வாறு கூட்டம் நடைபெறாது தீர்மானங்களை அனுப்பாமலிருக்க பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அறிவிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி மன்றங்கள் அனுப்பும் தீர்மானங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பரிசீலித்து, தேவையானவற்றை மேற்கொள்ளவும், தேவையற்றவைகளை முடியாது என்று தெரிவிக்கவும் இப்பொழுது விதிமுறைகள் இருக்கின்றன. ஏதேனும் தவறுகள் இருந்தால், கனம் உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் விதிமுறைப்படி அனுப்புமாறு செய்யலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த வறட்சிக் காலங்களில்தான் கலெக்டர்களுக்கும் மாநகராட்சி ஊராட்சி அதிகாரிகளுக்கும் விசேஷ அதிகாரங்கள் கொடுத்து வேலை செய்வதாகச் சொன்னார்கள். அதைப்போல் சாதாரண நேரங்களிலும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு, அவசியம் என்று தேவைப்பட்டபோது அதைச் செய்வதற்கு அவர்களுக்கு இதே அதிகாரத்தைக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : வேலைகளை எடுத்துக் கொள்வதானால், அதற்கான திட்டங்கள் தயாரிக்க வேண்டும். அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும். அந்த திட்டங்களை மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரிக்க வேண்டும். அப்படி எல்லாம் செய்யாமல் நேரடியாக வேலைகளைச் செய்கிறோம் என்றால் பின்னாலே தணிக்கை செய்கிறபோது, அந்தக் குற்றத்தைச் சுட்டிக் காட்டி தலைவர் அவர்கள் அதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று, சர்சார்ஜ் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் இந்த விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. அதிலேதான் சில சமயம் காலதாமதம் ஏற்படுகிறது. என்றாலும் அவைகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

இந்து அறநிலையங்கள்

* 9. வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலைய நிர்வாகத்தை மாற்றியமைத்து மதத் தலைவர்களின் பொறுப்பில் கோவில்கள் நிர்வாகத்தை விட வேண்டுமென்று கோரி சேலத்தில் தமிழ் நாடு இந்து மிஷனைச் சேர்ந்தவர்கள் 22—7—1968-ல் உண்ணாவிரதமிருந்தது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில் இவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) சேலம், தமிழ்நாட்டு இந்து சமய நிறுவனம் வெளியிட்ட சிறு நூலில் கண்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஆய்வு செய்து பார்த்ததில், இந்தக் குற்றச்சாட்டுகளின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இந்த தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் அனைவரிடத்திலும் கிடையாது. ஒரு பகுதியினரிடத்தில்தான் இருக்கிறது. தேசத்திலே இன்றைக்கு பாங்கு தேசியமயம், தொழிற்சாலை தேசியமயம் என்பதைப்போன்று கொள்கையிலே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். கொள்கையைப்பற்றியோ, குற்றம் சம்பந்தமாகவோ சொல்ல வேண்டாம்.

திரு. எம். சுரேந்திரன் : கொள்கையிலே இந்த நம்பிக்கை உள்ளவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது நல்லது என்று பலராலும் கூறப்படுகிறது. அதேபோன்று தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் உள்ளவர்கள் இந்தக் காரியம் செய்வது சிறந்ததாக இருக்கும் என்று அரசாங்கம் கருதவில்லையா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பெரும்பாலும் நம்பப்பட்டவர்களை வைத்துத்தான் இந்து அறநிலைய ஆலோசனைக் கமிட்டி ஒன்று இருக்கிறது. அதிலுள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையின் பேரில்தான் இந்த காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, மதத் தலைவர்களில் ஒருவராகிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரை மேலவைக்கு இந்த அரசு நியமித்திருப்பதனை, தமிழ் நாடு இந்து ரிலிஜன்காரர்கள் பாராட்டியிருக்கிறார்களா ? அல்லது வரவேற்றிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினாலே பாராட்டு வரவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்திலுள்ள கோயில்களில் பல கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை வசதிபடைத்த பெரு நிலச்சுவாந்தார்கள் ஆக்கிரமித்து, அதன் வருமானத்தை அனுபவித்து வருவது அரசாங்கத்துக்குத் தெரியுமா? தெரியுமானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எடுக்கவில்லையென்றால் எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அப்படி எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை. தகவல் தெரிவித்தால் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்து அறநிலையங்களில் கோயில் காரியங்களுக்கு முறையாக செலவிடப்படும் தொகை போக எஞ்சியுள்ள வருவாயை கல்வி, மருத்துவம் போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு முடிவு எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சட்டத்திற்கு உட்பட்ட சகல காரியங்களுக்கும் இந்த பணம் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Purchase Committee for Tamil Nadu Electricity Board

* 10. Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to constitute a purchase committee in the Tamil Nadu State Electricity Board; and

(b) if so, whether the Government would consider inclusion of non-officials in the Committee?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியம், பண்டங்கள் கொள்முதல் ஒப்பந்தப்புள்ளிக்

குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு, தனது ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது.

(இ) பண்டங்கள் கொள்முதல் குழுவில் அரசாங்கச் சார்பற்ற அதிகாரிகளைச் சேர்ப்பது பற்றி, அந்தக் குழு அமைக்கப்படும் பொழுது மின்சார வாரியத்தினால் ஆலோசிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவின் முன்பாக வைக்கப் போவதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அந்தக் குழு அமைக்கப்படும், எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கூடிய விரைவிலே ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, கொள்முதல் குழு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேள்வியிலே அதுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்முதல் குழுவில் யார் யார் இருக்கிறார்கள். யார் யாரை சேர்த்துக்கொள்ள அரசாங்கம் யோசிக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இப்பொழுது எலக்டிரிசிடி போர்டிலே அங்கங்கே இருக்கிற எஸ். ஈக்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். சீப் இன்ஜினியரையும் சேர்த்துத்தான் இப்பொழுது நடந்து வருகிறது. அரசாங்க சார்பற்றவர்களை சேர்க்க வேண்டுமென்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடைபெற இருப்பதால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் தேவையில்லையென்று நான் நினைக்கிறேன்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

3. முதலமைச்சர் விளக்கம்.

மத்திய போலீஸ் துறை பற்றிய வினாவிற்கு அளித்த விடைகுறித்து

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய போலீஸ் துறை மாநிலத்திற்கு வருவது பற்றி கேள்விகள் கேட்ட நேரத்தில் ஒரு கேள்விக்கான பதிலை நான் தந்தது குறித்து ஒரு விளக்கம் தர

விரும்புகிறேன். மத்திய போலீஸ் மாநிலத்திற்கு வந்ததற்குப் பிறகு அதனுடைய கண்ட்ரோல் யாரிடம் இருக்கிறது என்ற கேள்வியின் அடிப்படையில் நிர்வாகம் மத்திய போலீசிடத்திலே இருக்கிறது. கண்ட்ரோல மாநிலத்திற்கு வந்தபிறகு நமக்குத் தான் இருக்கிறது என்ற குறிப்பை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4. அறிவிப்புகள்.

(i) மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு. மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate)-ல் இப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. ஆர். பொன்னப்ப நாடார், (2) திரு. மு. ச. சிவசாமி, (3) திரு. ம. பொ. சிவஞானம், (4) திரு. நா சௌந்திரபாண்டியன் ஆகியோரின் பதவிக் காலம் 7-8-1969-ல் முடிவுற்றதால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பதிலாள் அடிப்படையில் (proportional representation -ல்) இத்தேர்வு நடைபெறுவது இல்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 20-8-1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 21-8-1969 வியாழக்கிழமை, காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 22-8-1969 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 23—8—1969 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ii) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு அறிவிப்பு. பேரவை அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. எ. கோவிந்தசாமி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, சட்டப் பேரவையின் 193 (4) விதியின் கீழ், மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன், பேரவை முன்னவர் அவர்களை நான் நியமிக்கிறேன். அவர்களை இப்பொழுது நடக்கவிருக்கும் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. அரசினர் மசோதா.

தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் மசோதா. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் வாக்கிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள்.

DR. H. V. HANDE : By way of a point of order may I make a suggestion to this House? Because we are going to take up the Electricity Board budget shortly and the question of river waters is intimately connected with this budget, may we request the Chief Minister to give us some statement or some explanation with regard to the river water pact ? It will be useful to us and information about it is not contained in the speech of the Minister for Electricity circulated to the Members. If a statement is made, the discussion will be meaningful.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களை இது எப்படி ஒழுங்குப் பிரச்னையின்கீழ் வரும் என்றுதான் மு.ப.
கேட்க விரும்புகிறேன். வேறு பொருள்களைக் குறித்து 10
சொல்வதற்கு இந்த ஒழுங்குப் பிரச்னை விதியைப் பயன்படுத்திக் கொள்வது முறையாகாது. இப்பொருள் குறித்து ஒழுங்குப் பிரச்னை எழுப்பி கூறுவது முறை அல்ல.

மாண்புமிகு திரு. கெ. பி. ராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1968-69-ம் ஆண்டு துணை

நிதி நிலை அறிக்கையும் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனை மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டபின், தமிழ்நாடு மின்சார வாரியம், கடந்த பிப்ரவரித் திங்களில் இந்த நிதி நிலை அறிக்கைகளை அரசாங்கத்துக்கு அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும் துணை நிதி நிலை அறிக்கையும் சட்ட மன்றத்திலே விவாதிக்கப்படலாம். ஆனால் அவை வாக்களிப்பதற்கு உட்பட்டவை அல்ல. இந்த நிதி நிலை அறிக்கைகள் குறித்து மாநிலச் சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஊன்றி ஆய்ந்து ஆவன செய்யுமென்பதில் ஐயமேதுமில்லை. கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது சட்ட மன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார வாரியம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரித்து அறிக்கை* ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணியை 1971-ம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்தப் பேரவைக்கு அறிவிக்க முதற்கண் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டைக் காட்டிலும் 1968-69-ல் வாரியத்தின் சாதனைகள் பெருகியுள்ளன என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் களிப்படைவர். 1967-68-ல் வாரியம் 51,620 விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியது. 1968-69-ல் இந்த சாதனை அளவுக்கு மேலாகவே மின் இணைப்பு வழங்கப்பட்டது. அதாவது, அந்த ஆண்டில் 57,756 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டிற்கான வாரிய நிதி நிலையை எடுத்துக் கொண்டாலும், முந்திய ஆண்டை விட இந்த ஆண்டில் சிறந்த பலன்கள் கிட்டியுள்ளன. 1967-68-ல் வாரியத்திற்குக் கிடைத்த வருவாய் அளவு, அந்த ஆண்டின் இயக்குதல்-பேணுதல் செலவுகள், தேய்மானச் செலவுகள், வட்டிச் செலவுகள் ஆகியவற்றை ஈடுசெய்யப் போதுமானதாக இருந்ததோடு மட்டுமின்றி சுமார் ரூபாய் 108 லட்சம் அளவிற்கு உபரியும் கிட்டியது. (இத்தொகை பருவமழை பொய்த்த முந்திய ஆண்டுகளில் சேர்ந்து வந்த வட்டி நிலுவைகளின் ஒரு பகுதிக்கெனச் சரிக்கட்டப்பட்டது.) 1968-69-ம் ஆண்டின் நிதி நிலை மேலும் சிறந்துள்ளது. 1968-69-ம் ஆண்டுக்

* 130–133-ம் பக்கங்களிலுள்ள இணைப்புகளைக் காண்க.

கான வாரியக் கணக்குகள் தற்போது தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. அவை இன்னும் முடிவுறும் நிலையில் இல்லை. ஆனால், இந்த ஆண்டில் சுமார் ரூ. 129 லட்சம் உபரி கிட்டுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டி நிலுவைகளுக்கென முந்திய வருவாய்க் கணக்குகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட முடியாத 87 லட்சம் ரூபாயைச் சரிக்கட்டிய பிறகு, சுமார் 42 லட்சம் ரூபாய் நிகர உபரி கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வேளாண்மைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதனால் ஆண்டுதோறும் சுமார் 9 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பும், அலுமினியத் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ஆண்டுதோறும் ரூபாய் 1 கோடி அளவிற்கு இழப்பும் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிறதெனக் கருதும்போது இதனைச் சீரிய சாதனை என்றே கூறவேண்டும்.

தொழிலாளர் உறவைப் பொறுத்த வரையில், பணியாளர்களுக்கு நெடுநாட்களாகக் கவலை அளித்து வந்த பற்பல அடிப்படைச் சிக்கல்களுக்கு இந்த ஆண்டில் இறுதித் தீர்வு காணப்பட்டது. மின்சாரக் கட்டணம் வசூலிப்பவர்கள், மின்சாரக் கட்டணச் சீட்டுகள் தயாரிக்கும் எழுத்தர்கள், பண்டகசாலைத் துணைப் பணியாளர்கள் ஆகிய பல பணி வகுப்பினர்க்கும் அவர்களது மேற்பார்வைப் பணியாளர் வகுப்பினர்க்கும், பணியாளர் பிரதிநிதிகளுடன் உடன்பாடு செய்துகொண்ட பிறகு, நியாயமான வேலைச் சுமைத் தரங்கள் முடிவு செய்யப்பட்டன. இயக்கும் சார்நிலைப் பணியாளர்களுக்கான (Operation Sufordinate Sevice) வேலைச்சுமை குறித்து இசைவான தீர்வு காண்பதில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்பட்டது. அதற்கான உடன்பாடு இறுதியாக 1969 ஜூன் திங்களில் கையொப்பமிடப்பட்டது. 1968-69-ல் மற்றுமொரு முக்கிய உடன்பாடு கையொப்பமிடப்பட்டது. அதன் மூலம், இதுவரையில் தாற்காலிக அடிப்படையில் அல்லது அன்றாட ஊதியம் பெறும் அடிப்படையில் பணியாற்றி வந்த ஏராளமான பணியாளர்களுக்குப் பணி நிலைப்படுத்துவதற்கான பயன்கள் விரிவாக்கப்பட்டன.

தமிழ்நாட்டு மின் இணைப்பில் தற்போது பன்னிரண்டு நீர் மின்சார நிலையங்களும், மூன்று அனல் மின்சார நிலையங்களும் அடங்கியுள்ளன. அதன் நிறுவிய மொத்த உற்பத்தித் திறன் 1,600 மெகவாட்டாகும். நெய்வேலி அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறனை 500 மெகவாட் திறனும் இதில் அடங்கும். இந்த மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரம் 53,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள மின் அனுப்பு கம்பித் தொடர்கள் மூலம் மின் பகிர்ப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறு கொண்டுவரப்படும் மின்சாரம் 128,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள குறைவழுத்த மின் கம்பித் தொடர்கள் மூலம் 15 லட்சத்துக்கு மேற்பட்ட பயன்துய்ப்போர்களுக்கு வழங்கப்படுகிறது.

[திரு. ஓ. பி. ராமன்] [1969 ஆகஸ்ட் 16

1968-69-ல் வாரியம் 3,452 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி வழங்கியது. மின்வசதி பெற்ற கிராமங்கள், சிற்றூர்கள் இவற்றின் மொத்த எண்ணிக்கை 31,727 ஆகும். 57,756 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டது. ஆக, மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 4.02 லட்சமாகும். 1968-69-ல் நிறுவப்பட்ட புதிய விசையேற்றங்களின் விளைவாக, 1.70 லட்சம் ஏக்கர் கூடுதலாகப் பாசனம் பெறும் என்றும், அதன் மூலம் ரூ. 9.5 கோடி மதிப்புள்ள உணவு தானியங்கள் கூடுதலாக உற்பத்தியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 473 அரிசனக் குடியிருப்பு களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது. 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதிக்குள் மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்பு களின் மொத்த எண்ணிக்கை 3,283 ஆகும். மொத்தத்தில் 2,662 கிலோ மீட்டர் மின் அனுப்பு கம்பித் தொடர்களும், 12,705 கிலோ மீட்டர் குறைவழுத்த மின் கம்பித் தொடர்களும், 2,130 பங்கீட்டு அழுத்தமாற்றிகளும் (Distributio Transformers) இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டன. சுமார் 1,6 லட்சம் பயன்தாய்ப்போர்களுக்குப் புதிதாக மின்வசதி வழங்கப்பட்டது.

பகிய பகுதிகளுக்கும், கூடுதலான பயன்துய்ப்போர்க்கும் மின் வசதி விரிவாக்கப்பட்டதன் விளைவாக, 1968-69-ல் 428 கோடி யூனிட் மின்சாரம் விற்பனையாகியது. அதாவது, முந்திய ஆண்டை விட 8 சதவிகிதம் அளவுக்கு அதிக மின்சாரம் விற்பனையாகியது.

ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவற்றை முக்கிய மாகக் குறிப்பிட நான் விழைகிறேன் :—

மூலதன வரவினங்கள்.—வாரியம் நிறைவேற்றும் கிராம மின் வசதி திட்டத்தில் முன்னேற்ற நோக்குள்ள பல வணிக வங்கிகள் அக்கறைகாட்டியுள்ளன என்பதை இங்குக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான்கு வங்கிகள் 1968-69-ல் வாரியத்திற்கு மொத்தத்தில் 7.50 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளன—

		(ரூபாய் கோடியில்.)
பாங்க் அப் இந்தியா	..	3·00
சிண்டிகேட் வங்கி	..	2·00
பஞ்சாப் நேஷனல் வங்கி	..	2.00
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	..	0·50

இந்திய வங்கி, பரோடா வங்கி, யுனைடெட் காமர்ஷியல் வங்கி போன்ற மேலும் சில வங்கிகள் மேற்கொண்டும் கடன் வழங்க முன் வந்துள்ளன. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்பு, வாரியத்தின் கிராம மின்வசதித் திட்டத்திற்கு மேலும் அதிக ஆதரவு கிட்டுமென நான் நம்புகிறேன்.

1969 ஆகஸ்ட் 16] [திரு. ஓ. பி. ராமன்]

மூலதனச் செலவினங்கள்: மின்சாரத் திட்டங்களைப் பொறுத்த வரையில், எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்திற்காக இந்த ஆண்டு மூலதனச் செலவின பெரும் பகுதி ஒதுக்கப்பட் டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 60 மெகாவாட் திறனுள்ள முதல் மின் உற்பத்திப் பிரிவு, இந்த ஆண்டின் இறுதியில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 60 மெகவாட் திறனுள்ள இரண்டாவது பிரிவும் முதல் பிரிவும் உற்பத்தியைத் தொடங்கிய பிறகு 6 திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். மேலும் 110 மெகவாட் திறனுள்ள இரு பிரிவுகள் அதன் பிறகு உற்பத்தியைத் தொடங்கும்'

ஆனைமலையில் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின்சாரத் திட்டத் தின் கீழ் சோலையாறு I மின் நிலையம் (70 மெகவாட்), சோலையாறு II மின் நிலையம் (25 மெகவாட்), ஆழியாறு மின் நிலையம் (60 மெக வாட்) ஆகியவை குறித்த பணிகள் பெரிதும் முன்னேறியுள்ளன. சோலையாறு I, ஆழியாறு மின்சார நிலையங்கள் முடிவடைந்து விட்டன என்றே கருதலாம். இந்த ஆண்டில் அவை உற்பத்தியைத் தொடங்கும். சோலையாறு II மின் நிலையம் 1970 இடைப பகுதிக் குள் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீர் மின்சாரத் திட்ட வேலை நடந்தேறி வருகிறது. 60 மெகவாட் திறனுள்ள கோதையாறு I மின் நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி யைத் தொடங்குமெனக் கருதப்பட்டுள்ளது. 40 மெகவாட் திற னுள்ள கோதையாறு II மின் நிலையம் 1970-ம் ஆண்டு இடைப் பகுதிக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படு கிறது.

நீலகிரியில் பாண்டியாறு-புன்னப்புழா நீர் மின்சக்தித் திட்டம் குறித்த தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 100 மெகவாட் திறனுள்ள ஒரு மின் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்நிலையம், 1974 மார்ச் திங்களுக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

குந்தா நீர் மின்சக்தித் திட்டம் நான்காவது நிலையை மேற் கொள்ளுவதற்கு திட்ட ஆணைக் குழு ஒப்புதலளித்துள்ளது. தற் போதுள்ள நீர்த் தேக்கங்களைப் பயன்படுத்தி இவ் வேலைத் திட்டத் தினால் இப்போது நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறன் 100 மெகவாட் அதிகமாகும். (குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையம் III -60 மெகவாட், குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையம் IV -50 மெகவாட்). இத்திட்டம் நான்காவது திட்ட கால அளவிலேயே உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கலாம்.

நமது மாநில மின் இணைப்பின் தற்போதைய நிறுவிய மின் சக்தியான 1,600 மெகவாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், நான் காவது திட்டக் கால இறுதியில் இம் மின் இணைப்பின் மொத்த நிறுவிய திறன் 2,615 மெகவாட் ஆக அதிகரிக்குமென்று (நெய்

வெளியில் 600 மெகவாட் உட்பட) எதிர்பார்க்கப்படுகிறது. கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையமும் அதன் 200 மெகவாட் தொடக்க நிலை மின்சக்தித் திறனுடன் 1973-ம் ஆண்டுக்குள் அனல் மின்சக்தி உற்பத்தியை கணிசமான அளவிற்கு உயர்த்தும். அனல் மின்சக்தி உற்பத்தி பெருகுவதனால், வான் பொய்க்கும்போது நமது மாநிலத்தில் இயல்பாக நிகழ்கிற மின்சக்தி வெட்டுகளை ஓரளவுக்குத் தவிர்க்க முடியும். இத்தகைய மின்சக்தி வெட்டுகளுக்கு தேவை நேரிடா வண்ணம் காப்பாகவும் பற்றாக்குறையை ஈடு செய்யவும் மைசூர், கேரள மாநிலங்களிடமிருந்து மின் சக்தியை வாங்குவதற்காக அம் மாநிலங்களுடன் தமிழ் நாடு அரசு உடன்பாடு செய்து கொண்டுள்ளது.

1969-70-ம் ஆண்டில் 50,000-க்குக் குறையாத வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்க வாரியம் திட்டமிட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான விரைவுத் திட்டம் குறித்து வாரியம் தற்போது சிறப்பான நாட்டம் செலுத்தி வருகிறது. இத் திட்டங்களினால் கிடைக்கும் ஆதாயம் குறைவு என்றாலும், உற்பத்திப் பெருக்கத்திற்கு திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள சிறப்பிடம் கருதி மின்சார வாரியம் விரைவுத் திட்டங்களில் தனி நாட்டம் செலுத்தி வருகிறது. மின்சார வாரியம் செயல்படும் பகுதியில் 1969 மே திங்கள் இறுதி வரையில் 2,060 வடி முனைக் கிணறுகளுக்கும் 675 விசையேற்றங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது. இதனால் மின்சார வாரியம் செயல்படும் பகுதியில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 2,735 ஆக அதிகரித்துள்ளது. 1969-70-ல் ரூபாய் 75 லட்சம் செலவில் 1,500 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1968–69-ம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்தில் மின் சக்தி உற்பத்திக்காக ரூபாய் 32.07 கோடி செலவிட வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் குறிக்கோள் அளவைவிட அதிகம் செலவிடப்பட்டுள்ளது. 1968–69-ல் மின்சக்தி உற்பத்திக்காக செய்யப்பட்டுள்ள செலவு ரூபாய் 42.32 கோடியாகும். மின்சக்தி அனுப்பு கம்பித் தொடர்களையும் பங்கிட்டுக் கம்பித் தொடர்களையும் நிறுவும் பணியையும் கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் பணியையும் விரைவாகச் செயல்படுத்துவதனால் இச் செலவினம் உயர்ந்தது.

1969–70-ல் அதாவது, நான்காவது திட்டத்தின் முதலாண்டில் மின்சக்தி உற்பத்தித் திட்டங்களுக்காக ரூபாய் 40.56 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மின்சக்தி உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்தும் வேகத்தையும் இது குறித்து ஏற்றுக்கொண்ட பொறுப்பினையும் கருத்தில் கொண்டு இந்த நிதி ஒதுக்கம் உயர்த்தப்பட வேண்டியிருக்கும். மின்சக்தி வாரியத்திற்குத் தேவைப்படும் நிதி வாயில்களின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு அரசு மின்சார வாரியத்திற்குக் கடனாக வழங்க 15.16

கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. கூடுதலாகத் தேவைப்படும் நிதிவாயில்களைத் திரட்ட அரசும் வாரியமும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

மேற்சொன்னவாறு மின்சக்தி உற்பத்தியைப் பெருக்கிய போதிலும் பாசனமல்லாப் பருவ காலத்தில் மின் இணைப்பின் மின் சக்தித் திறன், பழுதுபடும் பொறிகள், திடீரென ஏற்படும் மின்சக்தித் தேவைகளுக்கான பொறிகள் ஆகியவற்றிற்காக வகை செய்த பிறகு, 1973–74-க்குள் சுமார் 2,200 மெகவாட் உற்பத்தித் திறன் எதிர்பார்க்கப்பட்டிருக்க, 1973–74-ல் உற்பத்தித் திறன் சுமார் 1,700 மெகவாட் ஆக இருக்கும். இவ்வாறாக, நான்காவது திட்ட இறுதியில் இம் மாநிலத்தில் 500 மெகவாட் அளவு பற்றாக்குறையாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையின் காரணமாகவே, இந்திய அரசு முதற்கண் முடிவு செய்திருந்தபடி, கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையம் ஒவ்வொன்றும் 200 மெகவாட் உற்பத்தித் திறனுடைய இரண்டு பிரிவுகள் கொண்டதாக இருக்க வேண்டும் என இம் மாநில அரசு இந்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளது.

மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவு விவரங்களை A-III, A-IV வரை அறிக்கைகளில் காணலாம். மின்சார வாரியத்துக்கு ரூபாய் 53.07 கோடி வருவாய் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் மின்சக்தி உற்பத்திக்காக (எரிபொருள் செலவு உட்பட) மின்சார வாரியத்திற்கு ரூபாய் 4.27 கோடி செலவாகிறது. மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து மின் சக்தி வாங்குவதற்காக ரூ. 13.26 கோடி வகை செய்யப்பட்டுள்ளது. அரசுக்கு வட்டி செலுத்தும் வகையில் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், பிற நிறுவனங்களிடமிருந்தும் மின்சார வாரியம் வாங்கியுள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

மின்சக்தியைப் பெருமளவில் பயன்படுத்தும் தொழில்கள் உட்பட தமிழ் நாட்டில் புதிய தொழில்களைப் பெருமளவில் தொடங்குவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க தொழில்களுக்கான மின்சாரக் கட்டணங்கள் குறித்து, குறிப்பாக சென்னை அனல் மின் சக்திப் பகுதியில் நிலவிவரும் கட்டணங்கள் குறித்து ஆய்ந்து பரிந்துரைகளை அளிப்பதற்கு அரசு செயற்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அச் செயற் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் ஏராளமான அளவில் பணியாளர்களை வேலையில் அமர்த்திக்கொண்டுள்ள நிறுவனங்களில் மின்சார வாரியமும் ஒன்றாகும். தேர்ச்சிபெறாத தொழிலாளர் முதற்கொண்டு, தொழில் திறமை மிக்க பொறியாளர்கள் வரை, கணக்கர்கள், பிற ஊழியர்கள் போன்ற பல்வேறு தரங்களைச் சேர்ந்த 65,000 பணியாளர்கள் இந்த நிறுவனத்தில் பணியை நிறைவேற்றி வருகின்றனர். இப்

[திரு. ஓ.பி. ராமன்] [1969 ஆகஸ்ட் 16

இந்த நிறுவனத்தில் பணியை நிறைவேற்றி வருகின்றனர். இப்பணியாளர் அனைவரும் ஒருமுகமாக, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். வாரியத்துக்கும் ஊழியர்களுக்கும் இடையே நல்ல உறவு நிலவி வருவது இன்றியமையாததாகும்.

மின்சார வாரியமும் அதன் பணியாளர்களும் தமிழக மக்களின் தேவைகளை எப்பொழுதும் கருத்திற்கொண்டு, தங்களை எதிர் நோக்கியுள்ள சிக்கல்களை நட்புணர்வுடனும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மையுடனும் ஆய்ந்து அவற்றிற்குத் தீர்வு காண்பர் என்று நான் நம்புகிறேன்.

இந்த வரவு-செலவு விவரங்களை விவாதிக்கையில் மின்சார வாரியம் நமது மக்களுக்கு மேலும் செவ்விய முறையில் பணிபுரிய இயலும் வகையில் இச்சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை தந்திடுவார்களென நான் நம்புகிறேன்.

இறுதியாக, மாண்புமிக பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அறையில் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் நடைபெற இருக்கிறது. குழுவின் உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் முக்கியமான சாதனைகளைக் குறித்து யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதற்கு தமிழ் மக்கள் என்றென்றும் நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்விசை வழங்கியிருப்பது. சுமார் 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியிருப்பது போன்றவைகளெல்லாம் மிகவும் சிறப்பான அம்சங்களாகும். அந்த வகையிலே வேளாண்மை விசையேற்றங்களுக்கு மட்டும் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ஒன்பது கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த இழப்பு பெரிதுதான். இதை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள ஒரு வழி இருக்கிறது. கோவை போன்ற மாவட்டங்களுக்கு அதிக விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்தால் இந்த இழப்பைக் குறைக்க முடியும். கிணறுகள் ஆழம் இல்லாத தஞ்சை போன்ற மாவட்டங்களில் அதிக நாட்டம் செலுத்துவதினால் இந்த இழப்புத் தொகை கொஞ்சம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கிணறு ஆழமுள்ள கோவை மாவட்டம் போன்ற இடங்களுக்கு பிரையாரிடி கொடுத்து, மின் இணைப்புக் கொடுத்தால் இந்த இழப்பு அளவைக்கூடக் குறைத்துக் கொள்ள முடியும்.

1969 ஆகஸ்ட் 16] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

அத்தோடு அலுமினியம் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சிற்றூர்களுக்கு மின்சாரம் வழங்கியதனாலோ அல்லது உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கோ அல்லது வேளாண்மையைச் சார்ந்த தொழில்களுக்கோ மின்சாரம் வழங்கியதால் ஏற்பட்ட இழப்பு அல்ல இது. மாநில நிதியிலிருந்து ஒரு கோடி அல்லது ரூ. 100 லட்சம் பெரிய இழப்பே. அலுமினியம் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க வேண்டுமா ? அந்தக் கட்டணத்தை உயர்த்தியாவது அந்த நஷ்டத்தை ஈடு செய்து கொள்ளமுடியாதா? இதை மிக உன்னிப்பாக ஆராய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, பாபநாசம், பெரியாறு போன்ற இடங்களில் மின்சார உற்பத்தி நிலையங்கள் இருந்தாலும்கூட, அங்கே வேளாண்மைக்குத் தண்ணீர் கொடுப்பதிலே—பிரையாரிடி—முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கீழ் பவானி அணை கட்டியதற்குப் பிறகுதான் குந்தா, குந்தாவோடு இணைந்த மற்ற மின்சாரத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஏதோ கோவை மாவட்ட மக்கள்— கீழ் பவானி ஆயக்கட்டுதாரர்கள்—ஓரளவுக்கு தூங்கிவிட்டதனாலோ, என்னவோ, அதற்குப் பின்னாலே ஏற்பட்ட மின்சார நிலையங்களெல்லாம் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டு, அங்கே விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லாத காலத்திலும் கூட, அது ஒரு முக்கியத்துவம் அல்ல என்பதை நிலை நிறுத்தி, கீழ் பவானி ஆயக்கட்டு நிலங்களுக்கு ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் தண்ணீர் பாய்ச்சுகின்ற துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. பாபநாசம், பெரியாறு போன்ற இடங்களில் உள்ளது போல், மின்சார அணைகளிலே தண்ணீர் இருக்கும்பொழுது, அதை விவசாயத்திற்குத் திறந்து விடுவதற்கு, வழிவகைகளை நமது மின்சார அமைச்சர் அவர்கள் கூர்ந்து ஆராய வேண்டும். ரிவெர்ஸிபிள் பம்பிங், இறைத்த தண்ணீரை, மின்சார உற்பத்திக்கு கீழே விட்டு விட்ட தண்ணீரை, மறுபடியும் தேக்கத்திற்குத் திருப்பி இறைத்துக்கொள்வது, அதாவது 'பம்பு பாக்', முறையை அனுசரித்தால் மின்சார அணைகளில் அதிகத் தண்ணீரை தேக்கி வைத்திருக்க வேண்டிய நிலை இராது. அந்த வழிமுறை, ஒரு முறை, இன்னும் அநேக வழி முறைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட வழிமுறைகளை வகுத்து, அதை அனுசரித்தால், மின்சார அணைகளிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து விவசாயிகளுக்கு அதிகமாகத் தண்ணீர் விடமுடியும்.

மின்சார வாரியத்திலுள்ள பணியாளர்களுக்கு நெடுநாட்களாக கவலை அளித்து வந்த பற்பல அடிப்படைச் சிக்கல்களுக்கு இந்த ஆண்டில் இறுதித் தீர்வு காணப்பட்டது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு, அதாவது மின்சாரக் கட்டணம் வசூலிப்பவர்கள், மின்சாரக் கட்டணச்

சிட்டுகள் தயாரிக்கும் எழுத்தர்கள், பண்டகசாலைத் துணைப் பணியாளர்கள், இயக்கும் சார்நிலைப் பணியாளர்கள் (ஆபரேஷன் சபார்ட்டினேட் சர்வீஸ்) முதலானவர்களுக்கு நியாயமான வேலைச் சுமைத் தரங்கள் குறித்து நிரந்தரமான பரிகாரம் காணப்பட்டு விட்டதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மின்சாரத் திட்டங்களையெல்லாம் ஏற்றுக்கொண்ட காலத்தில், ஆரம்பத்தில் 1960-க்கு முன்னதாக இங்கே தனியாக சிவில் இன்சினியர்கள் நேர்முகத் தேர்வு செய்யப்படவில்லை.

அந்தக் காலத்தில் நமக்கு வேண்டிய கன்ஸ்ட்ரக்ஷன்களுக்கு வேண்டிய இன்சினியர்களை பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து நாம் எடுத்துக் கொண்டோம். அதாவது அவர்களுடைய சர்வீஸைக் கடனாகப் பெற்றுக் கொடோம். அப்படிப்பட்டவர்கள் இன்னமும் அஸிஸ்டெண்ட் இன்சினியர்களாகவேதான் இருக்கிறார்கள். 1960-ம் ஆண்டிலிருந்து நாம் நேர்முகமாக அஸிஸ்டெண்ட் இன்சினியர்கள் போன்றவர்களை ரிக்ருட் செய்துக் கொண்டோம். அவர்களுடைய பாடு இப்பொழுது திண்டாட்டமாக இருக்கிறது. நம்முடைய அரசிலே திட்டவட்டமான விதிமுறைகள் இல்லாத காரணத்தால், இந்த இன்சினியர்கள் வேலை உயர்வு போன்றவைகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். நாம் எடுத்துக் கொண்ட மின்சார வேலைத் திட்டங்கள் முடிந்து விட்டன. அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு இருக்க வேண்டிய உற்சாகமும் இல்லாமல் போய் ஒழுங்கு முறை—டிஸிப்ளின்—ஆர்வம், எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பல்வேறு திட்டங்களுக்காக நாம் எடுத்துக்கொண்ட இன்சினியர்களை அந்த வேலை முடிந்து விட்டால், மற்ற திட்டங்களில் முதலிடம் கொடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும். அவர்கள் எந்த எந்த வேலைக்கு என்று கொண்டுவரப்பட்டார்களோ, அந்த வேலை முடிந்துவிட்டதும், அவர்களைத் திரும்பவும் பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டுக்கே அனுப்பிவிடும் முறையைக் கையாள வேண்டும். அப்படிச் செய்வது தான் நியாயமான, தர்மமான, நீதியான காரியமாக இருக்க முடியும். இந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்றிருக்கும் அமைச்சர் சுறுசுறுப்பும், இளமையும் உள்ளவராக இருப்பதால், மின்சார வாரிய சிவில் இன்சினியர்களுக்கு எந்தவிதமான குறைகளும் இல்லாமல், அவர்கள் நிறைந்த மனத்தோடு வேலை செய்யும் நிலையை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிற்சில புதிய திட்டங்கள் இருக்கின்றன ஹைட்ரோ-எலெக்டரிக் திட்டங்கள் இருக்கின்றன. செலவு குறைவாக உள்ள திட்டங்கள் பல இருக்கின்றன. தெர்மல் திட்டங்களைவிட ஹைட்ரோ-எலெக்ட்ரிக் திட்டங்கள் செலவு குறைவானவை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. குந்தாவிலே கூட, பல திட்டங்கள் அதற்கு உப திட்டங்களாக நிறைவேறுத பாக்கியாக இருக்கின்றன. அப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், நல்லதாக

இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்ற, உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மின்சார அளவைப் பொருத்தவரையில், எந்த வரட்சிக் காலத்திலும் நாம் வேறு மாநிலங்களுக்குச் சென்று மின்சாரக் கடன்பெற வேண்டிய தேவையில்லாமல் போகும், நாம் கையேந்தி நிற்கவேண்டிய நிலையில்லாமல் இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட சிறு சிறு திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்ய இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகளையும் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் நம்முடைய தேவையின் பெரும் பகுதியை நாம் பெற வாய்ப்பு இருப்பதால், அதிலும் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் மின்சாரத்தைப் பெருக்கிவிட்டோம் என்று எவ்வளவோ சொல்லிக்கொண்டு இருந்தாலும்கூட, 1963, 1964, 1965-ம் ஆண்டுகளில் விண்ணப்பங்கள் போட்டவர்களுக்குக்கூட இன்னமும் மின் விசை கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. வாரியத்தில், கன்ஸ்ட்ரக்ஷன் ஸைட், மெயின்டினன்ஸ் ஸைட், கமர்ஷியல் ஸைட் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. இருந்தும், பல சிறிய, பெரிய திட்டங்களும் எடுக்கப்படவில்லை. கம்பிகள் இல்லை என்கிறார்கள். வேண்டிய கம்பங்கள் இல்லை என்கிறார்கள். இன்னமும் சிறுசிறு கருவிகள் இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட தொல்லைகள் காரணமாக வேலையில் தேக்கம் இருக்கிறது.

சென்ற முறை நாங்கள் ஒரு துணைக் குழு வேண்டும் என்று கேட்டோம். அமைச்சர் அவர்கள் அறிக்கையில்

"If specific cases are brought to notice such cases will be examined. It is considered that a permit sub-committee is neither desirable nor necessary."

என்று சொல்லியிருக்கிறார்கள். ப்ரையாரிடி கொடுப்பதில் இருக்கும் தொல்லைகளை ஆராய, நீண்ட நெடு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, கொடுக்க வேண்டிய ப்ரையாரிடியை நிர்ணயிக்க ஒரு துணைக் குழு வேண்டும் என்று கேட்டோம். அப்படிப்பட்ட கமிட்டி ஒன்று இல்லாமலே அந்தக் குறையைத் தீர்க்க முடியும் என்கிற வகையில் 'ஸ்டேட்மெண்ட் ஆப் ஆக்ஷன் டேகன்' என்ற பகுதியில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சப்-கமிட்டி, அல்லது துணைக் குழு அமைக்கப்பட்டாலும் அமைக்கப்படாவிட்டாலும், குறைபாடுகள் இல்லாமல் இருக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. டி. மார்டின் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீது நடக்கக்கூடிய இந்த விவாதத்தில் என்னுடைய கட்சியின் சார்பாக, என்

கருத்துக்களை இந்த அவையில் எடுத்துவைக்க முன் வருகிறேன். தற்சமயம், இந்த மின்சார போர்டு, ஒரு 'கோர்-டேகர் கவர்ன்மெண்ட்' போல் நடந்து வருகிறது. மின்சார வாரியத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய அளவில் ஏராளமான இன்ஜினியர்கள் இல்லாததால், இந்த மின்சார வாரியம் தகுந்த முறையில் நல்ல காரியங்களைச் செய்ய முடியாத நிலையில், ஒரு கோர்-டேகர் கவர்ன்மெண்ட் போல் இருக்கிறது என்கிற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக நம் நாட்டில் நாம் ஒரு பெரிய மின்சார வாரியத்தை வைத்திருக்கிறோம். அண்டையிலிருக்கும் மைசூர் மாநிலத்திலும், பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்திலும் இன்னும், கேரளத்திலும் உள்ள வாரியங்களில் ஏராளமான சீஃப்-இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். நம்முடைய வாரியத்தில் ஒரே ஒரு சீஃப் இன்ஜினியர்தான் இருக்கிறார். அந்த வகையில்தான் நம்முடைய வாரியத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். ஒரே ஒரு சீஃப்-இன்ஜினியர் இருப்பதால், சூப்பர்விஷன் போன்ற மிக முக்கியமான அம்சங்கள் பழுதுபட்டிருப்பதாக மக்கள் மத்தியில் ஒரு பெருத்த குறைபாடு பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த எலெக்ட்ரிசிடி போர்டில் சேர்மனாக ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் திறமை உள்ளவர்கள்தான் என்றாலும், இந்த எலெக்ட்ரிசிடியைப் பொருத்தவரையில், அதற்கு வேண்டிய டெக்னிகல் நாலட்ஜ், டெக்னிகல் எக்ஸ்பீரியன்ஸ் இவைகளெல்லாம் தேவைப் படுவதால், அதற்குப் பதிலாக ஒரு சீப்-இன்ஜினியரைத் தலைவராகப் போட்டால்தான் இன்னும் இந்த வாரியத்தைச் செயல்திறன் உள்ளதாகச் செய்ய முடியும். அந்த வகையில் செய்தால் வாரியத்தின் அதிகமான சேவை மக்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய வாரியத்திற்கு நான்கு சீஃப்-என்ஜினியர்கள் தேவை என்று வைத்துக்கொள்வோம். அப்படி நான்கு சீஃப்-இன்ஜினியர்கள் அங்கத்தினர்களாக இருந்தால், அவர்கள் டர்ன் வாரியாக இரண்டு வருஷத்திற்கு ஒருவராகவோ அல்லது வருஷத்திற்கு ஒருவராகவோ, தலைவராக இருந்தால், அப்படி ஒரு டர்ன் முறையில் வந்தால், ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் அனுபவத்தையும், திறமையையும், நல்ல முறையில் இந்த வாரியத்திற்கு அளித்து, வாரியத்தின் செயல்களுக்கு உதவியாக இருக்க முடியும். வாரியம் நல்ல முறையில் சேவை செய்யும் நிலையைத் தோற்றுவிப்பார்கள். இவ்வளவு பெரிய வாரியத்திற்கு ஒரே ஒரு சீஃப்-இன்ஜினியர் மட்டும் மெம்பராக இருக்கிறார். டெக்னிகல் மெம்பராக இருக்கிறார். ஆகவே, போர்டின் செயல் திறன் குன்றியிருக்கிறது என்று மக்கள் மத்தியில் கூறிக்கொள் கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அநேக இடங்களிலிருந்து பொதுமக்களாலும், விவசாயிகளாலும் அனுப்பப்படுகின்ற மனுக்களைப் பரிசீலனை செய்து, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதில்லை. காரணம் என்னவென்றால், அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து அனுப்பத் தேவையான டெக்னிகல் அறிவு உள்ள இன்ஜினியர்கள் அதிகம் இல்லாமல் இருப்பதுதான் இன்ஜினியர்கள் அதிகம் இருந்தால் உடனுக்குடன் முடிவு எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். சாதாரணமாக ஒரு மாவட்டத்திலிருந்து வருகின்ற நிலைமை அந்த இடத்திற்குத் தக்கபடி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். பத்து பர்சென்ட் லாபம் இருக்கிறதா, இல்லையா என்ற விதியை எல்லா இடங்களுக்கும் பொதுவான விதியாக வைத்துக்கொண்டு ஒன்றாக அமல் செய்யக்கூடாது. இதன் காரணமாகப் பின்தங்கிய பகுதியிலுள்ள மக்கள் மின்சாரப் பயனை அனுபவிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்குக் காரணம் மின்சார வாரியத்தில் டெக்னிகல் அறிவு உள்ளவர்கள் எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்கள் அதிகமாக இல்லாததே ஆகும். அப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் இப்போதைக்கு 10 பர்சென்ட் லாபம் கிடைக்காவிட்டாலும், நாளடைவில் பத்து பர்சென்ட் லாபம் கிடைக்கும். இப்போது எட்டு பர்சென்ட் கிடைத்தாலும் அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தால், நாளடைவில் ஒரு விவசாயியைப் பார்த்து அண்டையிலுள்ள விவசாயிகளும் பம்ப் செட்டுக்கு மின் இணைப்பு கேட்பார்கள். இப்படியே வளர்ந்துகொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்படும்போது பத்து பர்சென்ட் லாபம் கிடைக்கும் என்ற நிலைமைகளை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கக்கூடிய எக்ஸ்பீரியன்ஸ் உள்ள அதிகாரிகள் எலெக்ட்ரிசிடி போர்டில் தற்போது இல்லாததே இதற்குக் காரணமாகும். கமது மாநிலத்திலுள்ள இந்தக் குறைபாடுகளை உடனடியாகப் போக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்ற மாநிலங்களில் நான்கு சீஃப் இன்ஜினியர்களை வைத்துக் கொண்டிருக்கும்போது நமக்கு மட்டும் அந்த எண்ணிக்கை ஏன் இருக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நாமும் குறைந்தது நான்கு சீஃப் இன்ஜினியர்களை வைத்துக்கொண்டால் வேலைகள் அதிகமாகவும், வேகமாகவும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எலெக்ட்ரிசிடி ஆபீசுக்குச் சென்றால் சீஃப் இன்ஜினியர் என்ற போர்டு போட்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் சீஃப் இன்ஜினியர்கள் இல்லை. இந்தத் துறையில் சூப்பர்விஷன் திறன் குறைந்துபோயிருக்கிறது. டெக்னிகல் எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர் இந்தக் கழகத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்ற இந்த வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், எலெக்ட்ரிசிடி போர்டில் செகரடேரியல் ஸ்டாஃப் பகுதியிலுள்ளவர்களுக்கும், அக்கவுன்ட்ஸ் ஸ்டாஃப் பகுதியிலுள்ளவர்களுக்கும் ஒரு மாறுபாடு இருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அக்கவுன்ட்ஸ் லைனில் உள்ளவர்கள் எக்ஸ்பீரியன்ஸ்

உள்ளவர்களாக இருந்தாலும் பிரமோஷன் போன்றவைகளில் இரு பகுதியிலுள்ளவர்களுக்கும் பாகுபாடு காட்டப்படுகிறது என்பதாக அறிகிறேன். இது சரியல்ல. ஊழியர்களிடையே இவ்விதமான வித்தியாசம் காட்டக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பின்தங்கிய பகுதிகளிலிருந்து அநேக ஸ்கீம்கள் வருகின்றன. பல விவசாயிகள் மனுக்களைச் செய்கின்றனர். விவசாயம் செய்பவர்கள் எல்லோரும் விவசாயிகளாகிவிட முடியாது. விவசாயிகளில் பலர் வேறு நாடுகளிலிருந்து அகதிகளாக வந்தவர்களும் இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம் பகுதியிலும், உடன்குடி பகுதியிலும் உள்ள கிராமங்களில் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமான பாசன வசதி அதிகமாக இல்லாத இடங்களில், குடியமர்த்தப்படுவதால் அவர்கள் கிணற்றுப் பாசனத்தின் மூலமே விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் பம்ப் செட்டுக்காக மின்சார இலாகாவுக்கு மனுச் செய்துகொண்டால், 'உங்களுடைய ஸ்கீம் ப்ராஃபிட்டாக இல்லை' என்றுதான் பதில் வருகிறது. அப்படியானால் அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்கள் எல்லாம் அப்படியேதான் இருக்க வேண்டுமா? சுப்பராயபுரம், கீழ் நடுவக்குறிச்சி, மேல நடுவக்குறிச்சி, கருங்கடல், போய்க்குளம், பிரகாசபுரம், சவேரியார்புரம், காலன் குடியிருப்பு, மாநாடுதண்டுபத்து, பாமன்குறிச்சி, சீநடையார்புரம், பிச்சுவிளை இதுபோன்ற கிராமங்களில் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் ஏராளமான அளவில் விவசாயம் செய்து வந்தும், பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கீழ் நடுவக்குறிச்சி, மேல் நடுவக்குறிச்சியிலிருந்து தனி மனிதர்கள் முன் வந்து, நாங்கள் எங்களுடைய நிலத்திற்கு மின் இணைப்புக்காக மனுச் செய்கிறோம். மின்சார இலாகாவில் தளவாடங்கள் இல்லையென்றாலும் வாங்கிக்கொள்வதற்குப் பணம் தருகிறோம். எங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்தால், அதனையொட்டி அண்டையிலுள்ள மற்றவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கலாம்' என்று கூறி மனுவைக் கொடுத்தார்கள். நான் அந்த மனுவைப் பரிசீலித்து, அந்த பிரபோஸலை சிபாரிசுடன் மின்சார போர்டுக்கு அனுப்பினேன். மனு அனுப்பி வருடம் ஒன்றாகியும் இதுவரைக்கும் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. என்பதுகூட எனக்குத் தகவல் தெரிவிக்கவில்லை. நல்லிதயம்கொண்ட அந்தத் தனி மனிதருக்கும் சரியான பதில் தரப்படவில்லை. ஏன் இதைக் கேட்கிறேன் என்றால் தளவாடங்களுக்குப் பணம் இல்லையென்று சொல்கின்ற நேரத்திலே, அதற்குப் பணம் தருகிறேன் என்று ஒருவர் கூறி முன்வந்தால், வந்த உதவியை ஏன் இந்த போர்டு உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்று அறிய விரும்புகிறேன். தனி மனிதர் கொடுக்க முன்வந்த தொகையை ஏற்றுக்கொண்டு, அதை மாதாமாதம் அவர் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத்தைக் கழித்துக்கொண்டிருக்கலாமே? இதை ஏன் போர்டு உபயோகித்துக்கொள்ளவில்லை

என்பதை அறிய விரும்புகிறேன். ஏன் இதைச் செயல்படுத்தவில்லை? மின்சார பம்ப் செட்டுக்கு மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் போட்டுவிட்டோம். கிராமங்களை எல்லாம் ஒளிமயமாக்கிவிட்டோம்' என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் புதுக்குளம் பஞ்சாயத்தில் கிராமங்களுக்கு மின்விளக்கு கொடுக்க வேண்டுமென்று பணம் கட்டி, வருடம் ஒன்று ஆகியும் இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை . விளக்கு போடப்படவில்லை. மேலும் சுப்பராயபுரம் பஞ்சாயத்திலும் மின்விளக்குக்கு இணைப்பு கொடுக்கப்படவில்லை. புத்தன்தருவை பஞ்சாயத்திலும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. மேலும் இந்தப் பகுதி விவசாயிகள் கடன் வாங்கி மின்சார பம்பு செட் வாங்கியிருக்கிறார்கள். மின் இணைப்பு கிடைக்காததால், அதை உடனடியாக உபயோகிப்பதற்கு முடியாத நிலைமையில் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்குப் பணம் கடன் கொடுத்தவர்கள் Sometimes attachment before judgement . . . . .
என்று அட்டாச்மெண்டு செய்து எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த மாதிரியான நிலைமைகள் விவசாயிகளுக்கு ஏற்படாமல் மின்சார போர்டு இயங்க வேண்டும். தளவாடங்கள் இல்லையே என்று சொல்லிக்கொண்டு காலம் தாழ்த்திக்கொண்டே போனால், இதனால் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் மின்சார போர்டு நல்ல முறையில் பணி புரிகின்றது என்று சொல்ல முடியாது. வீடுகளுக்கு நாம் மின்சாரத்தை உபயோகிக்கிறோம். அந்த மின்சாரத்தையும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது.

பெரிய பெரிய இண்டஸ்ட்ரீஸ்களுக்குச் சலுகைகள் காட்டப்படுகின்றன. நாளடைவில் இந்தச் சலுகைகளை மறு பரிசீலனை செய்து, எந்தெந்த இடங்களில் சலுகைகளைக் குறைக்க முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் குறைத்து, வீடுகளுக்கு மிகக் குறைந்த விலையில் மின்சாரத்தை விநியோகம் செய்ய வேண்டும். இதை இந்த மின்சார போர்டு முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, சில இடங்களில் மின்சார சக்தி திருட்டுகள் மூலம் போய்விடுகின்றன. மின்சாரக் கம்பங்களிலுள்ள பொருள்கள் எல்லாம் திருடு போகின்றன. திருட்டுக் குற்றங்கள் அதிகமாக ஏற்படுகின்ற நேரத்தில் பேரிழப்பு அதிக அளவாகிறது, அந்த இழப்பைப் பொதுமக்கள் ஈடு செய்ய வேண்டியதாக இருக்கிறது.

மின்சார போர்டு இந்த இழப்புக்கான காரணங்களை ஆராய்ந்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதற்குக் காரணம் என்னவென்றால், சூப்பர்விஷன் குறைந்து இருக்கிறது என்பதே ஆகும். இந்த மின்சார போர்டில் பர்சேசிங் கமிட்டி ஒன்று போடப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

திரு. நா. வீராசாமி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கம்பங்கள் எல்லாம் திருடு போவதாகச் சொன்னார்கள். எந்த இடத்தில் திருடு போனது என்பதைக் குறிப்பாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. டி. மார்டின்: " I mentioned implements in the lines " மின்சார வாரியத்தில் சூப்பர்விஷன் குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். மேலும் 'டெக்னிகல் எக்ஸ்பீரியன்ஸ்' உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்காதது இன்னொரு காரணம். மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய நிலையை எடுத்துக்கொண்டால், அது ஒரு 'கேர் டேக்கர் கவர்ன்மென்ட்' மாதிரி இருக்கிறது. ஆகவே, இந்த மின்சார வாரியத்தை 'ரீ கான்ஸ்டிட்யூட்' செய்து டெக்னிகல் சீஃப்-இன்ஜினியர்களை, நான்கைந்து பேர்களையாவது மின்சார போர்டில் இடம் பெறச் செய்ய வேண்டும். இந்த வாரியத்தின் வரவு-செலவுகளைப் பார்த்துக்கொள்ள அக்கவுண்ட்ஸ் செக்ஷன் இருக்கிறது. அதற்கு மேலே அக்கவுண்டன்ட்-ஜெனரல் இருக்கிறார். ஆகவே, அவர்கள் எல்லாம் வரவு-செலவுகளைப் பார்த்துக்கொள்ள முடியும். ஆகவே, இந்த மின்சார போர்டை 'ரீ கான்ஸ்டிட்யூட்' செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பின்தங்கிய பகுதிகளுக்கும் விவசாயிகளுக்கும் சீக்கிரமாக மின் இணைப்புச் செய்து கொடுக்க முடியும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி பேச இருக்கின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளாதிருக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நமது மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று நான் என்னுடைய யோசனைகளைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் 1971-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கிராமங்களுக்கும், உழவர் பெருங்குடி மக்களின் கிணறுகளுக்கும் மின்சாரம் அளிக்கிற பெருங்காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கிற பெரும் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்கிற உறுதியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் விவசாய உற்பத்தியைப் பெருக்கியாகவேண்டும் என்கிற கருத்தில், உழவர் பெருங்குடி மக்களுக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். நமது தமிழ் நாட்டைப்

பொறுத்த வரையில் கடந்த இருபது ஆண்டு காலமாக இருந்து வந்த அரசாங்கம் கிராமங்களுக்கும்—கிராமங்களில் இருக்கிற உழவர் பெருங்குடி மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையில் பெரும் அளவில் மின் விஸ்தரிப்புச் செய்யவில்லை. அவர்கள் காலத்தில் இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் கிணறுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது. உழவர் பெருங்குடி மக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இந்த ஆண்டு பருவ மழை தவறிப் போய் இருந்தாலும் தமிழ்நாட்டிலே மின்சார வெட்டு கொண்டுவரப்படவில்லை. அதனால் தொழில்கள் பாதிக்கப்படவில்லை என்பதன் காரணமாகவும் மகிழ்ச்சி அடைவதோடு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தையும், அமைச்சரவையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் எனக்கு முன்னால் பேசிய திரு. மார்டின் அவர்கள் குறிப்பிட்டார்கள், நமது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரே ஒரு சீஃப்-இன்ஜினியரைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பெரிதும் வேலை பாதிக்கப்படுகிறது. பக்கத்தில் இருக்கிற நமது அண்டை மாநிலங்களான மைசூரிலும், கேரளாவிலும், ஆந்திராவிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட நான்கைந்து சீஃப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். அதைப்போல இங்கும் போட வேண்டும் என்று சொன்னார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லா மாநிலங்களையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் மொத்தமே பத்து லட்சம் கிணறுகளுக்குத்தான் மின்விசை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது தமிழ்நாட்டில் மட்டும் 4 லட்சம் கிணறுகளுக்கு மேல் இதுவரை மின்விசை அளிக்கப்பட்டிருக்கிறது. நமது அண்டை மாநிலங்களான கேரளாவிலும், மைசூரிலும், ஆந்திராவிலும் நான்கைந்து சீஃப்-இன்ஜினியர்கள் இருந்தும் செய்திருக்கும்படியான வேலைகளை விட அதிகமாகவே இங்குள்ள ஒரு சீஃப்-இன்ஜினியர் செய்திருக்கிறார்கள். நம்முடைய ஒரு சீஃப்-இன்ஜினியர் செய்திருக்கும் படியான வேலைகளை அங்கங்கே இருக்கும் நான்கு ஐந்து சீஃப்-இன்ஜினியர்களால் செய்ய முடியவில்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையை வாசிக்கிற நேரத்தில் குறிப்பிட்டார்கள், " மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். அங்கத்தினர்கள் குறிப்பிடுகிற குறைகளைக் குறித்துக்கொண்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள் " என்று சொன்னார்கள். அந்த அதிகாரிகளுக்கு நான் மிகப்

[திரு. சு. துரைசாமி] [1969 ஆகஸ்ட் 16

பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன், 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி நான் இதே மன்றத்தில் பேசிய நேரத்தில் பல வேறு பிரச்சினைகளைக் குறிப்பிட்டேன். ஆனால் அவை ஒன்றுக்கும் அவர்கள் இதுவரை பரிகாரம் காணாதது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. மின்சாரச் சட்டமானது 1948-ம் ஆண்டு நிறைவேற்றப் பட்டது. அதன் 17-வது பிரிவில் லோகல் அட்வைசரி கமிட்டிகள் போடவேண்டும் என்று இருக்கிறது. இருந்தும் கடந்த காலத்தில் அதுபோல லோகல் அட்வைசரி கமிட்டிகளைப் போடாமல் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்த பிறகாவது அதுபோன்று லோகல் அட்வைசரி கமிட்டிகளைப் போட வேண்டும். அப்படிப் போடுவதன் மூலம் கிராம மக்களது—விவசாயப் பெருங்குடி மக்களது துன்பங்கள் உடனுக்குடன் நீக்கப்படுவதற்கு வழியேற்படும் என்று நான் குறிப்பிட்டேன். இதற்கு இன்றுவரை பரிகாரம் காணப்படவில்லை.

நான் பேரவைத் தலைவர் மூலமாக ஒரு கருத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக கிராமத்தில் இருக்கிற ஒரு விவசாயி தன்னுடைய கிணற்றுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டால், அந்தக் கிணற்றைப் போய்ப் பார்த்து "அதற்கு மின்சாரம் வழங்கலாம், அதில் போதுமான அளவு தண்ணீர் இருக்கிறது" என்பதாக சூபர்வைசர் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்தால்தான் அதற்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும். ஆனால் ஒரு சூபர்வைசர் வேண்டுமென்றே காலையில் போகாமல் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சி ஓய்ந்திருக்கும் பிற்பகல் வேளையில் அந்தக் கிணற்றைப் போய்ப் பார்த்து "அதில் போதுமான தண்ணீர் இல்லை" என்று சொல்லிவிடுவாரானால் அந்த கிணற்றுக்கு மின் இணைப்புக் கிடைக்காது. நானே ஒரு குறிப்பிட்ட சம்பவம் குறித்து மின்சார சூபர்வைசரை அணுகிக் கேட்டேன். சூபர்வைசர் விருப்பப்பட்டால் தண்ணீர் இல்லாத கிணற்றில் கூட பக்கத்து கிணற்றுத் தண்ணீரைக் கொஞ்சம் கொட்டி, "இதில் தண்ணீர் இருக்கிறது, மின் இணைப்புக் கொடுக்கலாம்" என்று அத்தாட்சிப் பத்திரம் வழங்க முடியும். சட்டப் பிரகாரம் அதை யாரும் மறுப்பதற்கில்லை என்றார். அதுபோலவே தண்ணீர் உள்ள கிணற்றுக்குக் கூட அவர் அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க மறுத்தால் சட்டப் பிரகாரம் அதை ஒன்றும் ஆட்சேபிப்பதற்கு இல்லை. இதன் காரணமாகத்தான் ஏ.இ. லெவலில் லோகல் அட்வைசரி கமிட்டிகளைப் போட்டால் அங்கங்கே உள்ள மக்களது குறைகளை—உழவர் பெருங்குடி மக்களின் தேவைகளை அறிந்து தக்க நியாயமான பரிகாரத்தை அளிக்க உதவும். ஆகவே லோகல் அட்வைசரி கமிட்டிகளைப் போட தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறேன். 1967-ல் இருந்து அது கவனிக்கப்படவில்லை. இவ்வாண்டாவது அதற்குத் தக்க முயற்சி எடுக்க வேண்டும், அட்வைசரி கமிட்டி அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1969 ஆகஸ்ட் 16] [திரு. சு. துரைசாமி]

அதேபோல இன்னொரு கருத்தையும் எடுத்துச் சொன்னேன். அங்கங்கே இருக்கிற வேலைகளுக்கு சாங்ஷன் செய்வதானால் ஏ.இ. ஆயிரம் ரூபாய் வரையில்தான் சாங்ஷன் செய்யலாம், டி.இ. பத்தாயிரம் ரூபாய் வரையில்தான் சாங்ஷன் செய்யலாம், எஸ்.இ. இருபதாயிரம் ரூபாய் வரையில்தான் சாங்ஷன் செய்யலாம் என்று இருக்கிறது. இது முப்பதாண்டு காலத்திற்கு முன்னால் தயாரிக்கப் பட்டதாகும். இப்போது விலைவாசிகள் உயர்ந்திருக்கிற காரணத்தை முன்னிட்டு இந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று சொன்னேன். எஸ்.இ.-க்கு ஐம்பதாயிரம் ரூபாய்வரை சாங்ஷன் செய்யலாம் என்று மட்டும் மாற்றியிருக்கிறார்களே தவிர, இதைப்போலவே ஏ.இ., டி.இ. சாங்ஷன் வரம்பை உயர்த்தவில்லை. இதன் காரணமாகவே எந்த வேலையையும் உடனுக்குடன் எடுத்துக் கொள்ள முடியாது. ஏ.இ., டி.இ.-க்கு அனுப்புவதும், டி.இ. எஸ்.இ.-க்கு அனுப்புவதுமாகக் கால தாமதம் ஆகி வருகிறது. அதைப்போக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மின்சாரத் துறையில் ஏராளமான மின்சாரம் விரயம் ஆகிறது. நம்மால் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் அனைத்தையும் முழுக்க உபயோகப்படுத்திக்கொள்ள முடியவில்லை. இந்த நிலையைப் போக்குவதற்கு ஒவ்வொரு டிரான்ஸ்பார்மர் உள்ள இடங்களிலும் மீட்டர் பொருத்தப்படவேண்டும். அந்த டிரான்ஸ்பார்மரில் இருந்து வெளியேறும் மின்சார அளவு மீட்டரில் தெரிந்து விடும். அதன்மூலம் மற்ற மற்ற இடங்களில் விநியோகப்படும் மின்சார அளவு மற்ற மீட்டர்களின் மூலம் தெரியும். இவற்றுக்கிடையே அதிக வித்தியாசம் காணப்பட்டால் உடனுக்குடன் எங்கே மின்சார விரயம் ஏற்படுகிறது என்று கண்டறிய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல வேளாண்மைத் துறைக்கு நாம் குறைந்த விலையில் சப்ளை செய்கிற மின்சாரத்தின் மூலம் நமக்கு 9 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வேளாண்மைத் துறையின் முக்கியத்துவத்தைக் கருதி இதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அலுமினியத் தொழிலுக்கு குறைந்த செலவில் கொடுப்பதன் மூலம் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றார்கள். இதைக் குறைப்பதற்கு நமது அமைச்சரவை நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கங்களோடு கலந்து பேசியிருப்பதன் காரணமாக ஒரு நல்ல உறவு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதை நான் வரவேற்கிறேன். மின்சாரவாரியத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக தொழிற்சங்க உரிமை வேண்டுமென்று கேட்டார்கள். நமது அரசாங்கம் வந்த பின்னால்தான் அவர்களுடைய தொழிற் சங்கத்திற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. காங்கிரஸ்

அரசாங்கம் அதைக் கவனிக்கவில்லை. நமது அரசாங்கம் தொழிற் சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுத்து அவர்களோடு கலந்து பேசி அவர்களுடைய குறைகளை நீக்க முன்வந்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன். பல கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்றாலும் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிற குறைகளையும் விரைவில் நிவர்த்திக்க வேண்டும். மின்சார வாரியத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை வேஜ் போர்டு வந்தாக வேண்டும். நியாயமான ஊதிய நிர்ணயத்திற்கு அது பெரிதும் உதவும். பல ஆண்டுகளாக தங்களுக்குப் போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கையைப் நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நான் சார்ந்திருக்கிற திருப்பூர் பகுதி மக்கள்—விவசாயப் பெருங்குடி மக்கள் போதுமான அளவு மின் விஸ்தரிப்புப் பெறாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றிக் கேட்கிறபோது எம். எஸ். ஏஞ்சல்ஸ் 5/8" எம். எஸ். ஏஞ்சல்ஸ் ¾" இன்னும் அலுமினிய உறுப்புகள் பல கிடைக்காத காரணத்தினால்தான் விஸ்தரிப்புச் செய்ய முடியவில்லை என்கிறார்கள். அந்த நகரின் ஜனத்தொகை ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேல் வளர்ந்து போகிறது. ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட குறைபாட்டை நீக்க உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய ஏ.இ.-க்கள், டி.இ.-க்கள் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கிடையாது. மின்சார வாரியம் ஒரு பெரிய அமைப்பாக இருப்பதாலே, இன்னும் பல நல்ல காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டிய நிலைமை இருப்பதாலே அந்த அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு அந்தத் துறையிலே பணி புரிகின்ற உயர்தர அதிகாரிகளுக்கு அரசாங்கத்திலிருந்தே வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்று என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி. தமிழகத்தின் மின்சார வாரியம் பல மாநிலங்களிலே இருப்பதைவிட நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதைப்பற்றி நாமெல்லாம் பெருமைப்படுகிறோம். இருந்த போதிலும் அதில் உள்ள சில குறைபாடுகளைக் களைந்தெறிவது நம்முடைய எதிர்கால முன்னேற்றத்திற்கும், இதுவரையில் மின்சார வாரியம் எடுத்திருக்கின்ற நல்ல பெயர் நிலைத்து நிற்பதற்கும் அவசியமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே அதிகார வர்க்கங்கள் ஆட்சி மாறிய போதிலும்கூட இன்னும் தங்களுடைய நடைமுறைகளை மாற்றிக் கொள்ளவில்லை என்பதைப் பார்க்க வேண்டும். கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாய மக்களிடத்திலே, மின் இணைப்புக் கோரி நிற்கக்கூடியவர்களிடத்திலே எப்படி எப்படித் தங்களுடைய சக்திக்குத் தகுந்தவாறு செய்யமுடியுமோ அப்படி கீழே உள்ள அதிகாரிகள் செய்து வருகிறார்கள். உதாரணமாக ஒட்டன்சத்திரத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக—மின்சார வாரியத்தில் ஆண்டுதோறும் கடன் எழுப்பப்படுகின்றது— அந்தக் கடனை வசூல் செய்வதற்காக அங்கே சென்ற அதிகாரிகள் கடன் வசூலை முடித்துக்கொண்டு மின் இணைப்புக் கோரியவர்களிடத்திலே 100, 200 என்று வாங்கியதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டு ஒட்டன்சத்திரத்திலே துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்தார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிகாரிகளின் போக்குகள் காரணமாக பணம் விரயமாவது மட்டுமல்ல மின் இணைப்புத் துரிதமாக கிடைக்காத காரணத்தாலே வீணான கெட்ட பெயர் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவையெல்லாம் தடுப்பதற்கு மேல் அதிகாரிகள் மூன்று மாதங்களுக்கொருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கொருமுறை சென்று இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து வந்தால் தடுக்கமுடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சில இடங்களில் கீழ்த்தர சிப்பந்திகளை, சிறிய அதிகாரிகள் பெரிய அதிகாரிகள் வீட்டு வேலை செய்வதற்காக வைத்துக் கொள்ளும் பழக்க வழக்கங்கள் இன்னும் இருந்து வருகின்றன. இதன்மூலமாக மின் இணைப்பு வேலைகள் தடைபடுவதுடன் அவர்கள் வீட்டு வேலைகளை மனச் சங்கடத்துடன் செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளிலே, குறிப்பாக தென் ஆர்க்காடு, வடார்க்காடு கோவை மாவட்டங்களிலே உள்ள பகுதிகளிலே, எப்படித் துரிதமாக மின் இணைப்புக் கொடுக்கப்படுகிறதோ அதைப்போன்று மற்ற கிராமங்களிலும் ஏழை எளிய விவசாய மக்களுக்கு பம்பு செட்டுகளுக்காக மின் இணைப்புத் துரிதமாகக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். விவசாய மக்களுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு என்ன செய்வது எப்படிச் செய்யவேண்டுமென்பது தெரியாமல் இருக்கலாம். விண்ணப்பம் செய்யக்கூடியவர்கள் பல கட்டங்களில் பல அதிகாரிகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதற்கு அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அதன் காரணமாக மின் இணைப்புப் பெறுவதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கடன் வாங்கி கிணறு வெட்டி, பம்புசெட் வைத்து, எஞ்சின் ரூம் கட்டிவிட்ட பிறகும்கூட அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைக்க காலதாமதம் ஏற்படுகிறது. ஆரம்பத்திலிருந்து கீழ்மட்டம் வரையில் ஏ.இ.-க்கள், டி.இ.-க்கள், எஸ்.இ.

என்று இப்படி இ-க்களாகப் பார்க்கவேண்டியிருக்கிறது. எத்தனை இ-க்களை விவசாயிகள் பார்க்கவேண்டியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். சிறிய விவசாயிகளுக்கு இது தெரியாது. எப்படி தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோவை மாவட்டங்களில் அதிகமாக மின் இணைப்புத் துரிதமாகக் கிடைத்திருக்கிறதோ அதைப்போன்ற மற்ற மாவட்டங்களிலும் மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்கும் கிடைக்கக்கூடிய முறையினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சிறிய உதாரணத்தையும் பார்க்கவேண்டும். அதிகாரிகள் நினைத்தால் எவ்வளவு சீக்கிரத்திலே எவ்வளவு பெரிய இணைப்பையும் கொடுத்துவிடுகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிங்கம்புணரியில் 48 வீடுகளைக்கொண்ட ஹவுசிங் போர்டு காலனிக்கு, ஒரே நாளிலே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விண்ணப்பம் கொடுக்கவில்லை. கனெக்ஷன் நம்பர் என்ன என்று தெரியவில்லை, சாமான்கள் எங்கிருந்து கிடைத்தன என்று சொல்லவில்லை. ஹவுசிங் போர்டு காலனிக்கு 48 வீடுகளுக்கு வீட்டுக்கு லைட்டும், தெரு விளக்குகளும் கிடைத்திருக்கின்றன என்று சொன்னால், நான் அதை வேண்டாமென்று சொல்லவில்லை, அதேபோலவே மற்ற இடங்களுக்கும் செய்யவேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தலைவர் அவர்களே, சிங்கம்புணரியிலே இருக்கிற அந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்கு முறைப்படிதான் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: நான் குறிப்பிடும்பொழுது அது வேண்டாமென்று சொல்லவில்லை, நினைத்தால் துரிதமாகச் செய்ய சாத்தியப்பாடு இருக்கும்பொழுது மற்ற இடங்களிலே இருக்கிற மக்களுக்கு இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் என்று காலதாமதம் ஆகிறதே, அதை முறைப்படுத்தித் துரிதமாக கொடுக்கவேண்டும் என்றுதான் சொல்கிறேன். விவசாயிகளுக்குப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு எவ்வளவு துரிதமாகக் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விவசாயத்துறைக்கும் நல்லது, இந்த நாட்டுக்கும் நல்லது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் சில இடங்களிலே வீடுகளுக்கு மீட்டர்கள் கிடைக்கவில்லை என்பதால் வெளி மார்க்கட்டில் வாங்கிக் கொண்டுவரவேண்டுமென்று சொல்கிறார்கள். வாங்கிக்கொண்டுபோனால் அதைப் பரிசீலனை செய்வதற்கு 10, 15 என்று வாங்கப்படுகிறது. ஆகவே மின்சார வாரியத்தின் மூலமாகவே மீட்டர்கள் கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு சப்ளை செய்தால் நன்றாக இருக்கும்.

அதேமாதிரியாக இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல விவசாய உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்று உற்பத்திச் செலவைவிட குறைந்த விலைக்கு நாம் மின்சாரத்தைக் கொடுக்கிறோம். அதாவது எட்டே கால் பைசாவுக்கு உணவு உற்பத்திப் பெருக்கு என்ற காரணத்தினாலே குறைந்த விலைக்கு மின்சாரத்தைக் கொடுக்கிறோம். அதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு 9 கோடி ரூபாய் என்று இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 9 கோடி ரூபாயும் மின்சார வாரியத்தின் விற்பனைக்கூடம் என்ற முறையிலே பார்த்தாலும் கூட அதற்கு இழப்பு ஏற்படுவதால் அதை சரிக்கட்டுவதற்காக 9 கோடி ரூபாயை அரசு மான்யமாகவாவது திருப்பி மின்சார வாரியத்திற்குக் கொடுக்கவேண்டும். தொழிலாளர்கள் பக்கத்திலே போனஸ் அல்லது சம்பள உயர்வு என்று கேட்கிற நேரத்திலே பணம் இல்லை என்ற காரணம் காட்டப்படுகிறது. எனவே இந்த 9 கோடி ரூபாய் இழப்பை அரசு கொடுப்பதன் மூலமாக அதைச் சரிக்கட்ட முடியும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் நீண்ட நாட்களாக ஒத்திப் போடப்பட்டு வருகின்றன. காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்திய காலத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்காததோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது ரிட் பெட்டிஷன் கூடப் போடப்பட்டிருந்தது. நமது அரசு வந்த பிறகு அந்த ரிட் பெட்டிஷனை வாபஸ் வாங்கி தொழிலாளர்கள் மத்தியில் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் அவற்றைத் தீர்க்கலாம் என்று மு.ப. ஏற்பாடு செய்தது வரவேற்கக்கூடிய விஷயம். எழுபது பிரச்சினை 11-00 கள் கொடுக்கப்பட்டதில் இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. அவர்கள் 20 சதவிகிதம் போனஸ் வேண்டுமென்று கோரிப் போராடிய காலத்தில் நான்கு சதவிகிதம் போனஸ் கொடுக்கப்பட்டு மற்ற விஷயங்கள் தொழில் கோர்ட்டுக்கு விடப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி எந்த முடிவும் இதுவரை தெரியவில்லை. அதையும் பரிசீலனை செய்து உடனடியாகக் கொண்டுவரவேண்டும்.

என்.எம்.ஆர். தொழிலாளர்களைப்பற்றி எல்லோரும் அதிகமாக பேசிக்கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி உயர்வில் ஒரு தொழிலாளிக்கு மூன்று ரூபாய் குறைந்தபட்ச சம்பளம் இல்லாமல் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? சில இடங்களில் பொதுப்பணித் துறையினர் ஒரு தொழிலாளிக்கு மூன்று ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அதே போன்று நம்முடைய மின்சார வாரியத்தினரும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு ஆளுக்கு மூன்று ரூபாய் கொடுக்க முன்வர வேண்டும். அதே நேரத்தில் பல இடங்களில் வேலைக்கு வரக்கூடிய தொழிலாளர்கள் போதிய சாமான்கள் இல்லையென்ற காரணத்தால் வீட்டுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர்களுக்கு 'லே ஆப்' என்றமுறையில் சம்பளம் கொடுக்கப்பட

வேண்டும். இரவு வேலைகள் செய்யக்கூடிய வாச்மேன் போன்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த அலவன்ஸ் நிறுத்தப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அதை மீண்டும் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கந்தான் இருக்கவேண்டுமென்ற வாதத்தைச் சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூடக் குறிப்பிட்டேன். அந்த நிலை இன்று மாறி கணக்காயர் சங்கம் என்று தனியாக ஒரு சங்கம் மின்சாரத் தொழிலாளர் சங்கத்திற்கு எதிராக வந்திருக்கிறது. டிப்பார்ட்மென்ட் வாரியாக சங்கங்கள் ஏற்படும்போது தொழிலாளர்களிடையே ஒற்றுமையின்மையும், பிளவுந்தான் ஏற்படுமாகையால் அந்த நிலை ஏற்பட வழி வகுக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உபகரணங்கள் இல்லையென்ற நிலைமை மின்சார வாரியத்தின் கீழ் வரக்கூடிய வேலைகளுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. அதனால் வேலைகள் தடைப்படும் நிலை ஏற்படுகிறது. அந்த நிலைமையைத் தவிர்க்கும் முறையில் மின்சார வாரியமே உபகரணத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் உபயோகமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு நெருக்கடியில் மின்சார வாரியம் இருக்கும்போது, தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கு பண நெருக்கடி இருக்கும் இந்த நேரத்தில், மிகப் பெரிய அளவில் நடத்தப்படுகின்ற மில்களிடமிருந்து மின்சாரக் கட்டணம் வசூல் செய்யப்படாத நிலைமை இருக்கிறது. மதுரையைச் சுற்றிப் பல மில்கள் இருக்கின்றன. குறிப்பாக, மீனாட்சி மில்ஸ், சமயநல்லூர் மில்களுக்கு அதிபராக இருக்கக்கூடியவர் யார் என்பது பெயரைச் சொல்லாமலே எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும். அவர்கள் மின்சாரக் கட்டண பாக்கியாக ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வைத்திருப்பதாகத் தெரிகிறது. ஏழைகளாக இருப்பவர்கள் பத்து ரூபாய் பணம் பாக்கி என்றால் உடனே ஃப்யூஸைப் பிடுங்கிவிடுகிறார்கள். ஆனால் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருப்பவர் மீது சரியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதை வசூலிக்க நடவடிக்கை எடுக்க முற்பட்டது கூட மேல் உத்தரவின் காரணமாக நிறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. அவ்வாறு செய்யாமல் இப்படிப்பட்ட பெரும் பாக்கிகளை உடனடியாக வசூல் செய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தொழிலாளர்களுடைய போனஸ் பிரச்சினை போன்றவற்றை ஓரளவு தீர்க்க முடியும். ஆகவே இவற்றை வசூலிப்பதில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில் மேலதிகாரிகள் கவனம் செலுத்துவதோடு கூட அரசும் கண்காணித்து பாரபட்சமற்ற முறையில் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழகத்தில் இருக்கின்ற எல்லாக் கிராமங்களுக்கும் 1971-ம் ஆண்டு இறுதிக்குள் மின்சாரம் வழங்கும் என்ற நல்ல செய்தியை, பூரிப்பான செய்தியை தமிழகத்து மக்களுக்கும், இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்கும் ஒரு முன்னோடியாக அறிவித்திருப்பதை நான் உளமார, மனமாரப் பாராட்டுகிறேன். இப்பேர்ப்பட்ட நல்ல வசதியைப் பெருங்குடியில் இருக்கும் வசதி படைத்தவர்கள் மட்டும் அனுபவிக்கின்ற நிலை மாறி, சாதாரண குக்கிராமத்தில் இருக்கும் குடிசைவாழ் மக்களும் அனுபவிக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருப்பது உண்மையிலேயே சிறந்த சாதனையாகும். அந்தச் சாதனையைப் பாராட்டுவது தமிழனுடைய கடமையாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்தைப் பொருத்தவரை இன்றைய தினம் தமிழ்நாட்டு மின்சார வாரியம் பெரியதொரு சிறப்பான காரியத்தைச் செய்திருக்கிறது. 1967-68-ம் ஆண்டில் ஏறக்குறைய 51,620 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியது. அதே போல் அதிலே கூட முன்னேற்றத்தைச் செய்திருக்கிறோம் என்று சொல்லும் அளவில் 1968-69-ம் ஆண்டில் ஏறக்குறைய 57,756 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதை எண்ணிப் பார்க்கும்போது விவசாயத்தைப் பேணி வளர்ப்பதிலே தமிழக சர்க்கார் எவ்வளவு அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறதோ அதே போல் தமிழ்நாடு மின்சார வாரியமும் விவசாயிகளுக்கான காரியங்களை உரிய காலத்தில், உரிய நேரத்தில் செய்வதன் மூலம் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. 1968-69-ல் ஏறக்குறைய 3,452 கிராமங்களுக்கு மின் வசதி வழங்கியது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இன்றைய தினம் ஏறக்குறைய 31,727 கிராமங்கள் மின்வசதியைப் பெற்றிருக்கின்றன.

இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, இன்றைக்கு விவசாயிகளுக்கு எப்படி நில வளம் அவசியமோ எப்படி நீர் வளம் அவசியமோ அதே போல் மின்சார வளமும் அவசியம் என்பதை உணர முடிகிறது. நில வளம், நீர்வளத்தோடு இணைந்தது மின்சார வளம். இயற்கையிலே கிடைக்காத ஒன்றை செயற்கையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது விவசாயப் பெருங்குடி மக்கள் மின்சார வாரியத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த வகையிலே மின்சார வாரியம் பணி செய்து கொண்டிருக்கும்போது அதைப்பற்றி சில கருத்துக்களை நான் கூறுவது சாலச் சிறந்ததாகும்.

மாண்புமிகு உறுப்பினர் துரைசாமி அவர்கள் கூறியதைப் போல் மாவட்ட வாரியாக மின்சார வாரியங்களில் நிச்சயமாகக் குழுக்களை அமைக்கவேண்டும். அவ்வாறு குழுக்கள் அமைக்கப்

படும்போது அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், விவசா யத்தில் அதிக அக்கறை உள்ளவர்கள் அதிலே இடம் பெற வழி செய்ய வேண்டும். இந்த ஆண்டு மின்விசையேற்றத்திற்கு மின் இணைப்புக் கோரி எத்தனை மனுக்கள் வந்தன. எத்தனை பைசல் செய்யப்பட்டன, பைசல் செய்யப்படாத மனுக்கள் எந்தக் கார ணத்திற்காகப் பைசல் செய்யப்படவில்லை என்பதையெல்லாம் ஆராய அது வசதியாக இருக்கும். ஆகவே, அத்தகைய குழுவை நிச்சயமாக ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகிறேன். மாவட்ட வாரியாக இத்தகைய குழுக்கள் அமைக்கப்படுவதுபோல் கொள்முதலைப் பொறுத்தவரை மாநில ரீதியில் ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும். ஆங்காங்கே சிலபல தவறுகள் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்டு விடுகின்றன. குறித்த நேரத்தில் சாமான்கள் வாங்கப்படாமையினாலும் தவறு கள் நேருகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு குழு இருந்தால் இந்தத் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

டிரான்ஸ்பார்மர்களைப் பொறுத்தவரை இன்றைக்குத் தமிழ் நாடு மின்சார வாரியம் செலுத்தியிருக்கின்ற கவனத்திற்கும் அதிக மான கவனம் செலுத்தியாக வேண்டும். சில பகுதிகளில் 5 எச்.பி. டிரான்ஸ்பார்மர்கள் உள்ள இடத்தில் அதற்கு மேற்பட்ட மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதை ஏன் 100 எச்.பி. யாக மாற்றக்கூடாது என்று கேட்கும்போது அதற்கு வேண்டிய சாமான்கள் கிடைக்க வில்லை என்ற காரணம் கூறப்படுகிறது. தற்போது தமிழகம் வறட் சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் வகையில் 50 குதிரை ஓட்டமுள்ள டிரான்ஸ்பார்மர்களை எல்லாம் 100 குதிரை ஓட்டமுள்ள டிரான்ஸ் பார்மர்களாக மாற்றுவதில் சற்று வேகமாக இருப்போமானால் இருக்கின்ற துயரைத் தடுப்பதில் தமிழ்நாடு மின்சார வாரியம் விரைந்து செயல்பட்டது என்ற பெருமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மினிமம் சார்ஜ் கட்டவேண்டுமென்பதைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். மின்சார பம்ப் செட் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் தங்களுடைய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்ற நிலையிலும் மினிமம் சார்ஜ் கட்டவேண்டிய நிலை இருக்கிறது.

அதற்குமேல் அடி வெட்டு வெட்ட வேண்டிய கிணறுகள் இருக் கின்றன. அவற்றை வெட்ட முடியாத நிலை இருப்பதால், இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற ஆண்டுகள் முழுவதற்கும் எப்படி ரெவின்யூ ரெமிஷன் செய்து கொடுத்திருக்கிறார்களோ அதேபோல் மின்சார வாரியமும் இந்த மினிமம் சார்ஜுக்கு ரெமிஷன் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்காகச் சொல்லவேண்டுமானால், 30 குதிரை ஓட்டம் அளவிற்கு ஒரு ஒப்பந்தத்தை எடுத்துக்கொண்டு விவசாயிகள் சென்று மின் இணைப்பு கேட்கும்போது மூன்றில் ஒரு பங்கு கொடுத்தால்தான் மற்றவர்களுக்கு மின்சாரம் வழங்க முடியும் என்ற உத்தரவைப் பிறப்பிக்கிறார்கள். ஒரு பத்து விவசாயிகள் மூன்று குதிரை ஓட்டமுள்ள மின் இணைப்பிற்காக அவர்கள் ஒப பந்தம் செய்து அதில் மூன்று பேர்களோ அல்லது நான்கு பேர் களோ கூட்டாயமாக வாங்க வேண்டுமென்ற நிலை ஏற்படும்போது ஒட்டுமொத்தமாக நான்கு பேர்களும் வாங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இரண்டு பேர்கள் கடன் வாங்கி வைத்தாலும் மற்ற இரண்டு பேர்களும் வாங்கினால்தான் மூன்றில் ஒரு பங்கு கலக்ஷன் சரியாக இருக்கும் என்று சொல்லும்போது அவர்கள் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதுவும் நீக்கப்படுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவ சாயிகளுக்கு நாம் செய்கிற காரியங்களில் மேலும் சிலபல நல்ல காரியங்கள் செய்கிறோம் என்ற எண்ணத்தில் செயல்பட முடியும்.

இன்னும் சில பல குறைபாடுகள், சில இடர்பாடுகள் இருந்து வருகின்றன. மேல் மட்ட அதிகாரிகள் சிறப்போடும், பொறுப் போடும், கடமை உணர்வோடும் பணியாற்றிக்கொண்டு இருக்கி றார்கள். அப்படிச் சொல்வதினால் கீழே இருப்பவர்கள் நன்கு பணியாற்றவில்லை என்று சொல்லவில்லை. அவர்களுக்கு உள்ள சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன. திரு. துரைசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு அசிஸ்டெண்ட் என்ஜினியர் அல்லது ஒரு டிவிஷனல் என்ஜினியர் குறிப்பிட்ட அளவிற்குத்தான் சாங்க்ஷன் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. அந்நிலையில் ஒரு விவசாயி சட்டமன்ற உறுப்பினரை நாடி, அவர் அதிகாரிகளை நாடும்போது, நாங்கள் நேரடியாக சென்னைக்கு வரவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. எங்கள் ஊரிலேயே அந்தக் காரியங்களைச் செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே மின்சார வாரியத்தை நான் கேட்டுக்கொள்வது, அதிகாரத்தைப் பரவலாக ஆக்கச் செய்ய வேண்டும். அப்படி அதிகாரங்களை பரவலாக்கும்போது அதிகாரங்கள் வட்டத் தலைமை அலுவலகத்திலோ அல்லது மாவட்டத் தலைமை அலுவலகத்திலோ இருந்தால் இன்னும் அதிகமாக முன்னேற்றத்தை நாம் காண முடியும்.

அடுத்து, மீட்டர் கிடைப்பதுபற்றி உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு மீட்டர் இணைப்பிற்கு எக்ரிமென்ட் செய்து டெப்பாஸிட்டையும் கட்டிவிட்ட பிறகு, அங்குள்ள வீட்டுக்காரர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதி அவர்கள் ஏ.இ. பெர்மிஷன் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஏ.இ. பெர்மிஷன் வாங்கிக்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் திரும்பி வரவேண்டும். அதைப் பெற்றுக்கொண்ட பிறகு ஸ்டோர் ஆர்டர் ப்ளேஸ் செய்யவேண்டும். ஸ்டோருக்குள்ள சாமான்கள் வந்த பிறகுதான் இணைப்பு தரப்படுகிறது. அதற்கிடையில் ஏற

படுகிற காலதாமதம் பத்து நாட்கள். மேட்டூருக்குச் சென்று கேட்டால் அங்கு மீட்டர் இல்லை. வேண்டிய பிற சாதனங்கள் இல்லை. ஆகவே இப்பேர்ப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் பெற்றிருக்கிற வெற்றியில் இன்னும் பெரியதொரு வெற்றியை பெற்றிருக்கிறோம் என்ற முத்திரையைப் பதித்துக் கொள்ள முடியும்.

அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், மீட்டர்கள் உடனடியாகக் கிடைக்கச் செய்யவேண்டும் என்று சொல்லும்போது இன்னொரு யோசனையையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் பெரிய குறைபாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. கடந்த ஆண்டு பேசும் போதே நான் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அன்றைய தினம் இத்துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பல்புகள் எது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தாலும் அதில் கூட சில நேரங்களில் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று. பல வகைகளில் வெற்றி நடைபோடும் நம் மின்சார வாரியம் மீட்டர்கள் உற்பத்தி செய்வதிலும், பல்புகள் உற்பத்தி செய்வதிலும், மற்ற பல சாதனங்களை உற்பத்தி செய்வதிலும் அவர்களுக்குள்ள அதிகார அளவிற்கு ஈடுபட்டு நல்லதொரு வெற்றியைக் காணவேண்டும். மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும் வகையில் செயல்படவேண்டும் என்ற என் யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் என் உரையை முடிப்பதற்கு முன்னால் கூறிக் கொள்ள விரும்புவது, தெரிந்தோ தெரியாமலோ ஒரு பெருங் குறை இருந்து வருகிறது.

(திரு. நா. வீராசாமி அவர்கள் தலைமை)

வருகிற தலைமை அதிகாரிகள் மூன்று மாதங்கள் இருக்கிறார்கள், நான்கு மாதங்கள் இருக்கிறார்கள், ஆறு மாதங்கள் இருக்கிறார்கள், பின்னால் வேறு இடத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். இருக்கிற கால அளவில் நல்லமுறையில் செயலாற்றி வருகிறார்கள். நல்லமுறையில் பணியாற்றி வருகிறார்கள். இருக்கிற நிலைமைகளைத் தெரிந்து கொள்ளும் நிலை வரும்போது அவர்கள் வேறு ஒரு துறைக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். புதிதாக வரும் அதிகாரி அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து கொள்ள ஆறு மாதங்கள் ஆகின்றன. அதற்கு சில டெக்னிக்கல் க்வாலிபிக்கேஷன்ஸ் இருக்கிறது என்று கருதுகிறேன். ஆக, புதிதாக வரும் அதிகாரி ஆரம்பப் பாடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இதிலும் நல்லதொரு முடிவை மின்சார வாரியம் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டிரான்ஸ்ஃபார்மர் போர்ட் இல்லை, அதனால் கனெக்ஷன் கொடுக்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. என் டிரான்ஸ்ஃபார்மர் வைக்கவில்லை என்றால் போதுமான அளவு கை

வசம் இல்லை என்ற நிலை இருக்கிறது. இந்தக் குறை நீக்கப்பட வேண்டும். இறைத்தாலும் இறைக்காவிட்டாலும் மினிமம் சார்ஜ் வசூலிக்கப்படும் என்ற நிலைமையை மாற்றி வறட்சி காரணமாக இந்த ஆண்டு அது தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அதேபோல் மீட்டர்கள், மற்ற சாமான்கள் உடனுக்குடன் வந்து சேருவதற்கு நிலைமை சீர் செய்யப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றங்கள் பொறுத்தவரையில், சாதாரண பல்புகளுக்குப் பதிலாக மின்சார வாரியம் டியூப் லைட்டுகள் போடுவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். எல்லா சாதாரண பல்புகளையும் மாற்றிவிட்டு பொருத்தி விடுகிறார்கள். போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யாதது வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள், இந்த நாட்டிற்கு நீங்கள் செய்திருக்கும் நல்ல பல காரியங்கள், விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்திருக்கும் நல்ல பல காரியங்கள் இத்துறைக்கு நல்லதொரு சிறப்பை தேடித் தந்திருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன். அந்தச் சிறப்பு மேலும் வளர்கிற வகையில் நில வளம், நீர் வளம் பெருக வேண்டும் என்பதுபோல் மின்சார வளமும் பெருகவேண்டும் எனக் கூறிக்கொண்டு, நமது மின்சார வாரியத்திற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்து எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இந்த தமிழ் நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சி. இன்று தமிழ்நாட்டு மின்சார வாரியம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. அதன் ஊழியர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாடு முன்னேற வேண்டுமென்றால் எல்லோருக்கும் மின்சாரம் நல்ல முறையில் கிடைக்கச் செய்யவேண்டும். மின்சார வாரியம் நல்லமுறையில் பணியாற்றினால்தான் இந்த நாட்டில் தொழில் துறை, விவசாயத் துறை, மற்ற எந்தத் துறையும் நல்ல முறையில் முன்னேற முடியும். நமது மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், 1971-ம் ஆண்டிற்குள் கிராமங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்ற திட்டத்தை முதல் அமைச்சர் அவர்கள் கூறியதாகக் கூறினார்கள். 1971-ம் ஆண்டிற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டுமென்றால் அதற்கான திட்டங்களை நல்ல முறையில் தீட்டினால்தான் முடியும். சொல் அளவில் சொன்னால் முடியாது. 1971-ம் ஆண்டிற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டுமென்றால் மின்சார வாரியம் தன் பணிகளை இன்னும் துரிதமாகச் செய்ய வேண்டும். திரு. மாறன் அவர்கள் கூறியதுபோல் இன்னும் அதிகமாக என்ஜினியர்களை ஏற்படுத்தி வேலை செய்தால்தான் அப் பணியைச் சீக்கிரமாகச் செய்ய முடியும்.

இன்று எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறதா என்று பார்த்தால் அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்க வேண்டுமென்றால் அங்கு பதினைந்து பம்ப் செட்களாவது குறைந்தது இருக்க வேண்டுமென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். சில கிராமங்களில் பதினைந்து பம்ப் செட்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மற்றக் கிராமங்களில் அந்த வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்டதொரு வாய்ப்பு கிடைக்கச் செய்ய வேண்டுமென்றால் விவசாயிகளுக்கு தேவையான பணம் இருக்க வேண்டும். இன்று விவசாயிகளுக்கு பம்ப் செட்ஸ் வாங்குவதற்குக் கடன் பெறவேண்டுமென்றால், நில அடமான பாங்குகள் மூலம்தான் பெறவேண்டியிருக்கிறது. எந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க உத்தேசித்திருக்கிறார்களோ அந்தக் கிராமங்களில் உள்ளவர்கள் அந்தக் கடன்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால் அது அவர்களுக்குக் கிடைக்கப் பல கஷ்டங்கள் உள்ளன. இவர்கள் பம்ப் செட்டுகளைக் கொடுத்த இடங்களுக்கு மின்சாரம் கிடைப்பதில்லை. மின்சாரம் கொடுக்கப்பட்ட இடங்களுக்கு பம்ப் செட்டுகள் கிடைப்பதில்லை. இதைச் சரியான முறையில் செய்ய வேண்டுமென்றால் மின்சார வாரியத்தின் ஊழியர்களுக்கும், நில அடமான பாங்கு ஊழியர்களுக்கும் தொடர்பிருக்க வேண்டும். ஒன்று, இவர்களைக் கலந்துகொண்டு அவர்கள் கடன் கொடுக்க வேண்டும். அல்லது கடன் கொடுக்க வேண்டிய விஷயங்களை மின்சார வாரியத்திடம் ஒப்படைத்தால் நல்லது. அப்பொழுதான் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியும். என் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் 32 பம்பு செட்டுகள் கட்டுகைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு கிராமத்திற்குக்கூட மின்சாரம் [illegible] என்பதற்கான வாய்ப்பில்லை என்று மின்சார வாரியத்தினர் கூறுகிறார்கள். இரண்டிற்கும் தொடர்பில்லாத காரணத்தினால் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்த இரண்டிற்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தினால்தான் மின்சாரம் சரியான முறையில் கிடைக்கும்.

திருச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சில பகுதிகள் தென் மதராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பொரேஷனிடமும், சில பகுதிகள் மின்சார வாரியத்தினிடமும் இருக்கின்றன. இவர்களுடைய எல்லைகளே சரியாகத் தெரியவில்லை. சில பகுதிகள் எங்களிடம் இல்லை என்று மின்சார வாரியம் சொல்லுகிறது. தென் மதராஸ் கார்ப்பொரேஷனைக் கேட்டால் எங்களிடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி இரண்டுக்கும் இல்லாத பகுதி என்று சொல்லப்படுகிறது. எனவே, எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்.

நாடு முன்னேறிவரும் சமயத்திலே, பாங்குகளைத் தேசியமயமாக்கினதைப் பார்க்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, இந்தச் சிறிய மின்சாரக் கம்பெனியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயக்கம் காட்டுவதால் மின்சாரத்துறை முன்னேற முடியாமல் இருக்கிறது. ஆகவே, தென் மதராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பொ

ரேஷனை அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டும். அப்படிச் செய்தால் விரைவாக முன்னேற்றம் அடைய வாய்ப்பிருக்கிறது. அவர்களைக் கேட்டால், அரசாங்கம்தான் எடுத்துக்கொள்ளப் போகிறதே நாங்கள் எதற்காகப் பணம் செலவழிக்க வேண்டும், புதிதாக மின்சாரம் கொடுக்கப் போவதில்லை என்று சொல்கிறார்கள். அந்த S. M. E. S. திட்டத்தை எடுத்துப் பார்த்தேன். எல்லாக் கிராமங்களுக்கும் 1972-ல் என்றுதான் போட்டிருக்கிறார்களே தவிர இந்த ஆண்டு மின்சாரம் கொடுக்கத் திட்டம் எடுத்துக் கொண்டதாக இல்லை. அப்படியிருக்கும்பொழுது 1971-ம் ஆண்டுக்குள் மின்சாரத்தை எல்லாக் கிராமங்களுக்கும் எப்படிக் கொடுக்க முடியும்? ஆகவே, உண்மையிலேயே அப்படி மின்சாரம் வேண்டுமென்றால் எல்லா மின்சார வாரியங்களையும் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவந்தால்தான் அதை நிறைவேற்ற முடியும். ஆகவே, மின்சார அமைச்சரவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையிலே எத்தனை ஊர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் அதையும் பார்த்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வை. சுவாமிநாதன் : சில கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் எல்லாக் கிராமங்களுக்கும், 1971-க்குள் கொடுத்து விடுகிறோம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். அதற்கு முதல் வழி தென் மதராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பொரேஷனை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களை ஏதாவது மின்சாரம் வேண்டுமென்று கேட்டால் எங்களுக்குக் கடன் கொடுங்கள், எங்களுக்கு அரசாங்கம் கடன் ஏதாவது கொடுத்தால்தான் முடியும் என்று சொல்கிறார்கள். அப்படியில்லையென்றால், ஒவ்வொரு கிராமத்திற்கும் பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கிராமப்புற மக்களைக் கேட்கிறார்கள். இதனால் வசதி படைத்தவர்கள் பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்து மின்சாரத்தை வாங்கி விடுகிறார்கள். ஆனால், ஏழைகள், ஏழை கிராம மக்கள் மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, ஒன்று கடன் கொடுக்க வேண்டும், அல்லது நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த மின்சார வாரியத்தின் பகுதிகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், அங்கே பல இடங்களில் மின்சாரம் கிடைக்கவில்லை. என்னுடைய பகுதியில் பாவனூர், அம்மாபேட்டை போன்ற கிராமங்களில் பல வருஷங்களாகப் பணம் கூட கட்டியிருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அதற்குப்பிறகு வந்த கிராமங்களுக்குக்கூட கொடுக்கப்படுகிறது. அதற்குக் கேட்டால் எங்களிடம் சாமான்கள் இல்லை, உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மின்சார வாரியத்திடம் ஒரு வேலைக்கு ஒர்க் ஆர்டர் கொடுத்தால்,

[திரு. வை. சுவாமிநாதன்] [1969 ஆகஸ்ட் 16

தேவையான உபகரணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் துரிதமாகச் செய்ய முடியும். எனவே, அந்த அளவுக்கு உபகரணங்களையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பல பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள குறைகளை நீக்க வேண்டும். இப்பொழுது கொடுக்கும் பிரயாணப் படி மிகக் குறைவாக இருக்கிறது. நாட்டிலே முன்னேற்றம் ஏற்பட்டு, விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் பிரயாணப் படி மிகக் குறைவாக இருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டும். தினக் கூலியும் மிகக் குறைவாக இருக்கிறது. பஞ்சப் படிகளையும் அதிகரிக்க வேண்டும்.

மிக அதிகமாகச் சொல்வது என்னவென்றால், போனஸ் தகராறு அடிக்கடி வருகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு ஏதாவது செய்து போனஸ் கொடுப்பதற்கான திட்டங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அதில் வேலை செய்யும் கணக்கர் போன்ற முக்கியமானவர்கள் தங்களுடைய சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். எழுத்தர் போன்றவர்கள் கணக்கர் பதவிக்கு வருகிறார்கள். அப்படி வரும்பொழுது அவர்கள் எழுத்தராக இருந்த காலத்தையும், வேலையையும் சேர்த்துக்கொள்ள வில்லை என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரிச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும். சில அலுவலகங்களில் மேசை, நாற்காலி போன்ற உபகரணங்கள் குறைவாக இருக்கின்றன. அதையும் பார்த்துப் போதுமான அளவு அவை கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து அவர்களை வேலையில் நிரந்தரமாகப் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஊதிய போர்டு வரவில்லை. அப்படி ஊதிய போர்டு வருவதற்கு முன்னாலே, இடையிலே நிவாரணம் அளிக்கும் வகையிலே அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அணு மின்சாரத் திட்டத்தையும் நமது மாநிலத்திலே அதிகரிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், தொழில் துறையிலே அதிகமாக முன்னேற வேண்டுமானால் மின்சாரம் அதிகமாகக் கிடைத்தால்தான் அதற்கு வாய்ப்பிருக்கும். அவ்வாறு செய்யவேண்டும். இப்பொழுது விழுப்புரம்வரையிலே மின்சார ரெயில் விடப்படுகிறது. திருச்சி தொழில்துறையிலே முன்னேறி வருவதால் மின்சார ரெயிலை திருச்சிவரையிலே விடுவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தொழில்துறையிலே முன்னேறுவதற்குத் தொழில் நடத்துபவர்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை கொடுப்பதைப்போல, விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கும் பம்பு செட்டுகளுக்கு இனமாக மின்சாரம் வழங்கினால் விவசாயம் துறை முன்னேற வாய்ப்பிருக்கிறது. இதையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

1969 ஆகஸ்ட் 16] [திரு. வை. சுவாமிநாதன்]

முக்கியமாக 1971-க்குள் கொடுப்பதற்கு முன்னாலே, இந்த ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழா வருவதால், காந்திஜியின் கனவாகிய, கிராமங்கள்தோறும் மின்சாரம் இருக்க வேண்டும், நகரத்தில் உள்ள வசதிகள் எல்லாம் கிராமங்களுக்கும் பெருக வேண்டும் என்பதை நிறைவேற்ற எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியைக் கொடுக்க வேண்டும். அப்படி எல்லா மாவட்டத்திலும் உள்ள கிராமங்களுக்கும் கொடுக்க முடியாவிட்டாலும்கூட, காந்திஜியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஏதாவது ஒரு பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டு, அதிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்போம் என்ற திட்டத்தைக் கொடுத்தால், காந்திஜி நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக ஒரு வட்டாரமாவது மின்சாரம் பெற்று நன் பயனை அடையும். இதை அமைச்சரவர்கள் ஆலோசனைசெய்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. மு. முத்தையா : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கைகுறித்து எனக்குப் பேச வாய்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று மின்சார வாரியத்தை எடுத்துக்கொண்டால், பட்டணத்தில் இருப்பது போல் பட்டி தொட்டிகளில் எல்லாம் எங்கும்வான வில்லின் வர்ண ஜாலம்போல வண்ண வண்ண விளக்குகள் மின்னுவதைப் பார்த்து நாம் இந்த மின்சார வாரியத்தைப் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். அதைப்போல இந்த அரசு பதவியேற்ற காலம் முதல் இந்நாள்வரை மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்ற பெருமைக்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாவோம்.

மின்சாரம் என்பதுதான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. ஏனென்றால், இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்குவது விவசாயம்தான். அந்த விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது மின்சாரம். என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள என்னுடைய வட்டாரம் மானூரைச் சேர்ந்தது. தண்ணீர் வசதி ஏதும் இல்லாத நிலையில் பெரும்பாலும் கிணற்றிலிருந்துதான் பம்பு செட்டுகள்மூலமாக இறைத்துப் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட கிராமத்திற்கு மிக மிக அவசியமாகத் தேவைப்படுவது மின்சாரம். அத்தகைய மின்சாரத்திற்குச் சில கிராமங்களிலிருந்து மின்சார இணைப்புக் கோரி விவசாயிகள் மனுச் செய்திருக்கிறார்கள். விவசாயிகள் சாதா

[திரு. வை. சுவாமிநாதன்] [1969 ஆகஸ்ட் 16

தேவையான உபகரணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் துரிதமாகச் செய்ய முடியும். எனவே, அந்த அளவுக்கு உபகரணங்களையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பல பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள குறைகளை நீக்க வேண்டும். இப்பொழுது கொடுக்கும் பிரயாணப் படி மிகக் குறைவாக இருக்கிறது. நாட்டிலே முன்னேற்றம் ஏற்பட்டு, விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் பிரயாணப் படி மிகக் குறைவாக இருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டும். தினக் கூலியும் மிகக் குறைவாக இருக்கிறது. பஞ்சப் படிகளையும் அதிகரிக்க வேண்டும்.

மிக அதிகமாகச் சொல்வது என்னவென்றால், போனஸ் தகராறு அடிக்கடி வருகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு ஏதாவது செய்து போனஸ் கொடுப்பதற்கான திட்டங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அதில் வேலை செய்யும் கணக்கர் போன்ற முக்கியமானவர்கள் தங்களுடைய சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். எழுத்தர் போன்றவர்கள் கணக்கர் பதவிக்கு வருகிறார்கள். அப்படி வரும்பொழுது அவர்கள் எழுத்தராக இருந்த காலத்தையும், வேலையையும் சேர்த்துக்கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரிச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும். சில அலுவலகங்களில் மேசை, நாற்காலி போன்ற உபகரணங்கள் குறைவாக இருக்கின்றன. அதையும் பார்த்துப் போதுமான அளவு அவை கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து அவர்களை வேலையில் திருப்தியாகப் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஊதிய போர்டு வரவில்லை. அப்படி ஊதிய போர்டு வருவதற்கு முன்னாலே, இடையிலே நிவாரணம் அளிக்கும் வகையிலே அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அனல் மின்சாரத் திட்டத்தையும் நமது மாநிலத்திலே அதிகரிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், தொழில் துறையிலே அதிகமாக முன்னேற வேண்டுமானால் மின்சாரம் அதிகமாகக் கிடைத்தால்தான் அதற்கு வாய்ப்பிருக்கும். அவ்வாறு செய்யவேண்டும். இப்பொழுது விழுப்புரம்வரையிலே மின்சார ரெயில் விடப்படுகிறது. திருச்சி தொழில்துறையிலே முன்னேறி வருவதால் மின்சார ரெயிலை திருச்சிவரையிலே விடுவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தொழில்துறையிலே முன்னேறுவதற்குத் தொழில் நடத்துபவர்களுக்கு மின்சாரக் கட்டணச்

1969 ஆகஸ்ட் 16] [திரு. வை. சுவாமிநாதன்]

சலுகை கொடுப்பதைப்போல, விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கும் பம்பு செட்டுகளுக்கு இனாமாக மின்சாரம் வழங்கினால் விவசாயம் துறை முன்னேற வாய்ப்பிருக்கிறது. இதையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

முக்கியமாக 1971-க்குள் கொம்பபதற்கு முன்னாலே, இந்த ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழாவாகையால், காந்திஜியின் கனவாகிய, கிராமங்கள்தோறும் மின்சாரம் இருக்க வேண்டும், நகரத்தில் உள்ள வசதிகள் எல்லாம் கிராமங்களுக்கும் பெருக வேண்டும் என்பதை நிறைவேற்ற எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியைக் கொடுக்க வேண்டும். அப்படி எல்லா மாவட்டத்திலும் உள்ள கிராமங்களுக்கும் கொடுக்க முடியாவிட்டாலும்கூட, காந்திஜியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஏதாவது ஒரு பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டு, அதிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்போம் என்ற திட்டத்தைக் கொடுத்தால், காந்திஜி நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக ஒரு வட்டாரமாவது மின்சாரம் பெற்று நன் பயனை அடையும். இதை அமைச்சரவர்கள் ஆலோசனை செய்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. மு. முத்தையா : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கைகுறித்து எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று மின்சார வாரியத்தை எடுத்துக்கொண்டால், பட்டணத்தில் இருப்பது போல் பட்டி தொட்டிகளில் எல்லாம் எங்கும்வான வில்லின் வர்ண ஜாலம்போல வண்ண வண்ண விளக்குகள் மின்னுவதைப் பார்த்து நாம் இந்த மின்சார வாரியத்தைப் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். அதைப்போல இந்த அரசு பதவியேற்ற காலம் முதல் இந்நாள்வரை மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்ற பெருமைக்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாவோம்.

மின்சாரம் என்பதுதான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. ஏனென்றால், இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்குவது விவசாயம்தான். அந்த விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது மின்சாரம். என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள என்னுடைய வட்டாரம் மானாவாரியைச் சேர்ந்தது. தண்ணீர் வசதி ஏதும் இல்லாத நிலையில் பெரும்பாலும் கிணற்றிலிருந்துதான் பம்பு செட்டுகள்மூலமாக இறைத்துப் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட கிராமத்திற்கு மிக மிக அவசியமாகத் தேவைப்படுவது மின்சாரம். அத்தகைய மின்சாரத்திற்குச் சில கிராமங்களிலிருந்து மின்சார இணைப்புக் கோரி விவசாயிகள் மனுச் செய்திருக்கிறார்கள். விவசாயிகள் சாதா

[திரு. மூ. முத்தையா] [1969 ஆகஸ்ட் 16

ரணமாக விவசாயத்தைத்தவிர வேறு எந்த ஆபிசையும் அறிந் திருக்க மாட்டார்கள். ஒரு ஆபிசில் சென்று கேட்டால் இது இங்கு இல்லை, இது கன்ஸ்ட்ரக்ஷன் செக்ஷன், ஓ.ஈ. ஆபீசுக்குப் போ என்கிறார்கள். அங்கு சென்று கேட்டால், இங்கு இல்லை டி.இ. ஆபீஸ் என்கிறார்கள். அங்கு சென்றால் எஸ்.இ. ஆபீசுக்குப் போகச் சொல்கிறார்கள். இதனால் விவசாயிகள் பல தொல்லை களுக்கு ஆளாகிறார்கள். ஒரு ஆபீக்கு மனுச் செய்தால் அந்த ஆபீசிலிருந்தே அடுத்த ஆபீசுக்கு அனுப்பவேண்டும். அதிகாரி களே அத்தகைய வழிமுறையைச் செய்யவேண்டும். அதிகாரி செய்யாத காரணத்தினால் பரிதாபகரமான முறையில் இந்த விவ சாயிகள் இருக்கிறார்கள். எனவே, அதிகாரிகள் இவர்களை அலைய விடாமல் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

அதோடு, அங்கங்கு இருக்கிற டிரான்ஸ்ஃபார்மர்களில் இத்தனை கிலோ மெகாவாட் என்று குறிப்பிட்டு வைத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே மின் இணைப்புக் கோரி மனுச் செய்தால் அவனிடம் இந்த டிரான்ஸ்ஃபார்மரில் இதற்கு மேல் கொள்ளாது என்று கூறி மின் இணைப்புக் கொடுப்பது இல்லை. மனுச் செய்துவிட்டு அவன் அதற்குரிய அதிகாரிகளைக் கேட்டால் அந்த அதிகாரிகள் இந்த டிரான்ஸ்ஃபார்மரில் இவ்வளவு பவர்தான இருக்கிறது, இது பூர்த்தியாகிவிட்டது, வேறு டிரான்ஸ்ஃபார்மர் மாற்றினால் தான் இதைச் செய்ய முடியுமேயொழிய மற்றபடிச் செய்ய முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். அதற்காக அதற்குரிய சிப் இன்ஜினியருக்கு உடனே அவர்கள் எழுதவேண்டும். எழுதித் தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அங்குள்ள சூப்பரின்டென்டென்டிங் இன்ஜினியர் சொல்லுகிறார். இந்த டிரான்ஸ்ஃபார்மர்களை மாற்றக்கூடிய பொறுப்பு அந்தந்த மாவட்டத்திலுள்ள சூப்பரின்டென்டென்டிங் இன்ஜினியருக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை மாற்றிச் செய்ய முடியும். மெட்ராஸ் போக வேண்டுமென்றால் அதை உடனடியாகச் செய்ய முடியாது. மெட்ராசிலே சிப் இன்ஜினியர்தான் செய்ய வேண்டுமென்றால் சந்திர மண்டலத்திலே போய் மனிதன் காலை வைத்திருக்கிற இந்த நேரத்திலே, எங்களாலே முடியாது, அங்கே போய்த்தான் செய்யவேண்டுமென்று சொல்வது எப்படி முறை என்று நீங்களே புரிந்து கொள்ளலாம். அந்தந்த மாவட்டத்திலே இருக்கிற அதிகாரிகளுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்க வேண் டும். எடுத்ததற்கெல்லாம் சென்னைக்குக் காவடி தூக்கக்கூடாது என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சாதாரணக் கிராமப்புறங்களிலே விசேஷ நாட்களில் அங்குள்ளவர்கள் ஒலிபெருக்கி அமைக்க அனுமதி வேண்டு மென்று அங்குள்ள சூப்பர்வைசருக்கு மனுக் கொடுக்கிறார்கள். அப்படி மனுக்கொடுத்தால் விளக்குக்குத்தான் அனுமதி என்று சொல்கிறார்கள். ஒலிபெருக்கிக்கு அனுமதி இல்லை. ஆகையால் அங்குள்ள ஹெல்ப்பர்கள் உடனே விளக்குகளுக்குத்தான் அனுமதி

1969 ஆகஸ்ட் 16] [திரு. மூ. முத்தையா]

இருக்கிறது, ஒலிபெருக்கிக்கு அனுமதி இல்லை என்று ஃப்யூசைப் பிடுங்கி விடுகிறார்கள். ஒலிபெருக்கிகளுக்காகத்தான் விளக்குகள் போடுகிறார்களேயொழிய விளக்குகளுக்காக ஒலிபெருக்கி போடுவ தில்லை. ஆகவே, ஹெல்ப்பர்கள் ஃப்யூசைப் பிடுங்காமலிருக்கும்படி யும், விளக்குகளுடன் ஒலிபெருக்கிக்கும் அனுமதி அளிக்கவேண்டு மென்றும் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, புதிதாக வேலைகள் நடக்கக்கூடிய இடங்களில் அந்தந்த இடங்களுக்குக் கம்பம் நடுவதற்குச் சிலரைப் புதிதாகத் தேர்ந்து எடுக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. இதற்கு முன்னால் கம்பம் நட்டு, குழி வெட்டிய தொழிலாளிகளுக்குத்தான் அவர்கள் நிரந்தரமாகும்வரை மறுபடியும் வாய்ப்புக் கொடுத்து அதற்குப் பிறகுதான் வேறு தொழிலாளிகளுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண் டும். அப்படித் தேர்ந்தெடுத்தால் அந்தத் தொழிலாளிகள் துன்பம் தவிர்க்கப்படும்.

மேலும், புதிதாக வரக்கூடிய இன்ஜினியர்களில் 16 சதவிகிதம் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாகத் தேறியவர்களையும் இந்த 16 சதவிகிதத்திலேயே சேர்த்துக்கொள் கிறார்கள். அப்படி இல்லாமல் முதலாவதாகத் தேறியவர்களை விட்டுவிட்டு, இரண்டாவதாகத் தேறியவர்களை மற்ற இன்ஜினியர் களைப்போல் ஜெனரலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் செக்கன்ட் கிளாஸிலே தேறியவர்களை 16 சதவிகிதம் என்று சேர்க்க வேண்டும். அப்படி ஒதுக்கப்படாமல் மற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்போது, இவர்கள் அடுத்த ஆண்டுத் தேர் வுக்குச் சொல்லும்போது பாதிக்கப்படுகிறார்கள்.

எனது தொகுதியில் இன்னும் அநேகக் கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்காமல் இருப்பதால் மக்கள் மிகவும் சங்கடப்படு கிறார்கள். பனிக்கர்குளம், நாகலாபுரம், ஓலைகுளம்போன்ற அநேக கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை. அங்கெல்லாம் உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். மேலும், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற இந்த மின் இணைப்பு மிகவும் தாமதமாகக் கிடைக்கிறது. அதே நேரத்தில் ஒரு வியாபாரி விளம்பரத்திற்காக மின் இணைப்புக் கோரி மனுக் கொடுத் தால் அது உடனடியாகக் கிடைத்து விடுகிறது. இந்த வேறுபாடு களை எல்லாம் அகற்ற வேண்டும்.

அடுத்து, ஒரு விவசாயி ஒரு மாதத்திற்குள் எலெக்டிரிக் பில் தொகையைக் கட்டத் தவறினால் உடனே ஃபியூசைப் பிடுங்கிவிடு கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. அவனுக்கு ஒரு முறை தவணை கொடுக்கவேண்டும், வாய்ப்புக் கொடுக்கவேண்டும் ஏனென்றால் எங்கள் பக்கம் எல்லாம் சாதாரணமாக மழை இல் லாத காரணத்தினால் விவசாயிகள் மிகவும் சங்கடமான சூழ் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பில் கட்டத் தவறினால்

ஃப்யூசைப் பிடுங்கிவிடுவதெல்லாம் துவுறான செயலாகும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அவர்களுக்கும் ஒரு தண்டனை கொடுக்க வேண்டும்.

அரிசனங்களுக்கென்று தனி [illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனது ஓட்டப்பிடாரம் தொகுதியிலே பருப்பூர என்னும் ஓர் ஊரில் குப்பனுபுரம் தெருவில் அரிசன வார்டு இருக்கிறது. அந்தத் தெருவுக்கு விளக்குப் போடவேண்டுமென்று எத்தனையோ தடவைகள் மனுச் செய்தும் விளக்குப் போடவில்லை. அதற்கு என்ன காரணம் என்று நான் கேட்க விரும்புகிறேன். மேலும், சில பஞ்சாயத்துக்களில் தலைவர் மற்றவராக இருந்தால் அந்த அரிசன வார்டுகளுக்கு விளக்குகள் கிடைப்பது இல்லை. அதே நேரத்தில் அந்த கிராமத்தில் வார்டுகளுக்கு எல்லாம் கம்பங்கள் நடுவதற்காக வரைபடம் வரைந்து அதை ஏ.இ. ஆபீசுக்கு அனுப்பினால் அந்த வரைபடத்தில் உள்ளபடிதான் அங்குக் கம்பங்களை வைத்து விளக்குகளைப் போடுகிறார்கள். அதே நேரத்தில் அந்த அரிசன வார்டுகள் ஒதுக்கப்படுகின்றன. இதை அரசாங்கத்துக்கு நானும் கோரிக்கை மூலமாகத் தெரிவித்திருக்கிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி குப்பனுபுரம் என்ற ஒரு அரிசன சேரியில் இந்தத் தகராறு நடந்து அரிசன வார்டுக்கே லைட் இல்லை. அதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, இந்த அவைமுன் இருக்கிற 1969–70-ம் ஆண்டு, 1968–69-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை, அதன் நிதி நிலை அறிக்கைகுறித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வேளாண்மைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் 4 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும், அலுமினியம் தொழிற்சாலைக்காக 1 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக அரசு மின்சார வாரியத்திலே ஒரு கொள்கை வைத்திருக்கிறது என்பதுதான் எனது கருத்து. உணவு உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு என்று தனியாக அவர்களுக்கு ஒரு முறையும் தொழிற்சாலைகளுக்கு என்று அவர்களுக்கு ஒரு கட்டணமும் வைத்திருக்கிறார்கள். எங்கே லாபம் சம்பாதிப்பதைக் குறிக்கோளாக மையமாக வைத்துத் தொழிற்சாலைகள் வைத்திருக்கிறார்களோ, அவர்கள் மின்சாரக் கட்டணம் அதிகப்படியாக செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதாகவும் அதே நேரத்திலே உணவு உற்பத்தி செய்கிற சாதாரண விவசாயிகள் கட்டவேண்டிய கட்டணத்தையும் யும் குறைத்துள்ளதால் அவர்கள் லாபத்தை மையமாக வைத்துக் கொள்ளவில்லையென்று அரசு கருதுகிறது என்பதே எனது கருத்து. அது சரியாக இருக்குமானால் இந்த மெட்ராஸ் அலுமினி

யம் தொழிற்சாலை சென்ற ஆண்டு 2½ கோடி ரூபாய் லாபம் தந்திருக்கிறது. அதேபோல் தாரங்கதாரா கெமிக்கல் பாக்டரிக்கும் குறைவான கட்டணத்திலேயே மின்சாரம் கொடுக்கப்படுகிறது. மேட்டுப்பாளையத்திலே ஜெம்ஸ் பாக்டரி ஒன்று வைத்திருக்கிறார்கள். அங்கும் மின்சாரம் குறைவான கட்டணத்திலே கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைந்த கட்டணம் செலுத்துகின்ற தொழிற்சாலைகள் சென்ற ஆண்டு முழுவதும், நல்ல லாபம், சாதாரண லாபம் அல்ல, லட்சக்கணக்கில் அல்ல, கோடிக்கணக்கில் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவது நம்முடைய கொள்கைக்கு முரணானது என்பது என்னுடைய கருத்து. நாம் விவசாயிகளிடமிருந்து, உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து வசூலிக்கிற கட்டணத்தைக் காட்டிலும் குறைவாக அவர்களிடம் வசூல் செய்வது நம்முடைய இன்றையச் சமூக அமைப்பு முறைக்கே பொருத்தமானதல்ல என்பது என்னுடைய கருத்து. அவர்களுக்கு வருகிற லாபத்தில் மின்சார வாரியத்திற்கு ஏன் ஒரு விகிதாசாரத்தைக் கொடுக்கக் கூடாது? மின்சாரம் மலிவாக இருக்கும் காரணத்தினால், உபயோகிக்கும் பொருளாக இருக்கும் காரணத்தினால் தொழிற்சாலைகளுக்கு வருகிற லாபம் ஏன் சர்க்காருக்கு வரக்கூடாது? தாரங்கதாரா தொழிற்சாலை, ஜெம்ஸ் பாக்டரி போன்ற தொழிற்சாலைகளுக்கு லாபம் வருமானால், அதில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் சர்க்கார் எடுத்துக் கொள்வது என்ற முறை இருந்தால், மின்சாரத்தை அவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் கொடுப்பது சிறப்பாக இருக்கும். அப்படி இல்லையென்றால், நமது கொள்கைக்கு மாறாக அவர்களிடமிருந்து குறைவாகக் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அவர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலிக்க வேண்டும். இல்லையென்றால், அதில் வருகிற லாபம் நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதை இந்த அவையின் முன்பு தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible] விவசாயத்திற்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. 40 அடி கிணறு தோண்டி, கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம் என்றால், அதற்கு எவ்வளவு மின்சாரம் உபயோகப்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு தண்ணீர் பாயும் பரப்பினுடைய விஸ்தீரணம் அதிகமாக இருக்கும். கிணறு ஆழமாக ஆழமாக மின்சாரம் அதிகமாகும். அதனால் விவசாயத்திற்குத் தண்ணீர் பாயும் பரப்பின் விஸ்தீரணம் குறையும். உதாரணமாக, 50 அடி ஆழத்தில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும்பொழுது, 10 ஏக்கர் பரப்பு விவசாயம் செய்யப்படுகிறது என்றால், 150 அடி ஆழத்தில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும்பொழுது, 3 ஏக்கர் தான் விவசாயம் செய்ய முடியும். ஆகவே, அப்படி அந்த 3 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்படுவதற்கு ஏற்படுகின்ற மின்சாரக் கட்டணம், குறைந்த ஆழமுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து 10 எக்கர் நிலம் விவசாயம் செய்வதற்கு ஏற்படுகின்ற

மின்சாரக் கட்டணத்தைவிட நான்கு மடங்கு அதிகமாகும். அதனால் அதை மையமாக வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளின் நிலைமை மிகவும் தாழ்வாக, மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அம்மாதிரி விவசாயம் செய்யும் விவசாயி களுக்கு ஏதாகிலும் சலுகை கொடுத்து, கிணற்றின் ஆழம் அதிகமாக, அதிகமாக அவர்கள் கொடுக்கும் மின்சாரக் கட்டணத்தில் ஏதாகிலும் குறைவு ஏற்படுத்தி, அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குச் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதோடுகூட, அவர்களிடமிருந்து அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் என்று வசூலிக்கிறார்கள். கிணற்றின் ஆழம் அதிகமாக, அதிகமாக, மின்சாரத்தின் அளவு அதிகமாக ஆகிறது. மூன்று மாதங்களுக்குக் கணக்கு எடுத்து அடிஷனல் செக்யூரிடி வசூலிக்கிறார்கள். ஆகவே, மின்சாரம் அதிகமாக உபயோகப்படுத்தி, விவசாயத்திற்கான நீர்ப்பாசன நிலப்பரப்புக் குறைவாக ஏற்படும்பொழுது, விவசாயிகள் நசுங்கி மிகவும் கேவலமான நிலைமைக்கு ஆளாகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் சலுகை காட்டுவது மிகவும் அவசியம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய கிணறுகள் வெட்டுவதற்குச் சர்க்கார் நிறையக் கடன் கொடுக்கிறார்கள். சர்க்காரிடமிருந்து கடன் வாங்கிக் கிணறு வெட்டுகிறபொழுது, ஓரளவுக்குக் கிணறு வெட்டிய பிறகு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு மின்சார இணைப்பு வேண்டியிருக்கிறது. அப்படி ரூ. 5,000, ரூ. 10,000 கடன் வாங்கிக் கிணறு வெட்டி வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் மின்சார இணைப்புக் கிடைக்காத காரணத்தினால், வட்டி நஷ்டம், உணவு உற்பத்தி நஷ்டம். அம்மாதிரியாகப் பல கிணறுகள் மின்சார இணைப்புக் கிடைக்காமல் பல இடங்களில் நிற்கின்றன என்பதை இந்த அவையின் முன்பு தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு, இந்தக் கொள்கைபற்றி இன்னொரு வேண்டுகோள். சாதாரணமாக வீடுகளில் விளக்குகளுக்கு எரிக்கிற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 33 காசு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், 'ஆல் பர்ப்பசு'-க்கு வீடுகளில் உபயோகப்படுத்துகிறவர்களிடமிருந்து குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஐம்பது யூனிட்டுகளுக்குக்கீழ் மின்சாரம் உபயோகப்படுத்துகிறவர்கள் சாதாரணமாகக் குடிசை வீடுகளில், அல்லது ஓட்டுவில்லை வீடுகளில் வசிப்பவர்களாக இருப்பார்கள். ஆல் பர்ப்பசுக்கு உபயோகப்படுத்துகிறவர்கள் பெரிய பங்களாக்களில் வசிப்பவர்களாகவும், வசதி படைத்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு 'பேயிங் கெபாசிடி' அதிகமாக இருக்கும். அப்படி 'பேயிங் கெபாசிடி' அதிகமாக இருப்பவர்களிடமிருந்து குறைந்த கட்டணமும், 50 யூனிட்டுகளுக்குக்கீழே உபயோகிக்கும் சாதாரண ஏழைமக்களிடமிருந்து அதிகக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

இது இப்பொழுது இருக்கக்கூடிய சமூக நீதிக்குப் புறம்பானது, இப்பொழுது இருக்கிற நிலைமைக்கு இப்பொழுது இருக்கிற தமிழக அரசு கொள்கைக்குப் பொறுத்தமானது அல்ல என்பது என்னுடைய கருத்து. குடிசை வாழ் குப்பனிடமிருந்து என்ன கட்டணம் வசூல் செய்கிறோமோ, அதே கட்டணத்தைத்தான் ஆல் பர்ப்பஸ் கன்ஸ்யூமர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும். அப்படிச் செய்வது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற கூட்டத்தொடரிலேயே மின்சார வாரியத்திற்குத் தேவையான போல்டுகள், டிரான்ஸ்பார்மர்கள் போன்ற பொருள்களை மின்சார வாரியமே தயாரித்துக்கொள்வது மிகவும் அவசியம் என்று குறிப்பிடப்பட்டது. சிமெண்டு போஸ்டுகள் தவிர வேறு ஒன்றும் மின்சார வாரியம் தயாரிப்பது இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கும் மின்சார வாரியம், அதற்கு வேண்டிய உபகரணங்களை, தானே தயாரிப்பதற்குப் பதிலாக, அவற்றை உற்பத்தி செய்யும் தனியார்களிடமிருந்து வாங்குவது எப்படி முறையாக இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தனியார் தொழிற்சாலைகளிலிருந்து இந்தப் பொருள்களை வாங்காமல் மின்சார வாரியமே இந்தப் பொருள்களைத் தயாரித்து இந்த வாரியத்தை நடத்தினால் அது மிகவும் சிறப்பாக அமையும். நாம் இன்னும் அம்மாதிரியான காரியங்களில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாக தொழிற்பேட்டைகளில் சர்க்கார் பல தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அரசுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் தொழிற்பேட்டைகளிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கிறோம். ஆகவே, மின்சார வாரியத்திற்குத் தேவையான போல்டுகள், டிரான்ஸ்மீட்டர்கள், மீட்டர்கள், வயர்கள் இவைகளையெல்லாம் மின்சார வாரியமே தயாரித்துக்கொள்வதில் என்ன கடினம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அம்மாதிரிச் செய்வதால் பல தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கமுடியும். வாரியத்திற்கு வருமானமும் வரும். தனியார் துறையில் தொழில்கள் வளர்வதற்குப் பதிலாக, சர்க்கார் துறையில் தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அதிக சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக இந்த வாரியத்தில் சில தொழிலாளர்கள் 5 வருஷங்கள், 8 வருஷங்களாக வேலை செய்துகொண்டுவந்தாலும், அவர்களை டெம்பரரித் தொழிலாளர்களாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தினக் கூலிகளாகவே, வாரக் கூலிகளாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரித் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கும் முறையில், இப்பொழுது இருக்கும் சர்க்கார் சிறிதளவு செயல்பட்டிருந்தாலும்கூட, இன்னும் சிறப்பாகச் செயல்பட்டு அவர்களுக்கு நிரந்தரமான வாழ்வு அளித்தால் சிறப்பாக

இருக்கும். மிகவும் நன்றாக இருக்கும், அம்மாதிரி இந்தச் சர்க்கார் செய்யும் என நம்புகிறேன். அம்மாதிரித் தமிழக சர்க்கார் செய்து முடிக்கும் என்று சொல்லி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. மு. ராமன் : தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத்தந்த தலைவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழக அரசு பொறுப்பேற்று, 1967-68-ம் ஆண்டில் 51,620 விசையேற்றங்களுக்கும், 1968-69-ம் ஆண்டில் 57,756 விசையேற்றங்களுக்கும், 1969-70-ம் ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு குறையாது மின் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதுகுறித்து மின்சார வாரியத்தின் தலைவர் அவர்களுக்கும், மின்சார வாரியத்தின் பிரதமப் பொறியாளருக்கும், மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற ஏனையப் பொறியாளர்களுக்கும் தமிழக அரசுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியம் கணக்கர் சங்கத்தின் பொதுக்கூட்டம் சென்ற மாதம் தென் ஆற்காடு மாவட்டத்தில் நடந்தது. கணக்கர்கள், சார்பாக அநேகக் குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகள்பற்றி மின்சார வாரியத்தின் தலைவர் அவர்களுக்கும், மின்சார வாரியத்தின் பிரதமப் பொறியாளருக்கும் விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைசெய்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கொடுத்து, அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தில் தற்காலிகமாக 3 மாதம், 4 மாதம் வேலைக்கு ஆட்களை நியமனம் செய்கிறார்கள். அந்த வேலை வாய்ப்புக் கொடுக்கிற தருணத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த தாழ்த்தப்பட்ட குடிமக்களுக்கு 16 சதவிகிதம் முறையாக நியமனம் கொடுக்கப்படவில்லை என்பதை இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் படித்தும் வேலை இல்லாமல் பல பேர்கள் இருக்கிறார்கள். மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகத்தின் மூலம் விண்ணப்பதாரர்களை வரவழைத்து, முறையாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவீதம் வேலை நியமனம் செய்துகொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று 20 கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று மின்சார வாரியத்தின் தலைவருக்கும், பிரதமப் பொறியாளருக்குப் குறிப்புகள் கொடுத்திருந்தேன். அவற்றின்பேரில் நடவடிக்கை

எடுத்து, கிட்டத்தட்ட 1¼ ஆண்டுக் காலமாகியும், ஏழு கிராமங்களுக்குமட்டுமே மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடிய 13 கிராமங்களுக்கும் எதுவும் செய்யப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது. கொண்டூர் கிராமத்திற்கும், அதன் உள் அடங்கிய நான்கு கிராமங்களுக்கும், இன்னும் பல கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறது. 1966-ல் விண்ணப்பித்த விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வழங்கப்படவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குத் தனிக் கவனம் செலுத்தி, மின்சார வாரியத்தின் தலைவரும், பிரதமப் பொறியாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாக்கம் கிராமத்தில் 20 விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருந்தேன். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதேபோல, வாக்கூர் கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருந்தேன். அதுவும் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதேபோல, பனைப்பாக்கம் கிராமத்தில் 20 விவசாயிகளுக்கு மோட்டார் பம்பு தேவை என்று ஆகஸ்ட் 14-ம் தேதி விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதற்கான மதிப்பீடு தயாரித்து இருக்கிறார்கள். மேற்பார்வைப் பொறியாளருக்கு ரூ. 50,000 வரை அதிகாரம் இருப்பதாகவும் வாரியத்தில் உத்தரவு வழங்கியிருக்கிறது. கோட்டப் பொறியாளர்களுக்குக் குறைந்த பட்சம் 20,000 ரூபாய் அளவில் எஸ்டிமேட்டுகளை சாங்ஷன் செய்ய அதிகாரம் வழங்கவேண்டும் என்று அமைச்சருக்கும் மின்சார வாரியத் தலைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மண்டகப்பட்டுக் கிராமத்திலும், அதன் உள்ளடங்கிய 4 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கவேண்டிய பிரச்னை இருக்கிறது. அங்கே 150 அடி அளவில் குழாய் அமைத்துக் கொடுக்கப் பஞ்சாயத்துத் தலைவர் தீர்மானம் போட்டு, மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மின்சார வாரியத் தலைவரும், பிரதமப் பொறியாளரும் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும், 3 எச்.பி. மோட்டார் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்கள்).

■ திரு. ஏ. அ. சுப்பராஜு : போவை மாற்றுத் தலைவர் அவர் 12-00 p.m.
களே, இந்த நிதி அறிக்கையின்மேல் ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டிலேயே, மின்சார உற்பத்தியும், கிராமங்களுக்கு அதிக அளவில் மின் இணைப்பும் கொடுத்துள்ள மாநிலம் நம்முடைய மாநிலம்தான் என்று பெயர் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல பெயரை எப்போதும் நிலையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எல்லோருடைய விருப்ப

மாகும். நமது மாநிலத்திற்கு வேண்டிய போதுமான அளவு மின்சாரத்தைப் பெற தீவிரத் திட்டங்களையும், ஏற்பாடுகளையும் செய்யவேண்டியது நம்முடைய அரசின் கடமையாகும். இப்போது எந்த நிலையில் இருக்கிறோம் என்று சொன்னால், மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை நாம் ஓரளவுக்கு வாங்கி உபயோகப்படுத்துகிற நிலையில்தான் இருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். இதையேதான் இந்த அறிக்கையிலும் சொல்லியிருக்கிறார்கள். படிப்படியாக இதைக் குறைத்து நமக்கு வேண்டியதை, நம்முடைய மாநிலமே அடுத்த திட்டத்தில் பூர்த்தி செய்துவிடும் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சொல் மெத்த மகிழ்ச்சியளிக்கிறது. மழையின்மை காரணமாக நாம் நீர் மின்சாரத்தைவிட அனல் மின்சாரம் போன்றவைகளில்தான் நம்முடைய ஊக்கத்தைக் காட்ட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அடுத்தபடியாக, இப்போது எங்கு பார்த்தாலும் லீக்கேஜ் இருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக லீக்கேஜ் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வளவு லீக்கேஜ் ஏற்படுகிறது என்பதை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் லீக்கேஜ் ஏற்படுவதற்குக் காரணம் கம்பி நீளமாக இருப்பதுதான். அதே நேரத்தில் லீக்கேஜைக் குறைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடப் போகிறோம் என்றும் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, முக்கியமாக விளக்குகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் எல்லாம் அதிக அளவிலே லீக்கேஜ் ஆகின்றது என்று சொன்னார்கள். நாம் இவற்றைக் கவனித்து கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும். இதைப்பற்றிச் சில அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த உபயோகிக்கின்ற டிரான்ஸ்பார்மர்ஸ் சென் கெபாசிடர்ஸ் போன்ற கருவிகள் எல்லாம் நம்மிடம் இல்லாத நிலைமை இருக்கிறது. இந்தக் கருவிகள் இல்லாத நிலைமையில் லீக்கேஜைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறோம். டிரான்ஸ்பார்மர்ஸ் சென் கெபாசிடர்ஸ் போன்ற கருவிகளை வெளிநாடுகளிலிருந்தாவது இறக்குமதி செய்தால் மிகவும் நலமாக இருக்கும். அது நம் நாட்டிலேயே குறுகிய கால அளவிலே தயாரிக்கப்பட்டாலும், நல்ல முறையில் இயங்கவில்லை. நம் நாட்டில் தயாரிக்கப்படுபவை அயல் நாடுகளிலிருந்து வருவதுபோல அவ்வளவு நல்ல முறையில் இயங்கவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். சென் கெபாசிடர்களை நல்ல நிபுணர்களைக் கொண்டாவது உற்பத்தி செய்ய வேண்டும். நாம் எவ்வளவு விரைவாக இதைச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மின்சாரம் லீக்கேஜ் ஆகாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த அளவில் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குகிறோம். அப்படி இருக்கும்போது விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் ஏன் மின்சாரம் வழங்கக் கூடாது? விவசாயிகளுக்கு மின்சாரக் கட்ட

ணத்தைக் கூட்டிக்கொண்டேபோனால் அது நல்லதல்ல. தொழிற்சாலைக்கு மின் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்றால், அடுத்த மாநிலத்திற்குச் செல்வேன் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால் விவசாயி எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும். தொழிற்சாலைகளிலே ப்ராஃபிட் அண்டு லாஸ் அக்கவுண்ட்ஸ் இருக்கிறது. அதைக்கொண்டு பார்த்தால் அதற்குப் போடப்பட்டுள்ள கட்டணம் தகுதியா, இல்லையா என்பது தெரியும். வருவாய்க்குத் தக்கபடி தொழிற்சாலைகளுக்கும், சாதாரண மக்களின் வருமானத்திற்குத் தகுந்தபடியும் மின்சாரம் சப்ளை செய்தால் மிகவும் நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல விவசாய மக்களிடம் இருந்து லோன் வாங்குவதையும் மின்சார வாரியம் நிறுத்திவிடுவது நல்லது. இப்போது நல்ல யோகம். நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாங்குகள் எல்லாம் இனப் பெருக்கம் முதலாளிகளுக்குப் பணம் கொடுப்பதை மாற்றி ஏழை எளியவர்களுக்கும் கொடுக்கிற நிலை வந்திருக்கிறது. வாய்க்கால் நம் பக்கம் திருப்பப்பட்டுப் பாய்கிறது. ஆகவே இது ஒரு நல்ல வாய்ப்பு, மின்சார வாரியம் தனக்குத் தேவையான பணத்தை அந்த பாங்குகளின்மூலம் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களிடம் இருந்து கடன வாங்குவதை நிறுத்திவிட வேண்டும். அதுவும் விவசாய மக்களிடம் இருந்து இனி வாங்கவே கூடாது. இப்போதே பஞ்சம் பட்டினி ஆரம்பமாகிவிட்டது. ஆகவே விவசாய மக்களிடம் இருந்து கடன் வாங்குவதை நிறுத்தி, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாங்குகளிடம் இருந்து போதுமான பணத்தைப் பெற்று, அந்த அந்தத் தொழிலின் வருமானத்திற்கு ஏற்ற கட்டணத்தை ஏற்படுத்தி, இந்த மின்சார வாரியம் நல்ல விதத்தில் செயல்பட வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அதேநேரத்தில் கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் தெரு விளக்குகள் சரியாகவே எரிவதில்லை. மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு எல்லாம் இதுபற்றித் தெரிய முடியாது. தெரிந்தாலும் நேரிடையாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை. உதாரணமாக முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, தெரு விளக்குகள் எரியாமல் இருக்கிற குறையை நீக்க முடியவில்லை. அங்கங்கே குழாய் விளக்குகள் ஃப்யூசாகிக் கிடக்கின்றன. ராஜபாளையத்தை எடுத்துக்கொண்டால் 200, 300 'சோக்ஸ்' போய் இருக்கின்றன. இருக்கக்கூடிய சங்கடம் என்ன என்பதை எடுத்துச் சொல்ல லோகல் அதிகாரிகள் பயப்படுகிறார்கள். நான் ஒருவரைக் கேட்டேன். 'திட்டவட்டமாகச் சொல்லுங்கள், உங்களுக்கு இருக்கிற சங்கடம் என்ன?' என்று கேட்டால் 'ஒன்றும் இல்லை. இந்த சோக்குகளை மாற்றி விடுகிறோம், எல்.இ. பர்மிஷனுக்கு எழுதியிருக்கிறோம்' என்கிறார்கள். நூறு, இருநூறு ரூபாய்கூட ஆகாது. இந்தக் காரியத்தைக்கூட லோகல்

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1969 ஆகஸ்ட் 16

அதிகாரிகள் செய்ய முடியாது, மேலே சாங்ஷன் ஆகித்தான் செய்யவேண்டும் என்கிற நிலைதான் இந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் காரணமாக இருக்கிறது. இப்படிச் சிறு சிறு குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்வதற்கு ஆகும் செலவை லோகல் அதிகாரிகளே சாங்ஷன் செய்ய—பவர் டிசென்ட்ரலைஸ்—செய்யப்பட வேண்டும். பெரிய வேலைகளாக இருந்தால், டிரான்ஸ்பார்மர் போடுவது போன்ற வேலையாக இருந்தால், மேலதிகாரிகளே நன்றாகப் பரிசீலனை செய்து, அனுமதி வழங்கட்டும். இந்தமாதிரிச் சிறு சிறு குறைபாடுகளைக் களைவதற்கு அங்கங்கே லோகல் அட்வைசரி கமிட்டி யிருந்தாக வேண்டும். எனக்குத் தெரியும். எல்லோரும் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. கெட்டுப்போன சோக்கையே சிறிது ரிப்பேர்செய்து கொண்டுவந்து மாட்டிவிடுகிறார்கள். பத்து நாட்கள் எரிகிறது. மறுபடியும் அணைந்து போகிறது. லோகல் அட்வைசரிக் கமிட்டிக் கூட்டம் நடக்கும் என்று தெரிந்தாலே இதை எல்லாம் நாங்கள் சொல்லக்கூடும் என்று சிறிது பயமாவது இருக்கும். இந்தத் தவறுகளைச் செய்யத் தயங்குவார்கள். மேலே இருப்பவர்களுக்கு இப்போது இதுபற்றியெல்லாம் என்ன தெரியும், எங்களுக்குத் தெரியும். இன்னும் போதுமான அளவு 'ஒயர்'கள் கிடைக்கவில்லை. மூன்றாண்டுகளாகச் சொல்லியும் ஒயர்கள் கிடைக்காத காரணத்தினால் பல குறைகளை நிவர்த்திக்க முடியவில்லை. இன்னும் டிரான்ஸ்பார்மரில் ஸ்டெப் டவுன் ஏற்படுகிறபோது, கடன் வாங்கிப் புது மோட்டார்கள் போட்டிருக்கிறார்கள். அவை 'பர்ன்' ஆகிப் போகின்றன. இரட்டிப்புச் செலவு ஆகிறது. இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்போதும் சீரான சப்ளை இருக்க வகைசெய்ய வேண்டும். இதுபோன்று சிறுசிறு குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி உடனுக்குடன் பரிகாரம் காண்பதற்காகத்தான் லோகல் அட்வைசரிக் கமிட்டிகள் போடவேண்டும் என்று தெரிவிக்கிறோம். இதுபற்றி டி.டி.சி. கூட்டத்தில் எஸ்.இ. வருவதால் அங்கே சொல்லிக்கொள்ளலாம் என்பதாக அங்கே பதிலளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அது மேல் மட்டத்தில் இருக்கிறது. கீழ் மட்டத்தில் உள்ள குறைகளைக் களைவதற்கு லோகல் அட்வைசரிக் கமிட்டிகளைப் போட வேண்டும். ஏழைகளிடம் வாங்கும் கடனை நிறுத்தி, பாங்குகளின்மூலம் தேவையான பணத்தைப் பெற்று, வருமானத்திற்குத் தகுந்த கட்டண விகிதத்தை அமைத்து, மின்சார வாரியம் நல்லமுறையில் செயல்படவேண்டும். இதுவரை அது எடுத்துவந்துள்ள நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் இரண்டொன்றைச் சொல்லி முடிக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த போது 1971-ம் ஆண்டு இறுதிக்குள்ளாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் பணியை

1969 ஆகஸ்ட் 16] [திரு. ந. தருமலிங்கம்]

முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதாக, ஏற்கெனவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடியே, செயல்பட உறுதி அளித்திருப்பதற்கு என்னுடைய பாராட்டு உரியதாகும். அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையில் கடந்த ஆண்டும், அதற்கு முன்னாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மின்சார வாரியம் ஆற்றி வந்துள்ள பணியை நல்லவிதமாக, தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் 1967-68-ம் ஆண்டு வாரியத்திற்குக் கிடைத்த உபரித் தொகை சுமார் ரூபாய் 108 லட்சம் ஆகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968-69-ம் ஆண்டுக்கான வாரியக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு முடிவுறவில்லை என்றாலும், அந்த ஆண்டில் சுமார் ரூ. 129 லட்சம் உபரி இருக்கக்கூடும் என்று தெரிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் உபரி ரூ. 21 லட்சம்தான் இருக்கக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நல்ல முறையில் இத்துறை வளர்ச்சி அடைந்து வருவதற்கு ஏற்றபடி உபரித்தொகை அதிகமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன, எங்கே குறைபாடு இருக்கிறது என்பதையாவது நன்கு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு முக்கியமான செய்தியைத் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரை தற்காலிக அடிப்படையில் அல்லது அன்றாட ஊதியம் பெறும் அடிப்படையில் பணியாற்றி வந்த ஏராளமான பணியாளர்களுக்குப் பணி நிலைப்படுத்தப்படுவதற்கான பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது உண்மையில் நல்ல செய்தியாகும். இது தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் திருப்தியை ஏற்படுத்தும் வாசகமாக இருப்பதனால் நான் உண்மையில் இதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இந்தத் துறையைப்பற்றி உறுப்பினர்கள் பல பேர் பல அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனியார் துறையில் இருந்த மின் விநியோகக் கம்பெனியை அரசு எடுத்துக்கொண்ட தன்மையினால் பரவலாகத் தவறுகள் ஏற்பட்டு வருவதை நாம் உணர்ந்தாக வேண்டும். சாதாரணமாக ஓரிடத்தில் ஒரு பல்பு மாட்டுவதற்குக்கூட உடனடியாக அந்த வேலையைச் செய்வதற்கு அதிகாரிகள் தங்களிடம் இப்போது அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். உள்ளூர் அதிகாரிகளைக் கேட்டால் மேலே கேட்டு கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும் உண்மை. மேலே காலதாமதம் கிடைத்திருப்பதும் உண்மை. ஆயினும், காரியம் நடக்கவில்லை. தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதங்களைத் தவிர்க்க வேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி எல்லாக் கிராமங்களுக்கும் 1971-க்குள் மின்சார விஸ்தரிப்புச் செய்கிற வேலையைத் துரிதப்படுத்த வேண்டும். இன்னொன்று—அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் நமது மின்சார

வாரியத்தின் வருவாய்த்துறை அலுவலகம் ஒன்றை பட்டுக்கோட்டையில் அமைப்பதாக இருந்தது. ஆனால் அந்தத் திட்டத்தை மாற்றி இப்போது அதை தஞ்சை நகரத்திலேயே அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுவதாக அறிகிறேன். அதன் காரணமாக அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் சார்பாக ஒரு விண்ணப்பத்தை மின்சார வாரியப் பெருந்தலைவருக்கு அனுப்பியிருக்கிறோம். அதனுடைய நோக்கம் என்னவென்றால், அறந்தாங்கி வட்டம், பட்டுக்கோட்டை வட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் ஆகிய இந்தப் பகுதிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமென்றால், உடனுக்குடன் கலந்து குறைகளைச் சொல்லி காரியங்கள் ஆற்றுவதற்கு இந்த அலுவலகம் பட்டுக்கோட்டையில்தான் இருக்கவேண்டும். அறந்தாங்கியில் இருந்து 100 மைல்கள் தள்ளியுள்ள தஞ்சையில் இந்த அலுவலகம் ஏற்படுவது மிகவும் சங்கடமானது. இதுபற்றி நானும், பட்டுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினரும், பேராவூரணி சட்டமன்ற உறுப்பினரும் கையொப்பமிட்டு மின்சார வாரியத் தலைவருக்கு மகஜர் அனுப்பி ஒரு மாதமாகிறது. இதுவரை பதில் இல்லை. 1971-ஆம் ஆண்டுக்குள் திட்டமிட்டபடி கிராமங்களுக்கு எல்லாம் எங்கள் வட்டத்தில் மின் இணைப்புக் கொடுக்கப்படவேண்டுமென்றால் இந்த அலுவலகத்தை தஞ்சை நகரிலேயே ஏற்படுத்தாது —கட்டிட வசதிகளும், மற்ற வசதிகளும் உள்ள பட்டுக்கோட்டையில் ஏற்படுத்த வேண்டும். நம்முடைய வாரியத்தின் அதிகாரிகள், வருவாய்த்துறை வாரியத்தின் அதிகாரிகள், இன்னும் இது தொடர்பான அதிகாரிகள் இதைப்பற்றிச் சிந்தித்து இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு எவ்வளவு கிராமங்களுக்கு அதிகமாக மின்சாரம் வழங்கியிருக்கிறோம் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே ஒரு சிக்கல் இருப்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கங்கேயுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் சிபாரிசு செய்கின்ற இடங்களுக்கு மட்டுமல்ல; நம்முடைய அதிகாரிகள் தேவை, நியாயம் என்று பார்த்து எங்கெங்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமோ அப்படிப்பட்ட இடங்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் வழங்கப்படுவது சம்பந்தமாக, துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விவசாயிகள் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்று கையை விரிக்கிறார்கள். தொழில் நுட்பம் தெரிந்தவர்களே தங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டால் வேறு யாரிடம் சென்று தெரிந்து கொள்ளமுடியும் என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் பம்பு செட்டுகள் வைப்பதற்கு எவ்வளவு செலவு ஆயிற்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் பல தடவைகள் அலைந்து திரிந்துதான் காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அலைச்சல் இல்லாமல், சங்கடம் இல்லாமல் தேவைப்படுகின்ற இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தின் நடவடிக்கைகள் பரவலாக அனைவருடைய பாராட்டுதலுக்கும் உரியதாகும். அது மேலும் பெருகுவதற்கு நடவடிக்கைகளை வேகமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இந்த அளவுக்கு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

■ திரு. என். துரைபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் மீது என்னுடைய ஆலோசனைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உண்மையாகவே 1971-க்குள்ளாக மாநிலம் முழுவதிலும் கிராமம் கிராமமாக மின்சாரம் விஸ்தரிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கொடுத்து இருப்பதைப் பார்க்கும்பொழுது மகிழ்ச்சியடைகிறேன். உண்மையாகவே 1971-க்குள்ளாகவே இதைப் பூர்த்தி செய்யமுடியுமா என்றுதான் அமைச்சர் அவர்கள் நன்றாக நினைத்துப் பார்க்கவேண்டும். குறிப்பாக இன்று சில கிராமங்களிலே பல வருஷங்களாக, இரண்டு மூன்று வருஷங்களாக கடனுக்கு மோட்டார் வாங்கி, கிணறு வெட்டிவைத்த பின் மின் இணைப்புக் கிடைக்காமல் விவசாயிகள் தரித்திர தாண்டவனாகி இருக்கிறார்கள். உதாரணமாக நாங்குனேரி பகுதியில் இட்டமொழியிலும், விஜயநாராயணன் சங்கனாபுரம் பகுதியிலும், துவரகுளம் பகுதி, தோப்புவிளை ஸ்கீம்கள், திருக்காங்குடியில் பல கிணறுகள், மாவடிப் பஞ்சாயத்தில் பல கிணறுகள் இன்னும் இதைப்போன்று இன்றைக்குச் சொல்ல வேண்டுமானால் எத்தனையோ தட்டுப்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகையிலே அழகாகப் போட்டுவிடலாம், மேடையிலே அழகாகப் பேசிவிடலாம், ஊர் ஊராக மின் இணைப்புக் கொடுத்துவிட்டோம் என்று. ஆனால் ஒன்று நாம் பெருமைப்படலாம். மற்ற மாநிலங்களைவிட நம்முடைய தமிழ் மாநிலம் மின்சார விஸ்தரிப்பில் முன்னேறியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆனால் உண்மையிலே மின்சார விஸ்தரிப்பு பூரணமான அளவுக்குப் பூர்த்தியாகி இருக்கிறதா என்பதை அமைச்சரவையில் உள்ளவர்களும், உத்தியோகஸ்தர்களும், எஞ்சினியர்களும் நினைத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஊருக்கு மின்இணைப்பு கொடுத்துவிடுவது என்றால் 6, 10 கிணறுகளுக்குத்தான் கிடைக்கிறது. பணம் இல்லாத விவசாயிகள் கடன் வாங்குவதற்கு வசதியில்லாமல் தத்தளித்து இன்றைய தினம் தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளில் கடன் வாங்கியும் அதற்குப் பிறகும்கூட மின் இணைப்புக் கிடைக்காத நிலைமை எல்லாம் இருக்கிறது. அதற்கு என்ன சொல்கிறார்கள் என்றால் . . . .

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தலைவர் அவர்களே, எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கனவே கொடுக்கப்பட்ட அறிக்கையிலே கொடுத்திருக்

[திரு. ஓ. பி. ராமன்] [1969 ஆகஸ்ட் 16

கிறேம். எத்தனை கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கொடுத்திருக்கிறேம். எனவே உறுப்பினர் அவர்கள் அதையெல்லாம் பார்த்துவிட்டுப் பேசிஞல் நன்ருக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். துரைபாண்டியன் : நன்றி. நான் என்ன சொல்கிறேன் என்ருல், புதிதாகக் கிணறு வெட்டி, மோட்டாரை வைத்துவிட்ட பிறகு கூட என்னுடைய தொகுதியிலே இன்னும் மின்சாரம் கொடுக்கவில்லை. கேட்டால், டிரான்ஸ்ஃபார்மர் லோட் இல்லை என்று சொல்கிருர்கள். டிரான்ஸ்ஃபார்மர் உருவாக்கவேண்டுமென்ருல் பல கிணறுகள் வேண்டுமென்று சொல்கிருர்கள். இப்படி கமர்ஷியல் முறையில் சொல்லிக்கொண்டு இருக்கிருர்கள். அத்தனை ஊர்களுக்கும், அத்தனை கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று சொன்ஞல் அதிலே எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும், சீக்கிரத்தில் அது முடியக்கூடிய காரியமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்னுடைய யோசனை என்னவென்ருல், நாம் சுதந்திரம் அடைந்தபின் அந்த அந்த டிபார்ட்மெண்டுகளில் வேலைப் பளு அதிகமாகி இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சி.இ., ஒரு டி.இ., தான் இருப்பதால் வேலைகளைக் கவனிக்க முடியவில்லை. எத்தனை கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிறேம் ? அதற்குத் தகுந்த அளவுக்கு வேலைப் பளு அதிகமாகியிருக்கிறது. எனவே அவர்களை அதிகமாகப் போடவேண்டும். ஒரு டி. இ. தான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், திருநெல்வேலிக்கும் சேர்ந்து இருக்கிருர். ஒருவர் லீவில் போய்விட்டால் அங்கே வேலை பார்ப்பதற்கு ஆள் கிடையாது. நடைபெறவேண்டிய வேலைகள் நடைபெற முடியாமல் போய் விடுகின்றன. எஸ்.ஓ.,-வைப் பொறுத்தவரையிலும் கூட அப்படித்தான். ஒருவர் லீவில் போய்விட்டால் போன அன்றே இன்னொரு எஸ்.ஓ., வந்து ஜாயின் பண்ணுவது கிடையாது. இதன் காரணமாக வேலை தடைப்படுகிறது. காலையிலே தண்ணீர் சில கிராமங்களிலே பாய்ச்சுகிருர்கள். சில கிராமங்களைப் பொறுத்தவரையில் மூன்று, நான்கு கிராமங்களுக்கும் சேர்த்து ஒரே ஹெல்ப்பர்தான் இருக்கிருர். அவர் வருவதற்கு முன் ஃப்யூஸ் போய்விட்டால் தண்ணீர் இறைக்கமுடியவில்லை. ஆகவே அந்த அந்த ஊரிலே தனித்தனியாக ஹெல்ப்பர்கள் இருக்கவேண்டும்.

பஞ்சாயத்து லைட்டுகளைப்பற்றிச் சொன்ஞர்கள். உண்மையாகவே பெரும் பகுதி ஃப்யூஸ் ஆகிவிடுகிறது. சிறிய பஞ்சாயத்துக்களிலே 5 பல்புகள் வேண்டுமென்ருல் எஸ்.ஓ.,-க்கு வாங்கிப் போடுவதற்கு அதிகாரம் கிடையாது. அங்கிருந்து வரவேண்டுமென்று சொல்கிருர்கள். அதுவரையில் லைட் கிடையாது. ஆகவே எஸ்.ஓ.-க்களே பல்புகள் வாங்கிப்போடும்படி அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது அந்த அதிகாரத்தை பஞ்சாயத்து போர்டு தலைவருக்காவது கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்களிலே என்ன நடக்கிறது என்ருல், 50

1969 ஆகஸ்ட் 16] [திரு. என். துரைபாண்டியன்]

லைட்டுகள் இருக்கின்றன என்ருல் அதிலே அவை எரிந்தாலும் சரி, எரியாவிட்டாலும் சரி, 50 லைட்டுகளுக்கும் சேர்த்துத்தான் பணம் கலெக்ட் பண்ணுகிருர்கள். 50 லைட்டுகள் இருக்கின்றன என்ருல் 10 எரிகிறது அல்லது 20 எரிகிறது, சில சமயங்களிலே ஒன்றுமே எரிவதில்லை. ஆஞல் அந்தப் பஞ்சாயத்துக்கள் முழுப் பணத்தையும்தான் கட்டியாக வேண்டியிருக்கிறது. ஆக, இதையும் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். 12–30 p.m.

அடுத்தாற்போல், நமது தமிழக அரசு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு நல்லது செய்வதற்காகவே அமைந்த அரசு என்று கூறப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு நல்லது செய்வதன் மூலமாகத்தான் ஏற்றத்தாழ்வுகள் மறையும் என்பதை எல்லாக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள். எல்லா வகையிலும், படிப்பை எடுத்துக் கொண்டாலும் சரி, உத்தியோகத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஷெட்யூல்டு காஸ்ட், பாக்வார்டு கிளாஸ், அதற்குப் பிறகு ஃபார்வர்டு கிளாஸ் என்ற முறையில் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அதே போன்று இந்த மின்சாரம் கொடுக்கும்போதும் அடித்தளத்தில், முன்னேற்றம் அடையாத பகுதிகளுக்கு, கால்வாய், மாஞவாரி ஏரி, அணைக்கட்டுகள் இல்லாத பின்தங்கிய பகுதிகளுக்கு பூமியிலுள்ள தண்ணீரை எடுத்து விவசாயம் செய்யும் வகையில் மின்விசைக்கான மின்சாரத்தைக் கொடுப்பதில் சலுகை காட்ட வேண்டும். அப்படிப்பட்ட பகுதிகளிலும் முதலில் தாழ்த்தப்பட்ட அரிசனங்கள் மின் விசைக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கு முதலிடம் கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு, பிறகு இணைப்புக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய பகுதி திருநெல்வேலியிலுள்ள நாங்குநேரி தொகுதி கால்வாய்ப் பாசனமோ, ஏரிப் பாசனமோ, நதி நீர்ப் பாசனமோ இல்லாத பகுதி. அது ஒரு பஞ்சப் பிரதேசம். நூறு அடிக்குக் கீழே தோண்டிஞல் கூட தண்ணீர் இல்லாத நிலை. ஆகவே, எங்களுடைய பகுதிக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் முதற் சலுகை கொடுக்கவேண்டும், அதிலும் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு முதற் சலுகை கொடுத்து அவர்கள் பயன்பெற வழி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகிறேன்.

சில இடங்களில் 'லோடு' கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. அங்கெல்லாம் 1½ எச். பி. , மோட்டார் வைத்து சிறிய விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் சட்டப்படி 100 அடிக்குள் தண்ணீர் இருக்கக்கூடிய பகுதிகளில் தண்ணீர் இறைத்துக்கொள்ளுகிருர்கள். 3 எச்.பி.,-க்கு லோடு இல்லை என்ற காரணத்தால் 1½ எச்.பி., மோட்டார் வைத்து தண்ணீர் இறைக்கும்போது அது எத்தனை அடிக்கு கீழே இருந்தாலும் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவைப் பிறப்பிக்கும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 1½ எச்.பி., மோட்டார் வைத்து விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் எல்லோரும் ஏழை விவசாயிகள். அவ்வாறு 1½

எச்.பி., வைத்திருக்கக்கூடிய விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணமாக வீட்டுக்கு யூனிட்டுக்கு 33 பைசா வசூலிப்பது போல் வசூலிக்கிறார்கள். விவசாயத்திற்காகப் பயன்படுத்துகின்ற அந்த மின்சாரத்திற்கு அவ்வாறு கட்டணத்தை வசூலிக்காமல் குறைத்து வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களை வழங்க விழை கிறேன். உண்மையிலேயே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். உற்பத்தியைப் பெருக்குகின்ற உன்னத பணியில் மின்சாரம் எந்த எந்த வகையில் பயன்படுகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மின்சார வாரியத்தின் பணிகளை வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறோம். தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், ஏரி குளங்கள் வறண்டு இருக்கும் நிலையில் கிணறுகளை ஆழப்படுத்தி மின் இணைப்பைப் பெறுவதன் மூலந்தான் விவசாயி கள் ஊக்கம் பெற்று உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார் கள். கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இருந்து அதிக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வரு கிறது. 1971-ம் ஆண்டுக்குள் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற அளவில் ஏற்பாடு செய்கிறோம் என்ற உறுதியையும் தந்திருக் கிறார்கள். அதையும் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறோம். சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகளைப் பார்க்கும்போது நிறைவு பெறுகிறோம் என்று சொல்லுவதில் ஐயப்பாடு இல்லை. அவ்வாறு நிறைவுபெறுகிற அதே நேரத்தில் நிலைமைகள் மாறிவிட்டனவா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இப்படிப்பட்ட இந்த நேரத்திலும் மின்சாரம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை எடுத்துச் சொல்லுவதிலே யாரும் கூச்சப்படத் தேவையில்லை. திட்டங்களைத் தீட்டுகிறோம், பணத்தை அதிகமாகச் சர்க்கார் செலவழிக்கின்றார்கள். சென்ற ஆண்டை விட அதிகமான அளவுக்குப் பணத்தைச் செலவு செய்து அதிக மின் இணைப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களை மேல்மட்ட அதிகாரிகள் கொடுக்கிறார்கள். உண்மையில் அதைப் பார்த்துப் பெருமைப் படுகிறோம். அவ்வாறு பெருமைப்படுகின்ற அதே நேரத்தில் கீழே இருக்கின்ற சில சிக்கல்களை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அவற்றை நீக்க நிச்சயமாக இந்த அரசும், இந்த அரசின்கீழ் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரிகளும் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

பரவலாக, தொகுதிகளில் உள்ள நிலைமைகளைப் பார்க்கும் போது, பம்ப் செட்டை வாங்கி வைத்துவிட்டு மின் இணைப்புக் கிடைக்காமல் பல விவசாயிகள் ஏக்கமுற்றிருக்கிறார்கள். இந்த மாதம் 3-ம் தேதி என்னுடைய தொகுதியில் பல கிராமங்களைச் சென்று பார்க்கும்போது, பல விவசாயிகள் பம்ப் செட்டை கட னுக்கு வாங்கி வைத்து விட்டு மின் இணைப்புக் கிடைக்காத நிலையில் ஏ.இ.,-க்குக் கடிதம் கொடுங்கள், எஸ்.ஓ.,-க்குக் கடிதம் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய நிலைமையைக் கண்டேன். ஒரு நாளைக்கு நாலைந்து பேராவது இவ்விதக் கோரிக்கையோடு வரக்கூடிய நிலை மையைப் பார்த்தேன். தற்போது மின்சார வாரியத்தை விட ரெவின்யூ டிப்பார்ட்மென்ட் நல்ல பெயரை எடுத்துக் கொண்டிருக் கிறது, மின்சார வாரியம் ரெவின்யூ டிப்பார்ட்மென்டின் பெயரைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்தச் சங்கடத்தை நிச்சய மாகப் போக்கியாக வேண்டும். விவசாயிகள், மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்குக் கடனுக்காக மனுப் போடுகிறார்கள். அந்த மனுதாருக்குக் கடன் கொடுக்கலாமா என்று மின்சார வாரியத் தினரைக் கேட்கிறார்கள். மின்சார வாரியத்தினர் அந்த மோட்டார் பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக் கொடுக்க முடியுமா என்ற சூழ்நிலைகளை எல்லாம் கவனிக்காமல் கடன் கொடுக்கலாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த விவசாயிகள் கடன் பெற்று மின்சார மோட்டார் பம்பை வாங்கி வைத்துக் கொண்டு பல மாதங்கள் மின் இணைப்புப் பெறாத நிலையில், கடன் வாங்கிய பணத்திற்கு வட்டியைக் கட்ட வேண்டிய நிலையில் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவ்வாறு விண்ணப்பங்கள் வருகின்ற நேரத்தில், மின்சார இணைப்புக் கொடுக்கக்கூடிய நிலை இருந்தால் மட்டுமே அந்த விண்ணப்பங்களுக்குக் கடன் கொடுக்க முடியும் என்று சிபாரிசு செய்யவேண்டும். கடன்களில் பெற்ற மோட்டார் பம்பு செட்டுகளுக்கு 10, 15 நாட்களுக்குள் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். அந்த முறையில் நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் இணைப்புக் கொடுப்பதிலே பல புகார்கள் இருக்கின்றன என்பதைப் பற்றித் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறோம். அடி மட்டத்திலே பல புகார்கள் இருக்கின்றன. அதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதை விட, அப்படிப்பட்ட புகார்கள் வருகின்றனவா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும். அவ்வாறு புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் அதைப் பற்றிச் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றை எப்படிப் போக்குவது என்று ஆராய வேண்டும். மின் இணைப்புக்காக மனுக்கள் வரும் போது அவற்றை முறைப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். யாரையும் 'ஓவர்லுக்' செய்யாமல் விவசாயிகளுக்கு மின் இணைப் பைத் தரவேண்டும். மின்சார இணைப்புக் கொடுப்பதற்காகத் தயாரித்துள்ள பட்டியலின்படி இன்ன பெயருடைய ஒருவருக்கு மின் இணைப்புக் கொடுக்கும் முறை வரும்போது அன்னவருக்குத் தாக்கீது அனுப்பி, இன்ன தேதிக்குள் மின்சாரப் பம்ப் செட்டை

வைத்து மின் இணைப்பை பெற்றுக் கொள்ளவில்லையானால் பிறகு மின் இணைப்பு கொடுப்பது ரத்து செய்யப்பட்டுவிடும் என்று தயவு தாட்சண்யம் இன்றி தாக்கீது அனுப்பலாம். அதற்குப் பிறகு அடுத்தவருக்கு மின் இணைப்புக் கொடுக்கலாம். இன்றைய சூழ்நிலையில் வசதி படைத்தவர்கள்தான் மின்சாரம் பெற முடிகிறது, வசதி இல்லாதவர்கள் மின்சாரம் பெற முடியாத நிலைதான் இருக்கிறது என்ற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்பாட்டைப் போக்கியே ஆகவேண்டும்.

அடுத்து, தெரு மின்விளக்குகள் பற்றிச் சொன்னார்கள். தொடர்ந்து அதைப்பற்றி நாங்கள் சொல்லிக் கொண்டே வருகிறோம். பல்புகள் கிடைக்கவில்லை என்ற பதிலைச் சொல்லிவிட்டு நான்-அவைலபிள் மெட்டீரியல்ஸ் இருக்கிற வரையில் கால தாமதத்தைப் பற்றிக் கேட்கமுடியாது, அதனால்தான் பல்புகள் தரமுடியவில்லை என்ற சாக்கைச் சொல்லக்கூடும். பல கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டும், தெரு விளக்குகள் போடப்பட்டும் அவை இருளில் மூழ்கியிருப்பதைக் காண்கிறோம். இன்றைய தினம் பல்புகளை மாட்டுகிறார்கள், மறுநாள் அது தீய்ந்து போய்விட்டது என்று தகவல் வருகிறது. பல்புகளில் மானுபாக்சரிங் டிபெக்ட் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இங்கு திரும்பத் திரும்ப அதே கருத்தை வலியுறுத்துவதினால் என்ன பொருள் இருக்கிறது என்று புரியவில்லை. இப்போது கூட பல கிராமங்களில் பல்புகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, நல்ல பல்புகள் கிடைப்பதற்கு மின்சார வாரியம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்தில் ஒருவர் ஸ்விச்சை ஆன், ஆஃப் செய்கிறார்கள். லைன்மென் செய்வதில்லை. காலை ஏழு மணிவரையில் சுவிச்சை ஆஃப் செய்வதில்லை. மின்சாரக் கழகத்தைச் சேர்ந்த ஆள்தான் ஸ்விட்சை ஆன் செய்கிறார், ஆப் செய்கிறார். குறிப்பிட்ட புகார் இருப்பின் வாரியத்தின் நாட்டத்திற்குக்கொண்டு வரவும் எனக் குறிப்புரை கூறுகிறது. நான் கேட்கிறேன். எந்தக் கிராமத்தில் எந்த லைன்மென் ஸ்விச்சை ஆன், ஆஃப் செய்கிறார்கள்? நிச்சயமாகக் கிடையாது. கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. பல ஆட்கள் 40 ரூ. 50 ரூ. சம்பளத்திற்கு வேலைக்கு வரத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஹெல்ப்பரைப் போட்டு ஸ்விச்களை ஆன், ஆஃப் செய்யவேண்டும், பின் மற்றக் காரியங்களைக் கவனிக்கவேண்டும் என்ற அளவில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆளை நியமிக்கவேண்டும். தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்துவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஊராட்சிமன்றங்களில் எந்தெந்த விளக்குகள் எரிகின்றன, எந்தெந்த விளக்குகள் எரியவில்லை என்று ஒன்றியத்தின் மூலம் மின்சார வாரியத்திற்கு ரிப்போர்ட் அனுப்பவேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலுள்ள சங்கடத்தைச் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். இன்று பத்து கம்பங்களில் எரிந்தன என்றால் மறுநாள் ஒன்பது கம்பங்களில் எரிகின்றன, அதற்கு மறுநாள் எட்டு கம்பங்களில் எரிகின்றன. இதை எந்த அறிக்கை மூலம் தெரிவிக்க முடியும்? இந்தப் பொறுப்பை ஊராட்சிமன்றத் தலைவர்களிடம் ஒப்படைப்பதா? அவர்கள் தலைவர்களாக கௌரவத்திற்காக வருகிறார்கள். அவர்களைக் கொண்டு எந்தெந்தக் கம்பங்களில் எரிந்தன, எங்கெங்கு எரியவில்லை என்று பார்க்கச் செய்வது நியாயமல்ல. ஆகவே, ஒருவரை இதற்காக நியமித்து எந்தெந்த விளக்குகள் எரிந்தன, எவை எவை எரியவில்லை என்பது பற்றிய ரிப்போர்ட்டை ஒன்றியத்தின் வாயிலாக இல்லாமல் நேரடியாக டிப்பார்ட்மென்ட்டுக்கு அனுப்ப நேரடியாக அவர்களுடன் தொடர்பு கொள்ளச் செய்யவேண்டும்.

இன்றையதினம் திண்டிவனம் வெள்ளி மேடுபேட்டை எஸ்.ஓ.-வைப் பொறுத்தவரையில் மேல்மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு வந்திருக்கும். லஞ்ச ஒழிப்பு அதிகாரி ஒருவர் அங்குள்ள சூப்பர்வைஸரைப் பிடித்து வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட ஆறு, ஏழு மாதங்களாகின்றன. ஆறு, ஏழு மாதங்களாக அங்கு சூப்பர்வைஸர் இல்லை. திண்டிவனத்திலுள்ள சூப்பர்வைஸர் அதற்குப் பொறுப்பு. அங்கு போய் விவசாயிகள், பிடித்துக் கொடுத்ததாகச் சொல்கிறார்களே அவர்கள், சம்பந்தப்பட்டவர்கள், ஊர்க்காரர்கள் போய்க் கேட்டால் இவர்களை அவர்கள் உதாசீனமாகப் பேசுவதும், அலட்சியப் படுத்துவதும், அந்தப் பகுதி கவனிப்பாரற்ற நிலையிலும் இருக்கிறது. செய்கிற ஊழல்களைப் பிடித்துத் தர முடியவில்லை. பிடித்துத் தந்த பிறகு சரியான பரிகாரம் இல்லையென்று சொல்லும்போது அப்பகுதி மக்கள் உண்மையிலேயே வேதனைப்படுகிறார்கள். இப்போது கூட திண்டிவனம் டவுன் எஸ்.ஓ., தான் இன் சார்ஜாக இருந்து வருகிறார்கள். இந்த நிலை மாற்றியமைக்கப்படவேண்டும்.

அடுத்து, எங்கள் செஞ்சி, திண்டிவனம் கிணற்றை நம்பியிருக்கும் பகுதிகள். அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் கிணறுகளை பத்து, பதினைந்து கஜம் ஆழப்படுத்தி மின் இணைப்பு கேட்கிறார்கள். இன்றையதினம் திட்டங்களுக்காக நாம் வேண்டிய அளவிற்குப் பணம் ஒதுக்குகிறோம். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமான அளவில் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனால், அடிமட்டத்தில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டனவா அல்லது தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டனவா என்றால் குறிப்புரைகள் நிறைவு தருவதாக இருக்கின்றனவே தவிர, நிலைமை சீரடைந்ததாகத் தெரியவில்லை.

செஞ்சிப் பகுதியில் எஸ்.ஓ.,-க்கள்தான் இருக்கிறார்கள். அப்படியிருப்பது நல்லதல்ல. அங்கு அஸிஸ்டென்ட் என்ஜினியர் தேவை. இன்னின்ன காரணங்களுக்காகத் தேவை என்று சொல்லியிருக்கிறோம். ஒரு அஸிஸ்டென்ட் என்ஜினியர் இருப்பார்

களையானால் அவர்களது மேற்பார்வையின்கீழ் மற்ற அதிகாரிகள் நன்கு வேலை செய்வார்களென்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் புனர்பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் வருகிறதே தவிர அதற்கு ஒரு தீர்வு கண்டபாடில்லை. செஞ்சிக்கு அவசியம் ஒரு அஸிஸ்டென்ட் என்ஜினியர் தேவை.

செஞ்சி, திண்டிவனம் பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கும் பகுதிகள். இன்றையதினம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால் நீங்கள் தரும் மின்சாரத்தை நம்பித்தான் அதைச் செய்யவேண்டிய பகுதியாக இருக்கிறது எங்கள் பகுதி. நாட்டு மக்களை வாழ வைக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் மின்சாரத்தை நம்பியிருக்கும் பகுதி எங்கள் பகுதி. அப்படி நம்பி வருகிற காங்களை ஏமாற்றாமல் விரைவில் எங்கள் பகுதிகளில் மின்சார இணைப்பு கொடுக்க வேண்டும். ஓவர்லுக்கிங் முறை நிச்சயமாக ஒழிக்கப்படவேண்டும். அதற்கேற்ற முறையில் விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்படி மாற்றியமைப்பதோடு இல்லாமல், அவற்றை நடைமுறையிலும் கொண்டு வரவேண்டுமென்ற வேண்டுகோளை இம்மன்றத்தில் வைத்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

■ திரு. கே. சகாதேவக் கண்டர்: தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கை மீது பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி. போன ஆண்டு மக்கள் பெரிதும் அவதிப் படுகிறார்கள் என்ற நிலைமையில் இங்கு உண்ணாவிரதம் இருந்து, அமைச்சர்கள், அதிகாரிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதை நிவர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டது. இந்த ஆண்டு இந்தத் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது கண்டு என் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதி காரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனது தொகுதிபற்றி ஒன்று குறிப்பாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு பெரியவர், இரண்டு வருடங்களாக பம்ப் செட் வாங்கி வைத்து இன்னும் அதற்கான கனெக்ஷன் கொடுத்தபாடில்லை. எந்தக் காரணத்தால் அது கொடுக்கப்பட வில்லை என்று தெரியவில்லை. அவர்கள், மின்சார வாரியம் சேர்மன் அவர்களுக்கும், சீப் என்ஜினியர் அவர்களுக்கும், சூப்பரெண் டெண்டிங் என்ஜினியர் அவர்களுக்கும், டி.இ., அவர்களுக்கும் எனக்கும் மனு அனுப்பியிருக்கிறார்கள். அதைக் கவனித்து அந்தக் குறைபாடு நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன். பம்ப் செட் வாங்கி வைக்கும் உரிமையை முதலில் அளிக்கி றார்கள், அதைப் பெற்ற பிறகுதான் பம்ப் செட்டுக்குக் கடன் வழங்குகிறார்கள். ஆகவே கனெக்ஷன்ஸ் சீக்கிரமாகக் கொடுக்க வேண்டும்.

மின்சாரத் துறையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. திடீர் திடீரென்று மத்தியில் வேலை ஸ்தம்பித்துப் போய்விடுகிறது. ஏனெனில், வேண்டிய சாதனங்கள் அளிக்கப்படவில்லை, எனவே

வேலை தடைப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு ஆண்டுக்கும் வேண்டிய சாமான்களை, கம்பங்கள், கம்பிகள் முதலியவற்றை வாங்கி வைத்துக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அப்படிச் செய்தால்தான் வேலைகள் தடைபடாமல் நடக்கும். நமக்குத் தேவையான சில சாமான்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யும் முயற்சியில் ஒரு தொழிற் சாலையை இந்த சர்க்கார் அவசியம் ஏற்படுத்தவேண்டும். 1971-ம் ஆண்டிற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அது வரவேற்கத் தக்கது. அதைப் பொறுத்து செய்ய வேண்டிய நடவடிக்கைகளில் சர்க்கார் தீவிர முயற்சி எடுக்கவேண்டும். ஏனெனில், குறிப்பிட்ட காலம் குறுகியதாக இருக்கிறது. அதற்குள் அதைப் பூர்த்தி செய்ய வசதியில்லாமல் போய்விடும். ஆகவே, மின்சார சாதனங்கள் செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தில் பணி புரியக் கூடிய தாற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் படிக்கும்போது கேள்விப்பட்டேன். அது வரவேற்கத்தக்கது. திட் டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று அதோடு விட்டுவிடாமல் இந்த வருடமே கூடுமான வரையில் அதில் பணி புரியக்கூடியவர்களை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துக்கொள்ளவேண்டும். மின்சாரத் துறையில் உள்ள தொழி லாளர்களுக்கு டீ.ஏ., போக்குவரத்துச் செலவுப்படி குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு ஊதியத்தையும் உயர்த்தி, டீ.ஏ., யையும் உயர்த்திக் கொடுப்பதற்கும் சர்க்கார் நன்கு பரிசீலனை செய்து, அளிக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில், வெய்யில் என்றும், மழை என்றும் பாராமல் தங்கள் உயிரையே பணயம் வைத்துத் தொழில் செய்யக்கூடிய நபர்களுக்கு அரசாங்கம் தரும் சலுகை களாக ஊதியத்தையும், படியையும் குறைந்தது கூடுமானவரையில் சிறிதளவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும். சிறிய கிராமங் களிலேயுள்ள இப்படிப்பட்ட புகார்களை நிவர்த்தி செய்ய முயற்சி யெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்விளக்குகளைப்பற்றி இரண்டாண்டு காலமாகவே சொல்லிக் கொண்டு வருகிறோம். இந்த அன்றாடலேயும் சரியான முறையிலே எரியவில்லை. இன்றைக்குப் போட்டால், 2, 3 நாட்களில் பியூ ஸாகிவிடுகிறது. பிறகு 2, 3 மாதங்களுக்குப் போடுவதில்லை. ஆனால், மின்சார வரியை மட்டும் வசூலித்துக்கொள்ளுகிறார்கள். அந்த லைட்டுகளை ஒவ்வொரு பஞ்சாயத்தினிடமும் ஒப்படைக்க வேண்டும். அல்லது அவர்களே போட்டுக் கொண்டு அவைகள் எரியச் செய்வதற்கான வசதிகளைச்செய்து கொடுக்க வேண்டும். பல கிராமங்கள் இருட்டிலே மூழ்கிக்கிடக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களுக்கும் மின்சாரக் கட்டணம் வசூலிக்கும் நிலையிருக் கிறது. அந்தக் குறையை நீக்கி இந்த விளக்குகள் நல்ல முறையில் எரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மின்சார

சாதனங்களுக்கான உதவியையும் நீடித்து, ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, அங்கேயே உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தாற்காலிகமாகப் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும், அவர்களுக்கு டீ.ஏ., அலவன்ஸ்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. ஜே. எஸ். இராசு : சட்டப்பேரவை மாற்று தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969—70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மிக முக்கியமான ஒரு வாரியத்தின்மீது பேசப்படுகின்ற கருத்துக்கள் தமிழகத்து மக்களுக்கு மிகவும் பயன்படும் என்ற வகையில் மன்றம் இந்த விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. குறைகள் எவ்வாறிருப்பினும், அநேகமாக எல்லாத் தரப்பு சட்டமன்ற உறுப்பினர்களும், இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழக அரசில்தான் நல்லமுறையிலே மின்சாரவாரியம் இயங்கிவருகிறது என்பதைப்பற்றியும், மின்விசை ஏற்றம் விவசாயத்துறைக்கும், கிராமங்களுக்கும் நல்லமுறையிலே தரப்பட்டுவருகிறது என்பது பற்றியும் இங்கே மொத்தமாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அது உள்ளபடியே பாராட்டக்கூடிய நல்லதொரு அம்சமாகும். அந்தப் பாராட்டிற்குரிய மின் வாரியத்தையும், அதிலே பணிபுரிகின்ற எல்லாத் தரப்பு அதிகாரிகளையும் நாம் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி., படித்தவர்கள், பி.யு.சி., படித்தவர்கள், இண்டர் படித்தவர்கள், அதற்கு மேலே படித்தவர்கள்கூட, தங்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை இந்த வாரியத்தின் மூலமாக மிகச் சாதாரண ஏவலாள் தொழிலிலேயிருந்து, சித்தாள் வேலை செய்வதிலிருந்து, தினப்படிக் கூலி வேலை செய்வதிலிருந்து நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் துறையிலே வாழ்க்கை பெறுகிறார்கள் என்பது உள்ளபடியே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கின்ற பணியில் வாரியம் ஓரளவு நல்லமுறையிலே பணியாற்றி வருகிறது என்பது பாராட்டிற்குரிய ஒரு அம்சமாகும்.

இவ்வளவு பாராட்டுக்களுக்கும் மத்தியில், விவசாயக் காரியங்களுக்கு மின் இணைப்பு தருவதிலும், வீடுகளுக்கும், வீதிகளுக்கும் மின் இணைப்பு தருவதிலும் தயக்கம் அல்லது காமதம் இருந்தால் அவை நடைமுறையிலேயுள்ள சிரமங்களாகத்தான் இருக்குமே தவிர, வேண்டுமென்று யாரும் மின்சாரம் தருவதைத் காமதப்படுத்த மாட்டார்கள். உயர்தர அதிகாரிகளிடம் இந்தத் காமதங்கள் என் என்று நம்மைப்போன்றவர்கள் கேட்கும் நேரத்தில் இந்தத் துறையை விரிவுபடுத்தவும், அதற்கு வேண்டிய இணைப்புகளைத் தருவதற்கும் தேவையான சாதனங்களைப் பற்பல மாகாணங்களிலிருந்து பெற வேண்டியிருக்கிறது. அதற்குத் தேவையான துணைக் கருவிகளை வெவ்வேறு இடங்களிலிருந்து கோட்டா மூலம் பெற வேண்டியிருக்கிறது. அந்தச் சாமான்கள்

போதுமானதாக இல்லை, உற்பத்திக் கேந்திரங்களும் நாம் விரும்புகிற அளவுக்குப் பூர்த்தி செய்து தரமுடியாத நிலையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையிலேயே நியாயமான காரணம்தான். தமிழக அரசைப் பொறுத்தவரையில் 1967-க்கு முன்பு அரசாங்கம் மட்டுமே யூனியன் மூலமாகக் கிணறுகளை வெட்டவும், பம்பு செட்டு போடுவதற்கும் கடன் வழங்கி வந்தது. அப்பொழுதிருந்த கிணறுகளின் எண்ணிக்கை குறைவு. ஆனால் 1967-க்குப் பிறகு மாமேதை அண்ணா அவர்கள் காலத்திலும், நம்முடைய கலைஞர் அவர்கள் காலத்திலும் நில அடைமான வங்கிகள் மூலமாகவும், வேறுபல பணம் தருகின்ற ஸ்தாபனங்கள் மூலமாகவும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கேணிகளை வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு அதிக அளவுக்குக் கடன் தரவகை செய்யப்பட்டுவருகிறது. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக, விவசாயக் காரியங்களுக்கு மின் இணைப்பு அதிக அளவில் செய்து தர வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும் அந்த அளவுக்கு முடியாத சூழ்நிலையிலே மின் வாரியம் இருக்கிறது. அதற்காகத்தான் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. சுப்பராஜா குறிப்பிட்டதைப்போல தேசியமயமாக்கப்பட்டிருக்கும் வங்கிகளிலிருந்து ஏராளமான பணத்தை, திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னதைப்போல், சண்டை போட்டாவது வாங்கி அதன்மூலம் மின்துறையில் நல்ல பல காரியங்களைச் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மின்சார வாரிய அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மற்றொன்று, இந்தத் துறையிலே எஞ்சினியர்கள், எஸ்.ஓ.,-க்கள்; இன்னும் வேறுபல உயர்தர அதிகாரிகள் என்னதான் நல்ல முறையிலே பணியாற்றினாலும், மக்கள் மத்தியிலே, விவசாயிகள் மத்தியிலே, நூற்றுக்கு 80, 85 சதவிகிதமாக இருக்கும் விவசாயிகளின் அறியாமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நானே சென்று, ‘சார், ஏன் இந்த மின்சாரக் கம்பங்களுக்கு இணைப்புத் தரவில்லை’ என்று கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் புரியவே புரியாது. புரிந்து கொள்ள முடியாத பதிலை அவர்கள் சொல்லும் நேரத்தில், பாவம், அப்பாவி விவசாயிகள், அதைப்பற்றி மறுபதில் பேசாமல் சென்று விடுகிறார்கள். ‘இந்தக் கம்பியைப் போட்டால்தான் கரண்ட் போகும்’ என்று சொல்லிவிட்டால், அது எங்களுக்குப் புரிவதில்லை. என்னைப் போன்றவர்கள், அதில் பணியாற்றக்கூடிய எஞ்சினியர்கள் போன்றவர்களை நண்பர்களாகக் கொண்டிருப்பதால் ஒருவேளை புரிந்து கொள்ளலாம். ஆனால் விவசாயிகள் என்ன செய்வார்கள்? அவர்கள் கூறும் காரணங்கள் உண்மையானவைகள்தான். இருந்தாலும் மறுக்க வேண்டுமென்று கருதினால், எஸ்.ஓ.,-வும், மற்றவர்களும் காரணங்களைச் சொல்லுவார்கள், இது மேடாக இருக்கிறது, ஆகவே மின்சாரம் செல்லாது ; இது பள்ளமான பகுதியில் உள்ள கிணறு, ஆகவே மின்சாரம் பாயும் என்று சொன்னால் அந்த விவசாயிகள்

[திரு. ஜே. எஸ். இராசு] [1969 ஆகஸ்ட் 16

எப்படி புரிந்து கொள்வார்கள்? அதிகாரிகளிடம் எந்த வாதத்தை வைத்துக் கொள்ள முடியும்? ஆகவே, கீழ்மட்டத்தில் இருக்கும் பணியாளர்கள், மேல் மட்டத்திலே இருப்பவர்கள் அல்ல, கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் மக்கள் மத்தியிலேயுள்ள அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு ஏதேனும் தகாத காரணங்களைக் கூடச் சொல்லி வாயை அடைத்துவிடுகிறார்கள். நம்முடைய நாட்டின் தலையெழுத்து, பற்பல தவறுகள், ஊழல்கள், சிற்சில தவறான வழிமுறைகள் ஆகியவற்றைக் கீழ்மட்டத்திலேயிருப்பவர்கள் செய்வதால், நாம் என்னதான் நல்லமுறையிலே காரியங்களைச் செய்தாலும் கூட லாபத்தை அடைய முடிவதில் தாமதம் ஏற்பட வழியேற்பட்டுவிடுகிறது. இத்தகைய தவறுகள் இருக்கின்றனவே என்ற அச்சம் என்னைப்போன்ற தொண்டர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அதை மின்சார வாரியமும், அமைச்சர்களும் நல்லமுறையிலே ஆராய்ந்து அத்தகைய குறைகளைக் களைய பாடுபட வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எத்தனையோ கிராமங்கள் புதிதாக மின்சாரம் பெற்றிருக்கின்றன. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்த பொழுது பல கிராமங்களுக்கு வராமலிருந்த மின்சாரம் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே வந்துவிட்டது. ஆனால் இப்பொழுது பசுமைப்புரட்சி, வேளாண்மைப் புரட்சி, அதிகப்படியான சாகுபடி என்று வேகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது அதிகமான அளவுக்கு புதிதாக டிரான்ஸ்பார்மர் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், ஒரு வீட்டிலே விளக்கு எரியாவிட்டாலும்கூட, சிம்னி விளக்கை வைத்து எரித்துக்கொள்வோம். நிறைய விளக்குகள் இருந்தால் தான் ஊரிலே காரியங்கள் நடக்கும் என்று அல்ல. ஊருக்கு விளக்கு சிறிது தாமதமாக வந்தாலும் பரவாயில்லை. ஆனால் நெல்லை உற்பத்தி செய்ய மின்சாரம் உடனடியாகத் தேவைப்படுவதால், அதிகப்படியான டிரான்ஸ்பார்மர்களைப் போடுவது அவசரமாகியுள்ளது. எனவே தானிய உற்பத்தி பெருகுவதற்கு, எல்லாக் கிணறுகளுக்கும் மின்சாரம் கொடுப்பதற்கு மின்சார வாரியம் மேலும் நன்கு முயற்சிக்க வேண்டும். இதைப்பற்றி சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் முயற்சியெடுத்து வருகிறார்கள். இருந்தாலும் அதை விரைவு படுத்த வேண்டும். மேலக்குணங்குடி, கழுதாளை, பூலாம்பாடி, நெய்க்குப்பை, அரும்பாவூர், மேட்டூர் போன்ற பெரம்பலூர் தொகுதியைச் சார்ந்த கிராமங்களுக்கு சீக்கிரமாக டிரான்ஸ்பார்மர்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1967 தேர்தலின்போது என்னுடைய வட்டாரத்தில் பிரச்சாரம் செய்ய வந்த அப்போதைய அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், தி.மு.க. அரசுக்கு வந்தால் அரிசனங்களுக்கெல்லாம் விளக்கு போடாது, பள்ளிக்கூடங்களை மூடி விடுவார்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர் பேச்சு பொய்யாகும் வகையில் இன்று ஏராளமான அரிசன

1969 ஆகஸ்ட் 16] [திரு. ஜே. எஸ். இராசு]

பேச்சு பொய்யாகும் வகையில் இன்று ஏராளமான அரிசன காலனிகளுக்கு நல்ல முறையிலே மின்சாரம் வழங்கப்பட்டு, எல்லாத் தொழிலிலும் அந்த மக்களுடைய முன்னேற்றத்திலே அக்கறை காட்டப்படுகிறது என்பதை அறிய மகிழ்வு கொள்கிறோம். இதற்காக மின் வாரியத்தினருக்கும், அரிசன நல இலாக்காவினருக்கும் என் நன்றிகலந்த மரியாதையைத் தெரிவித்துக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கீழ்மட்டத்திலே இருக்கிற சிற்சில குறைகளால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதை மின் வாரியத்திற்கு என்னுடைய தாழ்மையான, பணிவன்பான வேண்டுகோளாக இச்சமயத்தில் தெரிவித்து, இந்த அளவிற்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம். பி. ப. 1-00

*திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்திலே இருக்கிற மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் கொள்கை விளக்கங்களை எல்லாம் சொல்லிவிட்டார்கள். அதையே மீண்டும் சொல்லாமல் எனது தொகுதியிலே சில குறைபாடுகள் இருப்பதையும் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் இந்தச் சட்டமன்றத்திற்கு 1962-லே வந்த பொழுது எனது தொகுதியிலே 3 கிராமங்களுக்குத்தான் மின்சார விஸ்தரிப்பு இருந்தது. ஆனால் இன்றைக்கு சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பாகம் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. நான் எதிர்பார்த்த அளவு, எவ்வளவு சீக்கிரத்திலே விஸ்தரிக்கவேண்டுமென்று விரும்பினேனோ அது முடியவில்லை. ஆனால், முதலமைச்சருடைய அறிக்கையின்படி 1971-க்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு கிடைத்துவிடும் என்ற உத்தரவாதம் இருக்கிற காரணத்தினால் இவ்வளவு காலம்—7, 8 ஆண்டு காலம்—பொறுத்திருந்த நான் இன்னும் 2 வருடம் ஏன் பொறுத்திருக்கக் கூடாது என்ற முடிவோடு அதை விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக கிராமப் பகுதிகளிலே மின்சார விஸ்தரிப்புக்கு வழிவகை செய்யப்படுகிறது. அப்படிச் செய்த பிறகு, அந்த விளக்குகள் அதிகாரிகளைக் கொண்டும் ஏற்றப்படுகின்றன, அமைச்சர்களைக் கொண்டும் ஏற்றப்படுகின்றன. அவர்கள் இரண்டு பேரையும் கூப்பிடுவதற்குப் பதிலாக அங்குள்ள பெருந் தலைவர்களை வைத்தும் ஏற்றிவிடுகிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், காங்கிரஸ்காரர்களைச் சொல்லப்போனால், அங்கத்தினர்களை வைத்தே விளக்கேற்றி விடுகிறார்கள். ஏன் இவ்வளவு செலவு செய்து அதிகாரிகளைக் கூப்பிடுவது, மந்திரிகளைக் கூப்பிடுவது; அவர்களுக்கு மாலை போட வேண்டும், இதெல்லாம் தொல்லை, நாமே செய்து விடுவோம் என்று செய்து விடுகிறார்கள். அது வேறு விஷயம். யார் செய்தாலும் பணி

கட்டுவது பஞ்சாயத்திலே உள்ள கிராம மக்கள். அந்தக் கிராமங்களில் ஒரு தடவை விளக்கைப் போட்டுவிட்டு ஒரு வாரம், இரண்டு வாரம் கழித்துப் பார்த்தால் என்ன காரணத்தினாலோ பல விளக்குகள் தீய்ந்து விடுகின்றன. லைன்மேனைப் பார்த்து, 5, 6 விளக்குகள் நின்றுவிட்டன, என்ன காரணம் என்று கேட்டால், பக்கத்திலே மரம் ஆடுகிறது, அதனால் விளக்குகள் தீய்ந்து விடுகின்றன என்று கூறுகிறார். அந்த மரங்களை எல்லாம் வெட்டி விடக் கூடாதா என்று அவரைக் கேட்டால், அது பணக்காரர் மரம், அதை விட்டுவிட வேண்டும் என்று சொல்லுகிறார். ஏழை மரமாக இருந்தால் வெட்ட வேண்டும், பணக்காரர் மரமாக இருந்தால் வெட்டக் கூடாது, வெட்ட முடியாது என்று சட்டத்திலே ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால், “அங்கு இருக்கிற நிலைமையை அனுசரித்துத்தான் நான் இருக்கலாமே தவிர, அப்படி இல்லாவிட்டால், காசை வாங்கினான், பணத்தை வாங்கினான் என்று சொல்வார்கள், ஆபத்தான நிலையில் வைத்து விடுவார்கள் ; ஆகையினால் இதையெல்லாம் அனுசரித்துக்கொண்டு போக வேண்டும்” என்று அந்த லைன்மேன் சொல்கிறார். அவர்களுடைய நிலை அனுதாபத்திற்குரியதாக இருக்கிறது. பணக்காரன் மரமாக இருந்தாலும், ஏழை மரமாக இருந்தாலும், லைனைப் போடும்போதும், லைனைப் போட்டபிறகு வளர்ந்தாலும் அதை வெட்டுவதற்கு அதிகாரம் இலாகாவிற்கு இருக்க வேண்டும். அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது என்னுடைய வானூர் தொகுதிதான். என் பகுதியிலே வெறும் சவுக்குத் தான். நன்செய்யாக இருந்தாலும் சரி, புன்செய்யாக இருந்தாலும் சரி சவுக்குத்தான். கன்றை வைக்கும்போது கம்பம் இருக்கிறது. 2, 3 வருஷம் பொறுத்து, அது வளர்ந்தபிறகு விவசாயிதான் பாதிக்கப்படுகிறான். பாதிக்கப்படுகிற விவசாயி லைன்மேனிடம் சொல்ல முடியுமே தவிர, அவன் மரத்தை தொடமுடியாது. அந்த லைன்மேனும் 5, 6 ஊர்களுக்கு ஒரு ஆள்தான். எந்த ஊரிலே அந்த ஆள் இருக்கிறான் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. ஒவ்வொரு ஊரிலும் குறைந்தது 25, 50, 100 விவசாய பம்ப் செட்களை வைத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தமாதிரி கிராமங்களிலே அந்த பம்ப் செட் இருக்கிற அளவுக்கு, 20, 25 அல்லது 50 பம்ப் செட்கள் இருக்கிற ஊருக்கு ஒரு லைன்மேன் வைத்து, ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அந்தக் கிராமத்திற்குப் போய்ப் பார்க்கிற அளவு நிலைமையை ஏற்படுத்தினால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். என் பகுதியில் ஒரே பஞ்சம். 1966-லே புயல். 1967-லே அதிலிருந்து தப்பிப் பிழைத்தோம். 1968-லே காய்ந்து விட்டன, இன்னும் காய்ந்து கொண்டே இருக்கின்றன. எப்படிப் பிழைப்பது என்றே தெரியவில்லை. முன்பு 6 கஜம் தோண்டினால் 3 குதிரை ஓட்டத்தைக்கொண்டு 4 மணி நேரம் தண்ணீர் இறைக்கலாம். இப்பொழுது 10 கஜம் தண்ணீர் இறவை ஆகிவிட்டது. 10 கஜத்திலே 3 குதிரை ஓட்டத்தைக் கொண்டு மின்சார இணைப்பை கொடுத்தால் 8 கஜம் வரையில் தான் தண்ணீர் எடுக்கும். இனிமேல் 5 குதிரை ஓட்டத்திற்கு பர்

மிஷின் வாங்கி, 3 குதிரை ஓட்டத்தை எடுத்துவிட்டு, பிறகு போடுவது எல்லாம் பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆனால், புதிதாக வேண்டுமானால் அவ்வாறு செய்யுங்கள். ஏற்கனவே 3 குதிரை ஓட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ஆழமாகப் போட்டதனால் 5 குதிரை ஓட்டம் வேண்டுமென்று சொல்கிறார்கள். எங்களுக்கு அதெல்லாம் தெரியாது. பட்டனைத் தட்டினால் தண்ணீர் வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். நமக்கு அது தெரியாது. அதிகாரிகளுக்குத்தான் அது தெரியும். புதிதாக வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு ஏதாவது சொல்லுங்கள். ஏற்கனவே இருப்பவர்களுக்கு தொடர்ந்து, தடங்கலில்லாமல் கிடைக்க வேண்டும். அதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

பஞ்சாயத்துக்களில் தெருவிளக்குகள் எரிந்தாலும் எரியாவிட்டாலும் கட்டணம் எடுத்துக்கொள்கிறார்கள் என்று எதிர்கட்சியிலே ஒரு உறுப்பினர் பேசினார். அது உண்மை. தெரு விளக்குகளுக்குத் தனியாக மீட்டர் வைத்துவிட்டால் என்ன? எவ்வளவு எரிந்ததோ அந்த அளவு பணம் கொடுக்கட்டுமே. விளக்கு எரிந்தாலும் எரியாவிட்டாலும் பணம் எடுத்துக்கொள்கிற கொடுமையை எடுத்துவிட்டு ஒவ்வொரு ஊரிலும் தெரு விளக்குகளுக்கும் தனி மீட்டர் வைத்துவிட்டால், அந்த முறையிலே காரியங்களைச் செய்தால் சர்க்காருக்கும் கெட்ட பெயர் இல்லை, எங்களுக்கும் பொது ஜனங்களிடம் சொல்வதற்கு வசதியாக இருக்கும், அதிகாரிகளுக்கும் கெட்ட பெயர் கிடையாது. இப்பொழுது என்ன நிலைமை என்றால், அதிகாரிகள் தப்பு செய்தாலும் அரசாங்கத்துக்குத்தான் கெட்ட பெயர். நல்லது செய்தாலும் அரசாங்கத்துக்குத்தான் நல்ல பெயர். அதிகாரிகளை நான் கேட்டுக் கொள்ளுவது. நீங்கள் இன்னும் நல்ல திட்டமிட்டு, நல்ல பெயர் வாங்கவேண்டுமென்ற முறையில் வேலை செய்யவேண்டும். அப்படி வேலை செய்தால் சர்க்காருக்கு நல்ல பெயர். எதை எதை எந்த எந்த நேரத்திலே செய்து கொடுக்கவேண்டுமோ அவையெல்லாம் செய்து கொடுத்து பொதுமக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால் ஜனங்களுக்கும் நன்மை, எங்களுக்கும் நன்மை, உங்களுக்கும் நன்மை, அரசாங்கத்துக்கும் நன்மை, நல்ல பெயர். இதையெல்லாம் பரிசீலனை செய்து நீங்கள் நடத்திக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே மற்றொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பக்கத்து வயலுக்கிருக்கிற [illegible] ஒரு ட்ரான்ஸ்போர்மர் வைத்திருந்தார்கள். இப்பொழுது விவசாயிகள் [illegible] பம்ப் செட் போட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களால் கவலையும் இறைக்க முடியவில்லை. ஏற்றத்திலேயும் இறைக்க முடியவில்லை. பக்கத்து வீட்டுக்காரன் பம்ப் செட் வைத்து தண்ணீர் இறைக்கிறான். நாம் என் கவலையையும் வைத்துக்கொண்டு, ஏற்றத்தையும் வைத்துக் கொண்டு இருக்கவேண்டுமென்று விவசாயி நினைக்கிறான். [illegible] கடன்பட்டு, தொல்லையை [illegible]. மோட்டாருக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அந்தமாதிரி நேரத்திலே

என்ன சங்கடம் இருக்கிறது என்று சொன்னால் 10 வருடத்திற்கு முன்னால் 50 கிலோ வாட்ஸ், அல்லது 100 கிலோ வாட்ஸ் பவருள்ள டிரான்ஸ்ஃபார்மர்கள் வைத்தார்கள். இப்பொழுது அதிகப்படியாக வேண்டுமென்று சொன்னால் அதை மாற்றினால்தான் முடியும் என்று என்னைமாதிரிக் கேட்கிறவர்களுக்கு பதில் சொல்லிவிடுகிறார்கள். எந்த அளவுக்கு அது உண்மை? எனக்கும் புரியவில்லை. நேரத்தைக் கடத்துவதற்காக அப்படிப் பதில் சொல்கிறார்கள் என்று எங்களுக்கும் புரியும். ஒரு அதிகாரியைப் பார்த்து, அடிஷனல் சர்வீஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை யாரைப் போய் கேட்பது, எப்பொழுது மாற்றுவது என்று கேட்டால், அதை மாற்ற சீப் இன்ஜினியரைப் பார்க்க வேண்டும், சேர்மனைப் பார்க்கவேண்டும், மினிஸ்டரைப் பார்க்க வேண்டும், அப்படிப் பார்த்தாலும் கூட கிடைக்கிறதோ இல்லையோ என்று சொல்லுகிறார்கள். விவசாயிக்கு பக்கத்து வீட்டுக்காரன் பம்ப் செட் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அவன் கரன்ட் வைத்து தண்ணீர் இறைக்கிறான், நாம் ஏன் கவலை, ஏற்றம் கொண்டு இறைக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றி, நாமும் அதைப்போல் பம்ப் செட்டுக்கு மாற்ற வேண்டுமென்ற ஆசை எழுகிறது. இதையெல்லாம் சீராக்கத்தக்க அளவிலே, 10 வருடத்திற்கு முன்னால் இருந்ததைவிட இப்பொழுது அதிகப்படியாக அபிவிருத்தி அடைந்திருக்கிற காரணத்தாலே ஒரு சர்வே எடுத்து, எங்கெங்கு விஸ்தரிப்பு தேவைப்படுகிறது. எங்கெங்கே அவசியம் மாற்றவேண்டும். எங்கெங்கு மாற்ற வழி இருக்கிறது என்ற கணக்கைப் பார்த்து மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தால், நானும் இதை மாற்று, அதை மாற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நண்பர் மாரிமுத்துவும் மாற்று, மாற்று என்று சொல்ல வேண்டியதில்லை. மற்ற அங்கத்தினர்களும் அவரவர் தொகுதியில் மாற்ற வேண்டுமென்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதைப்பற்றி பொதுவாக ஒரு சர்வே பண்ணி, எந்த வருஷம் பம்பு செட் வைத்தார், அதற்குப் பிற்பாடு தேவை வளர்ந்திருக்கிறதா, எத்தனை ஹார்ஸ் பவர் மோட்டார் கேட்கிறார் என்பதைப்பற்றியெல்லாம் சர்வே செய்து, சப்ளைடாவாக மாற்றிவிட்டால் எல்லோருடைய குறைகளும் நிவர்த்தியாகிவிடும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த டிபார்ட்மென்டில் இன்னொரு பெருத்த சங்கடம் இருக்கிறது. 10 வருஷங்கள், 8 வருஷங்கள் ஆகியும் இன்னும் தினக் கூலிகளாகவே வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் அவர்கள் பெரும்பகுதி அரிஜனங்களாக இருக்கிறார்கள். அது தான் எனக்கு இருக்கிற கவலை. மற்றவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள். அரிஜனங்களாக இருக்கிற காரணத்தினால், எங்கள் மாதிரி ஆட்களிடம் 'என்ன, ஸார், யாரும் கேட்கமாட்டேன் என்கிறார்களே. நீங்கள் தான் சொல்லவேண்டும்' என்ற ஒரு ஆசையோடு எங்களிடம் சொன்னால் அமைச்சரைப் பார்ப்போம், அதிகாரிகளைப் பார்ப்போம். குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்று ஆசையோடு சொல்கிறார்கள். அந்த

நம்பிக்கையோடு அதை இந்த இடத்தில் உங்களிடம் சொல்கிறேன். தினக் கூலி என்ற நிலை இல்லாமல், தயவு செய்து அவர்களை நிரந்தரக் கூலிகளாக ஆக்கி, முடிந்தால் மாதச் சம்பளக்காரர்களாக ஆக்கிவிட்டால் சர்க்காருக்கும் நஷ்டம் இல்லை, கிராமங்களில் தினமும் ஆட்கள் தேவைப்படுகிறார்கள், மின்சார விஸ்தரிப்பு இல்லாமல் இல்லை, மின்சார இலாகாவில் அதிக ஆட்கள் தேவைப்படுகிறார்கள், அப்பொழுதெல்லாம் இந்த மாதிரி ஆட்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நேரத்தில் அவர்களுக்குத் தக்க பிரமோஷன் கொடுத்தால், அவர்களும் சந்தோஷமாக வேலை செய்வார்கள், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். ஆகவே, அந்த நிலை ஏற்படும்படி செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார இலாகாவில் பணியாற்றுகின்ற அத்தனை அதிகாரிகளுக்கும்—மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு அந்த நெருக்கடி இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை—கிராம மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு எப்பொழுதும் ஒரு அபாயம் இருக்கிறது. சாதாரணமாக மனிதனுக்கு பாம்பு கடித்தால் கூட 10 கெஜம், 20 கெஜம் தூரம் போய், விஷம் தலைக்கு ஏறி, மயக்கம் வந்து பிறகு தான் சாவு ஏற்படுகிறது. ஆனால், மின்சாரத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு, தவறாக தொடக்கூடாத இடத்தைத் தொட்டு விட்டால் அந்த இடத்திலேயே மின்சாரம் பாய்ந்து செத்து விழக் கூடிய அபாயம் இருக்கிறது. அதற்கு அவனுக்கு ஒருவிதமான உத்திரவாதமும் கிடையாது. அவனுக்குப் பிறகு அவனுடைய குடும்பம் என்ன ஆவது என்பது தெரியவில்லை. அம்மாதிரி சூழ்நிலையில் அந்தத் தொழிலாளி இறந்தால், அவனுடைய குடும்பத்துக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அளவில் நமது அரசாங்கம் ஏதாவது உத்திரவாதம் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியிலே இன்னும் மின் இணைப்பு பெறாமல் அநேகக் கிராமங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, சீக்கிரம் 1971-க்குள்ளாவது அவைகளுக்கு மின் இணைப்பு கொடுத்தால் நலமாக இருக்கும் என்ற வேண்டுகோளைச் சொல்லி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நடைபெற்றுவரும் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புதிய அமைச்சர் அவையிலே வாலிபாக இருக்கக்கூடிய, நல்ல ஒரு எழுச்சி உள்ள, சுறுசுறுப்பாக வேலை செய்யக் கூடிய ஒருவரை மின்சாரத்துறை அமைச்சராகப் பெற்று இருப்பது எங்களைப்போன்றவர்களுக்கெல்லாம் பெரிய மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மின்சாரம் எப்படி சுறுசுறுப்பாக இயங்குகின்றதோ அந்த அளவுக்கு சுழன்று ஓடி ஆடி வேலை செய்யக் கூடிய ஆற்றலும், வாய்ப்பும் மின்சார அமைச்சர் அவர்களுக்கு

இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மின்சார இலாகாவில் விவசாயிகளுக்கு நல்ல சலுகைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதுவும் அமைச்சர் அவர்கள் விவசாயத் துறையிலே கிராமத்திலிருந்து வந்திருப்பவர். விவசாயத் துறையிலே பம்ப் செட்டுகள் வைத்துக்கொண்டிருக்கும் அத்தனை பேர்களையும் திருப்தி செய்வது என்பது முடியாத காரியமானாலும், ஏறக்குறைய விவசாயிகளுடைய குறைகளில் கவனம் செலுத்தி, எந்தெந்தக் குறைகளை ரெக்டிபை செய்ய முடியுமோ அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான முறைகளை வகுத்துக்கொள்வது சாலச் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

முதலாவதாக ஒன்று சொல்கிறேன். விவசாயப் பிரதிநிதி என்ற முறையில் இந்தச் சட்டமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். இந்த நிறுவனத்திற்கும் சொல்கிறேன். விவசாயத் துறையிலே 20 சதவீதம் சர்சார்ஜ் வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். முன்பிருந்த காங்கிரஸ் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் வேறு முறையில் இருக்கக்கூடிய பல சிக்கல்களை எடுத்துவிட்டு, ஒரே மொத்தமாக 20 சத வீதம் சர்சார்ஜ் விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். சர்சார்ஜ் கூடாது என்று அப்பொழுதேகூட சொன்னோம். லோ டென்ஷன், ஹை டென்ஷன் என்று இருவகையாகப் பிரித்து, சர்சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. உணவு தானிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் கூடுமானவரையில் பம்பு செட்டுகளுக்கு விதிக்கப்படுகிற சர்சார்ஜை ஓரளவுக்காவது குறைக்க வேண்டும். நான் சர்சார்ஜை முழுவதும் எடுத்துவிடவேண்டும் என்று சொல்லவில்லை. சர்க்காருக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதை நான் உணர்கிறேன். இருந்தாலும், கூடுமானவரையில் சர்சார்ஜை கொஞ்சம் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டகத்தின் முதுகின் மேல் ஏராளமான பாரத்தை ஏற்றிவிட்டு கொஞ்சம் குறைப்பதுபோலாவது இந்த சர்சார்ஜைக் கொஞ்சம் குறைக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு இந்த நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் இரண்டு துறைகளிலும் நல்ல தேர்ச்சிபெற்றவர். டெக்னிகல் துறையிலும் சரி, நிர்வாகத் துறையிலும் சரி, நல்ல தேர்ச்சி பெற்றவராக இருந்தார். நான் வேறு யாரையும் சொல்லவில்லை. திரு. அப்பாதுரை முதலியார் அவர்களைத் தான் சொல்கிறேன். வேறு யாரையும் சொல்லவில்லை. அவருக்கு கன்னியாகுமரியிலிருந்து காவேரிப்பாக்கம் வரையிலும் நன்றாகத் தெரியும். அதேமாதிரி சென்னையிலிருந்து சதுரங்கப்பட்டணம் வரையிலும் நன்றாகத் தெரியும். எந்தெந்த டிபார்ட்மெண்டுகளில் யார் யார் வேலை செய்கிறார்கள். எப்படி வேலை செய்கிறார்கள், என்ன வேலை செய்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது இருக்கக்கூடிய தலைவரும் நல்லமுறையில் பணியாற்றக்கூடியவர் தான். அவர் ரெவின்யூ போர்டிலிருந்து வந்தவர். அவரும் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமே கிடையாது. யார் அவரிடத்தில் சென்றாலும் குறைகளைக் கேட்டு அதற்குத் தகுந்த வழி முறைகளை வகுத்து, குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அதில் ஒரு சங்கடமான பிரச்சினை இருக்கிறது. டெக்னிகல் துறை என்பது அவருக்குப் புதியதாக இருக்கிறது. நிர்வாகத் துறையில் எவ்வளவு வேண்டுமானாலும் அவர்களுக்குத் தெரியும். ஆனால், டெக்னிகல் லைனில் படித்தவர்கள், என்ஜினியராக இருந்து வந்தவர்கள் இந்த நிறுவனத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டால் மிகவும் நலமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதைப்பற்றி இந்த அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்ஜினியராகப் பணியாற்றுபவர்களை, அவர்கள் ஓர் இடத்தில் ஒரு வருஷம், இரண்டு வருஷம் வேலை பார்த்தவுடன் அவர்களை வேறு இடத்திற்கு டிரான்ஸ்பர் செய்வது என்பது கூடாது. எந்த இடத்தில் என்ன இருக்கிறது, யார் யார் எப்படி எப்படி வேலை செய்கிறார்கள், எங்கு எங்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன, எந்தெந்த இடங்களுக்கு சர்வீஸ் கொடுக்கவேண்டும், எந்த எந்த இடத்திலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன என்பதையெல்லாம் பற்றித் தெரிந்துகொள்வதற்கே அவர்களுக்கு ஒரு வருஷம். 6 மாதம் ஆகிவிடுகிறது. அதற்குள் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டால், புதியதாக வருபவர்கள் மறுபடியும் அந்த வேலையை முதலிலிருந்து தொடங்கவேண்டி இருக்கிறது. இப்படிப் பட்ட நிலை ஏற்படாமல் இருப்பதற்கு, அசிஸ்டெண்டு என்ஜினியராக இருந்தாலும் சரி, டிவிஷனல் இன்ஜினியராக இருந்தாலும் சரி, சீப் என்ஜினியராக இருந்தாலும் சரி, 4 வருஷம், 5 வருஷம் ஓர் இடத்தில் இருந்தால்தான் நன்றாகப் பணியாற்ற முடியும். இரண்டு வருஷம், ஒரு வருஷத்திற்குள் மாற்றிவிட்டால், அவர்கள் நன்றாகப் பணியாற்ற முடியாது. அரசாங்கம் இதையும் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்ஜினியர்கள் என்ஜினியரிங் கல்லூரியில் படித்துவிட்டு வேலைக்கு வருகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய் அனுப்பி, அவர்கள் படித்து பட்டம் பெற்று வேலை செய்வதற்கு வருகிறார்கள். படித்தவர்களுக்கு வேலை இல்லை என்ற பிரச்சினை இருக்கிறது. நிறையப் பேர்கள் படித்து பட்டம் பெற்று வந்துவிட்டால், அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு எங்கே போவது என்று அரசாங்கத் தரப்பில் உள்ளவர்கள் சொல்வார்கள். அந்த நிலைமையையும் நான் உணர்கிறேன். இருந்தாலும். அவர்கள் என்ன படிப்பு படித்துவிட்டு வந்திருக்கிறார்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறார்கள். எவ்வளவு புத்தகங்கள் படித்துவிட்டு வந்திருக்கிறார்கள், எவ்வளவு வருஷம் படித்துவிட்டு வேலைக்கு வந்திருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு தினத்

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [1969 ஆகஸ்ட் 16

திற்கு ரூ. 3½ கொடுப்பது என்ன நியாயம்? அதாவது என்ஜினியரிங் காலேஜில் படித்து பட்டம் பெற்றவர் ஒருவர் வேலைக்கு வந்தால், டெய்லி வேஜஸ் என்ற முறையில் அவருக்கு ரூ. 3½ தான் கொடுக்கப்படுகிறது. இதை ரூ. 7 என்ற அளவுக்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ கொஞ்சம் படித்துவிட்டு நாம் சட்டமன்றத்திற்கு வந்து விடுகிறோம். அவர்கள் எத்தனை வருஷம், எத்தனை புத்தகங்களைக் கஷ்டப்பட்டு படித்து வேலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, ரூ. 3½ என்பதை ரூ. 7 என்ற அளவுக்காவது உயர்த்திக் கொடுப்பது பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று அமைச்சர் அவையையும் இந்த நிறுவனத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் என்.எம்.ஆர். கூலிகள் என்று பணியாற்றுகிறார்கள், ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட மாதங்கள்தான் வேலை கொடுக்கிறார்கள், அவர்கள் எங்களைப் போன்ற எம்.எல்.ஏ. கள் எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்து சிபாரிசுக் கடிதம் கேட்கிறார்கள், நாங்கள் மேல் அதிகாரிகளிடத்திலோ அல்லது அமைச்சரிடத்திலோ போய்ச் சொல்லுகிறோம். அமைச்சரும், 'சரி, ஆகட்டும், பார்க்கலாம்' என்று சொல்லுகிறார்கள். அந்த நிறுவனத்தாரிடம் சொல்வார்கள். அவர்களும் அமைச்சர் ரெகமண்டேஷன் பேரில் ஒரு ஆறு மாதத்திற்கு வேலைக்குப் போடுவார்கள். பிறகு வேலையில்லை என்று வேலையிலிருந்து மூன்று மாதத்திற்கு நீக்கிவிடுகிறார்கள் இப்படி விட்டு விட்டு இரண்டு மூன்று ஆண்டுகள் வேலை செய்தவர்களைக் கூட, பர்மெனன்ட் ஆக்காமல் இருப்பதற்காக நடு நடுவே மூன்று மாதத்திற்கு வேலையிலிருந்து நீக்கி வைக்கிறார்கள். இப்படி நிறுத்தி நிறுத்தி, பிறகு வேலைக்கு எடுக்கிறார்கள். அதனால் 10 வருஷமாக வேலை செய்திருந்தாலும் கூட மூன்று மாதத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டு பிற்பாடு வேலைக்கு எடுத்துக் கொள்ளும் வழக்கம் இருக்கிறது. இதைப் பற்றி அந்த நிறுவனம் ஆலோசிக்க வேண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தின் சாதனைகள் மிகப் பெரிய சாதனைகள். அதில் ஒன்றும் தவறில்லை. 1959-ல் தனி நபர் உபயோகித்தது 12 யூனிட்டாக இருந்தது இன்றைக்கு சராசரி 118 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது என்றால் அது பெரிய சாதனைதான். அந்த வாரியமும் நன்றாகச் செயல்பட்டிருக்கிறது, அதை அரசாங்கமும் நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். சந்தேகம் இல்லை.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் மின்சார இணைப்பு உள்ள இடங்களில் ஹெல்பர் இருக்கிறார் என்றால், அவர் போய் 'ஃப்யூஸ்' போடவேண்டும் என்றால் இரண்டு மைல் இரண்டரை மைல் நடந்து போய்ப் போட வேண்டியிருக்கிறது. அப்படி அவர் நடந்து போய் போடுவதற்குள் விவசாயிக்கு எவ்வளவோ கஷ்டமாகப் போய்விடுகிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரை நாள் என்றால் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் பார்க்க வேண்டும். நடவு வேலை, கிணற்றுப் பாசன வேலை முதலியவை தடைப்பட்டுப் போகும்.

1969 ஆகஸ்ட் 16] [திரு. எஸ். ஜே ராமசாமி]

ஆகவே எங்கெல்லாம் ஹெல்பர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் ஒரு சைக்கிள் கொடுக்க மின்சார நிறுவனம் ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். எங்கெல்லாம் எலெக்ட்ரிக் லைன் இருக்கிறதோ, அந்த ஊரிலெல்லாம் அந்த ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். இந்த எலக்டிரிசிட்டி போர்டுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. அவர்களுக்கு நிறைய வருமானம் வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அவர்கள் சிக்கனம் சிக்கனம் என்று சொல்லிக்கொண்டு, எதையும் செய்யத் தயங்குகிறார்கள். அவ்வளவு சிக்கனம் செய்யத் தேவையில்லை. என்னென்ன குறை என்று பார்த்து, ஹெல்பர்கள் இருக்கக்கூடிய இடங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால், ஏதாவது தவறு என்றால், மேல் அதிகாரிகள் போனால் கூட, அங்கே ஹெல்பர் இருக்க மாட்டார். கேட்டால், இங்கே வீடு இல்லை, அங்கே இருக்கிறேன், இங்கே இருக்கிறேன் என்பார்கள். கிராமங்கள் சென்னையைப் போல அல்ல. நிறைய வீடுகள் கிடைக்கும் என்ற நிலை இல்லை. ஆகவே எங்கெல்லாம் கனெக்ஷன் கொடுக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த ஊழியர்களுக்கும் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தச் சிறந்த துறையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சரவர்கள் இவற்றிற்கெல்லாம் தகுந்த பரிகாரம் தேடுவார்கள், அடுத்த வருஷம் இப்படிப்பட்ட புத்தகத்தில், 'நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம்' என்று மட்டும் போடாமல், குறைகளைத் தீர்க்க நல்ல பல ஏற்பாடுகளையும் செய்வார்கள் என்று எதிர்பார்த்து, என் உரையை முடிக்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(iii) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளை பேரவைக்கு இப்பொழுது அறிவிக்கிறேன்.

16th August 1969 (Saturday).	Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1969–70 and Supplementary Financial Statement for 1968–69.
17th August 1969 (Sunday).	HOLIDAY.
18th August 1969 (Monday).	Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1969–70 and Supplementary Financial Statement for 1968–69.
19th August 1969 (Tuesday).	Do. (last day).

20th August 1969 (Wednesday).	(a) Presentation of— (1) Demands for Grants for Excess Expenditure in the year 1965-66. (2) First Supplementary Statement of Expenditure for the year 1969–70. (b) Discussion on the draft outline of the Fourth Five Year Plan of Tamil Nadu (1969–1974).
21st August 1969 (Thursday).	Non-Official Day.
22nd August 1969 (Friday).	Discussion on the Draft Outline of the Fourth Five Year Plan of Tamil Nadu (1969–1974) (Last day).
23rd August 1969 (Saturday).	(1) Discussion and Voting of Demands— (i) for Grants for Excess Expenditure in the year 1965–66; (ii) for First Supplementary Statement of Expenditure for the year 1969–70. (2) Introduction of Appropriation Bills.
24th August 1969 (Sunday).	HOLIDAY.
25th August 1969 (Monday). 26th August 1969 (Tuesday).	Consideration and passing of Appropriation Bills and other Official Bills and Resolutions.
27th August 1969 (Wednesday).	(1) Discussion on the Report of the Commission of Inquiry on the Agrarian Labour Problems of East Thanjavur District by Thiru S. Ganapatia Pillai. (2) Consideration and Passing of the Bill to replace Ordinance (viz) "The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 4 of 1969)"

The House will sit as usual from 9 A.M.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 18—8—1969 திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில் பேரவை
பி. ப. 1.25 மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

107. Notification issued with G.O. Ms. No. 708, Rurtal Development and Local Administration, dated the 16th April 1969, in regard to an amendment to the rules relating to Receipts and Expenditure of Panchayats published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A. 123 (*a*) of 1962, dated the 1st February 1962 (Notification No. 9), published at pages 58–66 of Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 14th February 1962. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.]

B. *Reports, Notifications and other papers.*

27. Notification issued with G.O. Ms. No. 126, Rural Development and Local Administration, dated the 25th January 1969, in regard to Removal of Thiru M. Alagiriswami, Ex-M.L.A. from the membership of the office of the Kodaikanal Township Committee.

இணைப்பு I.

[62ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

எண், விவரங்கள் (1)	முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). (2)	முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). (3)	இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). (4)	மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). (5)	1969 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி. (6)
A. உற்பத்தி—					
1 நிறுவப்பட்ட திறனளவு மெகவாட்டில்.	156	256	571	1,070+ 300 (நெய்வேலி)	1,070+ 500 (நெய்வேலி)
2 மின்சக்தி பெரும் தேவை மெகவாட்டில்.	110	172	381	717	997
3 உற்பத்தி செய்த மின்சாரமும், வாங்கப்பட்ட மின்சாரமும் (பத்து லட்சம் யூனிட்டுகளில்).	630	1,053	2,214	4,041	5,260
B. அனுப்புதலும், வழங்குதலும்—					
1 உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில்.	6,936	11,479	24,194	39,806	48,595
2 குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில்.	5,728	13,005	35,352	73,198	104,654
3 கூடுதல் உயர் அழுத்த மின் சக்தித் துணை நிலையங்கள்.	31	48	70	98	123
4 உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள்.	25	41	78	103	113
5 பங்கிட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை.	1,591	3,773	10,004	17,360	22,539
6 மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (லட்சக் கணக்கில்).	2·5	4·3	7·7	13·6	18·2
7 நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்).	12	21	60	94	116
C. கிராமங்களுக்கு மின்சார வசதி—					
1 மின்சார வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	1,813	3,543	10,760	22,137	31,727
2 மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை.	14,373	32,440	117,697	256,594	402,239
D. செலவும், வருவாயும்—					
1 மூலதனச் செலவு (ரூ. கோடிக் கணக்கில்).	23·82	54·01	133·21	253·28	357·77
2 மொத்த வருவாய் (ரூ. கோடிக் கணக்கில்).	3·18	5·94	15·29	34.67	49·29

இணைப்பு I-A.

[62-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1967-68, 1968-69, 1969-70 ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு.

எண், திட்டத்தின் பெயர். (1)	1967-68-ல் ஏற்பட்ட செலவு. (2)	1968-69-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3)	1968-69-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு (4)	1968-69-ல் ஏற்பட்ட செலவு (5)	1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (6)
		(ரூபாய் இலட்சத்தில்.)			
I. உற்பத்தித் திட்டங்கள்—					
A. தொடர்ந்து வரும் திட்டங்கள்—					
1 பெரியாறு புனல் மின்சாரத் திட்டம் II-ம் நிலை	—1·59	0·23	1·23	—0·40	..
2 மேட்டூர் சுரங்கப்பாதை திட்டம்.	—7·86	..	8·12	—0·51	..
3 குந்தா புனல் மின்சாரத் திட்டம் III-ம் நிலை	57·03	11·00	11·00	17·38	10·00
4 பரம்பிக்குளம்-ஆழியாறு புனல் மின்சாரத் திட்டம்	3,27·05	2,20·00	2,20·00	2,21·97	2,20·00
5 கோதையாறு புனல் மின்சாரத் திட்டம்	3,55·54	3,00·00	3,00·00	3,03·01	2,68·00
6 சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் IV-ம் நிலை.	2,49·94	1,75·00	1,75·00	1,07·36	1,23·18
7 எண்ணூர் அனல் மின் நிலையம்	11,25·80	15,00·00	14,25·00	14,31·51	17,00·00
8 பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டம்	..	..	10·00	10·25	15·00
9 குந்தா புனல் மின் திட்டம் IV-ம் நிலை	..	..	..	..	5·00

10 எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவு படுத்துதல்	..	1·00	1·00	..	5·00
B. புதிய திட்டங்கள்— 1 நடுவட்டம் மாற்றுத் திட்டம் 2 கடம்பாறை புனல் மின் திட்டம் 3 சுருளியாறு புனல் மின் திட்டம் 4 மேல் தாமிரவருணி புனல் மின் திட்டத்தின் கீழ் சேர்வலாறு மின் நிலையம் 5 நெல்லித்துறை புனல் மின் திட்டம். 6 மேல் அமராவதி புனல் மின் திட்டம். 7 பரலையாறு புனல் மின் திட்டம். 8 சோழத்திபுழா புனல் மின் திட்டம் (தமிழ் நாட்டின் பங்கு).	...	..	..	..	20·00
II. மின்சக்தி அனுப்புதல், பங்கிட்டு வழங்குதல் திட்டம்.	3,51·12	4,00·00	8,30·00	7,94·09	4,15·00
III. கிராமப் புறங்களுக்கு மின் வசதி அளித்தல்.	9,06·88	6,00·00	12,50·00	13,47·01	8,75·00*
IV. புதுத் திட்டங்கள் குறித்த ஆய்வு	5·73	9·50	5·10	4·64	5·00
V. மின்சக்தி நிறுவனம்—ஆராய்ச்சிகள்.	...	..	...	..	2·00
VI. மின்சார நிறுவனங்களைக் கையகப் படுத்துதல்.	..	..	..	..	25·00
மொத்தம் ..	33,69·64	32,16·73	42,36·45	42,36·31	36,88·18

* நிறுவன நிதியிலிருந்து செலவிடப்படவிருக்கும் ரூபாய் 375 இலட்சம் இதில் அடங்கவில்லை.

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4. Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. AIR BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு—30—7—1970)
Issued—30—7—1970)

443/70
3 - OCT 1970
எழும்பூர், சென்னை
1029

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1969 ஆகஸ்ட் 18

Monday, 18th August 1969

தொகுதி XXI—எண் 3
Volume XXI—No. 3

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்)
Price, 50 Paise)

உள்ளடக்கம்.

	பக்கங்கள்.
1. வினாக்கள்—விடைகள்	135–156
2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்—	
குடிதண்ணீர்ப் பற்றாக்குறை	157
3. அறிவிப்பு—	
மாற்றுத் தலைவர்கள் பட்டியல்	157–158
4. அரசினர் மசோதா—	
தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர் தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா	158
5. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம் (தொடர்ச்சி) ..	158–226
6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்	226

தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1969 ஆகஸ்ட் 18

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 11 முதல் **14** வரையிலும் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Family Cards Scheme in Coimbatore district.

* 15 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether Family card scheme has been introduced in about 239 villages in Coimbatore district from the last week of December 1968?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்கனவே குடும்பக்கார்டு முறை சில பகுதிகளில் அமலிலுள்ளது. சில பகுதிகளில் அரிசி விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் கடைசி வாரத்தில் சுமார் 270 கிராமங்களுக்கு, கோதுமையுடன் அரிசியும் கொடுக்க மாவட்ட ஆட்சியாளர் ஆணையிட்டார்.

திரு. கே. விநயகம் : இந்தக் குடும்பக்கார்டு முறை சுமார் 270 கிராமங்களில் விநியோகிப்பதற்காக எடுத்துக் கொள்ளப் பட்ட முறையில் எந்த அளவிற்கு அரிசி, எந்த அளவிற்குக் கோதுமை கொடுக்கப்படுகிறது ? அந்த அரிசி மலிவு விலையில் சென்னையில் கொடுக்கப்படுகிறமாதிரி கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூரில் மட்டும் அல்ல, குடும்ப கார்டு அமலில் இருக்கிற பகுதியிலே கொடுத்துக் கொண்டிருக்கிறது. குடும்பக் கார்டு முறை அமலில் இருக்கிற பகுதிகளிலே 800 கிராம் அளவிற்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். சில இடங்களில் 400, 500 கிராம் என்று கொடுத்துக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விலையைப் பொறுத்தவரையில், சென்னையிலே அதாவது ஸ்டாசுடரி ரேஷன் இருக்கிற பகுதிகளிலே என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த விலைக்குக் கொடுக்க முடியாது. படி அரிசித் திட்டத்தின் கீழ் அது வராது. கோயம்புத்தூரிலுள்ள நிலைமையைப்பற்றி மாவட்ட ஆட்சியாளர்களால் சிபார்சு செய்யப்பட்டு, ஒத்துக் கொண்டிருக்கிறோம்.

[1969 ஆகஸ்ட் 18

திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி : இராமநாதபுரம் மாவட்டம், ஆர்க்காடு மாவட்டங்களிலும் ஜில்லா பூராவும் இந்த முறையை அமல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குடும்பக் கார்டு திட்டம் எப்போது அமலுக்கு வந்தது என்பதைக் கொஞ்சம் விளக்க விரும்புகிறேன். மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி கொண்டு போவதற்குக் கட்டுப்பாடு இருந்தபோது அரசாங்கம் கொள்முதல் செய்து கொண்டிருந்தது என்று சொன்னோம். இப்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம் இடையிலே இருக்கிற தடை நீக்கப் பட்டிருக்கிறது. நியாயமாகக் குடும்பக் கார்டு முறையே அவசிய மில்லை என்று வாதாடலாம். ஆனால் இது அறுவடை இல்லாத காலமாக இருப்பதாலும், அரிசிப் பற்றாக்குறை இருப்பதாலும் அரசாங்கம் தங்களுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் கூட தொடர்ந்து கொடுக்க முன்வந்திருக்கிறது. அரிசி இல்லை என்ற காரணத்தினால் மேற் கொண்டு விரிவாக்க உத்தேசம் இல்லை. அரிசிதான் இல்லை; கோதுமையையும், மைலோவையும் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்க அரசாங்கம் தயாராய் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : குறிப்பிடப்பட்டிருக்கிற கோயம் புத்தூரில் இருக்கிற கிராமங்களில் குடும்பக் கார்டு முறையைக் கொண்டு வந்தார்களே தவிர வாரம் தோறும் அல்லது மாதம் தோறும் சரிவரக் கொடுக்க முடியாமல் அதைக் கைவிட்டது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் ஏற்கெனவே குடும்பக் கார்டு முறை அமலில் உள்ள சுமார் 270 கிராமங்களுக்கு அரிசி கொடுக்கலாம் எனக் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியாளர் ஆணையிட்டார். ஆனால் தற்போது அரிசி குறைவாக உள்ளதால் அக்கிராமங்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே முனிசிபல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆயிரம் கிராம் அரிசியாகவும், மற்ற பகுதிகளிலே முனிசிபல் ஏரியாவில் வேலை செய்தாலும் கூட அவர்களுக்குப் பாதியாகவும் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் பல்லடம் போன்ற பஞ்சப் பகுதிகளிலே அங்கேயுள்ள விவசாயத் தொழி லாளர்களுக்கு அந்த அளவிற்கு அரிசி விநியோகம் செய்ய அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் அவர் கள் சொல்வதற்கு ஒரு திருத்தம் சொல்ல விரும்புகிறேன். சட்ட பூர்வமாக பங்கீட்டு முறையில் ஆயிரம் கிராம்தான் என்று சொன் னார்கள். ஆயிரம் கிராம் அல்ல 1,400 கிராம் அரிசியும் 350 கிராம்

1969 ஆகஸ்ட் 18]

கோதுமையும் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் நபர் ஒன்றுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கிற பகுதிகளில் நிறுத்துவதில்லை. ஆனால், அதை மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு அரிசி கையிருப்பில் இல்லாத காரணத்தினால் அரிசியைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். கோதுமை, சோளம், மைலோவைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் சொல்லுகிற போது மாவட்டத்திற்கு மாவட்டம் கொண்டு செல்லுகிற தடையை நீக்கிவிட்டோம் என்று சொன்னார்கள். சாதாரணமாக, ரைஸ் மில்களுக்குக் கொண்டு செல்லுகின்ற தடையை நீக்கி விட்டோம் என்று சொன்னார்கள். சாதாரணமாக ரைஸ் மில்களுக்குக் கொண்டு செல்லுகின்றபோது அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற போலீஸ் படை பிடிக்கிறது. அப்படிப் பிடிக்கக் கூடாதென்று உத்திரவு போடுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : தற்போது மழை இல்லாத காரணத் தினால் பல பகுதிகளை வறட்சிப் பகுதியென்று அறிவித்திருக்கிறோம். அந்த இடங்களில் உணவுப் பொருள்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை என்று அரசாங்கம் கருதுகிறதா ? ஸ்டாசுடரி ரேஷன் உள்ள இடங்களிலே வேலை செய்துகொண்டு வெளியிலே இருக்கிறவர்களுக்கும் இதுபோல் கொடுக்க வேண்டு மென்று அரசாங்கம் உணருகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குடும்பக் கார்டு முறை அமலில் உள்ள இடங்களில் பொதுச் சந்தையிலே அரிசி விற்கலாம், எந்தவிதமான தடையும் இல்லை. சில்லரை வியாபாரம் செய்வதை அரசாங்கம் தடை செய்வதில்லை. ஸ்டாசுடரி ஏரியாவில் வேலை செய்துகொண்டு வெளியிலே குடும்பங்களை வைத்துக் கொண்டிருப் பவர்களுக்கு 1,400 கிராம் கொடுக்க வேண்டும் என்று சொல்வதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : திருநெல்வேலியிலுள்ள இராதாபுரம் உப வட்டத்தில் நபர் ஒன்றுக்கு 300 கிராம் அரிசி தான் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார் களா ? திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரி மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போகக்கூடாதென்று செக் போஸ்ட் மூலம் தடை செய்கிறார்கள். அந்தத் தடையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரி வரை அரிசி கொண்டுபோவதை அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை. ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களில் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற முறையில் அங்கு

[1969 ஆகஸ்ட் 18

மட்டும் தடை விதிக்கப்பட்டது. 300 கிராம் ஏதோ ஒரு கிராமத்தில் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே இருந்த அளவைக் குறைக்கவில்லை. தமிழகம் பூராவிற்கும் வாரம் ஒன்றுக்கு 12,500 டன் தேவைப்படுகிறது. அரசாங்கத்தினிடத்திலே இருக்கிற கையிருப்பையும், அதையும் பார்க்கும்போது மேற்கொண்டு விரிவு படுத்த முடியாத நிலை இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுமார் 239 கிராமங்களில் குடும்பக் கார்டு முறை அமலுக்குக் கொண்டுவரப்பட்டதா என்பதுபற்றிய சிறப்புக் கேள்வி. அதைப் பொதுக் கேள்வியாக்கி மற்ற, மற்ற பகுதிகளைப்பற்றிய கேள்விகளைப் போட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். கிட்டப்பா : இந்த புதிய அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழகத்திலே எத்தனை அதிகப்படியான குடும்பங்களுக்குக் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை நபர்கள் அதனால் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராமநாதபுரம் ஜில்லா ஒரு வறட்சியான பிரதேசம். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து அரிசி வந்தால்தான் இராமநாதபுரம் ஜில்லாவில் அரிசி வாங்கி சாப்பிட முடியும். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு இருப்பதனால், இராமநாதபுரம் ஜில்லாவில் அரிசி கிடைப்பதற்குத் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கட்டுப்பாட்டை அவிழ்த்து விடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்டத்தில் குடும்பக் கார்டு உள்ள இடங்களில் அரிசி விநியோகம் செய்கிறோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் கொள் முதல் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான காரணம் என்னவென்றால் தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் நெல் கூலி கொடுக்க வேண்டும் என்று கேட்பதாலே மிராசுதாரர்கள் முழுவதும் நெல்லாகக் கொடுக்க முடியாது, பணம்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் தான் முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தடையை விதித்திருக்கிறார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Maize and milo are not adequately and properly supplied to village points. There are many complaints. There is demand for rice also along with with milo. Considering the request of the people and also the drought-affected conditions in Hosur taluk with the Government be pleased to supply all these things properly in that taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வருகிற மைலோவை, எந்தெந்த மாவட்டங்களுக்கு அதிகப்படியாகத் தேவை என்று

1969 ஆகஸ்ட் 18]

பார்த்து, அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் சொல்லுகிறார்களோ அதற்குத் தகுந்தாற்போல் அரசு பங்கிட்டுத் தந்து கொண்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்திற்குக் கொஞ்சம் இரக்கக் கருணையோடு அதிகமாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கேள்வி எண் 16. திரு. சித்தன் அவர்களுடைய வினாவிற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நெடு நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். கை கூட வலிக்கிறது. சென்ற கேள்விக்குத் துணை வினா ஒன்றைப் போட அனுமதி அளிக்க வேண்டும். உணவுப் பிரச்சினைபற்றிய முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் மட்டுமல்ல. உறுப்பினர்கள் பலர் கையைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். சென்ற கேள்விக்கு நிறைய துணைக் கேள்விகளை அனுமதித்திருக்கிறேன். திரு. சித்தன் அவர்களுடைய 16 எண்ணுள்ள கேள்விக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் விடையளிக்கலாம்.

Vermiculate deposits near Thirupathur.

* 16 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the progress made in the survey undertaken to explore Vermiculate deposits near Thirupathur in North Arcot district ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1965-66-ஆம் ஆண்டுகளில் மாநில பூவியல் (கனிவள ஆராய்ச்சிப்) பிரிவினால் திருப்பத்தூர் அருகிலுள்ள சேவத்தூரில் காணப்படும் வெர்மிகுலைட் கனிப் பொருள் பற்றிய விவரமான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. பெருமளவில் பகுதி பகுதியாக ஆராய்ந்து சோதனை முறையில் அகழ்ந்து பார்த்ததில் இப்பகுதியில் 190,000 டன் வெர்மிகுலைட் கிடைக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெர்மிகுலைட் படிவங்களிலிருந்து என்னென்ன பொருள்கள் செய்யப்பட முடியும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆராய்ச்சி வடார்க்காடு மாவட்டத்திலே செய்யப்படுகிறது. பொருள்களை உஷ்ணப் படுத்தினால் விரிவாக்கும் தன்மை இதற்கு இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்னென்ன பொருள்களைச் செய்யலாம் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து ஒரு எக்ஸ்ஃபோலியேடெட் வெர்மிகுலைட் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமா என்று அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. இதிலிருந்து பெயின்ட்ஸ்,

லைட் வெயிட் ரிஃப்ராக்டரி ஆகியவைகளெல்லாம் செய்யலாம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உஷ்ணப்படுத்தினால் விரிவடையக்கூடிய தன்மையுள்ள உப பொருள்களை எந்த எந்தத் தொழில்களிலே பயன்படுத்தலாமோ அதற்கெல்லாம் இந்தப் பொருள் பயன்படும்.

திரு. இல. பலராமன் : இந்த ஆராய்ச்சியை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதா ? அல்லது, மாநில அரசு ஏற்றுக்கொண்டதா ? இந்த ஆராய்ச்சி நிபுணர்களைக் கொண்டு வடார்க்காடு மாவட்டத்தில் மேலும் பல கனிப்பொருள்கள் இருப்பதைக் கண்டறிய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : என்னுடைய பதிலில், "மாநில பூவியியல் (கனிவள ஆராய்ச்சிப்) பிரிவு" என்று சொன்னேன். நம்முடைய துறைதான் ஆராய்ச்சி செய்து வருகிறது. இதுபோல், வடார்க்காடு மாவட்டத்திலும் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் கஞ்சமலையில் கிடைக்கக்கூடிய இரும்பு தாதுப் பொருள், தொடர்ந்து வடார்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, திருப்பத்தூர் பகுதி வரை கிடைக்கலாம் என்று கூட ஒரு ஆராய்ச்சி இருக்கிறது. அந்த ஆராய்ச்சியும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார். இந்த வெர்மிகுலைட் படிவம் நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர்ப் பகுதிக்குப் பக்கத்தில் இருக்கும் ஸ்ரீவைகுண்டத்தில் அதிகமாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார்களே, அதுபற்றி ஏதாவது தகவல் இந்த ஆட்சிக்கு வந்ததா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யார் கூறினார்கள் என்று சொன்னால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : அந்தத் தொழிற்சாலை பற்றிய பரிசீலனை எப்பொழுது முடிவு பெறும் ? அந்தத் தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, 190,000 டன் கிடைக்கக் கூடும். இதை ஒட்டிய பகுதிகளிலும் இதே பொருள் கிடைக்குமா என்ற ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது. அம்பத்தூரில் இந்தத் தொழிற்சாலையை வைக்கலாமா என்று இப்பொழுது நம்முடைய தொழில் இலாக்கா பரிசீலித்து வருகிறது. எந்த அளவு யெந்திரங்கள் கிடைக்க முடியும், எந்த அளவு பொருள்களை இங்கே கொண்டுவர முடியும் என்று பரிசீலித்ததற்குப் பின்னர் தான் முடிவு செய்ய முடியும்.

பட்டிவீரன்பட்டியில் ஏலக்காய் எண்ணெய் ஆலை

* 17 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பட்டிவீரன்பட்டியில் ஏலக்காய் எண்ணெய் ஆலை ஒன்று நிறுவுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பட்டிவீரன்பட்டி பகுதியில் ஏலக்காய் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அதிகமாக உற்பத்தியாவதைக் கொண்டு அங்கு ஒரு ஆலை நிறுவ வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அரசுக் குறிப்பு இருந்ததாகத் தெரிகிறது. 1967-68-ம் ஆண்டு நிதிநிலை விளக்கக் குறிப்பில்கூட இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அரசு மீண்டும் இதைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய தமிழ்நாட்டிலே கிடைக்கக்கூடிய ஏலக்காயில் பெரும் பகுதி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக லாபமும், அன்னியச் செலாவணியும் கிடைக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்கின்றவர்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைத் தான் விரும்புகிறார்கள். இதிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆனால், அப்படி உற்பத்தி செய்யக்கூடிய எண்ணெய்க்கு வெளிநாட்டிலே சந்தை இல்லை. உள்நாட்டிலும் சந்தை இல்லை. அந்த எண்ணெய் ஓரளவுக்குத்தான்—குறுகிய அளவு—மருத்துவத் துறைக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இப்போதைக்கு வெளி நாட்டிலிருந்து பெறக்கூடிய லாபத்தை நாம் குறைத்துக் கொள்வதாக உத்தேசம் இல்லை. அரேபியா, பிரிட்டன் போன்ற நாடுகள் இதை அப்படியே வாங்கி, பொடியாக்கி உபயோகப் படுத்துவதையே விரும்புகிறார்கள். எண்ணெய்யாக வேண்டுமென்று சொல்லுகிறார்களா என்று பார்த்தால், அந்நாட்டு மருத்துவத் துறையின் உபயோகத்திற்குக் கொஞ்சம்தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வேண்டும் என்று சொல்லுகிறவர்களும், நாமே அந்த எண்ணெய்யை உற்பத்தி செய்து கொடுப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கு ஏலக்காயை அனுப்புங்கள், நாங்கள் எண்ணெய் ஆக்கிக்கொள்ளுகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். மருத்துவத் துறைக்கு ஏற்ற முறைப்படி அவர்களே எண்ணெய் உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்வதால் இப்போதைக்கு அந்தப் பரிசீலனையை எடுத்துக் கொள்வதாக இல்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, எலக்காய் நம்முடைய பகுதியில் அதிகமாகக் கிடைக்காமலிருக்கிறது. ஆனால், நெல் அதிகமாகக் கிடைக்கிறது. நெல்லின் உமியிலிருந்து எரிபொருளும் எண்ணெயும் உண்டாக்கலாம் என்று சொன்னார்கள். அதைக்கொண்டு தொழில் ஆரம்பிப்பதற்கு கனம் அமைச்சருக்கோ அல்லது இந்த அரசுக்கோ ஏதாவது மனு வந்ததா ? அதன்மீது இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையைப் பற்றிக் கனம் உறுப்பினர் மனத்திலே வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இது ஒன்றும் புதிய ஆராய்ச்சி அல்ல. திருவாரூரில் நிரூபித்துக் காண்பித்து இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற ஆலையில் உமியிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் என்றும், உணவுப் பொருளாக மாற்ற முடியும் என்றும் நாம் கண்டிருக்கிறோம். இந்த ஆராய்ச்சியும் நல்ல ஆராய்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றித்தான் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மிக ஆர்வமாக இப்பொழுது சிந்தித்து வருகிறார்கள்.

Slum Improvement

* 18 *Q.*—THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the judgment of the Madras High Court in the Slum Improvement (Acquisition) Act case delivered in February 1968; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1954-ம் ஆண்டு தாழ் குடியிருப்புப் பகுதி (**Slum**) மேம்பாட்டு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 11/1954) கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக உயர்நீதி மன்றத்தால் செல்திறனற்றதென்று ரத்து செய்யப் பட்டது.

(1) இச் சட்டத்தைச் சேர்ந்த 6-வது பிரிவின் கீழ் வழங்கப் படத்தக்க இழப்பீட்டுத் தொகை ஏமாற்றமளிப்பதாகும். அதனால் அரசியலமைப்பின் நான்காம் திருத்தத்திற்கு முன்பிருந்த படியுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 31(2) பிரிவை அந்தச் சட்டம் மீறுவதாகும்.

(2) அரசியலமைப்பின் 31(5) (b) (ii) பிரிவின் கீழ் இச்சட்டத்திற்கு விலக்களிக்க இயலாது.

THIRU K. VINAYAKAM : Sir, the lands belonging to a temple in Kodambakkam was sought to be acquired under this Act. The temple authorities went to the High Court objecting to the acquisition. Was the acquisition dropped subsequent to the judgement delivered by the High Court or is it still being pursued?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, **ஸ்லம்** இம்ப்ரூவ்மெண்டுக்காக நாம் நிலங்களை எடுத்துக்கொள்ள ஒரு சட்டம் போட்டோம். மத்திய ஆட்சிச் சட்டத்திற்கும் நாம் போட்டுள்ள சட்டத்திற்கும் மாறுக இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. காரணம், நாம் போட்டுள்ள சட்டத்திலே எவ்வளவு நஷ்ட ஈடு தரவேண்டுமென்று ஒரு பார்முலா போட்டிருந்தோம். அது தவறு என்று சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் சொல்லியிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள், ' உயர்நீதிமன்றம் இப்படித் தீர்ப்பளித்து விட்டதாலே குறிப்பிட்ட வழக்கு சம்பந்தப் பட்டவர்களுக்கு எழுதி, அதை ரத்து செய்துவிட்டீர்களா ?' என்று கேட்கிறார்கள். பொதுவாக உயர்நீதிமன்றம் சட்டமே போட வேண்டாமென்று சொல்லவில்லை. அரசியல் சட்ட திருத்தப் பிரிவு வந்ததற்குப் பின்னாலே இந்தச் சட்டம் வந்ததால் செல்லாது என்கிறார்கள். ஆகவே, மத்திய அரசின் சட்டங்களையும் ஆராய்ந்து, முழுமையாகப் பரிசீலித்து மறுபடியும் போட்டுவிட்டால் செல்லும். ஆகவே, இதைப் பரிசீலித்து வருகிறோம். கனம் உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட எந்த நபருக்காவது இது பற்றி பதில் எழுதினீர்களா என்று கேட்டால் பதில் சொல்லியிருக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து, உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பிலே, "வழங்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டுத்தொகை ஏமாற்றமளிப்பதாகும்" என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறினார்கள். எந்த அளவில் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க அரசு யோசனை செய்துகொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சட்டத்தைத் திருத்தும்போது அதைப்பற்றி யோசித்து, அதில் கொடுக்கப்பட்டிருக்கும் பார்முலாவை எப்படி அமல் செய்தால் நல்லது என்பதை முடிவு செய்யலாம்.

DR. H. V. HANDE : With regard to acquisition of lands for slum improvement and rehabilitation of the persons who are already in slums, will the Minister tell us whether any arrangements are being made for housing those who are already in slums in any State Housing Board colonies and whether the attention of the Government has been drawn to the fact that persons who have been removed from slums have not been given houses in any Housing Board colonies? Will the Minister give us some indication as to what exactly is the programme of the Government with regard to rehabilitation of the displaced slum dwellers ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, ஸ்லம்களில் குடியிருப்பவர்களுக்கு எற்கனவே ஒரு அடையாள கார்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் செய்யும் போது, அந்தக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களைக் குடியமர்த்துகிறோம். அடையாளக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்த பிறகு, இன்னும் இடம் இருந்தால் மற்றவர்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுக்கிறோம்.

[1969 ஆகஸ்ட் 18

திரு. கே. வினாயகம் : தலைவர் அவர்களே, 'லேண்ட் அக்விசிஷன் ஆக்ட்' என்ற சென்ட்ரல் ஆக்ட் இருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ் மெண்ட் அக்விசிஷன் என்ற ஆக்ட் மாநில அளவில் இருந்து கொண்டிருக்கிறது. நாம் கொடுத்த நஷ்ட ஈடு தொகை போதவில்லை, சென்ட்ரல் ஆக்டின்படிதான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே, அதற்கேற்றபடி நமது சட்டத்தைத் திருத்தப் போகிறீர்களா? அந்தச் சட்டத்தின்படி நஷ்ட ஈடு தரப் போகின்றீர்களா? இந்த இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே இதைப்பற்றித் தெரிந்து கொள்ள நியாயம் இல்லை. சென்ட்ரல் ஆக்டில் ஒரு பார்மூலா சொல்லியிருக்கிறீர்கள். நாம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் செய்வதற்காக அனைவரும் சேர்ந்து ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஸ்லம்மில் குடியிருப்பவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களுடைய நிலை உயர வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து அவர்களுடைய நன்மைக்காகப் பாடு படுகிறோம். நஷ்ட ஈட்டுத் தொகை சிறிது கூடுதலாகலாம், குறையலாம். எவ்வளவு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதையும் மற்றவைகளையும் நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

* 19 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Government has formulated a rural housing scheme for removal of slum areas in at least five villages in every Panchayat Union; and

(b) if so, the amount of loan that would be given for the construction of homes?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. வினாயகம் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக் களுக்கு, தங்களுடைய எல்லைக்குட்பட்ட ஐந்து கிராமங் களிலாயினும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற சர்க்குலர் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மென்ட் மூலமாக வந்துள்ளது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படி வந்திருந்தால் அதற்கு அதிக அளவில் பணம் ஒதுக்கி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களிலே இரண்டுவிதமான ஸ்கீம்கள் இருக்கின்றன. ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் என்றும், வில்லேஜ் ப்ராஜக்ட் ஸ்கீம் என்றும் இரண்டு வகையான ஸ்கீம்கள் இருக்கின்றன. ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்டுக்காக இல்லை. ஏழைகளுக்கு வீடுகள்

1969 ஆகஸ்ட் 18]

கட்டிக் கொடுப்பதற்காக இதன்படி பத்தாயிரம் ரூபாய் வரையில் கொடுக்கலாம். வில்லேஜ் ப்ராஜக்ட் திட்டத்தின்கீழ் மூவாயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ் மென்ட்டுக்காக என்று தனியாக ஸ்கீம் இல்லை.

திரு. கே. வினாயகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இந்தக் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்களுக்குப் போட்டேன். அந்த அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஐயா அவர்கள், ஹவுசிங் போர்டுக்கு அமைச்சராக இருப்பதால்தானோ என்னவோ இவர் பதில் சொல்கிறார். அதனால்தான் சரியான பதில் வரவில்லை. எந்தக் கேள்வி எந்த அமைச்சருக்குப் போட வேண்டும், யாருக்குப் போடுவது பொருத்தம் என்பதற்காக உங்களுடைய விதி முறைகளைத் திருத்தியமைத்துக்கொள்ள முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரே விளக்கம். நீங்கள் கேள்வி கேட்டிருப்பதை, எந்த அமைச்சருக்குப் போட்டாலும் அந்தத் துறை சம்பந்தமான அமைச்சரிடமிருந்தே பதில் கிடைக்கும். நீங்கள் கேள்வியில் ரூரல் ஹவுசிங் ஸ்கீமைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அது ஸ்டேட் ஹவுசிங் போர்டு கீழ் வருகிறது. ஸ்டேட் ஹவுசிங் போர்ட்டின் கண்ட்ரோலில் அது இருக்கிறபடியால் இந்த அமைச்சர் பதில் கூறினார். மேலும் ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு இன்ஜினியரிங் டிபார்ட்மென்ட் தனியாக இருக்கிறது. இன்ஜினியர் இருக்கிறார். எந்தெந்த இடத்தில், எந்தெந்த கிராமத்திற்குப் பணம் கொடுக்கலாம் என்பதைப் பார்வையிட்டு சிபாரிசு செய்வார். அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பதை ஏற்பாடு செய்து வருகிறோம். கனம் உறுப் பினர் அவர்கள் தம்முடைய கேள்வியோடு ஸ்லம் பற்றியும் இணைத் திருக்கிறார்கள். ரூரல் ஹவுசிங்கோடு ஸ்லம் பற்றியும் இணைத்திருக் கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேள்வியைத் தெளிவாகப் போட்டிருந்தால், பதில் தெளிவாகக் கிடைத்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டருக்குப் போடவில்லை, லா மினிஸ்டருக்குத்தான் போட்டிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Law Minister was in charge of housing.

Sadayarkoil near Grand Anicut.

* 20 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether a very old neglected Chola temple named Sadayarkoil is situated a mile and a half away from Koviladi near Grand Anicut on the bund of the Coloroon bank:

(b) whether poojas are conducted regularly; and

(c) whether it is under the control of Hindu Religious Endowments Board?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். கோவிலடிக்குப் பக்கத்திலே திருச்சின்னம் பூண்டியில் கொள்ளிடம் நதிக்குச் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் நெல்வயல்களுக்கு நடுவில் இந்தக் கோவில் அமைந்துள்ளது.

(இ) வாரத்திற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் பூஜைகள் நடைபெறுகின்றன.

(உ) இல்லை.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, கோயிலடிக்கு அருகாமையிலே இருக்கிற கோயில் புராதனக் கோயிலாக இருப்பதும், யாரும் அதனைப் பராமரிக்காமல் இருப்பதும் உண்மைதான். இந்தக் கோயிலை ஏன் ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமென்ட்டின் கீழ்க் கொண்டு வரவில்லை? இந்தக் கோயிலுக்குப் போதிய வருமானம் இல்லையென்றாலும், இது புராதனச் சின்னமாக இருப்பதால், எண்டோமென்ட் இதை எடுத்து, மராமத்து செய்து பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தக் கோயில் எண்டோமென்டின்கீழ் வரவில்லை. இந்தக் கோயிலுக்கு வருட வருமானம் ரூ. 100 தான் வருகிறது. மேலும் இந்தக் கோயில் புராதனக் கோயிலாக இருப்பதால் ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட் எடுத்துக்கொள்ள முடியுமா என்பதுபற்றிக் கடிதம் போக்குவரத்துகள் நடந்து வருகின்றன. அவர்கள் அதை எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் கடிதப் போக்குவரத்து முடிந்த பிறகு தான் தெரியும்.

திரு. கே. விநாயகம் : இந்தக் கோயில் சோழர்களால் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறதே, அது எந்த ஆண்டில் கட்டப்பட்டது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கோயில் சோழர்களால் கட்டப்பட்டது என்று திரு. விநாயகம் தான் சொல்கிறார். அவரே எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று சொல்ல முடியும். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுசம்பந்தமான தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

Central taxes

*11 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the State Government has made a representation to the Central Government regarding the fixation of the State's share in the Central taxes during the Fourth Plan period; and

(*b*) what is the reaction of the Central Government ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

(*a*) No. But the State Government has placed before the Fifth Finance Commission its views on the devolution of Central taxes during the quinquennium 1969-74.

(*b*) Does not arise.

திரு. கே. விநாயகம் : மத்திய அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோள் கொடுக்கவில்லை என்றாலும் கூட பைனான்ஸ் கமிஷன் வந்திருந்தபோது நாம் கொடுத்த கோரிக்கைகளில் அவர்கள் வசூல் பண்ணுகிற வரி இனங்களில் இன்னும் அதிகமான பர்சென்டேஜ் வேண்டுமென்று கேட்டார்களா ? அல்லது நம்முடைய மாநிலத்தில் இருக்கிற ஜனத்தொகை விகிதத்தையொட்டி எல்லா வரி இனங்களில் இருந்தும் பணம் ஒதுக்கவேண்டுமென்ற கோரிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படித் தெரிவித்திருந்தால் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு மூன்று கேள்வியை ஒன்றாக இணைத்து திரு. விநாயகம் கேள்வி கேட்டிருக்கிறார்கள். நான் அதற்குச் சிறிது விளக்கமாகவே பதில் சொல்கிறேன்.

மத்திய அரசாங்கத்திற்கு மாநிலங்களில் இருந்து வருவாய் வருகிற இனங்களில் ஒன்று இன்கம்டாக்ஸ். அடுத்து, யூனியன் எக்சைஸ் ட்யூடி. அடுத்து அடிஷனல் யூனியன் எக்சைஸ் ட்யூடி. அதேமாதிரி டாக்ஸ் ஆன் ரயில்வே பாசஞ்ஜர் ஃபேர். இவற்றில் இருந்து மாநிலங்களுக்குப் பங்கு வழங்குகிறார்கள். அதோடு நமது அரசியல் சட்டப் பிரகாரம் கிராண்டு இன் எய்டு என்று வழங்கப்படுகிறது. இவைகளை எல்லாம் மாற்றி அமைக்கவேண்டுமென்று நாம் பைனான்ஸ் கமிஷனிடம் கோரியிருக்கிறோம். குறிப்பாக, இப்போது இன்கம்டாக்சில் இருந்து மாநிலங்களுக்கு 75 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. இதை 87½ சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். அப்படி உயர்த்திக் கொடுக்கிற முறையிலும் கிராம மக்கள் தொகை அடிப்படையில் 60 சதவிகிதமும் நகர மக்கள் தொகை அடிப்படையில் 20 சதவிகிதமும் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம்.

அதுமட்டும் அல்ல. வருமான வரி என்பது ஒரு வரம்புக்கு உட்பட்டது. கார்ப்பரேஷன் டாக்ஸ்—கம்பெனி டாக்ஸ் என்ற முறையில் இப்போது மத்திய அரசால் விதிக்கப்படுகிற வரிப் பணம் பெருவாரியாக மத்திய கருவூலத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. இத்தொகை இப்போது மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. ஆகவே, இந்த டாக்சையும் 'ஷேரபிள் பூலில்' சேர்க்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். மாநில அரசுகளுக்கு எக்சைஸ் ட்யூட்டியில் 20 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. அதை 40 சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். மக்கள் தொகை அடிப்படையில் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

அதற்கடுத்தபடியாக டாக்ஸ் ஆன் ரயில்வே பாசன்ஜர் ஃபேர் என்று போடுவதில் மாநிலங்களுக்குப் பங்கு அளிக்கிறார்கள். ஆனால் இதுபோன்று டாக்ஸ் என்று போடாது பிரயாணக் கட்டணங்களையே கூட்டிக்கொண்டிருப்பதால் அதில் நமக்குப் பங்கு கிடைக்காது போகிறது. ஆகவே கட்டணத்தை உயர்த்துவதற்குப் பதிலாக டாக்ஸ் ஆன் பாசன்ஜர் ஃபேர் என்று போட்டு நமக்கும் பங்கு அளிக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறோம்.

இத்தனைக்கும் மேலாக கம்பெனி டாக்ஸை நமக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றால் அரசியல் அமைப்புச் சட்டம் 275-வது பிரிவைத் திருத்தியாக வேண்டும். ஆகவே, அதையும் திருத்த வேண்டுமென்று கோரியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேள்வி போடுகிறபோது—

'Members should put short questions to enable the Minister to remember all the points contained in them, and answer them.' என்ற விதியைக் கருத்தில் வைக்க வேண்டுகிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. ஐயா அவர்களுடைய சுயாட்சிப் போராட்டம் இந்த வகையில் நமக்கு அதிக உதவியாக இருக்குமாதலால் தமிழக அரசு அதற்கு ஆதரவு தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : போராட்டங்கள் என்பது தனித் தனி ரூபங்கள் கொண்டவை. இதுவும் ஒரு போராட்டம் தான்.

திரு. பி. ஜீ. கருத்திருமன் : கழகம் அங்கத்தினர் சுயாட்சிப் போர் என்று சொன்னார்கள். 15 ஆம் தேதி அன்றுதான் சுதந்திர தின விழாவில் சுயாட்சியைப் பற்றிப் பேசினோம். அது எந்த சுயாட்சி என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத் தனி விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that the devolution of funds is one of the most important points of irritation between the States and the Centre, will the Hon. Minister be able to tell us the increased amount in terms of crores of rupees that we are likely to get? Also, whether we have asked for devolution of funds keeping in mind the increased fund that we required or we have asked for the devolution of funds on the basis of principles. Also, whether a proper scheme has been worked out and if so, will the Hon. Minister tell us the details of the scheme ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொள்கைகள் ஒத்துக் கொள்ளப்பட்ட நிலையில் தான் எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்பது தெரியும். நான் ப்ரபோசல் பற்றித்தான் சொன்னேன். பைனான்ஸ் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு தான் நமக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பது தெரியும். இது கூட இன்னும் ஒன்றிரண்டு தினங்களில் தெரியவரும் என்று நினைக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மக்கள் க்ஷேம நலங்களான சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் ஆகியவற்றை மாநில அரசாங்கமே கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே மாநிலத்தில் வசூலாகும் மத்திய அரசு வரிகளில் 75 சத விகிதம் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையை வகுத்து நம் அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற முறையில்தான் நான் முன்பு குறிப்பிட்டபடி பல இனங்களிலும் நம்முடைய வருவாயை அதிகப்படுத்தவேண்டுமென்று கோரியிருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில சர்க்கார் புதிய வரிகளைப் போடவேண்டுமென்று சொல்கிறார்களே, புதிய வரிகளைப் போடாது நம்மிடம் இருந்த— எக்சைஸ் வரியை மீண்டும் கொடுக்க வற்புறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 20 சத விகிதம், 40 சத விகிதம் என்ற விகிதத்தில் சுங்க வரியில் நமக்குப் பங்கு தரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

திரு. வை. சுவாமிநாதன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைத் தீட்டியவர்களைத் தான் கேட்கவேண்டும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் டாக்ஸ் முழுவதையும் மத்திய அரசே வசூல் செய்துகொள்கிறார்கள். ஆனால் நாம் தொழில் நிலையங்களுக்கு தண்ணீர், மின்சாரம் போன்ற பல வசதிகளைச் செய்துகொடுக்கிறோம். இதன் மூலம் மாநில அரசுக்கு குறிப்பிட்ட இழப்பு ஏற்பட்டு வருகிறது. ஆகவே கார்ப்பரேஷன் டாக்ஸ் முழுவதும் மாநிலத்திற்கே தரவேண்டும் என்று வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதை அழுத்தமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். கம்பெனி வரிகள் மூலமாக வருமான வரி சுருங்கி மத்திய அரசாங்கத்திற்கே அதிக செல்வாதாரம் கிடைக்கிறது. இதிலும் நாம் பங்குபெற வேண்டுமென்றால் அரசியல் சட்ட ஷரத்து ஒன்று திருத்தப்பட்டாக

வேண்டும். இதில் உறுப்பினர் அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அக்கறை செலுத்த வேண்டும். இந்த அரசும் வற்புறுத்தி வருகிறது. முதல் அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் மாநாடுகளில் வற்புறுத்தி வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Whereas the Central Government is collecting various taxes in the States like income-tax, excise duty, additional excise duty, corporation tax, tax on railway travel, etc. and whereas they are giving to the States a certain percentage, 75 per cent in one category, 60 per cent in another category and this Government is asking them to raise the percentage in some categories, will this Government think of the possibility of taking into account the entire tax collected by the Centre from this State and then demand, on the basis of population of this State, 80 per cent or even 95 per cent of the tax collected, as their share? Will the Government consider that kind of possibility instead of asking the Centre to raise the percentage in one category or the other? Will the Government work out such a policy, viz., of demanding a certain percentage of the total collection made by the Centre, on the basis of population of this State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am sorry. I am of opinion that it may not help the interests of the State.

Dearness allowance

* 12. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the rates of dearness allowance paid to the State Government employees with effect from 1st January 1969 are on par with Central Government rates?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப்படி வீதங்கள், மத்திய அரசுப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்களுக்கு நிகராக உள்ளன. மாநில அரசுப் பணியாளர்களுக்குச் சாதகமாக அந்த வீதங்களில் கீழ்க்கண்டவாறு சிறு சரிக்கட்டுதல்கள் செய்யப் பட்டுள்ளன—

(1) ரூ. 90-க்கும் 109-க்கும் இடையில் சம்பளம் பெறும் மாநில அரசுப்பணியாளர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 98 அகவிலைப்படியாக அளிக்கப்படுகின்றது. அதே சம்பள வீதத்தில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 71-தான் அளிக்கப் படுகின்றது.

(2) திருத்த வீதங்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ. 499 வரை சம்பளம் பெறும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கும், ரூ. 500 வரை சம்பளம் பெறும் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் பொருந்தும். இரண்டு நேர்வுகளிலும் ஓரளவு சரிக்கட்டல் செய்யப் பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Whereas the dearness allowance paid to the State Government employees is more or less on a par with dearness allowance paid to Central Government servants working in our State, are the Government aware of the fact that as far as house rent allowance is concerned there is disparity and as far as city compensatory allowance is concerned, there is disparity. Therefore will the Government think of the possibility of bringing these things also on a par with allowances given by Central Government?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் பொருத்தம் இல்லை. ஆனால் அரசாங்க ஊழியர்களின் பிரச்னையோடு இந்தப் பிரச்னை சம்பந்தப்பட்டு இணைந்த பிரச்னையாக இருக்கிறது. நகர ஈட்டுப் படியைப் பொறுத்தவரையில் நாமும் கொடுத்துவருகிறோம். ஹவுஸ் ரென்ட் அலவன்ஸைப் பொறுத்தவரையில் சிறு வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நம்முடைய நிதி ஆதாரங்கள், நிதி வரம்புகளுக்குட்பட்ட முறையில் செய்யவேண்டியிருக்கிறது. அவ்வப்பொழுது இதைப் பரிசீலனை செய்து கூடுமானவரையில் இந்தக் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெறா ஊழியர்களுக்குக் கிடைக்கும் அகவிலைப் படியில் மூன்றில் இரண்டு பங்கை அடிப்படைச் சம்பளத்தோடு இணைக்க வேண்டுமென்று அவர்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா? ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அகவிலைப்படியை சம்பளத்தோடு இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் அதை ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. அகவிலைப்படியில் ஒரு பகுதியை சம்பளத்தோடு இணைப்பதாலே இருக்கிற நிலைமையில் இரண்டு கோடி ரூபாய் செலவாகக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி 5-வது பைனான்ஸ் கமிஷனுடைய அறிக்கையின்மூலம் எந்த அளவுக்கு கருணை கிடைக்கிறது என்ற அடிப்படையில் இந்தப் பிரச்னை மீண்டும் ஆராயப்படும்.

THIRU T. MARTIN : There is lot of apprehension in the minds of Government servants regarding the appointment of a Pay Commission. May I request the Hon. Minister to state whether Government have tentatively or finally come to any conclusion regarding the appointment of a Pay Commission?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Hon. Chief Minister has categorically announced that after the receipt and consideration of the report of the Fifth Finance Commission it will be very seriously taken into consideration

[1969 ஆகஸ்ட் 18

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, மின்சாரத் துறை ஊழியர்களின் அகவிலைப்படியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அது சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது பரிசிலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், என்.ஜி.ஓ.க்களின் பஞ்சப்படியைச் சம்பளத்தோடு சேர்த்துக்கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படிக் கொடுத்தால் பென்ஷன் போன்றவை அதிகமாகக் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது முக்கியமான அம்சம். அதைச் சேர்ப்பதாலே அவர்களுக்கு பென்ஷன், கிராஜ்யுடி போன்றவற்றில் அனுகூலங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் 1966 முதல் 1969 வரையில் பஞ்சப்படி ஒரு பகுதியை இணைத்து இருக்கிறது. அதைக் கொள்கையளவிலே ஏற்றுக் கொள்வதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு பெறமுடியும் என்பதிலேதான் இருக்கிறது. இந்த வகையில் 2 கோடி ரூபாய் செலவாகும். ஐந்தாவது பைனான்ஸ் கமிஷனின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : If I could trust my memory, without meaning any offence to the members of the Cabinet, has the Hon. Finance Minister announced sometime back that the second Pay Commission would be appointed to go into the question and subsequently the Hon. Chief Minister categorically refused to appoint any such Pay Commission and if so, is there any difference of opinion between the Finance Minister and the Chief Minister as far as the appointment of Pay Commission is concerned? Or is it now finally settled that action would be taken only after the release of the report of the Finance Commission of the Central Government?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்கப்படவே படாது, அமையவே அமையாது என்ற ரீதியிலே நான் எந்தப் பத்திரிக்கைக்காரருக்கும் பதில் சொல்லவில்லை. இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைப்பது குறித்து பைனான்ஸ் கமிஷனுடைய ரிபோர்ட்டைப் பொறுத்துத்தான் சொல்லப்படும் என்று தான் சொன்னேனே தவிர, நிதியமைச்சர் அவர்கள் சொன்னதை ஒரேயடியாக மறுத்து நான் எந்தப் பத்திரிகை நிருபரிடத்திலும் சொல்லவில்லை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want to place before this House what I have announced in Cuddalore conference. It is all due to Tamil newspapers putting misleading headlines.

1969 ஆகஸ்ட் 18]

திரு. கே. விநயகம் : எந்த நியூஸ்பேப்பர், தினத்தந்தியா . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Not C. 'Dinathanthi' alone. Almost all Tamil papers have published. I want to erase a wrong impression created among the public, viz. that I have difference of opinion with the Hon. Chief Minister. It is not so. What I have said is that the question of appointment of Pay Commission is under the active consideration of Government. This is what I have told my audience of N.G.Os at Cuddalore and I told so purposefully to avoid any misrepresentation. That is why I told that the appointment of Pay Commission is under the active consideration of Government. But some Tamil newspapers had come out with headlines that the Finance Minister had said that Pay Commission would be appointed.

Chank and pearl fishing.

* 13 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is a proposal to lease out the chank bed in the Bay of Bengal from Tiruchendur to Kanyakumari for chank fishing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

* 14 *வினு—திரு. டி. மார்டின் :* மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தூத்துக்குடியில் உள்ள மன்னர் வளைகுடாக் கடலில் முத்துக்கள் எடுக்கும் உத்தேசம் தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)

(அ) மன்னர் வளைகுடா பகுதியில் முத்துக் குளிக்கும் பணியைத் தற்போது மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஏதுவும் இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. டி.. மார்டின் : தமிழகத்தில் கிழக்குக் கடற்கரை ஓரமாக இராமேஸ்வரம் பகுதியில் சங்குகள் அதிகமாகக் கிடைக்கின்றன. சுந்தரபாண்டியபுரத்திலும் அதிகமாகக் கிடைக்கிறது. திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள பகுதிகளில் ஒருசில இடங்களில் சங்குகள் மீனவர்களுடைய வலைகளில் அகப்படுகின்றன. அதை மீன் பிடிப்பவர்கள் வெளியே கொண்டுவந்தால் குற்றம் புரிந்தவர்களாகிறார்கள். அதை அவர்கள் அங்கேயே விட்டு விட்டு வந்துவிட்டால் நல்ல பொருள் கிடைத்ததை விட்டு

விட்டு வரவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அந்த இடத்தில் சங்குகளை எடுப்பதற்குக் குறைந்த தொகையில் லீஸ் விடுகிற கருத்தை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சங்குகள் மிக அதிகமாகக் கிடைப்பதாலும், சங்கு குளிக்கும் பகுதிகள் அடுத்தடுத்துள்ளதாலும், திருச்செந்தூர் பகுதி உட்பட திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கு குளிக்குந் துறையில், சங்கு குளிக்கும் பணித் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் முத்துக் குளிக்கும் பகுதிகள் திருநெல்வேலி கடற்கரைக்கு அப்பால் உள்ள சங்கு குளிக்கும் பகுதிகளுக்கு அண்மையில் உள்ளன. முத்துச் சிப்பி உள்ள பகுதிகளைப் பத்திரமாகப் பாதுகாக்கும் பொருட்டு, இப்பகுதிகளிலுள்ள சங்கு குளிக்கும் துறைகளைத் தனிப்பட்டவர்களுக்குக் குத்தகைக்கு விடாமலிருப்பது மிகவும் அவசியமாகும்.

திரு. கே. விநாயகம் : சங்கு குளிக்கும் துறைப் பணிக்கு எவ்வளவு செலவாகிறது? அதிலிருந்து வருகின்ற 'பேர்ல்ஸ்' விலை மதிப்பு என்ன? இதை டிப்பார்ட்மென்ட் மூலமாகச் செய்வதால் லாபம் வருகிறதா அல்லது நஷ்டம் வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : லாப நஷ்டத்தைப் பற்றிய விவரம் இல்லை. இந்த ஆறு நிலையங்களைப் பொறுத்தவரை குத்தகைக்கு விடப்பட்டு அந்தத் தொகை பெறப்படுகிறது. லாப நஷ்டத்தைப் பற்றிய விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் கிடைக்கின்ற மீனை மீன்பிடித் தொழிலாளர்கள் மீன் பிடிக்கக் குத்தகைக்கு விடுவதில்லை. அதே போன்று கடலில் மூழ்கி எடுக்கின்ற சங்கை குத்தகைக்கு விடாமல் எப்படி மீன்பிடி தொழிலாளர்களுக்கு இலவசமாக மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறதோ அந்த முறையில் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் தாங்களே மூழ்கி எடுத்த சங்கை விற்பனை செய்ய அரசு அனுமதி தருமா? குத்தகைக்கு விடும் முறை மாற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட யோசனை தற்போது அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : சங்கு குளிப்பதை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பல லட்சக்கணக்கான சங்குகள் ஆண்டுதோறும் களவு போகின்ற நிலை ஏற்பட்டு ஏராளமான நஷ்டம் வருகிறது. நாம் 65 பைசா வீதம் ஒரு சங்குக்குக் கூலி கொடுக்கிறோம். குத்தகைக்கு எடுப்பவர்கள் ஒரு ரூபாய்க்கு மேல் கூலி கொடுத்தும் அதிக லாபம் அடைகிறார்கள். ஆகவே, இதைக் கணக்கில் வைத்து திருநெல்வேலி கடற்பகுதியில் சங்குகள் எடுப்பதை

குத்தகைக்கு விடுவதன் மூலம் அரசாங்கத்திற்கு லாபம் அதிகமாகக் கிடைக்குமாகையால் அந்த ஏற்பாட்டைச் செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் குறிப்பிட்ட இந்த ஆறு துறைகளைப் பொறுத்தவரை குத்தகைக்குத்தான் விடப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களை வேண்டுமானாலும் படிக்கிறேன். தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டப் பகுதிகளைப் பொறுத்தவரை ஹாஜி எஸ். வி. எம். முகம்மது ஜமாலுதின் அண்ட் பிரதர்ஸ் நிறுவனம், கீழக்கரைக்கு ரூ. 35,001-க்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளைப் பொறுத்தவரையிலும் மேற்படி கம்பெனிக்கே ரூ. 45,111-க்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம்-பாக் விரிகுடா பகுதிகளுக்கு திரு. டி. எஸ். ஓ. அப்துல்காதர் அண்டு கம்பெனி, சென்னை, என்பவர்களுக்கு ரூ. 61,810-க்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. மேற்படி கம்பெனிக்கே இராமநாதபுரம்-மன்னார் வளைகுடா பகுதிக்கு ரூ. 57,200-க்கும், சிவகங்கை பகுதிக்கு ரூ. 41,000-க்கும், கன்னியாகுமரி பகுதிக்கு ரூ. 16,000-க்கும் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. குத்தகை காலம் மூன்று ஆண்டுகளாகும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த சங்கு குளிக்கதலுக்குப் பக்கத்தில் இருக்கிற மீன்பிடிப்பவர்கள் பெருவலை போட்டு இழுக்கும் போது சில சமயம் சங்குகள் வலையில் சிக்கிவிடுகின்றன. அதை அவர்கள் எடுத்துக்கொண்டு வந்தால் குற்றமாகக் கருதப்படுகிறது. அப்படி தானாகவே வலையிலே சிக்கிக்கொள்வதை அவர்கள் கொண்டு வந்தால் அதைத் திருட்டுக் குற்றமாகக் கருதாமல் தவறாக வந்துவிட்டது என்ற நிலையில் அதை அவர்கள் குத்தகைக்காரர்களிடமோ அல்லது மற்றவர்களிடமோ விற்பதற்கு அரசு அனுமதி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தங்களை அறியாமலே தவறுதலாக வந்திருக்குமானால் அதைப் பற்றி யோசிக்கலாம். வேண்டுமென்றே எடுத்துவந்து விட்டு எங்களை அறியாமலே சிக்கிவிட்டது என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்.

THIRU T. MARTIN : The Hon. Minister said that pearl fishing was stopped for some reasons. May I know the reasons for stopping pearl fishing in this State and when pearl fishing was done last time?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முத்துக் குளிக்கும் பணியை சில ஆண்டுகளுக்கு ஒரு முறையே நடத்துவதற்கான வாய்ப்புள்ளது. முத்துக்குளிக்கும் இரு பருவங்களுக்கு இடையேயுள்ள முத்துக் குளிக்காத கால அளவில், முத்துப்பார்களைப் பற்றி ஆய்வு செய்து முத்துச் சிப்பிகளின் வளர்ச்சியைப் பற்றி பரிசீலனை செய்யும் பணி நடைபெறுகின்றது.

26 ஆண்டுகளுக்குப் பிறகு கடைசியாக 1955-லிருந்து 1961-ம் ஆண்டு வரை முத்துக் குளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. முத்துக் குளிக்காத ஆண்டுகளில் செய்யப்பட்ட செலவு அடுத்து வரும் ஆண்டுகளில் முத்துக் குளிக்கும் பணி மேற்கொள்ளப் படும்போது சரிக்கட்டப்படும். சிப்பிகளின் நிலைமையையும் எண்ணிக்கையையும் மதிப்பிடும் பொருட்டும், முத்துக் குளிக்கும் பணியை மேற்கொள்ளும் வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இராமநாதபுரம், திருநெல்வேலி கடற்கரைகளிலிருந்து சிறிது தொலைவிலுள்ள கடற்பகுதிகளில் முத்துப் பார்களைப் பற்றிய ஆய்வுகள் தூத்துக்குடியிலுள்ள மீனளத் துறை (முத்து-சங்கு) உதவி இயக்குநராலும் அவருடைய தொழில் நுட்பப் பணியாளர்களாலும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. குறிப்பிட்ட காலங்களிலேதான் முத்து எடுக்கப்படுகின்றதே தவிர தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருவதில்லை.

திரு. மு. ச. சிவசாமி : இந்திய உபகண்டத்திலேயே முத்துச் சிப்பி கிடைக்கும் இடம் தூத்துக்குடி. ஆண்டுதோறும் முத்துக் குளிக்காமல் இருக்கக் காரணம், அங்கே உற்பத்தியாகின்ற முத்துச் சிப்பிகளை திருக்கை என்ற மீன் இனம் தின்று விடுவதுதான். இதனால் கோடிக்கணக்கான சிப்பிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்தச் சிப்பிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத் தான் நான் சொன்னேன். முத்துக் குளிக்க சில ஆண்டுகளில் தான் வாய்ப்பு இருக்கிறது. எந்த அளவுக்கு அதிகமாக முத்துக் குளித்து எடுக்கலாம் என்பதற்காக ஆய்வுசெய்ய மீனளத் துறையிலிருந்து உதவி இயக்குநர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். எந்தக் கடலிலும் எப்போதும் முத்து எடுக்க முடியும் என்ற வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மீன் பிடிக்க மீனவர்கள் வலை வீசும்போது சிலசமயம் முத்துச் சிப்பிகளும், சங்குகளும் கிடைத்துவிடுகின்றன. அவற்றை அவர்கள் கொண்டுவந்தால் குற்றம் செய்தவர்களாகிறார்கள். ஆகவே, சங்குகள், முத்துச் சிப்பிகள் கிடைக்குமிடங்களில் மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது என்ற வகையிலே வழிவகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சங்குகளும், முத்துச் சிப்பிகளும் கிடைக்கின்ற இடங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கக்கூடாதபடி தடை செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்
குடிதண்ணீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "தமிழ்நாட்டில் பரவலாகப் பல பகுதிகளில் குடிதண்ணீர் கிடைக்காமல் பொதுமக்களும் கால்நடைகளும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதைப்பற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிய கருத்தை அறிவிப்பதற்குத் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கு இப்போது நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், "தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னை மாநகரில் கடந்த சில மாதங்களாகக் குடிதண்ணீர் இல்லாமல் லட்சக் கணக்கான குடும்பங்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். கல்லூரி மாணவர் விடுதிகளிலும், மருத்துவ மனைகளிலும் தேவையான தண்ணீர் இல்லை. பயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ள எல்லாப் பகுதி மக்களுக்கும் உடனடி தண்ணீர் வழங்க வேண்டிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க" ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கும் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இதுபற்றிய கருத்தை அறிவிக்க வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அறிவிப்பு.
மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இப்பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க, இக் கூட்டத்தொடரில், மு.ப. 10-00
மாற்றுத் தலைவர்களாக, திரு. ந. தருமலிங்கம், திரு. செஞ்சி வெ. முனுசாமி, திரு. ப. மகாதேவன், திரு. கரு. சிமைச்சாமி, திரு. சி. கோவிந்தராஜன், திரு. அ. லெ. சுப்பிரமணியம் ஆகியோரை நான் நியமித்துள்ளேன்.

அடுத்து, அரசினர் மசோதா . . . .

திரு. வி. கே. கோதண்டராமன் : தண்ணீர்ப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் பேசி விடப்போகிறீர்கள். நம் மாநிலத்தில் பல பகுதிகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் தீர்ப்புக் கொடுத்து விட்டால் அதன் பிறகு உறுப்பினர்கள் அதன் மீது கருத்து தெரிவிப்பது முறையாகாது. வேண்டுமென்றால் வருகிற துணை

பானியக் கோரிக்கையில் அந்த ஒரு பொருள் பற்றியே திரு. கோதண்டராமன் அவர்கள் பேசலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளிக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: தங்கள் தீர்ப்பிற்கு நான் தலைவணங்குகிறேன். நெருக்கடியான ஒரு பிரச்சினைபற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தயவுசெய்து ஒரு நாள் விவாதத்திற்கு அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியாக எழுதிக் கொடுங்கள், அதன்மீது தீர்ப்புக் கொடுக்கிறேன். அடுத்து, அரசினர் மசோதா.

4. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—(தொடர்ச்சி)

* **திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1968-69-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் எனது கருத்துக்களை இந்தப் பேரவை முன் வைக்க விரும்புகிறேன். 1971-ம் ஆண்டுக்குள்ளாக தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் மின்சார இணைப்பு கொடுக்கப்படுமென்றும், தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்று திகழவேண்டுமென்கிற அரசின் முயற்சி நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால், 'ரூரல் எலக்ட்ரிஃபிக்கேஷன்' என்ற தலைப்பில், கிராமப்புற மின்சார வசதிக்காக 1968-69-ம், 69-70-ம் ஆண்டுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு 1,250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டிற்குள்ளாக தமிழகம் முழுவதிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு

கொடுப்பதாகயிருந்தால் இந்தத் தொகை போதுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையில் "ஸ்டேட்மென்ட் ஆஃப் ரெவின்யூ ரெசிட்ஸ்" என்ற தலைப்பில் 1968-69- ஆண்டுக்காக உயர் அழுத்த மின்சாரம் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபாய் 24 கோடி 26 ஆயிரத்து 100 ரூபாய் என்றிருக்கிறது. அதே நேரத்தில் 1968-69-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் 20 கோடி 89 லட்சத்து 36 ஆயிரத்து 100 ரூபாய் என்று வரவு காட்டப்படுகிறது. ஆக மூன்று கோடி பதினெட்டு லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் எதிர்பார்த்ததற்கு மேலாகக் குறைந்திருக்கிறது. இதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளித்தால் மன்றம் பெரிதும் மகிழும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறை சிறப்பாக இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் அது ஒரு தனி வாரியமாக ஆக்கப்பட்டது. ஆனால் மின்சார வாரியத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளைப் பார்த்தால் அது அரசாங்கத்தின் ஒரு இலாகாவாகத்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறதே தவிர தன்னிச்சையாகச செயல்படும் வாரியமாக அது செயல்படவில்லை. மின்சார வாரியத்தின் பயனை மக்கள் இன்னும் சிறப்பாகப் பெற வேண்டுமென்றால் மின்சார வாரியம் தன்னிச்சையாக இயங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக பெரிய பெரிய நிறுவனங்களில், உற்பத்தி செய்கிற பிரிவு தனியாகவும், விநியோகம் செய்கிற பிரிவு தனியாகவும் இயங்கிக் கொண்டிருப்பதைத்தான் நாம் உலகில் பார்க்கிறோம். அப்படி ஒன்றோடொன்று தொடர்பில்லாது தனித்தனியாக இயங்கி வருவதினால்தான் அந்தந்தத் துறைகளில் விசேஷ அக்கறை செலுத்த முடிகிறது. ஆனால் நம் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும், மின்சாரத்தை விநியோகம் செய்வதும், விநியோகம் செய்யப்பட்ட மின்சாரத்திற்கு பில்கள் தயாரிப்பதும், பணம் வசூலிப்பதும், மின்சார வாரியத்திற்குத் தேவையான சாதனங்களை வாங்குவதும் ஆக அத்தனையையும் மின்சார வாரியமே ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதனால் பொது மக்களுக்குப் பல தொல்லைகளும் சிக்கல்களும் ஏற்படுவதோடு கூட ஊழல்களும் ஏற்படுகின்றன. ஆகவே மின்சாரத்தை உற்பத்தி செய்கிற இலாகா தனியாகவும், அதை விநியோகம் செய்யும் இலாகா தனியாகவும், பில் போட்டுப் பணம் வசூலிப்பதற்குத் தனி இலாகாவும் இப்படித் தனித்தனியாக இயங்கினால் சிறப்பாக இருக்கும். அத்துடன் பில் போடுவது, பணம் வசூலிப்பது போன்றவைகளுக்கு 'ஏஜென்ஸி' முறை புகுத்தப்பட்டால் மின்சார வாரியத்திற்கு நிறைய பணம் மிச்சமாகும்.

தற்போது மின்சார வாரியத்திலுள்ள அஸிஸ்டென்ட் என்ஜினியர்கள், ஜூனியர் என்ஜினியர்கள், டிவிஷனல் என்ஜினியர்கள், எஸ்.இ. போன்ற பதவிகளும், அமைப்புகளும்

1932-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அன்று தமிழகத்தில் மின்சாரம் உபயோகிப்போரின் தொகை மிகக் குறுகி இருந்தது. ஆனால் விஞ்ஞானம் வளர்ந்துவரும் இந்நாளில் மின்சாரத்தை உபயோகிப்போரின் தொகை பரந்து விரிந்து வருவதால் அந்த அமைப்புகளை, அந்தப் பதவிகளைப் பரவலாக்கி வாரியத்தில் சீரமைப்பு செய்யப்படவேண்டும். இதற்காகத் தனியாக ஒரு நிபுணர் குழு நியமித்தால் நன்றாக இருக்கும் என்ற என் ஆலோசனையைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஏ. இ. அல்லது ஜெ. இ. மட்டத்தில் திட்டங்கள் தீட்டுவதற்கு "கமர்ஷியல் பிராஞ்ச்" என்றும், பின்னால் லைன்கள் போடுவதற்கு "கன்ஸ்ட்ரக்ஷன் பிராஞ்ச்" என்றும், மின் இணைப்பு கொடுப்பதற்கு "ஆப்பரேஷன் அன்ட் மெயின்டனன்ஸ் பிராஞ்ச்" என்றும் மூன்று பிரிவுகள் இயங்கி வருகின்றன. உதாரணமாக, ஒருவர் மின் இணைப்பு பெறவேண்டுமென்று மனு போட்டால் மின்சார இணைப்பு பெறுவதற்குள்ளாக ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவிற்கு அந்த மனு பந்தாடப்படுகிறது. இதனால் ஏழை விவசாயிகளும், நடுத்தர மக்களும் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே இதைச் சீரமைத்து ஒரு ஏ.இ.-யின் கீழ் இந்த மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக ஒரு சூப்பர்வைஸர் அல்லது ஜூனியர் என்ஜினியர் போட்டால் இன்னும் சிறப்பாக அமையும்.

தபால் தந்தி இலாகாவில் சீரமைப்பு செய்திருக்கிறார்கள், நம் மாநிலத்தில் கூட அண்மையில் பொதுப்பணித் துறையில் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது ; கல்வித் துறையில் சீரமைப்பு செய்திருக்கிறார்கள். அதேபோல் மின்சார வாரியத்திலும் சீரமைப்பு செய்யவேண்டும். 1967-68-ம் ஆண்டில் மின்சார வாரியம் இயங்கி வரும் பல்வேறு வாடகைக் கட்டடங்களின் வாடகையாக ரூ. 7,68,897 கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் அதிகமான தாகும். ஆகவே ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தொகை, இவ்வளவு லட்சம் ரூபாய் என்று ஒதுக்கிக் கட்டடம் கட்டினால் அவற்றை சொந்தக் கட்டடங்களில் வைத்துக்கொள்ள முடியும். ஆரம்பத்தில் செலவு அதிகமாக இருந்தாலும் நாளாவட்டத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் வாரியத்திற்கு அதனால் மிச்சம் ஏற்படும்.

இன்று நாட்டில் வேலையில்லாத திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. வேலை கிடைக்காத காரணத்தினால் படித்த இளைஞர்கள் தங்கள் படிப்பிற்கும் தகுதிக்கும் குறைவான வேலைகளைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், மதுரை மின் திட்டத்தின்கீழ் பில் கலெக்டர்கள் வேலைக்காக அண்மையில் மனுக்கள் கோரப்பட்டன. அந்த வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தால் போதும். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் மூன்று என்ஜினியரிங் பட்டதாரிகள் அதற்காக மனுச் செய்திருந்தார்கள். இந்த அளவிற்கு இன்று நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி

வந்திருக்கிறது. அரசாங்கம் சென்ற வருடம் ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 55 ஆகக் குறைத்திருக்கிறார்கள். இதுபற்றிப் பேசும்போது ஆளுங்கட்சியினர், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்படி ஓய்வு பெறும் வயது குறைக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். இன்று மின்சார வாரியத்தில் 55 வயதாகி என்ஜினியர்கள் பலர் ஓய்வு பெற்றிருந்தும் ஒரு வருடத்திற்கும் மேலாக அந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பதவி களுக்குப் புதிதாக ஆட்களை விரைவில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, ஒரு மாதத்திற்குரிய மின்சாரக் கட்டணத்தை இரண்டு மாதங்களுக்குப் பிறகுதான் வசூலிப்பது என்ற வழக்கம் இருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை 14-ம் தேதிக்குள் செலுத்துவதாகயிருந்தால் அதற்கு அபராதத் தொகை கிடையாது. 14-ம் தேதியிலிருந்து 21-ம் தேதிக்குள்ளாகப் பணம் செலுத்து வதாகயிருந்தால் பில் தொகையுடன் அபராதமும் சேர்ந்து வசூலிக்கப்படுகிறது. 21-ம் தேதிக்குள் செலுத்தாவிட்டால் நாலைந்து தினங்களுக்குள் மின்சாரத் தொடர்பைத் துண்டித்து விடுகிறார்கள். பின்னால் மின் இணைப்பு பெறவேண்டுமென்றால் அதற்காகத் தனிக் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கிறது. இது வேளாண்மைக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துகிற விவசாயி களிடமும், வீடுகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துகிற நடுத்தர மக்களிடமும் கடைப்பிடிக்கும் முறை. விவசாயிகளிடம் கண்டிப்பாக நடக்கும் வாரியம், நடுத்தர மக்களிடம் கண்டிப்பாக நடக்கும் வாரியம், ஆலை அதிபர்களுக்குச் சலுகை காட்டுகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தில் பல ஆலைகள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்தாமல் இயங்கிக் கொண்டிருக் கின்றன. எனக்குத் தெரிந்த அளவில் மதுரையைச் சேர்ந்த ஒரு பிரபல தொழில் அதிபர் பல லட்சக்கணக்கான ரூபாய் மின்சார வாரியத்திற்கு மின்சாரக் கட்டண பாக்கியாகச் செலுத்த வேண்டி யிருக்கிறது. நான், மூடிக்கிடக்கின்ற ஆலைகளைப்பற்றிச் சொல்ல வில்லை. லாபத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஆலைகளே மின்சாரக் கட்டணம் செலுத்தாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 31—3—1969 முடிய மின்சார வாரியத்திற்குத் தமிழ்நாட்டிலுள்ள ஆலைகளிடமிருந்து கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டண பாக்கி சுமார் 5 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். சாதாரண மக்களிடமிருந்து கசக்கிப் பிழிந்து வசூல் செய்யும் வாரியம் ஏன் ஆலை அதிபர்களுக்குச் சலுகை காட்ட வேண்டு மென்று விளங்கவில்லை.

பொதுவாக, மின்சார வாரியம் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 32 காசு என்று பெறுகிறது. ஆனால் மின்சார வாரியத்திலிருந்து மின்சாரத்தைப் பெறும்

மதுரை, கோவை போன்ற நகரசபைகள் மின்சார வாரியம் வாங்கும் கட்டணத்தைவிடக் குறைவாக வாங்குகின்றன. மதுரை புறநகர்ப் பகுதியில் ஒரே தெருவில் எதிரும் புதிருமாக இரு வீடுகளில் வசிப்பவர்களில் ஒருவர் மதுரை நகரசபையிடமிருந்து மின்சாரம் பெறுபவர்; இன்னொருவர் மின் வாரியத்திடமிருந்து நேரடியாக மின்சாரம் பெறுகிறார். மதுரை நகரசபையிலிருந்து மின்சாரத்தைப் பெறுபவர் யூனிட் ஒன்றுக்கு 25 காசும், வாரியத்திலிருந்து பெறுபவர் 32 காசும் கொடுக்கிறார். ஆக, மின்சார வாரியத்திடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொண்ட நகரசபை, மின்சார வாரியத்தைவிடக் குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் மொத்த வியாபாரிகளிடம் வாங்கினால் விலை அதிகம், சில்லரை வியாபாரிகளிடம் வாங்கினால் விலை குறைவு என்ற புதுமையை உலகத்தில் வேறு எங்கும் காண முடியாது. அது இங்குதான் நடக்கிறது. வீடுகளுக்குக் கொடுக்கும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு 25 காசுகளுக்குக் கொடுக்கவேண்டும். அதனால் ஏற்படும் இழப்பை அலுமினியம், சிமெண்ட் தொழிற்சாலை போன்றவைகளுக்கு ஒரு காசு வீதம் என்று அதிகப்படுத்தினால்கூடப் போதும், அந்த இழப்பு மின்சார வாரியத்திற்கு நீங்கிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

களப்பணியாளர்கள், அதாவது "ஃபீல்ட் ஓர்க்கர்ஸ்" கையூட்டுப் பெறுகிறார்கள் என்பது மிகவும் சர்வசாதாரணமாகி விட்டது. பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்றால் 50 ரூபாய், 100 ரூபாய் என்று லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. பல அதிகாரிகள் மேல் வழக்கு வந்து கீழ்க் கோர்ட்டிலே அவர்கள் தண்டிக்கப்பட்டு, மேல் கோர்ட்டிற்கு வந்தபொழுது நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையில் சூப்பர்வைஸர் ஒருவர் ஏறக்குறைய 2 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கியிருக்கிறார் என்று இலஞ்ச இலாக்காவினர் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அது கோர்ட்டிலே இருப்பதால் அதுபற்றி மேலும் சொல்ல விரும்பவில்லை. இம்மாதிரி பல இடங்களில் ஊழல்கள் நடக்கின்றன. "குதிரை களவுபோன பிறகு லாயத்தைப் பூட்டிப் பயன் இல்லை". லஞ்சம் வாங்கிய பிறகு பின்னாலே நடவடிக்கை எடுக்காமல், முன்கூட்டியே இதற்கு வழிவகை செய்து சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். மின் இணைப்பு கோரி மனுக்கள் வந்தால் அதற்கு ஒரு ரிஜிஸ்தர் போட்டு அதற்கு வரிசை எண் கொடுக்கவேண்டும். பெயரைப் பதிவு செய்துகொண்டு அவரிடம் கையெழுத்து வாங்கிக்கொள்ள வேண்டும். மனுவை வாங்கிக்கொண்டதற்கு அத்தாட்சியாக அதற்கு ஒரு டோக்கன் கொடுக்க வேண்டும். அந்த வரிசைப்படி மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். அப்படி யாருக்காவது வரிசைப்படி கொடுக்க முடியாத சூழ்நிலை உருவானால், கோட்ட மின் பொறியாளர் நேரடி-

யாகச் சென்று பார்த்து அது சம்பந்தமான விவரங்களை மின்சாரம் கோரியவருக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் மின்சார இலாக்காவிலுள்ள இலஞ்ச ஊழலை ஒழிக்க வழிவகை இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனியார் நிறுவனங்களில் வாங்கப்படும் பல்புகள் நன்றாக எரிகின்றன. ஆனால், வாரியத்தின் மூலம் வழங்கும் பல்பு அதிக நாள் எரியாத மர்மம் என்ன என்று புரியவில்லை. எனவே, நல்ல தரமான பல்புகளை வாரியம் வாங்க வேண்டும். அல்லது தொழில் இலாக்காவுடன் தொடர்புகொண்டு வாரியமே பல்புகளைத் தயாரிக்க வேண்டும். பொதுவாகக் கிராமங்களில் தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை. இது சென்ற ஆண்டு மட்டுமல்ல, பல ஆண்டுகளாகவே இந்த மன்றத்தில் மட்டும் அல்ல, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் அங்கத்தினர்களால் மன வேதனையோடு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. பல கிராமங்களில் மின் விளக்குகள் எரியாமலே ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மின்சாரக் கட்டணத்தை வசூலித்து விடுகிறார்கள். இதனால் எங்கள் தொகுதியில் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம மக்கள் எங்களுக்குத் தெருவிளக்குகளே வேண்டாம். பழையமாதிரி பெட்ரோமாக்ஸ் விளக்குகளே வைத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லுமளவிற்கு வேதனை அடைந்திருக்கிறார்கள். தெருவிளக்குகளுக்காகத் தனி மீட்டரைப் பொருத்தி அதன் மூலம் மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்ற முறை கலந்து கொண்டு பேசும்பொழுது, திருமங்கலத்தை ஒரு ரெவின்யூ யூனிட்டாக அமைக்க வேண்டுமென்று கூறினேன். அது குறித்து மின்சார வாரியத்திற்கும் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதி நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு வாரியத்திலிருந்து உடனடியாக எனக்குப் பதில் கிடைத்திருக்கிறது. எப்போது? இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாம் தேதியன்று. ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுதும் கடிதத்திற்கு ஏறத்தாழ 10 மாதங்கள் கழித்து பதில் வந்திருக்கிறது. மதுரை ரெவின்யூ யூனிட்டாக அமைக்கப்படும் பொழுது இதுபற்றிப் பரிசீலனை செய்கிறோம் என்று அதில் சொல்லியிருந்தார்கள். ஆனால் இப்பொழுது உசிலம்பட்டி ஒரு ரெவின்யூ யூனிட்டாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திருமங்கலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களும், பிரதம மின் பொறியாளர் அவர்களும் பரிந்துரை செய்திருந்தும்கூட, வேண்டுமென்றே திருமங்கலத்தில் ஆரம்பிக்கப் படவில்லை. இது நிர்வாக நலனுக்காகச் செய்யப்பட்டது அல்ல, அரசியல் நோக்கத்திற்காக இருப்பதாகவே கருதுகிறேன். இருந்தாலும்கூட, திருமங்கலத்தை ரெவின்யூ யூனிட்டாக அமைப்பதற்கான வாய்ப்புகள் இன்னும் இருக்கின்றன. அடுத்தபடியாக ஆரம்பிக்கும்பொழுது திருமங்கலத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்ற ஆண்டு திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசும் போது வேளாண்மைக்காகக் கிணறு வெட்டும் பணிக்கு, வேளாண்மை மின் கட்டணம் அனுமதிக்கப்படலாம் என்று உத்திரவிடப்பட்டும் இதுவரை அது செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில் உரையில் வேளாண்மை நிலங்களில் வேளாண்மை மின் கட்டணத்தின் கீழ் கிணறு தோண்டுவதற்கு அனுமதியளிக்க உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவு செயல்படுத்தப்படாத நேர்வுகள்பற்றி இதுவரை நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. திட்டவட்டமான நேர்வுகள் வாரியத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருக்கிறது. திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினரிடமே கிணறு வெட்டும் பணிக்குப் பயன் படுத்த மின்சாரத்துக்குத் தனியாக மீட்டர் வைக்க வேண்டும். உயர்கட்டண விகிதத்தில் வசூலிக்கப்படும் என்று கூறி, தனி மின் இணைப்புக்கு ரூ. 1,000 வரை கேட்டிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகள். அங்குள்ள பல கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை. அந்த இரண்டு பின் தங்கிய தாலுக் காக்களுக்கும் தனித் திட்டத்தைத் தீட்டி அந்த இரு தாலுக்காக் களையும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். அங்குள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்து பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்கு மின் வாரியம் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, தமிழக மின்வாரியத்தின் நிதி அறிக்கையில் என்னுடைய கருத்துக் களைக் கூற விழைகிறேன். தமிழக மின்வாரியம் ஆற்றிவருகின்ற பணிகள் போற்றுதற்குரியன என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. தமிழக மின்வாரியத்தைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்,

'The Electricity Board is one of the best assets of the Government of Madras.' என்று தமிழக மின்சார வாரியம் தமிழக அரசினுடைய மிகச்சிறந்த சொத்துக்களில் ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்களே பாராட்டிய பிறகு, அதற்குப் பிறகு பாராட்டத் தகுந்தவர்கள் யாருமில்லை என்ற காரணத்தினால் நான் பாராட்டுவதற்குப் பதிலாக, மின்சார வாரியத்தின் அருமை பெருமைகளைப்பற்றிப் பேசுவதற்குப் பதிலாக மின்சார வாரியத்தின் சாதனைகளையும், இனி சாதிக்க வேண்டியவைகளையும் இப்பேரவையின்கண் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழக மின்சார வாரியம் இதுவரையில் கொடுத்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 4.21,735 ஆகும். இன்னும் நாம் கொடுக்க வேண்டிய பம்பு செட்டுகள் சுமார் 6 இலட்சம். அதாவது கிட்டத்தட்ட 1½ மடங்கு ஆகும். மின்வசதி பெற்ற கிராமங்கள்

9,468. மின்வசதி பெறாத கிராமங்கள் 4,656 ஆகும். கிட்டத்தட்ட இன்னும் மூன்றிலே ஒரு பங்காகும். மின்வசதி பெற்ற சிற்றூர்கள் ஏற்கெனவே 22,000. மின்வசதி பெறாத சிற்றூர்கள் இன்னும் 20,000 இருக்கின்றன. மின்வசதி பெற்ற ஹரிஜன காலனிகள் 3,283. மின்வசதி பெறாத ஹரிஜன் காலனிகள் 2,000. மின்வசதித் திறன் இப்போது 1,600 மெகா வாட்டாக இருக்கிறது, நெய்வேலியில் உற்பத்தியாவதையும் சேர்த்து. ஆனால், எல்லாக் கிணறுகளுக்கும், எல்லாக் கிராமங் களுக்கும், எல்லாச் சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டு மென்றால் நாம் உற்பத்தி செய்யவேண்டிய அளவு 2,500 மெக வாட்டாக இருக்க வேண்டும். இன்று நம்முடைய மின்சார வாரியத்தின் சாதனையின் முன்னேற்றங்களைப் பார்த்துப் பிற மாநிலங்களும் பாராட்டுகின்றவகையில் அமைந்திருக்கிறது. ஆனால் சாதிக்க வேண்டியவைகள் இன்னும் ஏராளமிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சரவர்கள 1971-ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டிலேயுள்ள அத்தனை கிராமங்களுக்கும், சிற்றூர் களுக்கும் மின் வசதி வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார் கள். நான் அந்த அறிவிப்பைக் கேட்டபிறகு கொஞ்சம் உண்மையிலேயே அதிர்ச்சியடைந்தேன். ஏனென்றால், மின் வாரியத்தின் மூலம் இதுவரையிலும் அவர்கள் கொடுத்திருக்கும் பம்பு செட்டுகள் 4 இலட்சம். இன்னும் முடிக்க வேண்டியவை 6 இலட்சம். ஆனால் 50,000 பம்பு செட்டுகளுக்கு மேல் தருவதற்கு மின் வாரியத்திடம் நிதி வசதி கிடையாது. மின்வாரியத்தினால் மின் இணைப்புத் தர வேண்டிய கிராமங்கள் இன்னும் 25,000 இருக் கின்றன. ஆனால் இன்று தருகின்ற அளவு 3,300 தான். ஆகவே, 25,000 சிற்றூர்கள், பேரூர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் வழங்கு வது என்பது எந்தவிதத்திலே சாத்தியம் என்பதுபற்றி எனக்கு உண்மையிலேயே அச்சம் தரத்தக்கதாக இருக்கிறது. நான் சாதாரணமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஒரு ஊருக்கு 10 தெரு விளக்குகள், 10 வீடுகளுக்கு விளக்குகள் என்றாலும் 73 கோடி ரூபாய் செலவாகிறது. ஆனால் மின்சார வாரியம் ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கக் கூடிய தொகை 12 கோடி ரூபாய்தான். ஆக இரண்டு ஆண்டுகளிலே தமிழகத்திலுள்ள அத்தனை சிற்றூர் கள், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும், கிட்டத்தட்ட எல்லாக் கிணறுகளுக்கும் நாம் மின்சாரம் வழங்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். ஏனென்றால் கிராமங்களிலே மின் சாரம் வேண்டுமென்று கேட்கின்றபோது அவர்கள் வீதிகளுக்கும் வீடுகளுக்கும் கேட்பதில்லை. தங்களுடைய கிணறுகளுக்குத் தான் முக்கியமாகக் கேட்கிறார்கள். கிணறுகளுக்கு பம்ப் செட் போட்டுத் தருவதற்கும் வீதிகளுக்கும், வீடுகளுக்கும் மின்சாரம் தருவதற்கும் ஆகின்ற செலவுகளைக் கணக்கெடுத்துப் பார்க்கின்ற போது அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது என்றே தெரிய வில்லை. மின்சார வாரியத்திற்கு 50,000 பம்ப் செட்களுக்கும் 3,000 கிராமங்களுக்கும் மின்சாரம் தருவதற்குத் தான் சக்தி இருக்கிறது. ஆகவே, முதலமைச்சரவர்கள் அறிவித்த திட்டம் கவர்ச்சிகரமான

சென்ற ஆண்டு திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசும் போது வேளாண்மைக்காகக் கிணறு வெட்டும் பணிக்கு, வேளாண்மை மின் கட்டணம் அனுமதிக்கப்படலாம் என்று உத்திரவிடப்பட்டும் இதுவரை அது செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில் உரையில் வேளாண்மை நிலங்களில் வேளாண்மை மின் கட்டணத்தின் கீழ் கிணறு தோண்டுவதற்கு அனுமதியளிக்க உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவு செயல்படுத்தப்படாத நேர்வுகள்பற்றி இதுவரை நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. திட்டவட்டமான நேர்வுகள் வாரியத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருக்கிறது. திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினரிடமே கிணறு வெட்டும் பணிக்குப் பயன் படுத்த மின்சாரத்துக்குத் தனியாக மீட்டர் வைக்க வேண்டும். உயர்கட்டண விகிதத்தில் வசூலிக்கப்படும் என்று கூறி, தனி மின் இணைப்புக்கு ரூ. 1,000 வரை கேட்டிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகள். அங்குள்ள பல கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை. அந்த இரண்டு பின் தங்கிய தாலுக் காக்களுக்கும் தனித் திட்டத்தைத் தீட்டி அந்த இரு தாலுக்காக் களையும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். அங்குள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்து பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்கு மின் வாரியம் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, தமிழக மின்வாரியத்தின் நிதி அறிக்கையில் என்னுடைய கருத்துக் களைக் கூற விழைகிறேன். தமிழக மின்வாரியம் ஆற்றிவருகின்ற பணிகள் போற்றுதற்குரியன என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. தமிழக மின்வாரியத்தைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்,

'The Electricity Board is one of the best assets of the Government of Madras.' என்று தமிழக மின்சார வாரியம் தமிழக அரசினுடைய மிகச்சிறந்த சொத்துக்களில் ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்களே பாராட்டிய பிறகு, அதற்குப் பிறகு பாராட்டத் தகுந்தவர்கள் யாருமில்லை என்ற காரணத்தினால் நான் பாராட்டுவதற்குப் பதிலாக, மின்சார வாரியத்தின் அருமை பெருமைகளைப்பற்றிப் பேசுவதற்குப் பதிலாக மின்சார வாரியத்தின் சாதனைகளையும், இனி சாதிக்க வேண்டியவைகளையும் இப்பேரவையின்கண் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழக மின்சார வாரியம் இதுவரையில் கொடுத்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 4,21,735 ஆகும். இன்னும் நாம் கொடுக்க வேண்டிய பம்பு செட்டுகள் சுமார் 6 இலட்சம். அதாவது கிட்டத்தட்ட 1½ மடங்கு ஆகும். மின்வசதி பெற்ற கிராமங்கள் 9,468. மின்வசதி பெருத கிராமங்கள் 4,656 ஆகும். கிட்டத்தட்ட இன்னும் மூன்றிலே ஒரு பங்காகும். மின்வசதி பெற்ற சிற்றூர்கள் ஏற்கெனவே 22,000. மின்வசதி பெருத சிற்றூர்கள் இன்னும் 20,000 இருக்கின்றன. மின்வசதி பெற்ற ஹரிஜன காலனிகள் 3,283. மின்வசதி பெருத ஹரிஜன் காலனிகள் 2,000. மின்வசதித் திறன் இப்போது 1,600 மெகா வாட்டாக இருக்கிறது, நெய்வேலியில் உற்பத்தியாவதையும் சேர்த்து. ஆனால், எல்லாக் கிணறுகளுக்கும், எல்லாக் கிராமங் களுக்கும், எல்லாச் சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டு மென்றால் நாம் உற்பத்தி செய்யவேண்டிய அளவு 2,500 மெக வாட்டாக இருக்க வேண்டும். இன்று நம்முடைய மின்சார வாரியத்தின் சாதனையின் முன்னேற்றங்களைப் பார்த்துப் பிற மாநிலங்களும் பாராட்டுகின்றவகையில் அமைந்திருக்கிறது. ஆனால் சாதிக்க வேண்டியவைகள் இன்னும் ஏராளமிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 1971-ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டிலேயுள்ள அத்தனை கிராமங்களுக்கும், சிற்றூர் களுக்கும் மின் வசதி வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார் கள். நான் அந்த அறிவிப்பைக் கேட்டபிறகு கொஞ்சம் உண்மையிலேயே அதிர்ச்சியடைந்தேன். ஏனென்றால், மின் வாரியத்தின் மூலம் இதுவரையிலும் அவர்கள் கொடுத்திருக்கும் பம்பு செட்டுகள் 4 இலட்சம். இன்னும் முடிக்க வேண்டியவை 6 இலட்சம். ஆனால் 50,000 பம்பு செட்டுகளுக்கு மேல் தருவதற்கு மின் வாரியத்திடம் நிதி வசதி கிடையாது. மின்வாரியத்தினால் மின் இணைப்புத் தர வேண்டிய கிராமங்கள் இன்னும் 25,000 இருக் கின்றன. ஆனால் இன்று தருகின்ற அளவு 3,300 தான். ஆகவே, 25,000 சிற்றூர்கள், பேரூர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் வழங்கு வது என்பது எந்தவிதத்திலே சாத்தியம் என்பதுபற்றி எனக்கு உண்மையிலேயே அச்சம் தரத்தக்கதாக இருக்கிறது. நான் சாதாரணமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஒரு ஊருக்கு 10 தெரு விளக்குகள், 10 வீடுகளுக்கு விளக்குகள் என்றாலும் 73 கோடி ரூபாய் செலவாகிறது. ஆனால் மின்சார வாரியம் ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கக் கூடிய தொகை 12 கோடி ரூபாய்தான். ஆக இரண்டு ஆண்டுகளிலே தமிழகத்திலுள்ள அத்தனை சிற்றூர் கள், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும். கிட்டத்தட்ட எல்லாக் கிணறுகளுக்கும் நாம் மின்சாரம் வழங்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். ஏனென்றால் கிராமங்களிலே மின் சாரம் வேண்டுமென்று கேட்கின்றபோது அவர்கள் வீதிகளுக்கும் வீடுகளுக்கும் கேட்பதில்லை. தங்களுடைய கிணறுகளுக்குத் தான் முக்கியமாகக் கேட்கிறார்கள். கிணறுகளுக்கு பம்ப் செட் போட்டுத் தருவதற்கும் வீதிகளுக்கும், வீடுகளுக்கும் மின்சாரம் தருவதற்கும் ஆகின்ற செலவுகளைக் கணக்கெடுத்துப் பார்க்கின்ற போது அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது என்றே தெரிய வில்லை. மின்சார வாரியத்திற்கு 50,000 பம்ப் செட்களுக்கும் 3,000 கிராமங்களுக்கும் மின்சாரம் தருவதற்குத் தான் சக்தி இருக்கிறது. ஆகவே, முதலமைச்சரவர்கள் அறிவித்த திட்டம் கவர்ச்சிகரமான

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 ஆகஸ்ட் 18

திட்டம், நல்ல திட்டம், அது நாமெல்லாம் எதிர்நோக்கிச் செல்ல வேண்டிய திட்டம். ஆனால், நடை முறைக்கு அது ஒவ்வுமா என்ற என்னுடைய சந்தேகத்தை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 6 இலட்சம் பம்ப் செட்களுக்கு மின்சாரம் தர வேண்டுமானால் 150 கோடி ரூபாய் தேவைப்படும். அதே போல் கிராமங்களுக்குத் தர வேண்டுமானால் 73 கோடி ரூபாய் தேவைப்படும். இவ்வாறு பம்ப் செட்களுக்கு மின்சாரம் தருவது, கிராமங்களுக்கு மின்சாரம் தருவது மட்டுமல்ல, மின்சார உற்பத்தியையும் நாம் பெருக்கியாக வேண்டியிருக்கிறது. மின்சாரத்தைக் கொண்டு செல்ல பெரிய லைன்களும் போடவேண்டியுள்ளன. மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பெரிய லைன்கள் போடுவதற்கும் கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக, எல்லா சிற்றூர்களுக்கும் ஊர்களுக்கும் எல்லாப் பேரூர்களுக்கும் எல்லாக் கிணறுகளுக்கும் நாம் மின்சாரம் வழங்கி விவசாயிகளிடத்திலே நன்மதிப்பைப் பெறவேண்டுமானால் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் தேவைப்படும். 1971-ம் ஆண்டின் இறுதிக்குள் எல்லா ஊர்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்வசதி செய்து தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த வகையில் நிதி ஆதாரங்களைத் திரட்டப் போகிறோம், எப்படி நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைக்கப் போகிறோம், எந்தெந்த அடிப்படையிலே கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்போகிறோம் என்ற தெளிவான விவரங்களை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் அறிவிப்பார்களானால் மிக நன்றாக இருக்கும். மின்சார வாரியத்தின் 10-வது ஆண்டு விழாவில் அண்ணா அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள்.

'What we have achieved when compared with what is needed in our country, when a comparative study is made, we are staggered at the magnitude of the problem and the paucity of funds that we require. என்று குறிப்பிட்டார்கள். "நடந்தவற்றை நடக்க வேண்டியவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தேவைப்படும் பணமும் பிரச்சினையின் அளவும் நம்மைத் திகைக்க வைக்கின்றன" என்று குறிப்பிட்டார்கள். ஆகையினால் மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கின்ற போது அமைச்சரவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு தெளிவான விளக்கம் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் மின்சார வாரியத்திலே பொறி இயல் வல்லுனர்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். கடந்த மூன்று தினங்களாகக் கோரிக்கை தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்பது எல்லாம் சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்பது. அடுத்தபடியாக, இளம் பொறியாளர்களை அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்பது. அவர்கள் ஊதிய உயர்வைக் கேட்பதால்

1969 ஆகஸ்ட் 18] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

கேட்கிறார்கள் என்று பொருள் மற்ற மாநிலங்களைவிட அதிகமாகக் அல்ல. பஞ்சாபிலே பொறியாளருக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 370, அஸ்ஸாமில் ரூ. 400, உத்தரப்பிரதேசத்தில் ரூ. 350, மேற்கு வங்கத்தில் ரூ. 325, பீகாரில் ரூ. 300, மத்திய பிரதேசத்தில் ரூ. 300, ஆந்திரத்தில் ரூ. 300, அண்டை மாநிலமான கேரளத்தில் ரூ. 325, தமிழ்நாட்டிலேயுள்ள நெய்வேலியில் ரூ. 325 என்ற அளவில் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ் நாடு மின்சார வாரியத்திலே இந்த அடிப்படைச் சம்பளம் ரூ. 240 ஆக இருக்கிறது. மின்சார வாரியத்தைப் பாராட்டுகின்ற போது மின்சார பொறி இயல் வல்லுனர்கள் வகிப்பது முதலிடம். ஆனால், ஊதியத்தைப் பார்க்கும்போது அவர்கள் வகிப்பது கடைசி இடம். இது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் 10-வது ஆண்டு விழாவிலே இதே கோரிக்கை வலியுறுத்தப் பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை நான் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'It is stated that the Engineers of this Department are not getting enough salary and adequate salary compared with other States. I am very sorry to hear that. Because I want to keep the official cadre in our State well contented, happy and be able to compete with other State officials saying we are getting the best compared with other States. I do not know the comparative figures of the salaries and emoluments they get in Kerala and Madras, but I will see to it as and when resources are strengthened that even this grievance is erased.'

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். "நமது பொறியாளர்களுக்கு மற்ற மாநிலங்களில் கிடைக்கும் அளவுக்கு ஊதியம் கிடைக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். இதைக் கேட்க நான் மிகவும் வேதனைப்படுகிறேன். ஏனெனில் தமிழ் நாட்டுப் பொறியாளர்கள் நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும். இதர மாநிலங்களைவிட உயர்வான நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்று அவர்கள் சொல்ல வேண்டும். இதுவே என் ஆசை. கேரளத்தின் ஊதிய விகிதமும் தமிழகத்தின் ஊதிய விகிதமும் பற்றி எனக்குத் தெரியவில்லையானாலும், இந்த மனக் குறையையும் போக்கிவிடுவேன் என உறுதி கூறுகிறேன்," என்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் உணர்வையும் மதித்து, தமிழ் நாடு பொறியாளர்களுடைய அதிருப்தியையும் பார்த்து, அவர்களுக்கு உரிய சம்பள விகிதத்தைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஊதிய உயர்வு கொடுப்பதனால் அதிகமாகச் செலவு ஒன்றும் வரப்போவதில்லை. உதாரணத்திற்காகச் சொல்கிறேன், 33 கோடி ரூபாய் வருவாயுள்ள மராட்டியத்தில் பொறியாளர்களுக்காகச் செலவிடுவது 90 இலட்சம். உத்தரப் பிரதேசத்தில் 34 கோடி ரூபாய்தான் அந்த மின்சார வாரியத்தின் வருமானம். அங்கே பொறியாளர்களுக்காக 97 இலட்சம் ரூபாய் செலவிடுகிறார்கள். ஆந்திரத்தில் 25 கோடி ரூபாய்தான் மின்சார வாரியத்திற்கு வருமானம். அங்கே பொறியாளர்

களுக்காக 100 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். 13 கோடி ரூபாய் வருமானமுள்ள கேரள மின்சார வாரியத்திலே 82 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது பொறியாளர்களுக்காக. ஆனால் தமிழ்நாட்டு மின்சார வாரியத்தின் வருமானம் 53 கோடி ரூபாய். இங்கு பொறியாளர்களுக்காகச் செலவிடப்படுவது 87 இலட்சம் ரூபாய். கிட்டத்தட்ட கேரளத்தைப் போல 4 மடங்கு அதிக வருவாய் உள்ள தமிழ்நாட்டிலே 87 இலட்சம் ரூபாய்தான் பொறியாளர்களுக்காகச் செலவிடுகிறது. நான் கேட்கிறேன், காங்கிரஸ் ஆட்சியிலே கிடைக்கின்ற ஊக்கம், கம்யூனிஸ்ட் ஆட்சியிலே கிடைக்கின்ற ஆதரவு, கழக ஆட்சியிலே கிடைக்கவில்லையென்றால் பொறியாளர்கள் மெத்த வேதனைப்பட மாட்டார்களா? இந்த நாட்டிலே உள்ள பொறியாளர்கள் அப்படி ஒன்றும் பாவம் செய்தவர்கள் அல்ல என்பதையும் நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திறமை மிக்க, திறமை உள்ள பொறியாளர்கள் நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே உள்ளவர்கள்கூட பாராட்டத்தக்க அளவுக்குத் திறமைமிக்க பொறியாளர்கள் நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த சம்பள விகிதம், மற்ற மாநிலத்திலுள்ளவர்கள் வாங்குவதைவிடக் குறைவாக அவர்களுடைய சம்பளத்தை வைத்திருப்பது நியாயம் அல்ல. திறமைகளை மதித்துப் பழக்கப்பட்டவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர் வழி பின்பற்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறமைகளைப் புறக்கணித்து விடக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இளம் பொறியாளர்கள் அரசிதழ் பதிவு பெறுதல் பற்றிய கோரிக்கையாகும். குஜராத் மாநிலத்திலே பட்டப் படிப்பு பெற்றவர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக நியமிக்கப் படுகிறார்கள். ஒரிஸ்ஸா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் இளம் பொறியாளர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்கள். இந்தி படித்த இன்ஜினியர்கள் கெட்டிக்காரர்கள் என்று பொருள் அல்ல. தமிழ் படித்த இன்ஜினியர்கள் கெட்டிக்காரர்கள் அல்ல என்று பொருள் அல்ல. ஆகையினால், அந்த மாநிலங்களிலே கிடைக்கின்ற சலுகை நம்முடைய நாட்டிற்குக் கிடைக்கவில்லையென்ற காரணத்தினால் அகில இந்திரிய பதவிக்குப் போட்டி ஏற்படுகின்றபோது, வட நாட்டிலே இருந்தவர்கள் 10 ஆண்டுகள் அரசிதழ பதிவு பெற்ற இளம் பொறியாளர் என்று சொல்லி தகுதியை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள். நம்முடைய பொறியாளர்களுக்குத் தகுதி இருந்தும் அரசிதழ் பதிவுபெறாத காரணத்தினால் தகுதியை இழந்து விடுகிறார்கள். ஆகையினால், பணச் செலவு இல்லாத இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற தமிழ் நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கிட்டத்தட்ட 55,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் கடந்த

2 ஆண்டுகளாக இதேபோன்று தங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கின்ற பொழுதெல்லாம் இந்திய அரசு ஊதியக் குழு நியமித்திருக்கிறது என்ற பதில்தான் வந்திருக்கிறது. இந்திய அரசு ஏகாதிபத்திய அரசாக இருக்கிற காரணத்தினால் இந்த ஊதியக் குழுவினுடைய பரிவுரைகள் எவ்வளவு காலமானாலும் 2 ஆண்டுகள் அல்ல, 20 ஆண்டுகள் ஆனாலும் வராது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் தொழிலாளர்கள்பால் அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய அரசு கேரள மாநிலத்திலே கொடுக்கின்ற அந்த அளவுக்காவது ஊதியச் சலுகைகளை அளித்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவேண்டும். ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்தால் அதற்கேற்ப அவைகளைப் பிறகு திருத்தி அமைத்துக் கொள்ளலாம். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நாம் மின்சார வாரியத்திற்குக் கொடுத்திருக்கின்ற திட்டங்கள் ஏராளம். நம்முடைய முதலமைச்சரவர்கள் சுமத்தியிருக்கிற பளு மிகமிக ஏராளம். அது நடக்குமா நடக்காதா என்பதே மிகப் பெரிய பிரச்னை. இந்த நிலையிலே அங்கே பணியாற்றுகின்ற பொறி இயல் வல்லுனர்கள், தொழிலாளர்கள் இவர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, தமிழ் நாடு மின் வாரியத்தில் அணைக்கட்டுப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் 10 அல்லது 15 ஆண்டுகளாகத் தற்காலிகமாக வேலை செய்து வருகிறார்கள். நம்முடைய ஆட்சி ஏற்பட்டபிறகு அவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து தமிழ் நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் என்று அமைத்து அவர்களுக்கு நிரந்தர சலுகை தர நாம் போராடி வருகிறோம். ஆனால், அதே சமயத்தில் துரதிருஷ்ட வசமாக நம்முடைய இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியினர், அணைக்கட்டுத் தொழிலாளர்கள் பக்கம் இதுவரை திரும்பிப் பார்க்காதவர்கள், திடீரென்று பரம்பிக்குளம்-ஆளியார் அணைக்கட்டுப் பகுதியில் வேலை செய்யும் 10, 15 தொழிலாளர்களைப் பிடித்து, ஒரு சங்கத்தைத் திடீரென்று உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சங்கம் உருவானதைப் பற்றிக் கூடப் பரவாயில்லை. ஆனால் மற்றொன்றை, மிக மிக ஆபத்தான ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரளத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும், தமிழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் அங்கே வேலை செய்கிறார்கள். என்ன காரணத்தினாலோ இங்கே ஏற்கனவே இருந்ததைத் தவிர இன்னொரு தொழிற்சங்கத்தை அமைத்திருக்கிறார்கள். கோவையைச் சேர்ந்த இடதுசாரி கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலே அது நடந்து கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவு, போட்டி தொழிற்சங்கம் என்ற நிலைமை மாறி. தமிழர். மலையாளி என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை நாம் ஒப்புக் கொண்டாகிவிட்டது. அணைக்கட்டுத் தொழிலாளர்கள் பற்றி

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 ஆகஸ்ட் 18

இதுவரையில் எந்த அரசியல் கட்சிக்காரர்களும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் தான் முதன் முதலாக அவர்கள்பால் அக்கறை கொண்டு ஒரு தொழிலாளர் சங்கம் ஆரம்பித்து அவர்களுக்காகப் பணியாற்றி வருகிறோம். வேலை நடந்து கொண்டு வருகிறது. இதற்கிடையில் ஒரு போட்டி சங்கத்தை, அதுவும் வேறு மொழிக்காரரைச் சேர்த்து, அங்கு மொழி வேறுபாட்டை ஏற்படுத்தியிருப்பது நியாயம்தானா? எங்களுக்கு ஒன்றுமில்லை. மொழியால் வேறுபட்டாலும் இனத்தால் திராவிடர்கள் என்ற அடிப்படைக் கொள்கையைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது. ஆகையினால்
மு. ப. 103-0 எங்களிடத்தில் பேதம் இல்லை. ஆனால் அங்கு நிலைமை மிகவும் கவலை தருகின்ற முறையில் அமைந்திருக்கின்றது. இது சர்வதேச தொழிலாளர் கோட்பாட்டுக்கு விரோதமாக இருக்கிறது என்பதை மட்டும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்தபடியாக, தமிழக மின் வாரியத்திற்குத் தலைமைப் பொறியாளர் மூன்று மாதங்களுக்கு ஒருவர், 6 மாத சர்வீஸ் உள்ளவர், 8 மாத சர்வீஸ் உள்ளவர் வருவதும், போவதும் இருக்கிற நிலைமை இந்த நிறுவனத்திற்கு நல்லது அல்ல. ஒரு நிறுவனம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால்—ஏற்கனவே உயர்திரு வி. பி. அப்பாதுரை அவர்கள் இருந்தபொழுது 8 ஆண்டு காலம் தலைமைப் பொறியாளராக சர்வீஸும், 5 ஆண்டு காலம் சேர்மனாகவும் இருந்த காரணத்தினால், அவர் எல்லோரையும்பற்றித் தெரிந்து கொண்டிருந்தார், எல்லா நிலைமைகளைப்பற்றியும் புரிந்து கொண்டிருந்தார். திட்டங்களை வகுக்கவும், நிறைவேற்றவும் ஆற்றல் பெற்றிருந்தார்—குறைந்தது மூன்று ஆண்டுக் காலம் சர்வீஸ் உள்ளவர் தலைமைப் பொறியாளராக இருந்தால்தான் எல்லா நிலைமைகளையும் புரிந்துகொண்டு, திட்டங்களைத் தீட்டவும், அவைகளை நிறைவேற்றி வைக்கவும் பக்குவமடைந்திருப்பார். மின்சார வாரியம் இதுபற்றி உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை குறித்து ஒரு சில மேல் விளக்கங்களைக் கேட்டு வரவேற்கிறேன். இந்த அறிக்கையின் பின் பகுதியிலே கிராஃப் மூலம் வளர்ச்சியைக் காட்டியிருக்கிறார்கள். தமிழக அரசின் ஆட்சிக்குட்பட்ட கிராமங்களின் எண்ணிக்கையைக் காட்டி, அத்தனை கிராமங்களுக்குத் தகுந்த பிரகாரம் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா அல்லது கிராஃபில் போட்டிருப்பது போல வளர்ச்சியைக் காட்ட அங்கு ஒரு செங்குத்தான நேர் கோடு இருக்கிறதா என்பதை அறிந்துகொண்டாலொழிய, இதைப் போற்றவோ இதைப்பற்றிய கருத்துக்களையோ, மாற்றுக் கருத்துக்களையோ கொடுப்பதற்கு இடம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எத்தனை கிராமங்கள் இருக்கின்றன, எத்தனை அரிஜன குடியிருப்புகள் இருக்கின்றன என்பதைக் காட்டி, எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது,

1969 ஆகஸ்ட் 18] [திரு. சா. மெய்யப்பன்]

எத்தனை அரிஜனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது போன்ற விவரங்களை அவை முன்பு வைத்திருந்தால் பெருமைப்பட்டுக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அறிக்கையின் 7-வது பாராவில் தொழிலாளர் உறவைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்கு அடிப்படைச் சிக்கல்களில் விடுதலை காணப்பட்டதாகவும், பணியாளர் பிரதிநிதிகளுடன் உடன்பாடு செய்துகொண்டதாகவும், வேலைச்சுமை குறித்து பெருமளவில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், பணி நிலைப்படுத்தும் பயன்கள் விரிவாக்கப்பட்டதாகவும் விவரமில்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கோவையைத் தலைமை நிலையமாகக் கொண்டு தமிழ் நாடு மின்கழகக் கணக்காயர் சங்கம் 1967-ல் கோரிக்கைகள் விடுத்திருந்தது. கோரிக்கையின் நகல்களைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மந்திரிசபையில் உள்ள அமைச்சர்களுக்கும் அனுப்பியிருந்தது. அதைப்பற்றிய கேள்வியை நான் சட்டமன்றத்தில் எழுப்ப ராபெர்ட் ப்ரூஸைப்போல கடைசி வெற்றி கூட இல்லாமல் பல முறை என் கேள்விகள் 'லாப்ஸ்டு' என்று திரும்பத்திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றது. நானும் விடாமல் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கூட அனுப்பியிருக்கிறேன். கண்டிப்பாக அதுவும் திரும்பி வந்துவிடும் என்று அசையாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவற்றை விடப்போவதில்லை என்ற வீராப்புச் சொற்களை அள்ளி வீசுமுன், இப்பொழுது எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறபொழுது இருக்கிற நிலைமைகளைக் குறித்து சட்டத்திற்குட்பட்டு அந்தக் கேள்விகளைச் சாமாரியாகச் சொல்லிவிட்டு நான் அமர விரும்புகிறேன்.

(1) தமிழக மின்சார வாரியம் போதுமான தகுதி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஓரளவு உதவி செய்திருக்கிறதா, அல்லது சிக்கன நடவடிக்கையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தியதா ?

(2) சிக்கனச் சீரமைப்புக் குழு பயன் தந்ததா ? அல்லது சிக்கல்களை உண்டாக்கியதா ?

(3) கீழ்நிலைப் பணியாளர்களுக்கு உரிய வேலை கொடுக்கப்பட்டதா அல்லது பளு மேலும் சுமத்தப்பட்டதா ?

(4) இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பட்டியல் அனுப்புவதில் பலன் கண்டோமா ? அல்லது அதன் மூலம் சில பலன்களை இழந்திருக்கிறோமா ?

இந்தக் கேள்விகளுக்கு மேலாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் நிறுவனங்களின் இணைப்பாளர்களுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு ஒரு பைசா உயர்த்தினால்

[திரு. சா. மெய்யப்பன்] [1969 ஆகஸ்ட் 18

கூட, அதிகமான வருமானம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த லாபத்தை விவசாயிகளுக்கு ஒரு பைசா குறைத்துக் கொடுத்தால் மிகப் பலனும், வெகு பேர் பலனும் அடைய வழிவகையிருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்கழக வேலைகள் காண்டிராக்ட் முறையில் விடப்படுகின்றன. புள்ளி விவரம் கொடுத்து எதிரியின் வாயை அடைப்பதைவிட புள்ளிவிவரம் இல்லாமலேயே பொது தர்மமான ஒன்றை இதற்கு எடுத்துக்காட்டுகிறேன். காண்டிராக்டுக்கு விட்டால் காண்டிராக்டர் லாபமில்லாமல் காண்டிராக்டை எடுத்துக் கொள்ள முன்வருவாரா? நிச்சயம் லாபமுள்ள வேலையாக இருந்தால்தான் அதை எடுத்துக்கொள்ள முன்வருவார். ஒன்று காண்டிராக்டர் லாபத்தை அனுசரித்து காண்டிராக்ட் எடுத்துக் கொள்ளவேண்டும். அல்லது காண்டிராக்ட் தொகை குறைவாக இருந்தால், அதைச் சரிக்கட்டுவதற்கு அவர் தரம் குறைந்த சாமான்களை உபயோகித்து, மேல் பூச்சு பூசி வேலையை முடித்து விடுவார். அதனால் நமக்குப் பெயர் கெடும். லாபத்திற்கு காண்டிராக்ட் கொடுக்கும்பொழுது நமக்குப் பணம் நஷ்டமாகிறது. குறைவான தொகைக்கு காண்டிராக்ட் கொடுத்தால், தரக்குறைவு மூலம் நமக்குப் பெயர் கெடுகிறது, பொருளும், புகழும், பணமும் நஷ்டமாகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கக்கூடிய நிலையில் மின் கழகமே எத்தனையோ தொழிலாளர்களைக் கொண்டு கம்பங்கள் தயார் செய்யும் பொறுப்பை ஏற்று நடத்தலாம், பல்புகள், வயர்கள், மற்றும் வேண்டிய சாமான்களை நம் அரசாங்கமே இண்டஸ்டிரியலிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்தோ, அல்லது தனியாகவோ அல்லது கூட்டுறவு முறையிலோ தயார் செய்து கொண்டால், அதன் மூலம் பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். உற்பத்தித் திறனும் கூடும். லாபம் நமக்கே சார்ந்து செலவினம் குறையும். நம் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளலாம். நமக்கு ஏராளமான பணமும் மிச்சப்படும், தரமும் காப்பாற்றப்படும். காண்டிராக்ட் முறையை விட்டு விட்டு, வாரியத்தின் மூலம் சாமான்களைச் செய்யக்கூடிய அளவுக்கு நாம் வந்துவிடுவோமானால், நெகோஷியேடெட் டெண்டர் என்று சொல்லக்கூடிய முறையைத் தவிர்க்கலாம். நெகோஷியேடெட் டெண்டர் மூலம் நிச்சயமாகக் கெட்ட பெயர்தான் கிடைக்கும். எவ்வளவு நன்றாகச் செய்தாலும், கெட்ட பெயர் தான் ஏற்படும் என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, நெகோஷியேடெட் டெண்டர் முறையைக் காட்டிலும், வாரியமே இதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு செயல் பட்டால், இந்தத் தொழிலை நாம் முன்னுக்குக் கொண்டு வர முடியும் என்ற ஒரு யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எத்தனையோ கிராமங்களில் விவசாயிகள் நில அடமான பாங்கிகளிலிருந்து கடன் பெற்று, வட்டி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கு நான்

1969 ஆகஸ்ட் 18] [திரு. சா. மெய்யப்பன்]

நேற்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இதுபற்றிக் கொடுத்திருக்கிறேன். என் தொகுதியில் கா்ணக்குடி என்ற வீர சேகரபுரம், சாயப்பேட்டை பஞ்சாயத்து யூனியன், மற்றும் செம்பிளான்வயல் முதலிய கிராமங்களில் விவசாயிகள் நில அடமான பாங்குகளிலிருந்து கடன் வாங்கிக்கொண்டு, அதற்காக வட்டி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. காரணம் கேட்டால் மேலிருந்து ஏதோ அறிக்கைகள் வரவேண்டியிருப்பது போலவும், பொருளாதாரத் துறையில் சில அறிக்கைகள் கிடைக்கவேண்டியது போலவும் அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் வட்டியைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கூட்டுறவு முறையில் கடன் கொடுக்கும்பொழுது, லாண்டு மார்ட்கேஜ் பாங்கு கடன் கொடுக்கும்பொழுது ஒரு பெரிய சங்கடம் ஏற்படுகிறது. கடன் கொடுக்கும்பொழுது பங்குத் தொகையாக அவர்கள் 5 சதவிகிதம் கேட்கிறார்கள். ரூ. 1,000 கடன் வாங்கினால், அதில் பங்குத் தொகை ரூ. 50 கேட்கிறார்கள். இப்படி 5 சதவிகிதம் பங்குத் தொகைக்காகக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ரூ. 5,000 கடன் கேட்டிருந்தால், முதல் தவணையாக ரூ. 1,000 அளிக்கும்பொழுது, பாங்குக்கு விவசாயிகள் ரூ. 250 கட்டவேண்டியிருக்கிறது. அதோடு அங்கத்தினர் சந்தாத் தொகை என்று 5 சத விகிதம் கட்டவேண்டியிருக்கிறது. மேலும் வக்கீல் அபிப்பிராயத்திற்காக பில் ரூ. 10 கட்டவேண்டியிருக்கிறது. இது போன்று ரூ. 532 கணக்கு கொடுக்கிறார்கள். நில அடைமான பாங்கிலிருந்து முதல் தொகை ரூ. 1,000 வாங்கவேண்டுமென்றால், அதற்கு முன்னால் ரூ. 532 கட்டினால் தான் ரூ. 1,000 கிடைக்கும். ரூ. 1,000-ல் ரூபாய் 532 போக பாக்கி ரூ. 468-ல் விவசாயிகள் கிணறு வெட்ட முடியுமா? பாழுங் கிணறு தோண்ட முடியுமா என்ற கேள்வியைத் தான் நான் உங்கள் முன்பு எழுப்ப விரும்புகிறேன். இந்தத் தொகையை வைத்துக் கொண்டு எங்கேயாவது கிணறு வெட்ட முடியுமா? இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும். மாற்ற வேண்டியது மிகவும் அவசியம். இராமநாதபுரம் திருப்பத்தூரில் இந்த மாதிரியான நடைமுறை இருந்துகொண்டிருக்கிறது. இப்படி ரூ. 1,000 கடன் வாங்கி, மேலும் பம்பு செட்டுக்காக ரூ. 3,000 கடன் வாங்கி பம்பு செட்டும் இருக்கிறது, கிணறும் இருக்கிறது, கிணற்றில் தண்ணீரும் இருக்கிறது. மழையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் 'மழை இல்லாவிட்டால் கவலை இல்லை, ஆழ் கிணற்றிலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம்' என்று எண்ணிக்கொண்டிருக்கும்பொழுது, அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைப்பதில்லை. இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைப்பதில்லை. இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும். எங்கேயாவது தாமதம் ஏற்பட்டால், அந்த இடங்களில் கண்டிப்பாக வேறு ஊழல்கள் ஏற்படத்தான் செய்யும்.

[திரு. சா. மெய்யப்பன்] [1969 ஆகஸ்ட் 18

(திரு. கரு. சிமைச்சாமி தலைமை)

நம்முடைய முனிசிபாலிடிகளும், பஞ்சாயத்துக்களும், பல்புகள் வாங்கிக்கொள்ளலாம் என்கிற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். பல்புகள் கிடைக்காத காலங்களில் அவர்களே வாங்கிப் போட்டுக் கொள்ளும் வகையில் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் பல்பு ஒன்றுக்கு ரூ. 1.75 என்ற அளவில்தான் அதிகாரம் கொடுத்திருப்பதாக என்னுடைய நினைப்பு. ஆனால் வெளி மார்க்கெட்டில் என்ன விலை என்பதைப் பார்க்கும் போது, அது கிட்டத்தட்ட ரூ. 2.25 என்றுதான் கிடைக்கிறது. அப்படி அதிகமாக வெளி மார்க்கெட்டில் விற்கிறது என்று சொல்லும்போது, பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது முனிசிபாலிடி தலைவரோ அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மேலதிகாரிகளும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, அவர்களே வாங்கிப் போட்டுக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு அப்படியொரு ஆசையைக் காட்டிவிட்டு, அதை அமுல் நடத்தமுடியாத நிலையை உண்டாக்கியிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை மாறவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கே கூட மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 20 ஹார்ஸ் பவர் ரைஸ் மில்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. மின் விசை அளவில் வேகமாகப் போகாவிட்டாலும், மின்சார இலாகாவில் வேலை செய்கிறோம் என்ற எண்ணத்திலாவது வேலை செய்ய வேண்டும். வேறு முறைகளைக் கைவிட்டு, நல்ல வகையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டாவது வார்டில் பல்பு எரியவில்லை என்றால், அதற்கு உடனே பரிகாரம் கிடைப்பதில்லை. அப்படிப் புகார் செய்தால், ஐந்தாவது வார்டில் எரியும் பல்புகளை எடுத்து இரண்டாவது வார்டில் போட்டுவிட்டு, ஏதாவது பிரதிப் பிரயோஜனத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் தான் லஞ்சம் ஏற்படுகிறது. இலாகாவிற்கு இருக்கும் நல்ல பெயரும் கெட்டுவிடுகிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாரியத்தின் மூலம் தமிழக சர்க்கார் நல்ல பயன்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொதுவாக வரவேற்று, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். கே. வடிவேலு** : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் விவசாய உற்பத்திக்கு மின்சாரம் மிக முக்கியமானது. விவசாயிகளுக்கு மிக மிக அவசியமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு விவ-

1969 ஆகஸ்ட் 18] [திரு. எஸ். கே. வடிவேலு]

சாயிகளுக்கு உணவு உற்பத்திக்காக, நல்ல அக்கறையோடு மின்சாரத்தைக் கொடுப்பதில் செயல்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில், முருங்கை, எம். களத்தூர் போன்ற கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று 1962-லேயே பணம் கட்டியும் கூட, இன்னமும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அதனால் விவசாயிகளுக்குப் பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், முசிரி, தாத்தய்யங்கார்பேட்டை யூனியனில், ஏறத்தாழ 30 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படாமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று ஊரக்கரை என்னும் ஊரிலே, புதிதாக ஒரு மின்சார பவர் ஆபீஸ் திறந்திருக்கிறார்கள். இன்னும் வாளசிராமணி, ஜடமங்கலம் போன்ற கிராமங்களுக்கு அதிக விரைவில் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சார பல்புகள் ஊராட்சி, நகராட்சிகள் தங்களுக்கு வேண்டும் என்றால், தனியார் கம்பெனிகளில் வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால், அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் நல்ல முறையில் பயன்படாமல் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், பல்புகளை ஒவ்வொரு கம்பெனியும் ஒவ்வொரு விதமாக உற்பத்தி செய்கிறார்கள். ஒவ்வொரு விலையில் விற்கிறார்கள். ஆகவே, அதற்கான அதிகாரம் நகராட்சியில், ஊராட்சியில் நல்ல முறையில் பயன்படாமல், பணம் மட்டும் வீணாகிறது. அதற்கு அப்படி இடம் கொடுக்காமல், மின்சார வாரியத்திலேயே, இதற்கென்று ஒரு தொழிற்சாலையை அமைத்து, தமிழ்நாடு பூராவிற்கும் தேவையான பல்புகளை வாரியத்திடமிருந்தே அவரவர்கள் வாங்கவேண்டும் என்று ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும். இதனால் அரசாங்கத்திற்கும் லாபம் கிடைக்கும். ஊராட்சி மன்றங்களுக்கும் தொந்தரவு இல்லாமல் நல்ல பயன் ஏற்படும்.

அடுத்து, மின்சார வாரியத்திற்கு பப்ளிக் ஓர்க்ஸ் எஞ்சினியர்களை எடுத்திருக்கிறார்கள். ஏ.ஈ. போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பிரமோஷன் கிடைக்காமல் அந்த அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி பப்ளிக் ஓர்க்ஸிலிருந்து எடுத்து வாரியத்தில் பணியாற்றிவரும் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுக்கும் வகையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில், திருச்சி மாவட்டத்தில், ஒரு தனியார் கம்பெனி இருக்கிறது. அவர்களுக்கென்று சில கிராமங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்கள் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு லாபம் இருந்தால் தான், அப்படி லாபம் இருக்கும் கிராமங்களுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். அவர்கள் எஸ்டிமேட் போட்டுப் பார்க்கும்போது, லாபம் வரும் என்றிருந்தால்தான், மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் கொடுப்பதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கிராமங்களை அரசாங்கமே எடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும். அதில் ஏதோ சிக்கல்கள்

ஏற்படுகின்றன என்று சொல்லுகிருர்கள். மின்சார வாரியத்திடம் கேட்டால், அது தனியாரிடம் இருக்கிறது, ஆகவே நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லுகிருர்கள். அவர்களைக் கேட்டால், எங்களுக்கு லாபம் இல்லை, நட்டந்தான் வருகிறது ஆகவே போடுவதற்கில்லை என்கிருர்கள். நடுவில் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே, அப்படிப்பட்ட கிராமங்களை அரசாங்கமே உடைமையாக எடுத்துச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல இடங்களில் இன்னமும் அரிசன காலனிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்னுலும், அரிசனங்களுக்கு நல்ல முறையில் எந்தவிதமான நன்மைகளையும் செய்யவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட அரிசன மக்களுக்கு நம்முடைய அரசு விரைவில் நடவடிக்கை எடுத்து, அந்த ஊராட்சி மன்றங்களுக்கு உதவிசெய்து, அரசாங்கமே மின் இணைப்புக் கொடுக்க உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது சில வார்த்தைகள் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். மின்சார வாரியம், 1968-69-ல் 3,452 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதியளித்திருக்கிறது. அதேபோல, இதுவரையில் மின்வசதி பெற்றுள்ள கிராமங்கள், சிற்றூர்கள் இவற்றின் மொத்த எண்ணிக்கை 31,727 ஆகும். அதில், அரிசனக் குடியிருப்புகளுக்கு 1963–64-ல் 276-ம் 1964–65ல், 300 குடியிருப்புகளுக்கும், 1965–66ல் 370-க்கும், 1966-67-ல் 436-க்கும், 1967-68-ல் 443 குடியிருப்புகளுக்கும், 1968–69-ல் 473-க்கும் மின் வசதி அளிக்கும் பணியை நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது. அதிலே, கடந்த இரண்டு ஆண்டுகளில் அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னேற்றம் இருந்தாலும் கூட, போதுமான அளவிற்கு, அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் மின் வசதி இருக்கிறதா என்ருல், எனக்கு முன்னுல் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, வருந்தத்தக்க நிலையில் தான் இருக்கிறது என்பதை நிச்சயமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டமானது மற்ற மாவட்டங்களைவிட மிகக் குறைவான அளவிற்கே மின் இணைப்பைப் பெற்றிருக்கிறது. மற்ற மாவட்டங்களைபோல் தஞ்சை மாவட்டத்திற்கும், அதிகமான மின் இணைப்புக்களை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும். வேளாண்மை வளர்ச்சிக்குத் தக்கபடியும், விவசாயிகளை உற்சாகப்படுத்தவும்,

தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தவும், நமது அரசின் முற்போக்கு எண்ணங்களை உருவாக்கவும், மேலும் அதிகமான தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளவும் மின் இணைப்புக்களை வழங்க மின்சார வாரியம் துணைபுரிய வேண்டும்.

அடுத்தாற்போல, மின்சார வாரியத்தைப்பற்றிப் பேசும்போது ஒன்றை நிச்சயமாகக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மத்திய அரசு விவசாயத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசுகள் வசூலிக்கலாம் என்று அறிவித்திருந்தாலும், நமது தமிழக அரசு யூனிட் ஒன்றுக்கு 8.25 காசுகளே போதும் என்று கூறி, விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது. மின்சாரக் கட்டணத்தில் ஆண்டு ஒன்றுக்கு 9 கோடி ரூபாய் வரையில் விவசாயத் துறைக்கு அளிக்கப்படுவதின் மூலம் நஷ்டம் ஏற்பட்டாலும், இதனுல் மின்சாரத் துறைக்கு தொய்வு ஏற்பட்டாலும் பொருட்படுத்தாமல், விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதற்காக அதனை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்னென்று, 1967-க்கு முன்னுல் தமிழ்நாடு முழுவதற்கும் கொடுக்கப்பட்ட மின்விசையேற்றங்களுக்கு மொத்த மின்விசை இணைப்புக்கள் ஏறத்தாழ 25 ஆயிரம் என்று அறிவித்திருந்தது. பேரறிஞர் அண்ணு அவர்களுடைய தலைமையில் புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டபோதும், அறிஞர் அண்ணு அவர்கள் வழியில் இன்றையதினம் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், 1967–68-ல் 51,620 மின்விசை இணைப்புக்களும், 1968-69-ல் 57,756 மின் விசை இணைப்புகளும் தரப்பட்டுள்ளன. வர இருக்கிற ஆண்டில் அதனுடைய தொகை மேலும் அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 20 ஆண்டுகளாக வழங்கிவந்த மின் இணைப்புக்களின் எண்ணிக்கையைவிட, பலமடங்கு இணைப்புக்களை ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்பை இன்றைய அரசாங்கம் செய்து கொடுப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்னென்றையும் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தஞ்சை மாவட்டத்தை மற்ற மாவட்டங்கள், குறிப்பாக வறட்சி நேரத்தில், எதிர்நோக்கி இருக்கும் நிலை இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டது அல்ல, தொடர்ந்து இருக்கக்கூடிய நிலைமை. புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னுல் ஏறக்குறைய ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் ஒருபோகம் சாகுபடியான நிலங்கள் இன்றையதினம் இருபோக நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இது புதிய அரசின் சிறந்த சாதனையென்றுதான் சொல்ல வேண்டும். பசுமைப் புரட்சியின் வளர்ச்சி என்றுதான் கூறவேண்டும். இதற்கு மின்சாரத் துறையினர் ஓரளவுக்கு உதவியாக இருக்கின்றனர். மேலும் இந்த மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள்

மேட்டூர் அணையை அண்ணாந்து பார்க்கின்ற அவலநிலையில் இருக்கின்றனர். மேட்டூர் நீர்த்தேக்கத்தின் அளவு 98 ஆகிவிட்டது, 100 ஆகிவிட்டது, மேலும் மழை பெய்யாதா, கொஞ்சம் தண்ணீர் அதிகமாகக் கிடைக்காதா என்ற நிலையில்தான் உள்ளனர். ஆகவே, இதற்குத் தகுந்த பரிகாரத்தை அரசு உருவாக்கித் தர வேண்டும். அண்மையிலேகூட இதற்கு முன்னாலே விடாத அளவிற்குக் காவேரியில் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து, வினாடி ஒன்றுக்கு 35 ஆயிரம் க்யூசெக்ஸ் நீர் விடப்பட்டிருக்கிறது. இவ்வளவு அதிகமான அளவில் நீர் விடப்பட்ட போதிலும் கடைமடைப் பகுதி பாசனம் பெறுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் வந்து சேருவதில்லை. அண்மையில் நானும் சில சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றித் தெரிவித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களை நேரடியாகப் போய்ப் பார்வையிட அனுப்பி வைத்தார்கள். விதை விதைப்பது, நாற்று நடுவது போன்ற குறிப்பிட்ட முக்கிய விவசாய நேரங்களில், கடை மடைப் பகுதிகளுக்கு தண்ணீர் வந்து ஏறுவது இல்லை. அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இவையெல்லாம் போக்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பதாகப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் மாயூரம்-சீர்காழி போன்ற கடைமடைப் பகுதிகளைப் பார்வையிட்டபோது சுட்டிக் காட்டினார்கள்.

இன்றைன்று, கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் அண்மையில் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தபோது விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஊட்டக்கூடிய ஒரு உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்குக் காவேரியிலிருந்து கிடைக்கும் நீரைவிட தஞ்சை மாவட்டத்தில் பூமிக்குக் கீழே இரண்டு மடங்கு அதிகமான தண்ணீர் இருக்கிறது. பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை வெளியே கொண்டுவர கூட்டுறவுத் துறையிலும், ஏனைய வழிகளிலும் முயற்சி எடுத்துக் கொள்வோம் என்று அறிவித்தார்கள்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்திற்கென்று மின் இணைப்புகளுக்காக ஒரு தனித் திட்டத்தை உருவாக்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் உதவியாக இருக்கும். மேலும், இரண்டு போக நிலங்களை மூன்று போக நிலங்களாக மாற்ற அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தஞ்சை மாவட்டத்தில் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை விவசாயக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் பயிரிட்டு

வருகிறார்கள். அந்த நிலங்களை ஏழை விவசாயிகள் குத்தகை எடுத்துப் பயிரிடுகிறார்கள். அந்தப் பகுதியில் எவ்வளவு முயற்சி செய்தாலும், குத்தகை எடுத்திருக்கக்கூடிய இடங்களில் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு செய்துகொடுக்க இடம் தருவதில்லை. சொந்தத்தில் நிலம் இருந்தால்தான் அத்தகைய பயனை அடைய முடியும் என்று இருக்கும் நிலையை மாற்றி, குத்தகைக்குப் பயிரிடும் நிலத்திற்கும் மின் இணைப்புத் தரலாம் என்ற நிலையை உருவாக்கினால், நாம் செய்துவரும் காரியங்களுக்குச் சிகரம் வைத்ததுபோலாகிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 1971-ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு செய்து கொடுத்துவிடுவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இதை மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அறிவிப்புக்களை வரவேற்று, மின்சார வாரியம் மேலும் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று நானும் வரவேற்றுக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மின்வாரியமானது சிறப்பாக நல்ல முறையிலே பணியாற்றுகிறது. இந்த மின்சார வாரியம் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த மின்சார வாரியம் நல்லமுறையிலே செயல்படுவதற்கும், நல்லமுறையிலே தமிழக மக்களுக்கு உதவி செய்வதற்குமாக நண்பர்கள் பல வழிவகைகளை எடுத்துக் கூறினார்கள். குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டத்தில் மின்சார வாரியத்தின் கீழ் அதன் பலனையும் பயனையும் பெற முடியாத அப்பாவிகளாக நாங்கள் இருக்கிறோம். காரணம் என்னவென்றால், கிட்டத்தட்ட என்பது சதவிகிதத்தினர் தனியார் துறை நிறுவனத்தினராக இருந்து மின்வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.
இந்தமாதிரியான சூழ்நிலையில் தஞ்சை மாவட்டத்து மக்களுடைய மு.ப. 11-00
குறைகளையும் அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களையும், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இருக்கின்ற நிலையையும் எடுத்துக்கூற நான் விரும்புகிறேன். தனியார் துறையைச் சேர்ந்த கும்பகோணம் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன், சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களை இப்போது அரசுடைமை ஆக்க முன் வந்தோம். ஆனால் அது சம்பந்தமான வழக்கு தற்போது நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் நேரிடையாக மக்களுக்கு அதிலும் குறிப்பாக விவசாய

[திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்] [1969 ஆகஸ்ட் 18

மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. தனியார் துறை நிறுவனங்களும் நாம் செய்து அவற்றை அரசாங்கத்திற்கு எதற்காக விடுவது என்கிற மனப்பான்மையில் செய்யாத நிலை—இத்தகைய சூழ்நிலை விவ்சாய மக்கள் படுகிற கஷ்டம் எல்லையில்லாது இருக்கிறது. ஆகையால் நீதிமன்றம் தன் முன்னுள்ள வழக்குக்கு தீர்ப்புக் கூறுகிற வரையில் நாம் உற்பத்தியை ஒத்திப்போட முடியாது, தள்ளிப் போட முடியாது, எதைக்கொண்டும் தட்டிக் கழிக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்று விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தனியார்துறை மின் வழங்கும் பகுதிகளில்தான் சிரமங்கள் அதிகமாக இருக்கின்றன. காலத்தில் கிடைப்பதில்லை. அதற்குத் தகுந்த வருவாய் இல்லாத காரணத்தினாலும் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். முக்கியமான காரணம் அரசினர் அவற்றை எடுத்துக் கொள்ளப் போவதால் நாம் போட்டு எதற்காக அரசினிடம் கொடுக்கவேண்டும் என்கிற மனோபாவம். இதனால் விவசாயிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் தனியார் துறை நிறுவனங்கள் கொடுத்துள்ள வழக்கு முடியும் வரை காத்து இராமல் அவர்களுக்குக் கடன் தொகையாவது வழங்கி கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கச் செய்ய வேண்டும். இந்தக் கடனை—அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிற போது அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம். இந்த அடிப்படையில் உடனே அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலும் தனியார் துறை வழங்குகிற மின் சக்திக்கு இருக்கிற கட்டணம், மின்சார வாரியம் வழங்குகிற மின் சக்திக்கு இருக்கிற கட்டணம் வெவ்வேறுவிதமாக இருப்பதை உணர்ந்து இரண்டையும் ஒரேமாதிரியாக இருக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். மின்சார வாரியத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கிற சலுகைகள் தனியார் நிறுவனங்களின் மூலமாக விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டும்.

ஸ்டேட் எலெக்ட்ரிசிடி போர்டு பாண்டு வழங்குகிற நேரத்தில் எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள்—நாம் ஏன் அதற்குக் கொடுக்கவேண்டும். நமக்கு மின்சார வாரியத்தில் என்ன பயன் இப்போது கிடைக்கிறது என்கிற தயக்கத்தில் தம்முடைய மனக் கஷ்டத்தை எடுத்துக் கூறுகிறார்கள். ஆகவே தனியார் மின் விஸ்தரிப்புக் கம்பெனிகள் உள்ள எங்களிடத்தில்—தாராளமாக விவசாயிகளுக்கு பம்புசெட்களுக்கு மின் இணைப்புக் கிடைக்க உடனடியாக வழி செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களில் தெருவிளக்குகள் பஞ்சாயத்துக்கள் மூலம் போடப்பட்டன. சாதி இந்துக்கள் வசிக்கிற பகுதியில் குறைந்த கட்டணம் விகித அடிப்படையில் பணம் கட்டுவது எளிதாக இருப்பதனால் போடப் பட்டுவிடுகிறது. மின் இணைப்பு கிடைப்பது எளிதாக இருக்கிறது.

1969 ஆகஸ்ட் 18] [திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்]

ஆனால் ஹரிஜன மக்கள் வாழ்கிற பகுதியில்—அவை ஊரைவிட்டு தனித்திருப்பதனால் மின் இணைப்புக் கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. அங்கே குறைந்த கட்டணம்கூடக் கொடுக்க முடியாத காரணத்தினால் மின் இணைப்புக் கொடுப்பது மறுக்கப் படுகிறது. ஆகையால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள், சாதி அடிப்படையில் நமக்குக் கொடுக்கவில்லை என்ற தாழ்வு மனப்பான்மையுடன் மன வருத்தமடைகிறார்கள். ஹரிஜன இலாகா மூலமாக ஒரு தொகை மின் இணைப்புக் கொடுக்க வழங்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொகையைக் கொண்டு எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. 5 சதவிகிதம், 10 சதவிகிதத்திற்கு மேல் கொடுக்க முடியவில்லை. ஆகவே, ஹரிஜன இலாக்கா மூலமாவது போதுமான தொகை கொடுத்து ஹரிஜன மக்கள் வாழ்கிற எல்லாப் பகுதிகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வகை செய்யவேண்டும். அல்லது மின்சார வாரியமாவது உதவி செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இல்லாது, இப்போது இருக்கிற தாழ்வு மனப்பான்மை வளருமானால் மற்ற மற்ற சாதிப் போராட்டங்களுக்கும், மற்ற மற்ற மோசமான நிலைக்கும் கொண்டுபோய்விடும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இதில் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறை நிறுவனங்கள் வைத்திருக்கிற டிரான்ஸ்பார்மரின் லோடுக்கும் அதிகமாக மோட்டார்களுக்கு கனெக்‌ஷன் கொடுக்கிறார்கள். புது டிரான்ஸ்பார்மர் போடுவதில்லை. அதனால் பல இடங்களில் மோட்டார்கள் எரிந்துபோகின்றன. விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைகிறார்கள். ஆகவே மின்சார வாரியம் இது விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு போதுமான டிரான்ஸ்பார்மர்களைப் போட உதவவேண்டும்.

அடுத்தபடியாக, பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிற சலுகைகளைப்போல கிராமப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படுகிற சிறிய சிறிய தொழிற்சாலைகளுக்கும் சலுகை அளிக்கவேண்டும். அப்போதுதான் உற்பத்தி பரவலாக ஏற்பட வழி ஏற்படும். கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும். அங்கே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் உதவியாக இருக்கும். ஆகவே பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிற சலுகைகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்படுகிற சிறிய சிறிய தொழிற்சாலைகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு—அதிலும் குறிப்பாக நெல் சாகுபடி செய்கிறவர்களுக்கு முதல் சலுகை அளித்தாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேரிடையாக லாப நோக்கத்தைக் கருதாமல் இவர்களுக்கு அரசும், மின்சார வாரியமும் நல்லதொரு சலுகையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சௌந்தரராஜ மூப்பனார்] [1969 ஆகஸ்ட் 18

அடுத்தபடியாக எனதுடைய தொகுதியில் பல கிராமங்கள் மூன்று முதல் ஐந்து வருடங்களாகப் பணத்தைக் கட்டி இன்னமும் மின்சார விஸ்தரிப்புப் பெறாத நிலையில் இருக்கின்றன. அவற்றுக்கு உடனடியாக மின் விஸ்தரிப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சார வாரியம் பெரிதாக வளர்ந்துபோகிற காரணத்தினால் தலைமைப் பொறியாளர்களை அதிகப்படுத்தி நல்ல கண்காணிப்பும், திறம்பட வேலை செய்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சார வாரியத்தில் வேலை செய்கிற ஊழியர்களுக்கும் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் இருக்கிற தாரதம்மியத்தைக் குறைத்து இவர்களுக்கும் அந்தஸ்து, சம்பளம் ஆகியவற்றை உயர்த்தித்தரத்தக்க வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துக்கள் சிலவற்றையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் சாதனைகள் உண்மையில் எல்லோராலும் போற்றப்படக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. மின்சார வாரியத்தின் சாதனை தமிழ்நாட்டுக்கு ஒளியூட்டி வருகிறது, தமிழ்நாட்டை ஒளிமயமாக்கி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதேநேரத்தில் மின்சார வாரியத்தின் வருவாயை எண்ணும்போது வேதனைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். நடப்பு நிதி ஆண்டில் 53 கோடி ரூபாய் வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நியாயமாக நமக்கு ரூ. 70 கோடிக்கும் அதிகமாக வருவாய் வரவேண்டிய நிலையில் இருக்கிறது மின்சார வாரியம். அதேபோல மின்சார வாரியத்திற்கு எவ்வளவு பெரிய கடன் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கக் கடன் 220 கோடி ரூபாய், தனியார் கடன் 50 கோடி ரூபாயாக ஆக 270 கோடி ரூபாய் கடனாளியாக மின்சார வாரியம் இயங்கிவருகிறது. இந்தக் கடனுக்காக ஆண்டொன்றுக்கு மின்சார வாரியம் வட்டியாக 12 கோடி ரூபாய் செலுத்திவருகிறது. வருகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார வாரியம் இன்னும் எந்த அளவுக்குக் கடனாளியாக ஆகப்போகிறது என்பதை எண்ணிப் பார்ப்போமானால் உண்மையிலேயே திகைப்பு ஏற்படத்தான் செய்கிறது. வருகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கக் கடன் மட்டும் 400 கோடி ரூபாய்க்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோல் தனியார்களிடமிருந்து பெறக்கூடிய கடன் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். ஆக மொத்தம் 500 கோடி ரூபாய் கடன்பெற்று அதற்காக ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் அளவுக்கு வட்டி செலுத்தக்கூடிய நிலைமையில்தான்

1969 ஆகஸ்ட் 18] [திரு. ஏ. எம். இராஜா]

மின்சார வாரியம் இயங்கப்போகிறது. மின்சார வாரியத்தின் நிலை, இன்றையதினம் வட்டியைக்கூடக் கட்டமுடியாமலும் கடனோடு இயங்கக்கூடிய முறையிலும் தான் இருக்கிறது. இது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமை. இது மாற்றப்படவேண்டும்.

முன்னூற்று ஐம்பத்தெட்டு கோடி ரூபாய் முதலீட்டை உடைய மின்சார வாரியம் நியாயமான வருமானத்தைப் பெறுகின்றதா, முன்னூற்று ஐம்பத்தெட்டு கோடி ரூபாய் மூலதனத்திற்கு உண்டான லாபத்தைப் பெறுகின்றதா என்று எண்ணிப் பார்த்தால், நோ ஃப்ராபிட், நோ லாஸ் என்ற பேஸிஸிலே இயங்கும் என்று கூறுகிறார்கள். மின்சார வாரியம் ஒரு தனிப்பட்ட நிறுவனம், வியாபார நிறுவனம். வியாபார நிறுவனம் என்று இருந்தாலே அங்கு லாபம் இருக்கவேண்டும். லாபத்தின் அடிப்படையிலேதான் அது இயங்கவேண்டும். வெங்கட்டராமன் குழுகூட அதைத்தான் கூறியிருக்கிறது. எனவே இதற்காகக்கூட ஒரு தனிக்குழு அமைத்து மின்சாரக் கட்டணங்களின் விகிதத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மின்சார வாரியம் கடந்த 12 ஆண்டுகளில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மின்சாரக் கட்டண விகிதங்களைப் பொறுத்தவரையில் ஒரு சில மாற்றங்களைத் தவிர பெரிய மாற்றங்கள் எதையும் அது செய்யவில்லை. இருபத்தொன்பது ஆண்டுகளாக, 1940-ஆம் ஆண்டு முதல் 1960-ஆம் ஆண்டு வரையில் மின்சாரக் கட்டணத்தின் விகிதங்கள் சில மாற்றங்களுக்கு உள்ளாயினவே தவிர பெரிய மாற்றங்கள் ஏற்படாமல் இருந்து வருகின்றன. 1940-ஆம் ஆண்டிலே அன்றைய ஆட்சியாளர்களான வெள்ளையர்கள் தங்களுக்குச் சாதகமாக இருந்த சில தொழிலதிபர்களுக்குச் சலுகை காட்டும் நோக்கத்துடன் மின்சார கட்டணங்களின் விகிதங்களை மிகக் குறைந்த அளவில்தான் நிர்ணயித்தனர். அதிலிருந்து சில சிறு மாற்றங்கள்தான் இதுவரையில் செய்யப்பட்டிருக்கின்றனவே தவிர பெரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. அதற்குப் பின்னர் வந்த விடுதலைபெற்ற அரசும் தொழிலதிபர்களைப் பகைத்துக்கொள்ள அஞ்சி அவர்கள் நிர்ணயித்த மின்சாரக் கட்டண விகிதத்தின் நிலையை உயர்த்துவதற்கு முன்வரவில்லை. இந்திய உப கண்டத்தில் பல மாநிலங்களில் தொழிலதிபர்களுக்கு அஞ்சி மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்கிறார்கள். இதனால் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகின்றது. கடந்த 29 ஆண்டுகளுக்குள்ளாக விலைவாசிகள் எந்த அளவுக்கு ஏறியிருக்கின்றன என்பதை அறிவோம். தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலைகள் ஆண்டுக்காண்டு ஏற்றப்பட்டு வருகின்றன தொழிலதிபர்களால். ஆனால் அந்த விலையைக் கட்டுப்படுத்த தமிழக அரசுக்கு உரிமையில்லை; தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலையை நிர்ணயிப்பதற்கு மின்சார வாரியத்திற்கும் உரிமை இல்லை. நாம் ஏன் தொழிலதிபர்களுக்குக் குறைந்த அளவிலே மின்சாரக் கட்டணம் வைத்திருக்

[திரு. ஏ. எம். இராஜா] [1969 ஆகஸ்ட் 18

கிறோம் என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார்க்கவேண்டும். இதைப் பற்றி நாம் கேட்டால், ஹெச்.டி. கன்ஸ்யூமர்களை என்கரேஜ் பண்ண வேண்டும், தொழில்வளத்தைப் பெருக்கவேண்டும் என்று கூறு கின்றனர். இந்தக் காரணங்கள் நியாயமான காரணங்களாகத் தெரியவில்லை.

இந்த நாட்டில் குறிப்பாகத் தமிழகத்திலே உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழில் நிறுவனங்கள் ஒரு ஆயிரம் இருக்கின்றன. அவற்றிலே ஒன்றான மேட்டூர் அலுமினியம் தொழிற் சாலையினால் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இழப்பு ஒரு கோடி ரூபாய் ஏற்படுகிறது. அந்த ஆயிரம் பெரிய தொழில் நிறுவனங்களும் குறிப்பிட்ட 300 குடும்பங்களின் சொந்தமாகத் தான் இருக்கின்றன. முன்னூறு குடும்பங்களுக்காக உள்ள அந்த ஆயிரம் தொழிற் நிறுவனங்களின் மூலம் ஏற்படக்கூடிய நஷ்டம் மின்சார வாரியத்திற்கு 6 கோடி ரூபாய். நான்கு லட்சத்து 21 ஆயிரம் கிணறுகளுக்கு விசையேற்றம் கொடுப்பதின் மூலம் மின்சார வாரியத்திற்கு, அவற்றிற்குக் குறைந்த கட்டணம் விதிப்பதன்மூலம், 9 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்னூறு குடும்பங் களுக்காக 6 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்கின்றபொழுது 4 லட்சம் 21 ஆயிரம் குடும்பங்களுக்காக 9 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்பதை ஏதோ மிகப் பெரிய சலுகையைக் காட்டிவிட்டோம் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரிகிறது.

என்னைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய சலுகையாக அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. விவசாயிகளுக்குக் குறைந்த அளவுக்குக் கொடுக்கவேண்டாமென்று நான் இங்கே வாதாட இல்லை. மின்சார வாரியம் ஒரு வியாபார நிறுவனம், அது லாபத்திலே தான் இயங்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு விவசாயிகளாக இருந்தாலும், தொழிலதிபர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று தெரி வித்துக் கொள்கிறேன். ஹெச்.டி. கன்ஸ்யூமர்களுக்குக் கொடுக் கப்படும் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு 5.53 பைசா; மொத்த மின்சார விநியோகத்தில் 100-க்கு 10 பங்கு என்ற வகை யில் 6.62 பைசா என்று கணக்கிட்டிருக்கிறார்கள். வீட்டு விளக்குகளைப் பயன்படுத்துவோர், கடைகளில் உள்ள விளக்கு களைப் பயன்படுத்துவோர், விவசாயத்திற்கு விசையேற்றங்களைப் பயன்படுத்துவோர்களுக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் மொத்தச் செலவில் 90 சத விகிதம் அவர்கள்மீது சுமத்தப்படு கின்றன. எந்த அடிப்படையிலே 90 சத விகிதம் என்றும் 10 சத விகிதம் என்றும் பிரித்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. இது நியாயம்தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யவேண்டு மென்று மின்சார வாரியத்தின் தலைவர் அவர்களையும், டெக்னிக்கல் மெம்பர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். 90 சத விகிதம், 10 சத விகிதம் என்பதை காஸ்ட்

1969 ஆகஸ்ட் 18] [திரு. ஏ. எம். இராஜா]

அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மென்ட் மூலம் ஒவ்வொரு முனையிலே அமைகின்ற உற்பத்திச் செலவையும் ஒவ்வொரு ஆண்டிற்கும் கணக்கிட்டு அதற்கேற்ப தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கக் கூடிய மின்சாரத்திற்கு கட்டணம் நிர்ணயிக்கவேண்டும். எல்.டி. சப்ளையிலே கொடுக்கக்கூடிய மின்சாரத்திற்கு என்ன செல வாகிறது என்பதை உண்மையாக கணக்கெடுத்து அதன்மூலம் மின்சாரக் கட்டண விகிதத்தினை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நடைமுறையிலே உள்ள மின்சாரக் கட்டணங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று ப்ரொஃபெசர் கே. எஸ். சோனாசலம் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

"Compared with the other Electricity Boards, the Tamil Nadu rates for the major consumer categories in the high tension as well as the low tension supply are lower. By not charging the highest rates in force in other States, the Tamil Nadu Electricity Board is sacrificing an estimated revenue of Rs. 14.26 crores per year. If the Board were to charge the rate of 11.6 paise per unit of industrial consumption as recommended by the World Bank Mission, the revenue would have increased by about Rs. 5.50 crores per year."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல் மத்திய எரிபொருள் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த என். சி. சின்ஹா, பி. கே. பஸக், எம். கே. மைத்ரா, ஏ. லாபிரி போன்றவர்களும் மின்சாரக் கட்டண விகிதத்தை 40 சத விகிதம் உயர்த்துவதால் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலையில் அதிக மாற்றம் ஏற்படாது என்று புள்ளிவிவரங்களையெல்லாம் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

உற்பத்திச் செலவில் மின் கட்டணத்தில் விகிதாசாரப் புள்ளி யைப் பார்க்கும்போது 1958-ம் ஆண்டுக் கணக்கு அடிப்படையில், கோதுமை மாவு 100 டன் உற்பத்தியாகும் விலையில் 1.3 சத விகிதந்தான் மின் கட்டணம். அதை 10 சத விகிதம் ஏற்றினால் 1.5 சதம் ஆகிறது; 20 சதம் ஏற்றினால் 1.6 சதம் ஆகிறது, 40 சதம் ஏற்றினால் 1.9 சதம்தான் ஆகிறது. அதே போல் நெல் அரைவையை எடுத்துக் கொண்டால் ஆயிரம் டன்களுக்கு 0.8 சதம் தான்; பத்து சதம் ஏற்றினால் 0.9 சதம் ஆகிறது, 20 சதம் ஏற்றினால் 1 சதம் ஆகிறது, 40 சதம் ஏற்றினால் 1.1 சதம் ஆகிறது. சர்க்கரை 100 டன்னுக்கு ஆகிற செலவில் மின்சாரத்திற்கு ஆகும் செலவு 1.5 சதந்தான். அதை 10 சதம் ஏற்றினால் 1.6 சதம் ஆகிறது, 20 சதம் ஏற்றினால் 1.7 சதம் ஆகிறது; 40 சதம் ஏற்றினால் 2 சதம் ஆகிறது. சிமென்டை எடுத்துக் கொண்டால் 100 டன்னுக்கு உற்பத்திச் செலவில் மின்சாரக் கட்டணம் 24.4 சதம் ஆகிறது. அதை 10 சதம் உயர்த்தினால் 26.2 சதம் ஆகிறது, 20 சதம் உயர்த் தினால் 28 சதம் ஆகிறது; 40 சதம் ஏற்றினால் 31.2 சதம் ஆகிறது. பேப்பரை எடுத்துக் கொண்டால் பத்து டன்னுக்குண்டான உற்

பத்திச் செலவில் மின்சாரக் கட்டணம் 9.5 சதம் ஆகிறது; அதை 10 சதம் உயர்த்தினால் 10.4 சதம் ஆகிறது; 20 சதம் உயர்த்தினால் 11.2 சதம் ஆகிறது; 40 சதம் உயர்த்தினால் 12.8 சதம் ஆகிறது. ஆக, 40 சதம் உயர்த்தினால் கூட மிகப் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. அப்படி இருக்க, தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அதைப் பற்றி ஆராய அரசு ஒரு குழுவை நியமித்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

நாட்டின் சில தொழில்களை எடுத்துக் கொண்டு பார்த்தால் மின் கட்டணத்தின் விகிதத்தின் இழப்பு எவ்வளவு ஏற்படுகிறதோ அதுதான் அவர்களுக்கு லாபமாகக் கிடைக்கிறது. இப்படிப்பட்ட தொழில்களை ஒன்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லது மின் கட்டணத்தை உரிய விகிதத்தில் விதித்து வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. பாலசுப்பிரமணியன்** : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய பட்ஜட்டைப் பற்றிப் பேசும்போது முதலில், மிகச் சிறப்பாகப் பணியாற்றி தமிழகத்திற்குத் தனி இடம் தேடித் தந்திருக்கின்ற வாரியத்தின் எஞ்சினியர்கள் முதல் உழைப்பாளிகள் வரை பாராட்டுக்குரியவர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். புள்ளி விவரங்களைப் பற்றி உஷாராக இருப்பது நல்லது. 57,756 பம்ப் செட்களுக்குக் கனெக்ஷன் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது கனெக்ஷனாக இருக்காது. ஒப்பந்தமாக இருக்கும். ஆக்சுவல் கனெக்ஷன் நடந்திருக்காது. ஒயர் இல்லை, போஸ்ட் இல்லை, மீட்டர் இல்லை என்ற நிலையிலே உள்ளவற்றையெல்லாம் கூடச் சேர்த்துக் கணக்கில் கொடுத்திருப்பார்கள். செய்யாத வேலைக்கு உள்ள சிறப்பு அவசியம் இல்லை; செய்த வேலைக்கு உள்ள சிறப்பை மட்டும் எடுத்துக் சொன்னால் போதும். புள்ளி விவரங்கள் பல இடங்களில் மோசடியாகப் போய்க் கொண்டிருக்கின்றன. இருப்பினும் சிறப்பான வேலைகளைச் செய்திருப்பதற்காக எங்கள் கட்சியின் சார்பில் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்போது நான் பேசப்போவது இதைப் பற்றியல்ல. இந்த வாரியத்திற்குள் இருக்கும் சில விஷயங்களை அம்பலப்படுத்தி வெளியே கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. அவ்வாறு அம்பலப்படுத்தி வெளியே கொண்டு வந்து அமைச்சரின் கவனத்திற்கும் தலைவரின் கவனத்திற்கும் கொண்டு வந்தால் அதை திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்கு வேண்டிய போட்டோ காப்பிகள் உட்பட சில நகல்கள் இருக்கின்றன. அவை சட்டமன்ற ரெக்கார்டுகளில் பதிவாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேசின் பிரிட்ஜ் தெர்மல் பிளாண்ட் எக்ஸ்பான்ஷன் ஸ்கீம் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்பு. அதன் காண்ட்ராக்ட் எலக்ட்ரிம் என்ற ஒரு கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கால் காகிதத்திலே அந்த காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெண்டர் கேட்கவில்லை, கொட்டேஷன் கேட்கவில்லை. அதன் பிறகு எலக்ட்ரிம் கம்பெனியாரிடம் பேசி முடிவுக்கு வந்து சப்ளை பகுதியை அவர்கள் வசம் வைத்துக் கொள்ளப்பட்டு கன்ஸ்ட்ரக்ஷன் என்ற பகுதி 'எஸ்கார்ட்ஸ்' என்ற அகில இந்திய காண்டிராக்டர்களுக்குப் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை மேலும் பிரித்து 'வெஸ்டர்ன் இந்தியா எரக்ட்ஸ்' என்ற கம்பெனிக்கு உப காண்டிராக்டாகக் கொடுத்திருக்கிறார்கள். இதில் எல்லாம் பல எஞ்சினியர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். 32 லட்சம் ரூபாய் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அட்வான்ஸ் ஆகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன வேடிக்கை? போர்டிலிருந்து கூட 'நாங்கள் பைனான்ஷியர்ஸ் அல்ல ; பணம் கொடுக்க முடியாது' என்று எழுதியிருக்கிறார்கள்..

It is pointed out that this Board cannot be expected to act as financiers to any of its contractors whether or not any expenditure has been incurred by them.

இதனுடைய போட்டோஸ்டேட் காப்பி இருக்கிறது. ராமன் என்பவர் எழுதியிருக்கிறார். இரண்டு மாதங்கள் எந்த ஒரு சிறு வேலையும் நடக்காமல் 32 லட்சம் ரூபாய் அட்வான்ஸாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெற வேண்டியதைப் பெற்றிருக்கிறார்கள். தரவேண்டியதைத் தந்திருக்கிறார்கள். அதனால் தான் இப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது வேலை நடக்காமலேயே 32 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது இந்த அரசாட்சியிலா, அல்லது முன்னால் இருந்த அரசாட்சியின்போதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : நான் தேதிவாரியாகச் சொல்லுகிறேன். இதை அரசு சம்பந்தப்பட்ட விஷயமாகப் பார்த்துப் பயன் இல்லை. நான் அரசுமீது பழி போடவேண்டுமென்று சொல்லவில்லை—இப்போதும் சரி, முன்னாலும் சரி. இலாகாக்களில் இருப்பவர்கள் இப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இந்தக் கடிதத்தின் தேதி 10–7–1967. முதலிலே பணம் கொடுக்க முடியாது என்று எழுதி பிறகு இரண்டு மாதம் கழித்துப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஸ்கார்ட்ஸ் கம்பெனி பிரிவின் சேர்மன்

பார்க்கவாவின் கடிதம் என்னிடம் இருக்கிறது. கே. ஜே. சுப்பிரமணியம் என்ற எஞ்சினியருக்கு எழுதிய கடிதம். அப்போது அவர் எக்சிக்யூட்டிவ் எஞ்சினியர், இப்போது சூப்பரின்டென்டிங் எஞ்சினியர்.

While steps are being taken by me in connection with the Rajdoot Mortor Cycle, இவர் கேட்டிருக்கிறார் ராஜ்தூத் மோட்டார் சைக்கிள் வேண்டுமென்று. மேலும் அவர் எழுதியிருப்பது என்னவென்றால் I am afraid there would be difficulty for the other thing. 'அதர் திங்' என்பது டேப் ரெக்கார்டர். நேரடியான கடிதம், இந்தக் கம்பெனியின் கடிதம். அடுத்துப் பார்த்தால் இது சம்பந்தமாக டெலக்ஸ் மெசேஜ் வருகிறது. அதற்கும் போட்டோ காப்பி இருக்கிறது. அந்த மெசேஜ் பெரிய அதிகாரியிடம் இருந்து வருகிறது. அதாவது

Mr. Prasad. Continuation this morning's telex. I hope that after the Sony matter is settled, all our erection bills will be cleared and payment of port dues will also be accepted.

'ஸோனி மாட்டர்' என்பதுதான் டேப் ரெக்கார்டர்.

அடுத்துப் பார்ப்பீர்களானால் சென்னையில் இருக்கும் கம்பெனி நிர்வாகி நீலேஷ்வர் என்பவர் தாங்கள் கொடுத்த பணத்தைப் பற்றி யாருக்குக் கொடுத்தோம் என்பது பற்றி விவரம் எழுதியிருக்கிறார்—

In a statement of account sent by MSD Accounts Department, Faridabad, I have been debited with a sum of Rs. 3,000. This amount was paid to Mr. K. J. Subramaniam by our Mr. R. K. Prasad under instructions of Mr. Bhargava.

குறிப்பிட்ட எஞ்சினியருக்கு 3,000 ரூபாய் கொடுத்த கணக்கைப் பற்றி நீலேஷ்வர் தலைமைக் காரியாலயத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு அங்கிருந்து பதில் வருகிறது 29-ம் தேதி.

Kindy remove from your files all copies of letters, dated 27th May addressed to me. அதாவது, கே. ஜே. சுப்பிரமணியத்திடமிருந்து 29-ம் தேதி 'இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்து முழுவதையும் ஃபைலில் இருந்து எடுத்துவிட வேண்டும்' என்று மெஸேஜ் வருகிறது. அடுத்து 'கன்ஃபேர்ம்' பண்ணி கடிதம் வருகிறது. அந்தத் தேதி 29—5—1968. இவைகள் எதை நிரூபிக்கின்றன? இந்தக் கம்பெனிக்கு நமது வாரியத்திற்குள் இருக்கும் எஞ்சினியர்களோடு நெருக்கமான உறவும் தொடர்பும் இருக்கிறது. பணம் கொடுத்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஏற்பாடு. அதற்காகத்தான் போட்டோ காப்பிகளைப் படித்துக் காண்பிக்கிறேன். இது இந்த சட்டசபையின் ரெக்கார்டுகளில் இடம் பெற வேண்டும். இதைப்பற்றி ஒரு விசாரணை தேவை.

அடுத்து, இதில் பேரம் நடக்கிறது. ஒரு நாளைக்கு ரேட் ரூ. 300 கேட்கிறார்கள். போர்டிலிருந்து ரூ. 250-க்கு ஒத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள். ஸைட் ஆபீஸ் லெட்டர் இருக்கிறது. அதில் கிருஷ்ணமூர்த்தி என்ற எஞ்சினியரோடு பேச்சுவார்த்தை நடந்தது. அவர் இப்போது எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியராக இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் இதில் அதிகமாக சம்பந்தப்பட்டிருப்பதாக என்னிடம் போதுமான சான்றுகள் இருக்கின்றன. இப்படி இப்படி எல்லாம் செய்ய வேண்டுமென்று விவரமாக எழுதியிருக்கிறார். லோக்கல் ஆபீஸிலிருந்து டெல்லி ஆபீஸுக்கு 8—1—1969-ல் போயிருக்கிறது. அடுத்து, அங்கிருந்து ரூ. 300-ல ரூ. 50 குறைத்து ரூ. 250-க்கு ஒத்துக்கொள்கிறோம் என்று கடிதம் வருகிறது. அதில் ஒரு பகுதியைப் படித்துக் காண்பிக்கவேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன். மு.ப. 11-30

'We are agreeable to reduce the same.'

Then it is stated—

'May feel that we are paying less to the Polish technicians. We have intimated that Polish technicians cost Rs. 6,000 per month and this after devaluation which has been agreed by client amounts to Rs. 9,450.'

ரேட்டைக் குறைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ரூ. 50-ஐக் குறைத்தால் எப்படி போலிஷ் டெக்னிஷியன்ஸ்க்கு அவர்கள் அவ்வளவு கொடுக்க முடியும் என்ற கேள்வி வரும் என்று.

'Complications may arise'.

என்று டெலக்ஸ் மெஸேஜ் வருகிறது. அடுத்தபடியாக, ரூ. 250-க்கு ஒத்துக்கொள்கிறோம் என்று வருகிறது.

'On clear understanding that no vouchers are called for and at no stage whatsoever they should raise the question of what remuneration we are paying the Poles.'

அந்தப் போலிஷ்காரர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறோம் என்பதைப்பற்றிக் கேட்கக்கூடாது. வௌச்சர்ஸ் போன்றவைகளைக் கேட்கக்கூடாது என்ற தெளிவான உணர்வின் அடிப்படையில் ரூ. 250-க்கு ஒத்துக்கொள்கிறோம் என்று கடிதம் வருகிறது. 10—1—1969-ம் தேதி டெலக்ஸ் மெஸேஜ் வருகிறது. போலீஷ் பெர்ஸனல் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்ற விவரங்கள் இருக்கின்றன. டெல்லிக்கு அனுப்பிய கடிதத்தில் சொல்கிறார்கள்.

'During a casual talk with Mr. Szydlowski the undersigned learnt that while Mr. Iwinski was here he has requested for various additional benefits in case he is asked to continue for the entire period of erection. Mr. Szydlowski is on agreement with Messrs. Elektrim and he is bound to work in this project for a period of one year only from the date of his arrival. He is now being paid around Rs. 1,900 per month plus around 15 per cent of this as 'Family allowance'.'

டீ-வால்யுயேஷன்படி ரூ. 9,450 என்று சொல்லி மோசடி நடந்திருக்கிறது. எலக்ட்ரிஸிட்டி போர்டின் சிபார்சுபடிதான் ரிசர்வ் பாங்க் அன்னியச் செலாவணியை ரிலீஸ் செய்கிறது. இப்படி சிபார்சுகளை வைத்துக் கொண்டுதான் அன்னியச் செலாவணி மோசடிகள் நடக்கின்றன என்பதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பில் இருக்கிறேன். ரூ. 250-க்கு ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 32 லட்சம் ரூபாயை வைத்திருந்து 1½ ஆண்டுகளுக்கு மேலாக வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த 32 லட்சம் ரூபாய்க்கு 1½ ஆண்டுகளுக்கு என்ன வட்டி ஆகிறது என்று பாருங்கள். பொதுத் துறையை தனியார் துறையினர் கொள்ளை அடிக்க எப்படி என்ஜினியர்கள் உதவுகிறார்கள் என்பதுதான் என் பாயின்ட். இது பாரத் ராம் சம்பந்தப்பட்ட கம்பெனி. இந்தியன் ஏர் லைன்ஸ் தகராறு வந்ததே, அந்த பாரத் ராம தான். கொள்ளை அடிக்க எப்படி இந்த என்ஜினியர்கள் உதவுகிறார்கள் என்பதைப் பாருங்கள். என்னூரில் வேலை செய்கிறோம். பாயிலர் வேலையையும் செய்கிறோம். ஒரு நாளைக்கு ரூ. 25 தான் செலவாகிறது. (மணியடிக்கப்பட்டது). எனக்கு சிறிது கூட அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே பதினைந்து நிமிடங்கள் ஆகின்றன.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : எவ்வளவு சுருக்கமாக முடித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். அடுத்து 8—6—1968-ம் தேதிய கடிதம். அங்கிருந்து எஸ்.இ.-க்கு வருகிறது. அதை வாசிக்கிறேன்.

'Madras Office (2 copies). Attention Mr. Krishnan : MSEB have written us many letters asking us to advise salary etc. of Polish Technicians, copy of contract entered between us and Elektrim and also Reserve Bank permission. Mr. Goel has discussed this issue with dealing A.E. Kindly see that we do not receive any more reminders on this issue.'

* * * * *

'Paid to Mr. S. Krishnan for Mr. H. Bhargava. Rs. 3,000.

இந்த மாதிரி ரிமைண்டர்ஸ் வராமல் இருக்க வேலை செய் என்று கிருஷ்ணன் என்பவருக்கு வருகிறது. இவர் கிருஷ்ணமூர்த்தியோடு உறவு கொண்டு தினசரி இரண்டு மணி நேரம் எலக்ட்ரிஸிட்டி போர்ட் ஆபீஸில் செலவு செய்யும் புண்ணியவான். கடிதம் வந்த இரண்டு நாட்களுக்குள்ளாக ரூ. 3,000 ட்ரா செய்திருக்கிறார். அதன் காபி கூட இங்கிருக்கிறது. இந்த ரூ. 3,000 கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு ட்ரா செய்த இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து டெபிட் ஆன ரூ. 2,000 இருக்கிறது. கே. ஜே. சுப்பிரமணியத்திற்குக் கொடுத்தது இருக்கிறது. கணக்குகளை சரி செய்ய ஏற்பாடு நடக்கிறது. கடைசிக் கடிதத்தையும் படித்துக் காண்பித்துவிட்டால் உதவியாக இருக்கும்.

'Why did not the office act more sympathetically? Is there still some one dissatisfied?'

"இன்னும் அதிருப்திப்பட்ட ஆட்கள் யாராவது இருக்கிறார்களா, யாருக்காவது கொடுக்கவேண்டியிருக்கிறதா" என்று கேட்கிறார்கள். இது ஒரு பயங்கரமான விஷயம். ஆயிரக்கணக்கில் ரூபாய் சம்பளம் வாங்குபவர்கள் எப்படிப்பட்ட பெருச்சாளிகளாக இருக்கிறார்கள் என்று பாருங்கள். இவற்றை அமைச்சர் அவர்களின் கையில் கொடுக்கிறேன். அமைச்சர் அவர்களும் வாரியத்தின் தலைவர் அவர்களும் சேர்ந்து இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடுகளையும் வேலையில் ஈடுபட வேண்டும். இவர் ரிட்டயராகப் போகிறார். ஆகவே இவரை விட்டுவிடவேண்டுமென்கிற யோசனை வரக் கூடாது. பொதுப் பணத்தைத் திருடுபவர்களை நாம் விடக் கூடாது, அதை அனுமதிக்கக் கூடாது. ஆகவே இதைப்பற்றிய ஒரு விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன். அடுத்து ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் கூறிக் கொண்டு முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 16 நிமிடங்கள் ஆகின்றன.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : விஷயம் இல்லாமல் நான் பேசவில்லை. அனாவசியமாகப் பிறரது நேரத்தை எடுத்துக் கொள்வது எனக்குப் பிடிக்காது. போலண்டில் இருந்து சாமான்கள் வர ஃப்ரெயிட் சார்ஜ்-ஐ ஆக்ச்வல்ஸ்-ஐ ஒத்துக்கொள்கிறோம் என்று ஒத்துக்கொண்டார்கள். பின் போலந்திலிருந்தே அவற்றை வெல்ட் செய்து கொண்டு வர ஏற்பாடு செய்தார்கள். அது ஷிப்பிங் ஸ்பேஸை அதிகமாக எடுத்துக்கொள்ளும். ஸ்பேஸ்க்கு சார்ஜ் போட்டதால் முதலில் இருந்ததற்கு 200 சதவிகிதம், 300 சதவிகிதம் அதிகமாகவே நாம் ஃப்ரெயிட் சார்ஜஸ் கொடுக்கவேண்டி வருகிறது. இது ஸீரியஸான விஷயமாகும். இதையும் கவனித்து ஒரு விசாரணை நடத்தவேண்டும்.

அடுத்து, திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஏதோ சொன்னார்கள். அது ரொம்பவும் வருந்தத்தக்கது. உண்மைக்கு மாறான தகவல்கள் இங்கு வந்திருக்கவேண்டிய தேவை இல்லை. ஆளியாறு ப்ராஜெக்டில் தி.மு.க. எம்.எல்.ஏ. தலைவராக இருந்தார்கள். தொழிலாளர்களின் நடவடிக்கைகள் பிடிக்காமல் விலகிக் கொண்டார்கள். ரமணியைத் தலைவராக வைத்தார்கள். நாங்கள் போட்டிச் சங்கம் வைக்கவில்லை. போட்டிச் சங்கம் ஆரம்பிக்கக் கூடாது என்று மாகாணக் கமிட்டி முடிவு எடுத்து கிளைகளுக்குச் சொல்லியிருக்கிறோம். உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள் என்ற கொள்கையை உடையவர்கள் நாங்கள். எங்களுக்கு மொழி வேறுபாடு, இன வேறுபாடு, திராவிட ஆரிய வேறுபாடு இவையெல்லாம் கிடையாது. வேறு சில சக்திகள் வேலை செய்கின்றன. நான் அதுபற்றிய நோட்டீஸ்களை முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். நாம்-தமிழர் கட்சி என்றிருக்கிறது. அப்படி இல்லாமல் இருக்கலாம். ஆனால் போட்டிருக்கிறது. துண்டுப்

பிரசுரங்களைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அபாண்டமான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருக்கக்கூடாது என்று வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பது சர்க்காரின் கொள்கை. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று 'கோட்' இருக்கிறது. அதற்கு மாறாக இருக்கிறது என்று சொன்னால் நாளையதினம் விவரமாகப் பேசும்பொழுது தோழர் திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு அபாண்டமான, உண்மையில்லாத குற்றச்சாட்டைச் சொன்னது மிகவும் வேதனை அளிக்கிறது என்று கூறி இன்னும் ஒரேயொரு விவரத்தை மட்டும் கூறிக்கொள்ளுகின்றேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு காட்பாடியில் மின்சார ஊழியர் ஒருவர் போஸ்டில் இருந்து விழுந்து அடிபட்டுக் கிடந்தார். அந்த வழியே வந்த என்ஜினியர் ஒருவர், அவர் பெயர் கிருஷ்ண மூர்த்தி என்று கருதுகிறேன், அவர் ஜீப்பை நிறுத்தி அதில் ஏற்றிக்கொண்டு செல்லவில்லை. நல்லவேளையாக அப்பொழுது காட்பாடி தொகுதி திரு. நடராஜன் அவர்கள் கார் வந்தது. அவர் காரிலேயே அழைத்துக்கொண்டு சென்றும், அந்த ஊழியர் அடுத்த இரண்டு மணி நேரத்தில் செத்துவிட்டார். முதலில்வந்த என்ஜினியரே மனிதாபிமானத்துடன் நடந்து ஜீப்பில் ஏற்றிக்கொண்டு சென்றிருந்தால் ஒரு வேளை காப்பாற்றியிருக்க முடியும். இதிலிருந்து எவ்வளவு அலட்சிய மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும். எவ்வளவு இலஞ்ச ஊழல் அதிகரித்திருக்கிறது என்பதை இந்தச் சபை அறிய வேண்டும். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் இவைகளைத் திருத்த வேண்டுமென்பதற்காகவேதானே தவிர, அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளுவதற்காக அல்ல. ஏனென்றால் என் ஊர்க்காரர் இந்த இலாக்காவின் அமைச்சராக இருப்பதால் அவருக்கு உதவ வேண்டுமென்பதற்காகவே சொல்லுகிறேன். தலைவரவர்களும் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் என்பதில் என்னுடைய நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையில் அறிந்ததாகும் என்று கூறி, எனக்குச் சிறிது நேரம் அதிகமாகக் கொடுத்ததற்காகத் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி கூறிவிடுவது மட்டும் போதாது. கட்சித் தலைவர்களும் பேரவைத் தலைவருடன் ஒத்துழைத்தால்தான் எல்லோருக்கும் பேச வாய்ப்பளிக்க முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகரவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் முதல் பக்கத்திலேயே 1971-ம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணியைச் செய்வது என்று கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல முன்னேற்றகரமான கருத்து என்பதிலே எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஒரு காரியத்தை எடுத்து, அதைக் குறிப்பிட்ட காலத்திலே முடிக்கிறோம் என்று சொல்லுகிற முறை எல்லாத் துறையிலும் பரவ வேண்டுமென்று

நான் ஆசைப்படுகிறேன். ஆனால், செய்ய வேண்டிய காரியம் எவ்வளவு இருக்கிறது, அதை எப்படி வரிசைப்படுத்திச் செய்யப் போகிறோம் என்ற விவரங்களையும் அத்துடன் சேர்த்துத் தருவது நல்லது. இப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தமாதிரி காரியங்களை முடிக்க வேண்டுமென்ற ஒரு உறுதிப்பாட்டை எடுத்துக் கொள்வது இதுவரையிலும் பழக்கமில்லாத அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் ஒரு புதுவிதமான சிந்தனையை உண்டாக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஒரு சிந்தனையை உண்டாக்குவதன் மூலம், அப்படி ஒரு செயலைச் செய்வதன் மூலம் மற்ற பல்வேறு காரியங்களுக்கும் அது உதவி செய்யும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அம்மாதிரியான ஒரு அறிவிப்பு மிகவும் பாராட்டக்கூடியது என்று முதலிலேயே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே, வேளாண்மைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதனால் ஆண்டுதோறும் சுமார் 9 கோடி ரூபாய் நஷ்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி ஏற்படும் 9 கோடி ரூபாய் நஷ்டத்தை மின்சார வாரியம் ஈடு செய்கிறது. அதேபோல், அலுமினியத் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் நஷ்டம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த 9 கோடி ரூபாய் நஷ்டம் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் சம்பந்தப்பட்டது. ஆனால் இந்த 1 கோடி ரூபாய் நஷ்டம் ஒரு குறிப்பிட்ட ஒரு தொழிற்சாலை மட்டும் சம்பந்தப்பட்டது. ஆகவே, பல்லாயிரக்கணக்கானவர்களுக்குச் செய்யப்படும் காரியம் இன்றைய தேவைக்கு உகந்ததாக இருக்கிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு கிணற்றுக்கும் மின்சார இணைப்பு அளித்தாக வேண்டுமென்ற நிலை இன்று இருந்து கொண்டிருக்கிறது. அது அவசியமானதுதான். ஆனால் ஒரு அலுமினியத் தொழிற்சாலைக்கு 1 கோடி ரூபாய் மின்சார வாரியம் நஷ்டப்பட வேண்டுமென்ற நிலை இருக்கிறதே இது வரவேற்கக்கூடிய, பாராட்டக்கூடிய, ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டிலே இது பற்றிக் குறிப்பிட்டபொழுது அதற்குச் சமாதானமாகக் கூறியிருக்கிறார்கள். மின்சார வாரியத்திலிருந்து இம்மாதிரி குறைந்த விலைக்கு அலுமினியம் போன்ற தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்காவிட்டால் அவர்கள் வேறு இராஜ்யங்களுக்குப் போய் விடுவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் வேறு இராஜ்யங்களுக்குப் போகாமல் தடுப்பதற்காக நாம் குறிப்பிட்ட நபர்களுக்கு நஷ்ட ஈடாகப் பணம் வழங்க வேண்டுமென்று சொன்னால் அதனால் ஏற்படுகின்ற லாபம் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பெருமளவில் மூலதனம் போட்டிருக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய எண்ணிக்கையைப் பார்த்தால், அதனால் தொழிலாளர்கள்

பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதற்குக் கூட ஆதாரமில்லாமல் இருக்கிறது. பல கோடி ரூபாய் போட்டிருக்கும் அந்தத் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 500 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். அதைவிடக் குறைவாக மூலதனம் போட்டிருக்கும் தொழிற்சாலைகளில் அதிகப்படியான ஆட்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அதற்கும் ஆதாரமில்லாமல், நம்முடைய இராஜ்யத்தில் ஒரு தொழிற்சாலை இருக்க வேண்டுமென்பதற்காக மட்டும் இம்மாதிரி சலுகை அளிப்பது சரியானதுதானா என்று மீண்டும் சிந்திக்க வேண்டும்.

தொழிலாளர் உறவைப் பொறுத்த வரையில் நல்லவிதமான முறையிலே செயல்பட்டு வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகள் பலவற்றை வற்புறுத்தி தெருக்களிலே போஸ்டர்கள் ஒட்டி இருப்பதைப் பார்த்தேன். தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை முடிவு செய்வதிலே ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் இன்னும் பூர்த்தி ஆகும் நிலை ஏற்பட்டுவிடவில்லை. 65,000 பேர்கள் வேலைசெய்யும் ஸ்தாபனத்தில் ஒரே சங்கமாக வைத்து காரியத்தைச் செய்வது சிறந்ததாக இருக்கும். ஆனால் இப்பொழுது போட்டி சங்கம் இருக்கிறது என்று எனக்கு முன்னாலே பேசிய திரு. இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல, நண்பர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும் அம்மாதிரி போட்டி சங்கம் ஏற்படுத்தவில்லை என்று சொன்னார்கள். எப்படியிருந்தாலும் சரி, 65,000 பேர் வேலை செய்யும் அந்த ஸ்தாபனத்திலே போட்டி சங்கங்கள் இருப்பது நல்லது அல்ல, அதை யார் துவக்கினாலும் சரி, யார் உருவாக்கினாலும் சரி, யார் நடத்தினாலும் சரி அது தொழிலாளர்களுக்குச் செய்கின்ற நன்மையாக முடியாது என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த அரசுக்கு ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கை இருக்கிறது என்று முன்னாலே பேசிக்கொண்டு வரப்பட்டது. ஆனால், சமீபத்திலே, மாண்புமிகு அமைச்சர் திரு. சண்முகம் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன், இது விளக்கமே தவிர, கொள்கை அல்ல என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதைக் கொள்கையாகக் கொண்டு செயல்படுகின்ற முறையிலே இருக்க வேண்டும். இந்த மின்சார வாரியத்திலே, தங்களுடைய மேற்பார்வையிலே இருக்கிற, தங்களுடைய அதிகாரத்திலே இருக்கிற ஸ்தாபனத்திலேயாவது அந்தக் கொள்கையைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

50,000 மின் இணைப்புகள் தருவதற்குத் திட்டம் இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மின் இணைப்பு பெறுவதில் விவசாயிகள் பல சந்தர்ப்பங்களில் கஷ்டப்படுகிறார்கள். ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்று கணக்கிடப்படுகிறது. அந்தப் பணத்தைக்

குறைந்தபட்சம் அவர்கள் கட்டியாக வேண்டுமென்றே விதியிருக்கிறது. இருந்தாலுங்கூட அது முழுசாக வாங்குவதில்லை, குறைத்துத்தான் வாங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், மோட்டாருக்கு, 5 ஹார்ஸ்பவர் என்றால் 250 ரூபாய் மதிப்பிட்டு அந்த மதிப்பீட்டின் பேரிலே கணக்கிடப்பட்டு, அந்தக் கணக்கிலே குறைவாக வருவதை நஷ்டம் என்று கணக்கிடுகிறார்கள். அப்படித்தான் இந்தத் தொகை நஷ்டமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, விவசாயிகள் பெறுகின்ற அந்த மின்சாரத்திற்கு 8¼ பைசா என்று இருக்கிறது. ஆனால் இங்கே 16 பைசா, 17 பைசா என்று செலவாகிறது. அதனால் குறைத்துப் போடுவதற்கு முடியாது என்று கடந்த வருஷத்திலே கூறினார்கள். ஆனால் இப்படியாகும் செலவைக் குறைப்பதற்கு வேறு பல வழிகள் இருக்கின்றன. இப்பொழுது 200 யூனிட்டுகளுக்கு மேல் எடுத்துக்கொள்ளும் பெரிய பணக்காரர்களுக்கு அந்த 200 யூனிட்டிற்கு மேல் இருக்கும் மின்சாரத்திற்குக் குறைவான கட்டணம் வாங்கப்படுகிறது. அப்படிக் குறைவாக வாங்குவதன் மூலம், அவர்கள் வீட்டில் அதிகப்படியான மின்சாரத்தைப் பயன்படுத்துவதனால், அவர்கள் வீட்டிலே எரிகின்ற விறகு, எண்ணெய் மிச்சம் ஆகிறது. அப்பொழுது மேலும் அவர்களுக்கு லாபம் வருகிறது. பெரும் வசதியுள்ளவர்களுக்கு அதிக லாபம் தரும் வகையில் மின்சாரக் கட்டணம் அமைந்திருப்பது 'பழைய கால' முறை. இன்றைய முறையில், சோஷலிசத்தைப் பற்றிப் பேசும் இந்நாளிலும் அப்படிப் பெறுகிறார்கள். அதிகப்படியான சக்தியுள்ளவர்களுக்கு அதிகப்படியான கட்டணம் விதித்து, குறைவான சக்தியுள்ளவர்களுக்குக் குறைந்த கட்டணம் விதிப்பதுதானே சோஷலிசத்தைத் திணிக்கும் முறை?' அந்த முறையை அனுசரிப்பதற்குச் சிந்தனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எனவே, விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் அளிக்க வேண்டும். தொழிற்சாலைகளில் 2 கோடி, 3 கோடி ரூபாய் லாபம் வருகிறது, சட்டபூர்வமான ஆடிட் கணக்குகளின்படி. கணக்கில் இல்லாமல் வரும் தொகை வேறு. இப்படி இலாபம் வருகின்றதிலே ஒரு கோடி ரூபாய் நம்முடைய பணத்தை வைத்து அவர்கள் இலாபம் அடைகிறார்கள் என்று சொல்கிறார்கள். இது சரியானதுதானா என்று சிந்தனை செய்யவேண்டும். ஆகவே, சாதாரண ஆட்களுக்கு, ஒரு வியாபாரம் செய்கின்ற, ஒரு பெட்டிக்கடை வைத்திருக்கின்ற, ஒரு நபருக்கு தினம் ரூ. 20 வியாபாரம் ஆகிற ஒரு கடைக்காரருக்கு விளக்கு கேட்டால் கூட யூனிட்டுக்கு 34 பைசா, என்று சொல்லப்படுகிறது. ஆனால், அம்மாதிரி 34 பைசா என்று பார்க்கின்றபோது, தாங்குவதற்கு அவனிடம் சக்தி இல்லாத நிலைதான் இருக்கிறது. சக்தி இல்லாத நிலையில் உள்ளவர்களிடத்திலே மாற்றிக்கொள்ள ஏன் சிந்தனை செய்யக் கூடாது? அதோடு ஹெவி இண்டஸ்ட்ரீஸுக்கு இவ்வளவு கட்டண விகிதம் என்று குறைந்த கட்டணத்தில் மின்சாரம் அளிக்கிறோம்.

[திரு. எம். சுரேந்திரன்] [1969 ஆகஸ்ட் 18

சிறு தொழில்கள் நம்முடைய இராஜ்யத்திலே வளர வேண்டுமென்று நாம் எல்லோரும் பேசுகிறோம், நாம் எல்லோரும் கருதுகின்றோம். சிறுதொழில்களுக்கு, குறைந்த பட்சம் ரூ. 50 கட்டணம் கட்டாயம் செலுத்தியாகவேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. அவர்களுக்கு யூனிட்டுக்கு 12 பைசா என்று கட்டணம் வாங்கும்போதும் ரூ. 50 கட்டாயம் செலுத்தவேண்டுமென்று சொன்னால் எப்படி நாம் அவர்களுக்கு உதவி செய்தவர்களாக ஆவோம்? ஆனால், பெருந் தொழில்களுக்கு 1½ பைசாவிலிருந்து 3½ பைசா வரைதான் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதைப் பார்க்கும்பொழுது சிறுதொழில்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது என்பதையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும். (மணி அடிக்கப்பட்டது)

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் அங்கே இருக்கிற ஊழியர்கள், அல்லது அதிகாரிகள், சாமான்கள் இல்லை, இல்லை, என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஒன்று கம்பி இல்லை, அல்லது கம்பம் இல்லை அல்லது இன்சுலேட்டர் இல்லை என்ற புகார்கள் எல்லா இடத்திலே இருந்து வருகின்றன. நாம் ஒரு திட்டம் போட்டு செயல்படுத்த என்னும்போது, அந்த திட்டத்தை அமுல் படுத்துவதற்கான சாமான்களைக் கையுடன் அனுப்புவதற்கான வழிமுறைகளைக் காணவேண்டும். அதோடு மட்டுமல்ல, அங்கே இருக்கின்றவர்கள் கம்பம் தூரமாக இருக்கிறது, அதை எடுத்து வருவதற்கு நீங்கள் வண்டி வைத்து ஏற்பாடு செய்யுங்கள், அல்லது வண்டியிலே கொண்டு வருவதற்கான வாடகையைத் தந்துவிடுங்கள் என்று சொல்கிறார்கள். கம்பிக்கும் அதே போன்று சொல்கிறார்கள். இப்படிப் பல்வேறுவிதமான முறைகளிலே ஒரு விவசாயி அவனுடைய கிணற்றிற்கு மின் இணைப்பு பெற வேண்டுமாயின் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அங்கே இருக்கிற சிப்பந்திகளுக்குப் பணம் அளிக்க அந்த விவசாயி தயாராக இல்லாவிட்டால் வழியிலுள்ள மரங்களை எல்லாம் முறித்து விட வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அங்கே இருக்கிற தென்னை மரங்கள், பனை மரங்கள் இவைகளை முறித்தால் தான் கம்பம் நட முடியும், அவர்களுக்கு இணைப்புத் தர முடியும் என்று சொல்லி, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள். இதையெல்லாம் போக்கி நல்ல முறையில் மின்சார வாரியம் வருங்காலத்திலே செயல் பட வேண்டும், செயல் படுமென்று நான் நம்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இந்த மின்சார வாரியம் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கைகளை நிறைவேற்றுகின்ற ஒரு அமைப்பா அல்லது ஒரு வியாபார ஸ்தாபனமா என்ற சந்தேகம் சில நேரத்திலே எழுகிறது. 40 விண்ணப்பங்களைக் கொடுத்து எங்களுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால், எங்கே 10

1969 ஆகஸ்ட் 18] [Dr. H. V. Hande]

சத விகிதம் இலாபம் அளிக்கிற முறையிலே விண்ணப்பம் வருகிறதோ அங்குதான் தருவோம் என்று அந்த முறையிலே மின் இணைப்பு கொடுக்கிறார்கள். அப்படியென்றால், அது எவ்வளவு இலாபம் கண்டிருக்கிறது என்று பார்த்தால் அது வரவேற்கக் கூடியதாக இல்லை. ஆகவே, வியாபார ஸ்தாபனமாக நடத்துவதாகவிருந்தால் அதற்கு அனுசரணையாகக் காரியங்களைச் செய்ய வேண்டும். அல்லது சர்க்காருடைய கொள்கைகளை நடத்தி வைக்கின்ற ஸ்தாபனமாக இருந்தால் அதற்கு அனுசரணையாகக் காரியங்களைச் செய்யவேண்டும். ஒரு விதத்திலே வியாபார ஸ்தாபனம் என்றும், இப்படிக் கேட்டால் வியாபார ஸ்தாபனம் என்றும், அப்படிக் கேட்டால், அரசாங்கத்தினுடைய கொள்கைகளை நடத்துகின்ற ஸ்தாபனம் என்றும் கூறும் இரண்டுங்கெட்டான் நிலை மின்சார வாரியத்திற்கு இருக்கிறது. ஆகவே, இதை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி, சீர் செய்கின்ற முறையிலே புதிதாக வந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் இராமன் அவர்கள் காரியங்களைச் செய்வார்கள் என்று நம்பி உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I have to express my disappointment at the fact that this House has not been taken into confidence by this Ministry with regard to the River Water Pact which took place sometime ago. I have been feeling that the discussion that is taking place in the House is absolutely meaningless unless and until the Ministry gives us a categorical statement in detail as to what exactly transpired between this State Government and the neighbouring State Government in regard to this Pact. All that we have learnt is hear say and from what newspapers have stated and from the statements made by the Hon. Minister concerned and from the statements made by the Leaders of the Opposition Parties. Therefore, I am really pained about the cavalier manner in which this matter has been treated by this august Cabinet.

With regard to the River Water Pact I would like to point out that the electricity which we think we will get hereafter will depend mainly on the extra water that we will get from the Kerala State. The agreement covers the utilisation of water flowing from the Anamalaiar and Nirar rivers. There is not much difference between the old unsigned agreement and the agreement that has been signed by the two State Governments recently. Under the old agreement 16-1/2 T.M.C. feet of water is allotted for Tamil Nadu, that is 14 T.M.C. feet of water was allotted from Nirar and 2-1/2 T.M.C. feet of water from Thekkadi. But under the latest agreement Thekkadi water is completely cut off and we are not going to get any Thekkadi water. Presuming that we are going to get that water, a lot of money has been sunk in the Thekkadi scheme. That money is a waste and I would like to point out this aspect of that matter. That is why I said in the beginning of my speech itself that this discussion

[Dr. H. V. Hande] [1969 ஆகஸ்ட் 18

would be much more meaningful if a proper appraisal has been made about the utilisation of the extra water which we are getting from Anamalaiar and Nirar. We have to spend a lot of money on the construction of tunnels etc., and we must see that it does not become a white elephant and afterwards we should not reach a stage when we may not be able to utilise it. We have to get the maximum power out of it. Even the extra water we will get only after the Kerala Government have built its dam on the Kerala side. Even here a set of mutually agreed rules and regulations would be a great boon instead of a General Board of P.W.D. officials. We know what has happened in the case of the Tungabhadra Project and the conflict which has arisen between the States sharing its water. So, a proper set of rules and regulations are imperative and that is one of the important points which has to be considered by the Government.

Then I come to another point, viz., Sholayar Power Project. There has been a lot of bungling in regard to this matter, and the credit for that goes to the previous Government; Two Power Houses, Sholayar Power House I and Sholayar Power House II are proposed to be executed. Power House No. 1 is ready but it is idle due to want of water which will flow only after the Nirar and Anamalaiar tunnel has been executed. That is the most important point which I would like to refer to in regard to this matter.

Now I come to the financial position of the Electricity Board. The general financial position may appear at first sight to be nice when we note that for the first time there is surplus. But with a capital outlay of Rs. 357.77 crores as seen from page 9 of the Book the net revenue of only Rs. 42 lakhs for a capital outlay of about Rs. 357 crores by any reckoning, shows that things are not all right at least with respect to financing. It is also seen that some Banks have taken 'interest' in the Board's programme, and have advanced Rs. 7.5 crores to the Board. The Banks which have advanced loans are as follows :—

	(Rs. in crores.)
Bank of India	3.00
Syndicate Bank	2.00
Punjab National Bank	2.00
Indian Overseas Bank	0.50

May we know the rate of interest for these loans? At what rate of interest have these loans been taken? It is also stated in the sppech of the Hon. Minister—

'I trust that after nationalisation, the Banks will give even greater support to the rural electrification programme of the Board'. We have seen what the State Bank has done. What about Life Insurance Corporation of India? Are they giving us loans to the extent we want? We have to think twice on these things.

1969 ஆகஸ்ட் 18] [Dr. H. V. Hande]

There is another thing. What is the interest at which these particular Banks are giving us loans? A tendering process is called for as regards rate of interest to be charged. I am sorry this had not been done. If it had been done, there would have been considerable saving to the tax-payer. I would like to know whether this tendering process was initiated as regards rate of interest to be charged and the extent of mortgage to be made and whether any mortgage was made at all. It is said that the Electricity Board is a commercial organisation and should run on commercial lines, then it should act in a commercial manner. Has that been done? Whenever we ask whether the Board has acted on commercial lines, the reply given is that it is a public-sector undertaking and Government agency. I would like the Hon. Minister to answer to this point while giving his reply, viz., whether the Board has acted on commercial lines and whether tendering for the rate of interest to be charged and the extent of mortgage to be made had been done. A considerable amount of saving in the interest amount could have been effected if that had been done. After all the interest amount, which the Board has to pay, has to be borne by the tax-payer. That is my accusation against the Board.

I would also like to know whether this Government had thought of the possibility of getting these loans straight from the Reserve Bank of India? After all, that is also a Government body. This Government could have negotiated with the Government of India for getting this amount from the Reserve Bank of India. Has that been done? We think this amount is going to be utilised for rural electrification. I want a straight answer from the Hon. Minister whether this amount is going to be utilised for rural electrification or whether it will be considered as a "charged amount", which could be utilised in some other way. The amount has been taken for a specific purpose viz. for rural electrification.

I now come to the other point touched upon by the hon. Member Thiru Surendran, viz. the amount of subsidy we give to the Aluminium industry. We are giving that industry a subsidy of nearly Rs. 1 crore. As regards giving subsidy to such industries, I have given my views during my speech last year, when the budget of the Electricity Board came before this House. I note that certain other industries like chemicals, gem factory, cement factory etc. which also get supply at very concessional rates have not been included in the list. These companies have also been making enormous profits. My distinguished friend Thiru Surendran has mentioned about giving of subsidy to Aluminium industry and has questioned its propriety. When chemicals, gem factory and cement factories have been making enormous profits, it is high time that the Board has its due share of such profits.

Now I come to the labour problem. That is the most important problem so far as I am concerned. In the Ennore Thermal Scheme, there is a sort of understanding that whenever we import

outside labour, we have got to observe certain norms. There are three categories of workers there, viz. permanent, semi-permanent (work-charged) and purely temporary people. It is also linked with the Basin Bridge Power House. There is a serious threat of imminent unemployment as regards Basin Bridge Power House. I request that employees who are going to be retrenched from Basin Bridge Power House should be given preference in Ennore Thermal Scheme as temporary employees. That assurance was given by the Chairman of Electricity Board. But still I find that 25 employees are going to be directly taken in Ennore Thermal Scheme as temporary employees. Is it not against the verbal understanding (or even understanding by writing) arrived at between trade unions and the management? Why should 25 new persons be imported? Ennore Thermal Scheme should provide place for persons retrenched from Basin Bridge Power House. The Hon. Minister should give proper attention to this question. After a great vacuum, some progress has been made in labour relations. That is the good side of the picture. But, for a department with a revenue of Rs. 50 crores, I should say that the general welfare works are dismally low. That is the charge I am making in this House against the Board. Considering some of Government of India schemes producing only mounting monetary deficits year after year, where officers have luxurious offices, quarters etc., what is the facility given to the workers of the Madras Electricity Board? That is the important point.

I now come to the crucial point, viz., Neyveli. We are paying them nearly Rs. 10 crores every year. I am sorry my friend Thiru M. P. Sivagnana Gramani is not here. This would give him lot of points, on which he could shout. Why should we go on purchasing power from Neyveli at a high cost? Although the cost of power purchased from Mysore, Kerala and Neyveli is Rs. 13.26 crores, I make out that the bulk of purchase is only from Neyveli and it comes to Rs. 10 crores annually. Why should we go on paying such a huge sum? Why can't this Government take over Neyveli power generation? We can then have more control, since it is situated within Madras State. We could then have more proper liasion. Otherwise, every year we would be having this controversy over the high cost for Neyveli power. I request this Government to consider what I have said. I am sure that Government could take a decision on this matter and write to the Centre.

With Rs. 400 crores established capital, the Madras Electricity Board becomes one of the biggest public undertakings in the country. When compared to other undertakings, it appears to me that a lot of strengthening of the staff at all levels as well as modernising procedures would have to be undertaken immediately, if efficiency has to be maintained. I would suggest that a Committee consisting of 3 persons including an Engineer could be appointed to go into this question and suggest constructive means for bettering the efficiency and economy of the Board. Such

missions had been appointed in other States and they have given very valuable and useful suggestions. So I would request Government to appoint such a Committee.

One more request, I would like to make.

(Thiru Ginjee V. Munuswamy in the Chair).

The employees are having many grievances. Whenever they give petitions about their grievances, I request the Chairman, not to depend upon the officials to scrutinise them. I would request the Government to give instructions to the Chairman to look into the grievances properly and do the needful in the matter.

There are so many Associations. There is the 'Licentiates' Association'. There is the ' Accountants Association '. There are about 5000 to 6000 accountants. Such grievances from employees are a constant source of irritation. If the Chairman were to give them patient hearing, many of their problems could be solved. It would give them satisfaction, if the Chairman were to hear their grievances first-hand and try to solve them, wherever extra funds are not required. I hope this would be taken due note of by the concerned authorities.

I hope that the Hon. Minister would bear in mind what all I had said and would give his reply during the final summing up tomorrow morning. Thank you.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் ஒருவர் நூல் நூற்பு ஆலைகள், ஜவுளி நூல் நூற்பு ஆலைகள் போன்ற நூற்பு ஆலைகளிடமிருந்து மின்சாரக் கட்டணம் ஏராளமாக பாக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அவைகளை உடனடியாக, கெடுபிடியாக வசூல் செய்ய வேண்டும் என்ற கருத்தினைச் சொன்னார்கள். இன்றைக்கு நூற்பு ஆலைகளின் நிலை மிகவும் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. பொருளாதார நிலையைப் பார்த்தால், அவர்கள் சர்க்காரை நம்பி, சர்க்காரிடம் முறையிட்டு, அதிகமாகக் கடன் உதவி பெற்றாலொழிய, அந்த நூற்பு ஆலைகளை நடத்த முடியாது, நூற்பு ஆலைகளை மூடிவிட வேண்டுமென்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே அவர்களைக் கட்டாயப்படுத்தி, கெடுபிடியாக மின்சாரக் கட்டணத் தொகையை வசூல் செய்தால், நிச்சயம் அவர்கள் நூற்பு ஆலைகளை மூடிவிடத் தயாராக இருக்கிறார்கள். அந்த நிலை ஏற்பட்டால், பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பத்தாண்டுகளுக்கு முன்பாக, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான சிவில் எஞ்சினியர்கள் இல்லாத காலத்தில், பி.டபிள்யூ.டி.யிலிருந்து [illegible] சிவில் எஞ்சினியர்

களைப் பெற்று பணியாற்றி வந்தார்கள். இன்றைய நிலையில், மின்சார வாரியத்திற்கே சொந்தமான சிவில் எஞ்சினியர்கள் ஏராளமாக இருக்கும்போது, இப்பொழுது பல பிராஜக்ட்கள் வேலை முடிந்த நிலையில், வாரியத்தின் எஞ்சினியர்களை வெளியே போகச்சொல்லும் நிலை இருக்கிறது. அந்த நிலையில் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து கடனாக வாங்கிய எஞ்சினியர்களை வைத்துக் கொண்டு, வாரியத்திற்குச் சொந்தமான சிவில் எஞ்சினியர்களை வெளியே போகச் சொல்லுவது அல்லது கீழே இறக்குவது முறையல்ல; இதுபோன்ற நிலைகள் மிகவும் கவலைக்கிடமளிப்பவைகளாக இருக்கின்றன. அதை மாற்றி, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து கடனாக வாங்கிய சிவில் எஞ்சினியர்களை அவர்களுடைய பேரண்ட் டிபார்ட்மெண்டுக்கே போகச் சொல்லிவிட்டு, வாரியத்திற்குச் சொந்தமான சிவில் எஞ்சினியர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும் நிலையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும், நல்ல முறையிலும் பணியாற்றமுடியும். பப்ளிக் ஒர்க்ஸ் எஞ்சினியர்கள் வாரியத்தில் ஈ. ஈ. போன்ற உயர் பதவியில் உயர்த்தப்படும்போது, வாரியத்திற்குச் சொந்தமான சிவில் எஞ்சினியர் ஏ.ஈ.யாகவே இருப்பது, அவர்களுக்கு மிக்க வருத்தத்தையும், அவர்களுக்கு வரக்கூடிய கிராச்சுடி, பென்ஷன் போன்றவைகளில் சலுகைகள் குறைந்தும் போகும் நிலை இருக்கிறது. அதன் பிறகும் 10, 15 ஆண்டுகளுக்குக் காத்திருக்கும் நிலைதான் ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால், பப்ளிக் ஒர்க்ஸிலிருந்து கடனைப் பெற்ற சிவில் எஞ்சினியர்களைப் பேரண்டு டிபார்ட்மெண்டுக்குப் போகச் சொல்லிவிட்டு, வாரியத்திற்குச் சொந்தமான எஞ்சினியர்களுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்க வேண்டும். இந்த நிலையை உணர்ந்து, வாரியத்தார், வாரியத்திற்குச் சொந்தமான எஞ்சினியர்களுக்கு நல்ல வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும். இந்த நிலையை . . .

திரு. கே. விநயகம் : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த அவையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் தனித் தனியே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விதிகளும் இருக்கின்றன. அப்படி இருக்கும் போது, ஒரு அங்கத்தினர், சட்டசபைப் பார்வையாளர்கள் மாடத்தில் மேலே சென்று இங்கு நடக்கும் நடவடிக்கைகளைப் பார்வையிடலாமா? வேண்டுமென்றால், லௌஞ்சுக்குப் போகலாம், கான்டீனுக்குப் போகலாம். அல்லது வாராந்தாவிற்குப் போகலாம். ஆனால், மேலே மாடத்திலிருந்து நடவடிக்கைகளைப் பார்ப்பது என்பது முறையானதா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி): மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால், மேலே சென்றிருக்கும் உறுப்பினர் இங்கே நடக்கும் நடவடிக்கையைப் பார்ப்பதற்காகச்

சென்றாரா அல்லது, யாரையாவது வேண்டியவரைத் தேடிச் சென்றாரா என்கிற சிக்கல் இருப்பதால், அது பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றிய விதிகளின்கீழ் வராது என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதுவல்ல பிரச்சினை. அங்கேயே போய் உட்காரலாமா, அது ஒழுங்கா? அதுதான் பிரச்சினை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : விதிமுறைப்படி, உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் எந்தப் பகுதிக்கும் போகலாம், வரலாம். ஆனால், அன்றாட நடவடிக்கையில் பங்கு கொள்ளும்போது, அவரவர்கள் தங்கள் இருக்கையில் இருக்கவேண்டும். மற்றபடி தடை விதிக்க முடியாது. ஆகவே, அது ஒழுங்குப் பிரச்சினையாகாது.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், மின்சார வாரியத்தில் பணியாற்றுகிற ஏ.ஈ. போன்றவர்கள் தங்களுக்கு உயர் பதவி கிடைக்காததால், அவர்கள் தங்கள் வாழ்நாள் பூராவும், உழைத்துவிட்டு ஓய்வு பெறும்போது, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகள் கிடைக்காத நிலை ஏற்படுவதால், அவர்கள் பணியாற்றும் காலத்திலேகூட, நேர்மையாகவும், உற்சாகத்துடனும், ஆர்வத்தோடும் பணியாற்றதக்க நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து கடனாக வாங்கிய சிவில் எஞ்சினியர்களை பதவி உயர்வுக்கு எடுக்கும்போது, அதே துறையில் இருக்கும், சீனியர்-மோஸ்ட் எஞ்சினியர்கள் பதவி உயர்வு இல்லாததால் அது Note 22 under Fundamental Rule 14 regarding delegation -க்கு முரணாக இருக்கிறது.

அடுத்து, பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கொடுப்பது பற்றிச் சொல்லும்போது, A. E. for Construction என்பவர் அவருக்கு வேண்டிய கம்பெனியில் பம்பு செட்டு வாங்கியாகிவிட்டது என்று இன்வாய்சைக் காட்டினால்தான் சீக்கிரம் கனெக்ஷன் கிடைக்கிறது. இதில் பல ஊழல்கள், தவறுகள் ஏற்படுகின்றன. அந்த நிலை மாறவேண்டும். அதற்காக மின் வாரியத்தினர் சர்குலர் விடுத்து அப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்க்க வேண்டும்.

மின் பவர் ஹவுஸ் ஏற்படுத்தியிருக்கிறோம்; குந்தா பவர் ஹவுஸ் 1, 2, 3 என்று ஏற்படுத்தியிருக்கிறோம். இவற்றிற்கெல்லாம் முன்னாள் தமிழக அமைச்சர்களுடைய பெயர்களை வைத்து இருக்கிறார்கள். அடுத்து ஏற்படும் பவர் ஹவுஸ்களுக்கு பேரறிஞர் அண்ணாவின் நாமத்தைச் சூட்டவேண்டும். நாவலர் நாமம், கலைஞர் நாமம், மதியழகன் நாமத்தையும் சூட்டலாம். அப்படிச் செய்தால் ஒரு நல்ல காரியம் செய்ததாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*** திரு. ஆர். கருப்பையா :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் உளங்

கனிந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் கூறிக்கொண்டு, வாரியத்தைப் பற்றி என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாக, மின்சார வாரியம் தமிழ் நாட்டில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்றாலும், செயல்படும் முறையில் சற்று கால தாமதம் இருக்கிறது. குறிப்பாக கிராமப் பகுதிகளுக்கு, மின் இணைப்புக்கள் கொடுப்பதில், மின் வாரியத்தார் அளிக்கும் பதில்களும், எடுக்கும் நடவடிக்கைகளும், என்ன எண்ணத்தைக் கொடுக்கிறது என்றால், மின்சார வாரியத்தால் கிராமப் பகுதிகளுக்கு மின் இணைப்புக்கள் கொடுக்கும் விஷயத்தில் ஆமை வேகத்தில்தான் போகிறார்கள் என்கிற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். நகரப் புறங்களில் இவ்வளவு விரைவாகச் செய்பவர்கள், அதில் பத்தில் ஒரு பங்குகூட கிராமப்பகுதியில் காட்டத் தயங்குகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய அரியலூர், ஜயங்கொண்டான் தாலுக்காக்களில் வேலை மிகவும் தாமதமாகவே நடந்துவருகிறது. ராயம்புரம், ஆதிகுடிகாடு, மல்லூர், சுப்பராயபுரம், வாரணவாசி போன்ற கிராமங்களில், விவசாயிகள் கடன் வாங்கி, பம்பு செட்டுக்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே வாங்கி வைத்திருந்தும், அந்தப் பகுதி மக்களுக்கு இன்னும் மின் இணைப்புக் கொடுத்தபாடில்லை. அதனால், மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் இருக்கும் குறை என்னவென்றால், திருச்சி மாவட்டத்தில், ஒரு பகுதி திருச்சி டிவிஷனிலும், இன்னொரு பகுதி விருத்தாசலம் டிவிஷனிலும் இருக்கிறது. அங்கே போய்க் கேட்டால், அந்த ஆபீசர் இங்கே இல்லை அந்தப் பகுதிக்குப் போங்கள் என்கிறார்; இப்படி மக்கள் அல்லல் படுத்தப்படுகிறார்கள். ஆகவே, மக்களுடைய நலனைக் கொண்டு, திருச்சி மாவட்டம் பூராவையும், திருச்சி டிவிஷனிலேயே வைத்தால்தான் நலமாக இருக்கும். அப்பொழுதுதான் நல்ல முறையில் வேலைகள் நடக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்த மின்சார வாரியத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று கன்ஸ்ட்ரக்ஷன்; இன்னொன்று காமர்ஷியல். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரு தலைமைப் பொறியாளரை நியமித்தால் தான் இன்னும் திறமையாக, விரைவாக செயல்பட முடியும். இப்பொழுது எதற்கெடுத்தாலும் தலைமைப் பொறியாளர்தான் பார்க்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. கிராமப்புறங்களில் நடைபெறும் எந்தத் திட்டங்களாக இருந்தாலும், சென்னைக்கு வந்து தலைமைப் பொறியாளரிடம்தான் சாங்ஷன் பெற வேண்டும். உடனடியாக கிராமப்பகுதிகளுக்கு சாங்ஷன் கிடைக்கவும், மற்ற வேலைத் திட்டங்கள் நடைபெறவும் வேண்டிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1971-ம் ஆண்டிற்குள் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி நடப்பதாக இருந்

தால், நாங்கள் இந்த அமைச்சரவையைப் பாராட்டுவோம். அல்லது இந்தத் திட்டமும், படி அரிசித் திட்டத்தைப்போல வெறும் விளம்பரமாகத்தான் இருக்குமோ என்று அஞ்சுகிறோம். 1971-ம் ஆண்டிற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தரப்பட வேண்டுமானால் எவ்வளவு தொகை செலவாகும் என்பதைப் பார்க்க வேண்டும். படி அரிசித் திட்டம் போல் இல்லாமல் இருக்க வேண்டும். அல்லது 'சீப் பாபுலாரிடி' க்காகச் சொன்னார்களோ, என்னவோ? உண்மையிலேயே கிராமம் முழுவதற்கும் மின்சாரத்தைப் பயன்படும்படிச் செய்தால் நாங்கள் பாராட்டுகிறோம். பொய்யாகச் சொல்லி விவசாயப் பெருங்குடி மக்களை ஏமாற்றத்திற்காளாக்க வேண்டாம். மின்சார இணைப்புத் திட்டத்தை இன்னும் வேகமான முறையில், விரிவாகவும், விரைவாகவும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் தண்ணீர்த் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுகின்றது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் பொய்யாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறினார். பொய் என்ற வார்த்தையை இந்த மன்றத்தில் உபயோகிக்கலாமா?

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை 'உண்மைக்கு மாறாகச் சொல்லி' என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறேன். அமைச்சர் அவர்கள் கூறியபடி நடப்பதாக இருந்தால் பாராட்டுகிறோம். மேலும் எங்கள் பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (ஃபில்டர் பாயின்டுகள்) ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அவைகளுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கிடைக்கவில்லை. நாங்கள் திருச்சியிலுள்ள இன்ஜினியரை அணுகி இதைப்பற்றிக் கேட்டும் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏலாகுறிச்சி, காமரசவல்லி, மாத்தூர், குருவாடி, துதூர் போன்ற பகுதிகளிலுள்ள நூற்றுக் கணக்கான வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. கேட்டால் அந்தப் பகுதிகளில் பத்து பர்சென்ட் லாபம் வரவில்லை என்று சொல்கிறார்கள். நிறைய விவசாயிகள் கிணறுகளுக்கு மின்இணைப்பு பெற தயாராக இருந்தாலும், காலதாமதம் ஏற்படுகின்றது, இன்னும் சாங்ஷன் ஆகவில்லை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அரியலூர் தாலுகாவைப் பொறுத்தவரையில், அது மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியில் ஒரு கிராமத்திற்கு இருபது, முப்பது விவசாயிகள் தங்களுடைய கிணறுகளுக்கு மின்இணைப்பு செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. விவசாயத்திற்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, இப்படி மின்இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே, பின்தங்கிய பகுதிகளுக்கும்

பத்து பர்சென்ட் லாபம் வர வேண்டுமென்று இருப்பதை மாற்றி சுமார் எட்டு பர்சென்ட் லாபம் வந்தாலும் மின் இணைப்பு கொடுக்கலாம் என்று மாற்றியமைக்க வேண்டும். நாம் மின்சார வாரியத்தை லாபத்திற்காக, லாப நோக்கத்திற்காக வைத்து நடத்தக் கூடாது. இந்தப் பகுதிகளில் மழை இல்லாமல் கிணறுகள் பாசனம் மூலமே விவசாயம் நடைபெறவேண்டியிருக்கிறது. இந்தப் பகுதியில் நிலம் வைத்திருப்பவர்கள் யார் மின் இணைப்பு கேட்டாலும் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். சிலர் எண்ணெய் போட்டு மோட்டார் பம்புகளை ஓட்டி வந்தார்கள். இப்போது எண்ணெய் விற்கும் விலையில் அதை உபயோகிக்க ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். நாம் வியாபார நோக்கத்தோடு பார்க்காமல் ஐந்து பர்சென்ட் வந்தாலும் அல்லது லாபமே வரவில்லையென்றாலும் பின்தங்கிய பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இதற்கு வழிவகை செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே அதிகமான லாபம் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த லாபத்திலே ஒரு பங்கை அந்தத் துறையிலே வேலை செய்பவர்களுக்கு, அந்தத் துறையிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குப் போனசாகத் தரவேண்டும். மேலும் எலெக்ட்ரிசிடி போர்டில் தினக்கூலி, வாரக்கூலிகளாக ஏராளமான பேர் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுடைய ஊழியம் நிரந்தரமாக்கப் படவில்லை. அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால், தங்களுடைய வேலை எப்பொழுது போய்விடுமோ என்ற அச்சத்தின் நடுவில், அவர்கள் தங்களுடைய வேலையைச செய்து வருகிறார்கள். மேலும் சில இடங்களில் வேலை சுணக்கமாக நடைபெறுகிறது. 'இந்த வேலை முடிந்தவுடன் வேறு எங்கே வேலைக்குப் போவது ?' என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தமாதிரியான தொழிலாளர்களை நிரந்தரமாக்கினால் வேலையானது இன்னும் வேகமாகவும், அவர்கள் மன நிறைவுடனும் பாடுபடுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஹெவி பாய்லர் தொழிற்சாலையும், சிறு ஆயுத தொழிற்சாலையும், இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டும் இருக்கின்றன. அங்கே அனல் மின்சார நிலையம் ஒன்றை ஏற்படுத்தினால் மின்சார உற்பத்திக்கும், மின்சார தேவைக்கும் வேண்டிய மின்சாரத்தை அங்கிருந்தே பெற்றுக்கொள்ளலாம். இப்போது இருக்கின்ற மின்சாரம் போதாது. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் ஒரு அனல் மின்சார நிலையத்தினை ஏற்படுத்தி, அந்தப் பகுதிக்கு ஒரு நிரந்தரமான பயனைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

மின்சார நிறுவனம் இரண்டு பிரிவுகளாகச் செயல்படுகிறது. அரசாங்கத்தின் கீழும், தனியார் நிறுவனத்தின்கீழும் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. தனியார் கம்பெனியானது டெம்பரரி கொட்டகையாக இருந்தால்கூட ஏற்றுக்கொண்டு, மின் இணைப்புத் தர முன்வருகிறார்கள். ஆனால் அரசாங்க நிறுவனமானது ஓர் இடத்திற்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றால் ரூபாய் ஆயிரம் அல்லது 800 ரூபாய் மதிப்பிலாவது கட்டிடம் கட்ட வேண்டும். மேலும் பர்மெனென்ட் கட்டிடம் கட்டினால்தான் மின் இணைப்புத் தருகிறார்கள். பணக்காரர்கள் தான் இப்படிக் கட்டி, வசதிகளைப் பெற முடியும். ஒரு சாதாரண ஏழை விவசாயி இப்படிச் செய்ய முடியாது. தனியார் நிறுவனத்தினர் டெம்பரரி ஷெட்டாக இருந்தாலும், அதாவது கீற்றுக் கொட்டகையாக இருந்தாலும், மின்இணைப்புத் தருகிறார்கள். ஏன் இந்த மாறுபாடுகள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் மின்சார வேலை நடைபெறுகிற இடங்களில் கம்பங்கள் இல்லை, கம்பிகள் இல்லை என்று வேலையை நிறுத்திவிடுகிறார்கள். திருமானூரிலும் இதேபோல் கம்பங்கள் இல்லையென்ற குறை பேசப்பட்டு வருகிறது. அரசாங்கம் இந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தெரு விளக்குகளுக்குத் தனியாக மீட்டர் வைத்து கணக்குப் பார்க்க வேண்டும். சில கிராமப் பஞ்சாயத்தினால் தெரு விளக்குகளுக்கு உண்டான கட்டணத்தைக் கட்டக்கூட முடியாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் அந்த ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து கட்டணத்தை வசூலிக்க வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கூறிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. டி. அண்ணாமலை: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1969-70–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1968–69–ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையின் பேரில் எனது 12 30
கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பி.ப

கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது சட்டமன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களையொட்டி மின்சார வாரியம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரித்த அறிக்கை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதையும் பாராட்டி அதில் உள்ள நடவடிக்கைகளுக்கும் பாராட்டுதல்கள் தெரிவித்துக்கொள்கிறேன்.

1971-ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாடு முழுதும் உள்ள கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் பணியை முடிக்க மேற்கொண்டுள்ள உறுதியையும் பாராட்டுகிறேன். இந்த நல்ல நேரத்தில் எங்களுக்குத் தேவையான சில பிரச்சினைகளையும் தெரிவித்து அவைகளின் பேரில் நமது வாரியமும், அரசும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

(1) வட ஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசி, செய்யார் வட்டாரத்தில் தற்போது கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பின் காரணமாக மின்சார அலுவலகங்களில் வேலைப் பளு ஏற்

பட்டுள்ளன. அவைகளைத் தவிர்க்க (1) வந்தவாசி ஏ. இ. (ஓ. எம்.) அலுவலகப் பணிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஏ.இ. (சவுத்) ஏ.இ. (நார்த்) என்று அமைக்கக் கோருகிறேன். தவிரவும் (2) புதிதாக சில செக்ஷன் அலுவலகங்கள் விரம்பாக்கம், புரிசை, கோவிலூர், நெடுங்குளம் பெரியகொழப்பலூர், திருமணி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதியவை துவக்கவும் கோருகிறேன்.

(2) தவிரவும் மனபூர், விரம்பாக்கம், புரிசை ஆகிய மூன்று இடங்களிலும் மின்சார சப் ஸ்டேஷன்களை துவக்கவும் அதன்மூலம் மின்வேகம் சீராக அமையவும் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

(3) மின்சார ரெவின்யூ யூனிட்டுக்காகவும், மின்சார ஸ்டோர், மின்சார கமர்ஷியல் அலுவலகத்துக்கும் அங்கே உள்ள எலெக்டரிக் சப் ஸ்டேஷன் அருகில் உள்ள காலி இடத்தில் கட்டடங்களைக் கட்டித்தரக் கோருகிறேன்.

பல கிராமங்களில் பல்புகள் இல்லாத குறையினால் தெரு விளக்குகள் சரிவர வேலை செய்வதில்லை. இதனால் பலபல கஷ்டங்களை மக்கள் அடைகிறார்கள். விளக்கு எரியவில்லை, வெளிச்சம் தரவில்லை. சர்க்காருக்கு மட்டும் பணம் தருகிறோம் என்று குறைபடுகிறார்கள். விளக்குகள் அமைக்கப்பட்டும் ஒரு தீபம் கூடத் தெரியாத நிலை உள்ளது. உதாரணமாக பொணமல்லூர் தொகுதியில் கொடுக்கத்தூர், கோவிலூர், அனுகிகாவூர், முக்கூர், வாக்கடை வடதின்னலூர் போன்ற பெரிய கிராமங்கள் எல்லாம் இருண்டு கிடக்கின்றன. இந்த கிராமங்களிலாவது உடனடியாகப் பல்புகள் புதியதாகப் போடப்பட வேண்டும்.

மின்சார வாரியத் துறையில் பல்புகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவும் வேண்டும்.

அடுத்தாற்போல வந்தவாசி, செய்யார் தாலுக்காக்களில் பல கிராமங்கள் மின் இணைப்புத் தொடர்பு அளிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. மின் இலாக்கா இன்னும் அதிகமான சுறுசுறுப்புடன் பணியாற்றவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். வந்தவாசி தாலுக்காவில் ஆரியாத்தூர், கொண்டயான் குப்பம், செய்யாறு தாலுக்கா கிராமங்களில் மின் இணைப்புக் கோரி பல ஆண்டுகள் ஆகின்றன. அவை இன்னும் கவனிக்கப் படவில்லை.

அடுத்தாற்போல விவசாயிகள் நில அடமான பாங்குகளில் நிலத்தை அடகுவைத்து கடன் வாங்கி, மோட்டார் போட்டு மின் இணைப்புக் கொடுங்கள் என்று கேட்கிற நேரத்தில்—பத்து சதம் கட்டுமானமுள்ளதாக இல்லை, ஆகவே கொடுப்பதற்கில்லை என்கிறார்கள். இப்படி பத்து சதம் லாபகரம் உள்ளதா என்று கவனிக்கப் பட்டுத்தான் கிராம விவசாயிகளுக்கு விவசாயத்துக்கு மின்

தொடர்பு அளிக்கப்படுகிறது. விவசாயத்திற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நிலையில் உள்ள நாம் கண்டிப்பாக இந்த விதியைத் தளர்த்தியாக வேண்டும். பத்து சதம் கட்டுமானத்தைப் பார்க்காது—விவசாயிகள் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கேட்கிறார்களா, உடனே கொடுங்கள் என்கிற வகையில் செயலாற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆக இந்த விதியைத் தளர்த்தி விவசாயிகள் கோருகிறபோது மின்தொடர்பு அளித்து உணவு உற்பத்திக்கு அதிக அளவில் ஆதரவுதர வேண்டுகிறேன்.

தவிரவும் மின்சார பம்பு செட்டுகளுக்கு குறைந்தபட்ச ஆண்டுக் கட்டணம் என ஒரு குதிரை ஓட்டத்துக்கு ரூ. 50 என்ற விதியையும் தளர்த்தி செலவுக்குரிய பணம் செலுத்தினால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். இந்தத் தொகையை மின்சார வாரியமே தள்ளிக்கொடுக்கலாம். இல்லையென்றால் சர்க்கார் மானியமாகவாவது இதை அவர்களுக்கு கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக மின்சார இலாக்காவில் மரியாதை வாரம் என்று ஒருவாரம் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்ய வேண்டுகிறேன். மின்சார இலாக்காவில் இருப்பவர்கள் தாங்கள் மக்களுக்குச் சேவை செய்ய இருப்பவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளப் பழகவேண்டும். கிராமத்தில் இருந்து விவசாயிகள் வந்தால் அலட்சியமாக அவர்களை நடத்துகிறபோக்கு மாற வேண்டும். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களின் தலைநகரம், வட்ட, மாவட்ட தலைநகரங்கள் ஆகிய இடங்களில் கூடுமான வரையில் ஸ்தலஸ்தாபனத் தலைவர்கள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், விவசாயப் பொதுமக்கள் ஆகியவர்களைக் கொண்டு சிறப்பாக மரியாதை வாரம் நடத்தி மின்பொறியாளர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் வழி ஏற்படுத்தவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல கிராமங்களில் பல பகுதிகளில் மின் இணைப்புக்கம்பிகள் நைந்து உள்ளன. அதனால் மின்சார சேதாரமும், மழை காற்று காலங்களில் விளக்குகள் அணைந்து பல சேதாரமும், இன்னல்களும் ஏற்படுகின்றன. ஆகவே மின்சாரக் கம்பிகள் இழுத்தால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவை மாற்றப்பட வேண்டும் என்ற விதியை வைத்து மாற்றவேண்டும். அல்லது நைந்துபோன இடங்களிலாவது உடனடியாக மாற்ற ஏற்பாடு செய்யவேண்டும். பழுதுபட்ட கம்பங்களையும் உடனடியாக அகற்றி புதுக் கம்பங்களை வைக்கவேண்டும். சிமிண்ட் காங்க்ரிட் கம்பங்களை வைத்தால் நலமாக இருக்கும்.

புதியதாக சப் ஸ்டேஷன்களுக்கு இடம் வாங்கும்போது கூடுமான வரையில் கொஞ்சம் அதிகமான இடத்தைப் பெற்று அதில் எம்.ஓ. அலுவலகம், எல்.ஐ. குடியிருப்பு வசதிக்கும் வழிவகை செய்யக் கோருகிறேன்.

[திரு. வி. டி. அண்ணாமலை.] [1969 ஆகஸ்ட் 18

கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். மின்சார இலாக்கா அதிகாரிகளும், அரசாங்க அமைச்சர்களும் தயவு செய்து கோபித்துக்கொள்ளக் கூடாது. இன்னமும் மின்சார இலாக்காவில் சிவப்புநாடா முறை இருந்து வருகிறது. சாதாரணமாக ஒரு விவசாயிக்கு மின் தொடர்பு கொடுக்கும் முடிவான அதிகாரம் ஏ.இ.யிடம் முடிய வழிவகை செய்யவேண்டும். இன்றைக்கு ஒரு விவசாயி மின் இணைப்புக் கொடுக்கவேண்டும் என்று கோரினால் ஏ.இ., டி.இ.-க்கு அனுப்புவது. டி.இ., எஸ்.இ.-க்கு அனுப்புவது— முடிவில் மின் இணைப்புக் கொடுக்கப்படுவதற்கு மிகுந்த காலதாமதமாகிறது. உடனடியாக ஏ.இ. கொடுத்தால் என்ன ? அவரும் ஒரு என்ஜினியர் தான். அவர் கொடுத்துவிட்டு—மாதாமாதம் இவ்வளவு பம்பு செட்டுகளுக்குக் கொடுத்திருப்பதாக மேலே புள்ளிவிவரம் அனுப்பினால் அவற்றுக்குத்தகுந்தாற்போல அவர்கள் டிரான்ஸ்பார்மர் அமைக்க வழியேற்படும். இதன்மூலம் டி.இ., எஸ்.இ. வேலைப் பளுவும் குறையும். மற்ற எல்லா மின் தொடர்புகளுக்கும் இல்லாவிட்டாலும் விவசாயிகளுக்கு—உணவு பெருக்கத்துக்கு உபயோகிக்கும் பம்பு செட்டுகளுக்காகிலும் அவசியம் இந்த ஏற்பாட்டைக் கொண்டுவர வேண்டுகிறேன்.

விவசாயிகளுக்கு மின் தொடர்பு அளிப்பதன்மூலம் 9 கோடி நஷ்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையில் கண்டிருக்கிறது. எந்தக் காரணங்களால் ஏற்பட்ட நஷ்டம் இது என்று விளக்கக் கோருகிறேன். உண்மையில் அதைக் கேட்கிறபோது விவசாயி என்ற முறையில் நான் வருந்துகிறேன்.

அடுத்தாற்போல மின்சார வாரியத்தின் எல்லா அறிக்கையும் கிடைத்திருக்கிறது. உள்ளபடி மகிழ்ச்சி. ஆனால் ஒன்று கொடுக்கவில்லை. லாப நஷ்ட கணக்கு, பாலன்ஷீட் கொடுக்கப்படவில்லை. தயவு செய்து அடுத்த ஆண்டாவது வரவு செலவு லாப நஷ்ட பாலன்ஷீட் கணக்கு கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தாற்போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் உரையில் 3,452 கிராமங்களுக்கு மின் தொடர்பு ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஆதித்திராவிடர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனிகள் 173-க்கே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட ஏழை மக்களது பகுதிகள் புறக்கணிக்கப்படுவது நியாயமல்ல. எங்கள் தொகுதியில் செய்யாறு தாலுக்காவில் சாதி இந்துக்கள் வசிக்கும் பகுதியில் மின்தொடர்பும், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனியில் மின் தொடர்பும் இல்லை. எனவே இனியாகிலும் கிராமங்களுக்கு மின் விஸ்தரிப்பு அளிக்கிறபோது தாழ்த்தப்பட்ட, ஆதித்திராவிட மக்கள் வசிக்கும் காலனிக்கும் ஒருசேர மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கோருகிறேன். காலனிகளுக்கு முதலில் மின் இணைப்புக் கொடுத்துவிட்டுத்தான் ஊர்களுக்கு இழுக்கவேண்டுமென்று

1969 ஆகஸ்ட் 18] [திரு. வி. டி. அண்ணாமலை]

உத்தரவிடுவோமானால் ஆதித்திராவிட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்கள் எல்லாம் சீக்கிரத்தில் மின்வசதி பெறும்.

கடைசியாக ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நமது தமிழகத்தில் கடந்த இரண்டாண்டாக பருவ மழை பொய்த்துப்போய் விட்டது. இந்த நேரத்தில் மின்சாரக் கட்டணம் கேட்கிறார்கள். விவசாயிகள் நிலத்தை உழுதார்கள், விதைத்தார்கள். மோட்டார் போட்டார்கள். ஆனால் தண்ணீர் இல்லை. பயிர்கள் நாசமாகி நஷ்டமடைந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தை வஜா செய்து கொடுப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும். வாரியமே ஏற்றுக்கொண்டாலும் சரி, அல்லது அரசாங்கம் மானியமாக அளித்தாலும் சரி, ஏதாவது ஒரு முறையில் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை வஜா செய்து கொடுப்பது மிகமிக அவசியம் என்று கூறி எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. ரெத்தின தேவர் : மாற்றுத்தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டுக்குள்ளாக நமது தமிழகத்தில் உள்ள கிராமாந்திரப் பகுதிகள் முழுவதற்கும் மின் இணைப்புக் கொடுத்துவிடுவோம் என்று தமிழக அரசு கூறி இருக்கிறது. உண்மையிலேயே அந்த அறிக்கையைப் பார்க்கும்போழுது 1967-68, 1968–69–ஆம் ஆண்டுகளுக்குரிய புள்ளிவிவரக் கணக்குகளைப் பார்க்கும்பொழுது முடிந்துவிடும் என்ற எண்ணம் இருக்கிறது. அதை நல்ல முறையிலே, தீவிரப்படுத்தும் முறையிலே அரசு செயல்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்த அரசு நல்ல முறையிலே எந்த அளவுக்குத் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த பட்சம் கட்டணம் விதிக்கிறதோ அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் முறையிலே குறைந்த பட்சக் கட்டணம் வசூலிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதோடு விவசாயிகளுக்குப் பம்புசெட்டுகள் போடுவதற்கு மின் இணைப்பு வேண்டுமென்று மனுக் கொடுக்கின்ற நேரத்திலே உடனடியாக எந்தவிதமான அலைச்சலையும் உண்டுபண்ணாது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே சாதாரண விவசாயிகள் எப்படி அதிகாரிகளிடம் மனுச் செய்வது என்றுகூட தெரியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கிறபோது, அங்கே போ, இங்கே போ என்று சொல்கிறார்கள். அந்த நிலைமை ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளும்படி அரசு ஆணையிடவேண்டும். பாங்கின்மூலமாக விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். 5 ஆயிரம் ரூபாய் விவசாயி கடன் வாங்கும்பொழுது அந்த லோன் சாங்ஷன் செய்யப்பட்ட உடனே மின் இணைப்புக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் ஆறு மாத காலமாக சில கிராமங்களிலே மின் இணைப்

புக் கொடுக்காத நிலைமைதான் இருந்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதியில் கீழ்த் தூவல் கிராமத்தில் பம்புசெட்டுக்காக கடன் வாங்கி ஆறு மாதங்கள் ஆகிவிட்ட பிறகும்கூட இன்னும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை. கேட்டால் மீட்டர் இல்லை, டிரான்ஸ்பார்மர் இல்லை என்று சொல்கிறார்கள். ஈசன் கம்பெனியில் டிரான்ஸ்பார்மர் எடுப்பதற்கு ஆள் இல்லை என்று சொல்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அதிக நிதியை ஒதுக்கி வேண்டிய உதவியை அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக லோன் போடும்பொழுது பங்குத் தொகைகள் என்ற முறையில் 100க்கு 5 என்று பிடித்துக்கொள்கிறார்கள். அதோடு மொத்தத்திலே 5 சத விகிதம் என்ற அளவுக்கு சிறு சேமிப்பு என்ற முறையிலேயும் பிடித்துவிடுகிறார்கள். விவசாயி 5 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினால் அவனிடமிருந்து 500 சொச்சம் ரூபாய் பிடித்துவிடுவதாகச் சொல்கிறார்கள். ஐந்தாயிரம் வாங்கக் கூடிய நிலைமையில் 500 பிடித்துக்கொண்டால் அந்த வேலையைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. சிறு சேமிப்பு, பங்குத் தொகை இவற்றை அதிகமாகப் பிடித்துக்கொள்வது என்ற முறையினைப் பரிசீலனை செய்து பிற்பட்ட விவசாயிகளுக்கு அந்த நிலைமை ஏற்படாத வண்ணம் செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உடனடியாக மின் இணைப்பு வேண்டுமென்று மனுச்செய்யும் காலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகிச் சில குறைபாடுகளைச் சொல்லவேண்டுமென்றால், முடியாத நிலைமை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலே பரமக்குடியிலே எஸ்.இ. அலுவலகம் இருக்கிறது. அந்த எஸ்.இ. ஸ்திரமான நிலையிலே அங்கே தங்குவது கிடையாது. ஏனென்றால் மதுரையிலே ஒரு பகுதி, பரமக்குடியிலே ஒரு பகுதி என்று இருப்பதால், நாங்கள் எஸ். இ-யிடம் சில குறைபாடுகளைச் சொல்வதற்குப் போனால் அவர் மதுரையிலே தங்கிவிடுகிறார் என்று கூறிவிடுகிறார்கள். அந்த நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளும் வகையில் அவர் அங்கேயே தலைமை அலுவலகத்திலேயே தங்கி மின் இணைப்பு விஷயத்திலே தீவிர அக்கறை காட்டச் செய்ய வேண்டும். தமிழக அரசுக்கு இதனால் அதிகச் செலவு வந்தாலும் அதிக அளவில் சலுகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரவலாக அரிசன மக்கள், பின்தங்கிய பகுதியினர் அதிகமாக வாழக்கூடிய பகுதி என்னுடைய பகுதி. தமிழகத்தில் அரிசன மக்கள் எந்த விதமான உதவியும் பெறவில்லை என்ற பேச்சு வார்த்தை பரவலாக இருக்கிறது. அவர்களுக்கு உண்மையிலேயே நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். வறட்சியைப் பொறுத்தவரையில் இப்பொழுது கிணற்றிலே தண்ணீரே கிடையாது. வறட்சி நிவாரண வேலைகளாக, கிணறு ஆழப்படுத்த வேண்டும். ஊருணியை ஆழப்படுத்த வேண்டும்; குடிமராமத்து வேலைகளைச் செய்யவேண்டுமென்ற முறையிலே பணம் ஒதுக்கப்பட்டது. அவர்கள் அப்படிச் சொல்கிற

காலத்திலே, ஆடிப்பருவ மழை வந்துவிடும் தண்ணீர் வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் ஆடிக்காற்று அதிகமாக வந்ததால் கிணற்றிலே நாளுக்குநாள் தண்ணீர் வற்றிக்கொண்டே வருகிறது. அன்றாடம் கிராமாந்திரங்களிலே இருக்கின்ற கிணறுகளிலே இப்பொழுது தண்ணீரே கிடையாது, குடி தண்ணீர் இல்லை கிணறுகளை ஆழபபடுத்த வேண்டுமென்ற நிலைமை இருந்து வருகிறது. ஏற்கனவே சில தொகைகளை ஒதுக்கினார்கள். சில வேலைகள் முடிந்துவிட்டன. இனிமேல் வறட்சியின் காரணமாக மழை இல்லாத காரணத்தாலே கிணறு ஆழப்படுத்தும் வேலையைத் தீவிரப்படுத்தினால் தான் நல்லது. ஏனென்றால் இனிமேல் புரட்டாசி-ஐப்பசியில் தான் மழை இருக்கலாம், விவசாயிகளுக்கு உதவி செய்யமுடியும். எனவே அது வரையில் விவசாயிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக முதுகுளத்தூர், கமுதி, கடலாடிப் பகுதிகளில் எந்தவிதமான நல்ல காரியமும் செய்யப்பட்டது கிடையாது. இது அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். வறட்சி நிவாரண வேலையின் காரணமாகத்தான் இப்பொழுது இணைப்புச் சாலைகள் போடுகிறார்கள். இதற்கு முன்னாலே சாலைகளைப் போடவே இல்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து மீண்டும் 3 கோடி ரூபாய் தமிழகத்திற்கு ஒதுக்கியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இருபது ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட அந்த முதுகுளத்தூர் பகுதி வறட்சியான பகுதி என்ற காரணத்தாலே, அந்தப் பகுதிக்கு மீண்டும் அதிகமாக தொகை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் மின் இணைப்புப் பெறுகின்ற பிரச்சனையை இன்னும் அதிகமான அக்கறையுடன் கவனிக்கவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதி ரொம்ப வறண்ட பகுதி, இப்பொழுதுதான் கிணறுகள் வெட்டி முன்னேற்றம் ஏற்படக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டுமென்ற நிலைமை இப்பொழுதுதான் அங்கு உருவாகியிருக்கிறது. எனவே தமிழக அரசு விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாச் சலுகைகளையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மின்சார வாரிய அறிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு இல. பலராமன் : தலைவர் அவர்களே, மின்சாரம் மனிதனுடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்தது. அது நகர்ப்புறத்தில் அன்றாடம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கிராமப் பகுதி மக்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் அது உதவிசெய்யக்கூடிய அளவிலே உதவியோ ஒத்தாசையோ அரசாங்கம் செய்யவில்லை என்று கூறவிரும்புகிறேன். இப்பொழுது ஆளுங்கட்சியாக இருக்கின்றவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது பல திட்டங்களைப் பற்றிக் கூறினார்கள். பெருவாரியாக ஹோகனெக்கல் திட்டம் பற்றியும், அனல் மின்சாரம் ஏற்படுத்துவது பற்றியும் கூறினார்கள்.

[திரு. இல. பலராமன்] [1969 ஆகஸ்ட் 18

ஆனால், இன்றைக்கு அவர்களுடைய திட்டம் என்ன என்பதை அமைச்சர் அவர்களுடைய பேச்சிலே ஒன்றையும் காணோம். அவர்கள் ஏதோ சமைத்ததை இன்றைக்குப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களாக எதையும் செய்யவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கிராமப்புறங்களிலே விவசாயிகள் இன்னல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் மின்சாரத்தை வைத்துத்தான் வாழ்க்கையையும், பயிரையும் வளர்க்கக்கூடிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் மனுக் கொடுத்தால் பல மாதங்கள், பல ஆண்டுகள் அப்படியே இருக்கிறது. அந்த நிலை இந்த வாரியத்தின் தலைவருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தெரியும். இந்த இலாகாவில் பல பிரிவுகள் இருக்கின்றன. கிராமப்பகுதிகளில் ஓ. அண்டு எம். கன்ஸ்ட்ரக்ஷன் என்ற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒருவன் மனுவைக் கொடுக்கும்போது எந்தப் பிரிவுக்கு எப்போது மனுவைக் கொடுப்பது என்று புரிவதில்லை. இந்தக் குறையை நீக்க வாரியம் இரண்டு பிரிவுகளுக்கும் தனித் தனி நபர்களை நியமித்து கொடுக்கப்பட்ட மனு எங்கு சென்றிருக்கிறது, எவ்வளவு காலத்தில் கிடைக்கும் என்ற முறையில் ஒரு வரையறை வகுக்க வேண்டும். ஒரு மனு கொடுத்தால் இவ்வளவு காலத்திற்குள் மின் இணைப்பு கிடைக்கும் என்ற நிலை ஏற்படவேண்டும். இந்த முறை இல்லையென்றால் ஊழல்தான் மலியும். வீடுகளுக்கு கனெக்‌ஷன் கொடுக்கும்போது 15 நாட்களுக்குள் கனெக்‌ஷன் கொடுக்க வேண்டுமென்ற விதி இருந்தது. அதைத் தற்போது கடைப் பிடிப்பதில்லை. அதைக் கடைப் பிடிக்கும்படி வாரியம் உத்தரவிட வேண்டும்.

எஸ்.இ. மட்டத்தில் ஒரு எஸ்டிமேட் சாங்‌ஷன் செய்வதற்கு 20,000-ல் இருந்து 50,000 வரை அங்கீகரித்திருக்கிறார்கள். அது போதாது. காலதாமதத்தை தவிர்க்க இந்த லிமிட்டை அதிகப்படுத்த வேண்டும். டி.இ.-க்கு 10,000-ல் இருந்து 20,000 வரையும், ஏ.இ.-க்கு ஆயிரத்தில் இருந்து பத்தாயிரம் வரையும் அதிகார வரம்பு இருக்கிறது. இந்த அதிகாரத்தை எல்லாம் அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் மின்வசதி கிடைக்க வழி வகுக்க வேண்டும்; மின்சார வாரியத் தலைவர் அவர்களும், அரசாங்கமும் இதை நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும்.

எங்கள் மாவட்டத்திலே விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது ஒரு பொருள் இருந்தால் இன்னொரு பொருள் இருப்பதில்லை. கம்பியை ஒரு விவசாயிக்குக் கொடுக்கிறார்கள், கம்பத்தை இன்னொரு விவசாயிக்குக் கொடுக்கிறார்கள், கம்பியையும் கம்பத்தையும் பிரித்துக் கொடுத்து விட்டு இரண்டுபேருக்கும் கனெக்‌ஷன் கிடைக்காத நிலைதான் இருக்கிறது. மீட்டர் கிடைக்காத நிலையும் இருக்கிறது. விவசாயிகள், மீட்டர்களை வெளி மார்க்கெட்டில் வாங்கிப் பொருத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையை நீக்குவதற்குத் துரிதமாக

1969 ஆகஸ்ட் 18] [திரு. இல. பலராமன்]

நடவடிக்கை எடுக்க வேண்டும். மீட்டர்களைப் பொறுத்தவரை சிங்கிள் பேஸ் மீட்டர், த்ரீ பேஸ் மீட்டர் என்று இருக்கிறது. சிங்கிள் பேஸ் மீட்டருக்கு மாத வாடகை 75 பைசா; த்ரீ பேஸ் மீட்டருக்கு மாத வாடகை 2 ரூபாய். இவ்வாறு ஒருசில விவசாயிகளுக்குச் சலுகையாகவும், ஒருசிலருக்கு அதிகப்படியான கட்டணமுமாக விதிக்கப்படுவதைப் போக்க வாரியம் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மின்சார வாரியத்திலிருந்து வேளாண்மை பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் பெறுவதற்கான விண்ணப்ப பாரத்தில் 16-வது பிரிவில் 'விண்ணப்பம் கொடுத்து விட்டதாலே மின்விசை நிச்சயம் கிடைத்து விடும் என்று சொல்லுவதற்கில்லை என்பதைக் கவனித்தீர்களா' என்று இருக்கிறது. இதைப் பார்க்கும்போது மின் இணைப்புக் கிடைக்காது என்ற முடிவுக்குத்தான் விவசாயிகள் வர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்தக் கேள்வி நியாயமா? இருக்க வேண்டியதுதானா? விவசாய உற்பத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இந்த வாரியம் செயல்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதிக் கொண்டிருக்கும் நிலையில் இந்தக் கேள்வி அவசியந்தானா? இதை நீக்கியாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மின்சார வாரியப் பிரிவுகளில் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். ஓ அண்டு எம் பிரிவில் 3 டிரான்ஸ்பார்மர்களுக்கு ஒரு ஹெல்பரும், ஐந்து டிரான்ஸ்பார்மர்களுக்கு லைன்மேன் ஒருவரும், உதவியாளர் ஒருவரும் என்ற விகிதத்தில் இருக்கிறார்கள். சில சமயம் 30 டிரான்ஸ்பார்மர்கள் வரைகூட இவர்கள் கையாள வேண்டிய நிலை ஏற்படுகிறது. கண்டமங்கலம் சப்-ஸ்டேஷனில் 45 டிரான்ஸ்பார்மர்கள் உள்ள இடத்தில் ஒரு எஸ். ஓ. இருந்து கண்காணித்து வரக்கூடிய நிலை இருக்கிறது. இதனால் ஃப்யூஸ் போய்விட்டால் கூட உடனடியாக விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியாத நிலை இருக்கிறது. விவசாயிகளுக்குக் காலத்தில் உதவி செய்யாவிட்டால் பயன் இல்லை. எஸ்.ஓ.-வுக்கு கனெக்‌ஷன் வேண்டுமென்று ஏராளமான மனுக்கள் வருகின்றன. அவற்றைப் பரிசீலிப்பதற்கு உதவியாளராக ஒருவரை நியமித்தால் நல்லதாக இருக்கும். அவ்வாறு உதவியாளராக 3 பேரை நியமிக்கும்போது புதிதாகச் செய்யக்கூடிய வேலைகளையும் ஒப்படைக்கிறார்கள். மூன்று ஆட்களை வைத்துக் கொண்டு ஒரு கம்பத்தை நடுவது என்பது முடியாத நிலை. பத்துப் பதினைந்து பேராவது இருக்கவேண்டும். அதற்காக அவர் அன்றாடம் கூலி ஆட்களை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் தாங்களே கம்பம் ஏற்றிச் செல்வது முதல் குழி தோண்டும் காரியம் வரை செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் விவசாய மக்கள் டிப்பார்ட்மெண்டைக் குறைகூறும் நிலை இருக்கிறது. ஆகவே, ஓ அண்டு எம் அலுவலகங்களுக்கு அதிகமான உதவியாளர்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வேலூர் எலக்டரிசிடி சிஸ்டம் என்று தனிக் கம்பெனியாரிடத்தில் இந்தப் பொறுப்பு இருக்கிறது. சூப்பர்வைசர்கள், உதவியாளர்களுக்கு வெகிகிள் அலவன்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் டிரான்ஸ்பார்மர் பிரேக்டவுன் என்றால் அவர்கள் வந்து கவனிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் வராவிட்டால் கிராமம் பூராவும் இருளில் மூழ்கிக் கிடக்கும். விவசாயிகள் காலையில் தாங்கள் செய்யக்கூடிய வேலைகளுக்கும் தடங்கல் ஏற்படுகிறது. அதைப் போக்க அவர்களுக்கு வெகிகிள் அலவன்ஸ் அல்லது மற்றவித ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மழைக் காலங்களில் பயன்படுத்திக் கொள்ள ரெயின் கோட் ஒன்றும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீட்டர் ரீடிங் எடுப்பதில் குறைபாடுகள் இருக்கின்றன. ஓ அண்டு எம்.-இல் அந்தப் பணியில் பெரும்பாலும் படிக்காதவர்கள் தான் இருக்கிறார்கள். மூன்றாம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள் கிடையாது. இதனால் விவசாயிகளுக்கு ஒரு முறை கட்டணத் தொகை அதிகமாகவும், ஒரு முறை குறைவாகவும் இருக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. படித்தவர்களாகப் போட்டால் விவசாயிகளுக்குப் பளு ஏற்படாது, வாரியத்திற்கும் நஷ்டம் ஏற்படாது. வாரியத்திலிருந்து உப பொருள்களை அதிக அளவுக்குக் கொடுத்து மின் இணைப்புக் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். அதைப் பற்றி ஏற்கனவே தெரிவித்திருந்தும் இன்றுவரை தக்க பலன் கிடைத்திருக்கிறது என்று சொல்ல முடியாத நிலைதான் இருக்கிறது. டிரான்ஸ்பார்மர்களுக்கு அதிக லோடு கொடுக்கவேண்டுமென்று வாரியத்திலிருந்து அறிவுறை வருகிறதே தவிர, புதிய டிரான்ஸ்பார்மர்கள் வந்ததாகத் தெரியவில்லை. நாலு லட்சம் மின்விசையேற்றங்களுக்கு மின் வசதி இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். மேலும் புதிய கிணறுகளை வெட்டிக் கொண்டிருக்கும் நிலையில் மேலும் திட்டமிட வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, போதிய மின் கருவிகளை வெளி மாநிலங்களிலிருந்து வாங்கியாவது வேண்டிய அளவுக்கு மின் இணைப்புக் கொடுக்குங் காரியத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். மின் இணைப்பு கொடுப்
பிற்பகல் 1-00 பதற்கில்லை என்று சொல்லும் நிலை இல்லை என்ற அளவுக்குத் திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்வீஸ் கொடுப்பதில் காலதாமதம் இருக்கக்கூடாது என்று மின்சார வாரியத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியாகிய கண்ணமங்கலம் பகுதியில் ரெவின்யூ யூனிட் ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்று கடந்த ஆண்டே கேட்டிருந்தேன். ஆகவே அதைப் பரிசீலித்து கண்ணமங்கலம் பகுதியில் ஒரு ரெவின்யூ யூனிட் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை நிவர்த்திப்பார்கள் என்று நம்பி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கே. பி. எஸ். மணி:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1969-70-ம் ஆண்டு மின்சார வாரிய நிதி அறிக்கை மீது

நான் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட எல்லா அங்கத்தினர்களுமே வாரியத்தின் இந்த அறிக்கையை வரவேற்ற பிறகு பெரும் குறைகளை ஒருவர் தவறாமல் இவ்வளவு தேவை இருக்கிறது, இவ்வளவு தேவை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகக் கவனிக்கும்போது செய்தது குறைவாகவும் தேவை அதிகமாகவும் இருக்கிறது என்று கூறப்படுகிறதே தவிர, இவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது என்று பெருமையோடு இருக்க முடியவில்லை. எங்கள் தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், அங்கு அமைச்சர்கள் யார் வந்தாலும் சரி தஞ்சை ஜில்லா நன்றாக வாழவேண்டும். அவர்கள்தான் இந்த நாட்டிற்குத் தேவையான உணவைக் கொடுக்கவேண்டும் என்று எங்களுக்கு புகழ்மாலை சூட்டி வருகிறார்கள். இந்தப் புகழ்மாலையோடு நாங்கள் கீழே போய்க் கொண்டிருக்கிறோமே தவிர, அந்தப் புகழ்மாலைகளால் தஞ்சை ஜில்லா மக்கள் மேலுக்கு வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் தஞ்சை ஜில்லாவிற்கு நஷ்டம் ஏற்படுகிற அளவிற்குத் தான், அங்குள்ள மக்களுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடிய முறையில்தான் இருக்கிறது.

மின்சார வாரியத்தை எடுத்துக் கொண்டால், பம்ப் செட்கள் போடுங்கள் என்று சொல்லியாகிவிட்டது. மாயவரம் டிவிஷனில் மட்டும் பம்ப் செட்கள் வாங்கப்பட்டு, 300-க்கு மேற்பட்ட பம்ப் செட்கள் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. கொடுத்த இடங்களில் எப்படி இருக்கிறது என்றால் கடந்த வாரத்தில் சீர்காழியில் 13 யூனிட்ஸ் தீய்ந்து போய் விட்டது. காரணம் லோ வாட்ஸ். அதுபற்றியெல்லாம் விவசாயிகளுக்கு ஒன்றும் தெரியாது, மாற்றுதலாக த்ரீஃபேஸ் மோட்டார்கள் கொடுத்திருக்கிறார்கள். அது தானாகவே குறைத்துக் கொள்கிறது. இதுபற்றியெல்லாம் விவசாயிகளுக்கு தெரிவதில்லை. ஆகவே, அவர்களுக்கு தொல்லை ஏற்படுகிறது. மூன்று தடவை ஒரு மோட்டார் தீய்ந்துவிட்டால் பம்ப் செட்டின் பூராக் கிரயமும் ரீ வைண்டிங் செய்வதில் சரியாகிவிடும். இந்தக் கஷ்டங்களுக்கு அடிப்படைக் காரணம் சேஷசாயி பிரதர்ஸ், கும்பகோணம், நாகப்பட்டினம் போன்ற தனியார் துறை நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டதுதான். அரசாங்கம் எடுத்துக்கொண்டதால், இப்போது எங்கள் நிலைமை வௌவாலின் நிலைமைதான். முன்பு குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 30 என்றிருந்தது. இப்போது சர்க்காரால் விஸ்தரிக்கப்பட்ட இடங்களில் குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 80 என்றிருக்கிறது. இதுபற்றி கடந்த இரண்டு வருடங்களாக எடுத்துச் சொல்லியும் கூட இது கோர்ட் விவகாரமாக இருக்கிறது, அது முடிந்தவுடன் தான் ஏதாவது வழி செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாங்கள் அவர்களுக்கு எழுதிக் கேட்டால் சர்க்காரை எங்களுக்கு கடன் கொடுக்கச் சொல்லுங்கள், நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்டதொரு சிக்கலான பிரச்சினையில் தஞ்சை ஜில்லா மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதைத் தீர்ப்பதற்கு சர்க்கார் தாற்காலிகமாகவாவது ஒரு ஸ்பெஷல் ஸ்கீமையாவது தஞ்சை ஜில்லாவிற்கு அமைத்துக் கொடுத்தால், விசேஷமாக இருக்கும் என்பது எங்கள் எல்லோருடைய எண்ணமுமாகும். எதிர்பாராத முறையில் 37,500 க்யூசெக்ஸ் மேட்டூரிலிருந்து திறந்து விடப்பட்டிருக்கிறது. இதுவரையில் அவ்வளவு அதிகப்படி தண்ணீர் திறந்து விடப்பட்டதில்லை. இப்போது அதிகப்படியான நிலங்கள் சாகுபடிக்கு வந்திருக்கிறது. ஆகவே விடப்பட்டிருக்கும் தண்ணீர் அதிகமென்று ஒத்துக் கொள்ளமுடியாது. தண்ணீரை சிக்கனமாக செலவழித்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் ஆரம்ப காலத்தில் நாற்றுங் காலுக்காக பம்ப் செட்சை உபயோகப்படுத்த விடவேண்டும். ஆனால் அந்தக் காலத்தில் அப்படிக் கொடுப்பதில்லை. காலம் தவறி விட்டால் நாங்கள் சாகுபடி செய்யமுடியாது. எங்கள் தாலுகாவில் கிட்டத்தட்ட இந்த ஆண்டு மூவாயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி வீணாகிவிட்டது. காரணம் டெயில் என்டாக இருப்பதால் தண்ணீர் முறையாக வருவதில்லை. கனெக்ஷன் கிடைக்காததால் தண்ணீர் வந்தவுடன் நடவும் முடியாமல் நாற்றங்காலை செயல்படுத்த முடியவில்லை. ஆகவே தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் மின்சார இணைப்புத் திட்டத்தை ஒரு ஸ்பெஷல் ஸ்கீமாக அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். இந்தத் தீண்டாமை மின்சாரத்திலும் கூட இருக்கிறது. மின்சாரத்தை மனிதன் தொட்டால் செத்துப் போய் விடுவான். பஞ்சாயத்துக்களில், கிராமங்களில் போஸ்ட்டுகளை இழுத்துக் கொண்டே வருகிறார்கள், ஆனால் ஹரிஜனக் காலனி வந்தவுடன் அது டக்கென்று நின்று விடுகிறது. பிறகு போஸ்ட், பல்ப், கம்பம் ஒன்றும் கிடையாது என்ற நிலை ஏற்படுகிறது. இது ஒரு வெட்கக்கேடான சமாசாரம். இத்துறை அமைச்சர் அவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவர் தான். இந்த வாரியத்தின் தலைமை அதிகாரியும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவர் தான்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: கடந்த இரண்டு வருடக் கணக்கைப் பார்த்தால் இந்த ஆண்டு ஹரிஜனக் கிராமங்களுக்கு கொடுத்திருக்கிற அளவு எந்த வருடமும் கொடுக்கப்படவில்லை. இன்னும், 1971-ம் ஆண்டுக்குள்ளாக எங்கும் மின்சார இணைப்பு கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கும் அறிவிப்பின்படி முதல் சலுகையாக ஹரிஜனக் கிராமங்கள் தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். (பாராட்டொலி)

திரு. கே. பி. எஸ். மணி: எனது எட்டு, பத்து வருட சட்டமன்ற அனுபவத்தில் இப்படிப்பட்ட வாக்குறுதியை முதன் முதலாக அமைச்சர் அவர்கள் எனக்குக் கொடுத்ததற்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன். அமைச்சர் அவர்களின் வாக்குறுதி உண்மையிலேயே பெருமைப்படத் தக்கதாகத்தான் இருக்கிறது. நான் எந்த அமைச்சரையும் தனிப்பட்ட முறையில் குறை கூறத் தயாராயில்லை. இவர்களின் உத்தரவுகளை

மேற்கொண்டு செயல்படுத்துகிற நிர்வாகம் இருக்கிறதே அங்குள்ள ஒரு சிலர் வேண்டுமென்றே நிர்வாகத்திற்கு இழுக்கை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் விழுந்து எல்லாம் விஷமாவதைப் போன்று, செய்யும் தவறுகளினால் இப்படிப்பட்ட முற்போக்கான வேலைகள் தடைபடுகின்றன. அடுத்து நிர்வாகத்தில் வேலை செய்கிற அதிகாரிகளின் சம்பள விகிதாசாரங்கள் உயர்த்தப்படுகின்றன. அப்படி சம்பளங்கள் உயர்த்தப்படும்போது ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு அதிகாரிக்கு மேலும் ரூ. 150 அல்லது ரூ. 200 உயர்த்தப்படுகின்றது. ஆனால் ரூ. 100 சம்பளம் வாங்கும் ஒரு ஊழியருக்கு ரூ. 2 அல்லது 3 தான் உயர்த்தப்படுகிறது. இது ப்ரப்போர்ஷனேட்டாக உயர்த்தப்படுகிறது என்று சொல்லலாம். ஒரு சர்க்கார் ஊழியர் குறைந்த பட்சம் எவ்வளவு சம்பளம் வாங்கினால், தமது குடும்பத்தை தற்காலத்தில் நடத்த முடியும் என்று பார்த்து குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டும். வேலைகள் தடைபடுகின்றன என்றால், ஒரு முறையான வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்பதால் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் கடமைகளை சரியாகச் செய்ய முடிவதில்லை. என்ஜினியர்கள் பற்றி திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம். அதே நேரத்திலே, மலைச்சாரல்களிலே வேலை செய்யும் ஆயிரக்கணக்கானவர்கள் சிறைச்சாலைகளிலே இருப்பதுபோன்றிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் பள்ளிக் கூடம் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லை. ஒரே ஒரு பஸ்தான் இருக்கிறது. ஒருநாளைக்கு ஒரு முறைதான் வருகிறது. அவசரமாகத் தகவல் ஏதேனும் வந்தால் ஊருக்குச் செல்லவேண்டுமென்றால் வசதிகள் இல்லை. ஆகவே, அவர்கள் தண்டனை பெற்றவர்களைப் போல இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வழி செய்ய வேண்டும். அவர்களுடைய போக்குவரத்துக்கும், படிப்புக்கும் வழி செய்ய வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மேல், அதாவது ஒரு ஆண்டு, அல்லது இரண்டாண்டுகளுக்கு மேல் அவர்கள் அங்கு வேலை செய்யக் கூடாது என்ற விதிமுறை இருக்குமேயானால் உண்மையிலேயே அவர்கள் நல்லமுறையில் பணியாற்ற வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* **திரு. மூ. மாரிமுத்து:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் 1969-70-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அமைச்சரவர்கள் 1967–68-இல் வாரியத்தில் 51,620 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியிருப்பதையும், 1968–69-ல் 57,756 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவரது அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை நான் மிகவும் பாராட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில், மின் இணைப்புக் கொடுக்கும்பொழுது சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாகக் கிராமங்களில் உள்ள விவசாயிகள் மின் இணைப்பு கோரி

மனுக்கள் அனுப்பி குறைந்தது இரண்டு வருட காலமாகிறது. இன்னும் கிடைக்கவில்லை. இந்தக் குறைபாடுகளை நீக்கி அதற்கு ஒரு வரைமுறை வைக்க வேண்டும். ஒரு விவசாயி மனுச் செய்தால், மின்சாரம் இருக்குமானால் உடனடியாக, குறைந்தபட்சம் 1 மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளே மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். கீழ் மட்டத்திலேயுள்ள அதிகாரிகள், அதாவது எஸ். ஓ., ஜூனியர் என்ஜினியர் போன்றவர்களுக்கு அதற்காகத் தக்க அறிவுரை வழங்கப்பட வேண்டும். அவர்கள் மனு வந்தால் வரிசைப்படி பரிசிலிப்பது இல்லை. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் போடுவதாகப் பொது மககள் குறை கூறுகிறார்கள். அந்த நிலையைப் போக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலமைச்சரவர்கள் தமிழ்நாடு முழுவதிலும் 71-ஆம் ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின் விஸ்தரிப்புக்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள். இதை மிகவும் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் குறைந்தது 21 கிராமங்களுக்கு மின் இணைப்பு இல்லாமல், 61, 62-ஆம் வருஷத்திலேயே மதிப்பீடுகள் செய்யப்பட்டு அவை இதுவரை பரிசிலிக்காமல் இருந்தன. 1967-68-க்குப் பின்னால் பலமுறை அரசாங்கத்திற்கு வலியுறுத்தியபின் 7, 8 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். மின்சாரத்துறையில் பணிபுரியும் அதிகாரிகள், பொறியாளர்கள் மிகவும் ஒத்துழைத்து என்னுடைய தொகுதியில் கடந்த இரண்டாண்டுக் காலமாக 7 கிராமங்களுக்கும், 350 விவசாயக் கிணறுகளுக்கும் மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சேவையைப் பாராட்டுகிறேன். மேலும், மீதமுள்ள கிராமங்களுக்கும் மின் விஸ்தரிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டுமென்று நான் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேபோல இரண்டாம் நிலைத் திட்டங்கள் 7-இல் 5 திட்டங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்னும், தொடர்ந்து இருக்கக்கூடிய இரண்டு திட்டங்களையும் அரசாங்கம் பரிசீலித்து உடனடியாக இரண்டாம் நிலைத் திட்டத்திலேயுள்ள கிராமங்களுக்கு மின் விஸ்தரிப்பு கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், இந்தத் துறை நல்ல முறையில் இயங்க ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்றாண்டு ஒரு சில உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆலோசனைக் குழுவினை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு மாவட்டம்தோறும் மாவட்ட மன்றங்கள் கூட்டப்படுகின்றன, அப்பொழுது உறுப்பினர்கள் தங்களுடைய குறைகளை, பரிந்துரைகளைச் செய்யலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. மாவட்ட மன்றங்களில் இதுபோன்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு அவகாசமும் நேரமும் கிடைப்பதில்லை. ஆகவே, குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஒருமுறையாவது,

அல்லது 3 மாதங்களுக்கு ஒருமுறையாவது மேல்நிலைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் போன்றவர்களை அழைத்து ஆலோசனைக்குழு நடத்தினால் சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களையும், தங்கள் பகுதிகளிலுள்ள குறைபாடுகளையும் சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆகவே, அந்தக் குழுவை ஏற்பாடு செய்து, குறைந்தபட்சம் 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவை அதைக்கூட்ட நல்ல பல காரியங்களைச் செய்ய அரசாங்கம் முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பல உறுப்பினர்கள், மின் இணைப்பு கொடுக்கும்பொழுது மின்சார இலாக்காவில் பணிபுரியக்கூடிய அதிகாரிகள், தளவாடங்கள், டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அதனை மீண்டும் நான் வலியுறுத்தி, இப்பொழுது ஒரு பகுதியில் 10 டிரான்ஸ்பார்மர்கள் அவசியம் என்றால், அந்தப் பகுதியிலுள்ள ஒரு டிரான்ஸ்பார்மரை இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டு மீதமுள்ள இடங்களுக்கும் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த டிரான்ஸ்பார்மர்களை மாற்றக் கூடிய நிலையில் பல சிக்கல்கள் இருந்தாலும், அவைகளை உடனடியாக, அவ்வப்போது விவசாயிகளுக்கு வேண்டிய மின் இணைப்பு கிடைக்கத்தக்க வழிகளைச் செய்ய வேண்டும்.

ஒரு திட்டத்தை அரசு அனுமதித்தவுடன் அதற்குரிய மதிப்பீடுகளை அதாவது எஸ்டிமேட்டுகளைக் கீழ் நிலையிலுள்ள இளநிலைப் பொறியாளர்கள் உடனுக்குடன் அனுப்ப வேண்டும். அதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, கீழ்நிலையிலேயுள்ள இளநிலைப் பொறியாளர்கள் விரைவில் எஸ்டிமேட்டுகளை அனுப்பக்கூடிய நிலையில் அவர்களுடைய வேலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று இங்கே நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. இராமச்சந்திரன் அவர்கள் கூட கூறியிருக்கிறார்கள், பொறியாளர்கள் விஷயத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகளை அரசாங்கம் உடனுக்குடன் ஆலோசித்து, அதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடிக் கொடுக்க வேண்டும். அதேபோல், கீழ்நிலையிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களான, லைன்மேன், வையர்மேன், ஃபோர்மேன் போன்றவர்களுக்கு அவ்வப்பொழுது ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் வேலை துரிதமாக நடக்கும். இந்தக் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, அவ்வப்பொழுது ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊதிய உயர்வு, மற்றும் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிலவிடங்களில் தற்காலிகமாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலை நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுடைய

வேலைகள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த தற்காலிக வேலையிலே அமர்ந்து வேலை செய்து வருகிறார்கள். தற்பொழுது நடக்கக்கூடிய அரசாங்கம் நல்ல பல காரியங்களைச் செய்து வந்திருக்கிறது. அதேபோல அவர்களை நிரந்தரப் பணியாளர்களாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக என்னுடைய தொகுதியிலுள்ள ஒருசில திட்டங்களை எடுத்துச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். 63-64-இல் அரசு அனுமதித்த ஊனத்தூர், புத்தூர், வரகூர், வெள்ளையூர், பகடப்பாடி, இராசாபாளையம், நல்லூர், திட்டச்சேரி ஆகிய முதல் நிலைத் திட்டங்களையும் 65-66-ல் அனுமதித்த செந்தளப்பட்டி, கூடமலை, கொண்டையம்பள்ளி ஆகிய இரண்டாம் நிலைத் திட்டங்களையும் விரைவில் எடுத்துச் செய்ய வேண்டும். இதற்காக அரசாங்கத்திற்கு வேண்டிய உத்தேச மதிப்பீடுகளும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இத் திட்டங்களைச் செய்து விவசாயிகளுக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுக்குமாறு இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், வேலையைத் துரிதப்படுத்த தலைவாசலில் ஒரு உதவிப் பொறியாளரையும், சாத்தப்படியிலும் ஆதகமூரிலும் இரண்டு இளநிலைப் பொறியாளர்களையும் நியமனம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் இப்பொழுது மின் இணைப்பும், மின் விஸ்தரிப்பும் அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த நிலையை ஆசோசித்து அந்தப் பகுதியில் ஒரு உதவிப் பொறியாளரையும், இரண்டு இளநிலைப் பொறியாளர்களையும் நியமிக்குமாறு வேண்டிவிரும்பி கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. வ. ஜார்ஜ் : மதிப்புமிக்க தலைவரவர்களே, நமது மின்சார வாரியத்தின் சாதனையைப்பற்றி நாம் பெருமையாகப் பேச வேண்டிய தேவை இல்லை. சுதந்திரத்திற்கு பின்னர் அது ஆற்றிய பணிகள் புரட்சிகரமானவை. கடந்த வருடம் அது நல்ல இலாபகரமான முறையில் இயங்கியதாகவும் சுமார் 129 இலட்சம் ரூபாய் உபரி கிட்டுவதற்கான அறிகுறிகள் அதில் காணப்படுவதாகவும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'இப்படி இருக்கிற இந்த மின்சார வாரியத்தை நிர்வகிப்பதற்கு பொது நிர்வாகியாக இருக்கிற ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி போதுமா? டெக்னிக்கல் குவாலிஃபைடு, சீப் இன்ஜினியர் போன்றவர்களைத் தான் வைக்க வேண்டும்' என்று அங்கத்தினர் ஒருவர் கேட்டார் மக்கள் ஆட்சியிலே 'நாம் டெக்னோகிரசி பார்க்கக் கூடாது. அப்படி வேண்டுமென்றால், அமைச்சர்கள்கூட டெக்னிக்கலி குவாலிபைடாக இருக்கவேண்டும். அமைச்சர்கூட ஒரு இன்ஜினியராக இருக்க வேண்டும். இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட டெக்னிக்கல் குவாலிஃபிகேஷன் உடையவர்களாக இருக்க வேண்டும். இன்ஜினியர்களாக இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நன்றாக இருக்கும் அவர் கருத்துப்படி. எனவே,

மக்களாட்சி முறையிலே டெக்னிக்கலி குவாலிஃபைடு ஆட்கள் இருந்தாலும், பொது நிர்வாகத் திறன் படைத்தவர்கள், பொதுவாக ஒழுங்குபடுத்தி, கோ-ஆர்டினேட் செய்வதற்குத் தேவையாக இருக்கிறது, அவர்களை அமர்த்துவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். எனவே, இப்பொழுது இருக்கிற முறை தொடர்ந்து நடப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் சீப் இன்ஜினியர் பதவிக்கு 4, 5 பேர்கள் வேண்டுமா என்பதுகூட ஒரு கேள்வி, சிக்கலான பிரச்சினையாக அது இருக்கிறது. அத்தனை பதவிகள் இருப்பதில் கூட சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இப்பொழுது மின்சார வாரியத்திலே, கன்ஸ்ட்ரக்‌ஷன், ஜெனரேஷன், மற்றும் டிஸ்டிரிபூஷன் என்ற பிரிவுகளுக்கு வேண்டுமானால் சீப் இன்ஜினியர்கள் வைத்துக்கொள்ளலாம். மற்றபடி வேறு விஷயமாக அதில் அவசியமற்ற பல சீப் இன்ஜினியர்களை வைத்துக் கொள்வதனால் கோ-ஆர்டினேஷன் பிரச்சினைகள்தான் உண்டாகுமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

அடுத்தபடியாக, முதலமைச்சர் அவர்கள், இன்னும் 2 வருடத்திற்குள்ளாக தமிழகத்திலுள்ள கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படுமென்று அறிவித்து இருக்கிறார்கள். இது வெறும் அரசியல். விளம்பரத்திற்காக செய்யப்பட்டதேயொழிய நடைமுறையில் செயல்படுத்தக்கூடியது என்ற முறையில் செய்யப்பட்ட அறிவிப்பாகத் தெரியவில்லை. 1968-69-ல் 57,756 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1969-70-ல் பெறும் 50,000 விசையேற்றங்களுக்கே மின் இணைப்பு வழங்க திட்டமிட்டுள்ளோம். இது போலவே கிராமங்களின் கதை. ஆளும் கட்சி உறுப்பினர் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள், நடைமுறைக்கு ஒவ்வாதது என்று. இப்பெழுது ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் பொது மக்களுக்கு வாக்குறுதிகளை அளிப்பதில் சமர்த்தர்கள். எனவே, இது விளம்பரத்திற்காக செய்யப்பட்டதேயொழிய நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான திட்டங்கள் இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் காணப்படவில்லை என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள், தொழில் ஆரம்பிப்பதற்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் அதில் குறிப்பாகச் சென்னையைச் சேர்ந்த அனல் மின் சக்திப் பகுதியில் நிலவிவரும் கட்டணங்கள்குறித்து பரிசீலிக்கவேண்டுமென்றும் அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், நாம் தொழிற்சாலைகளைப் பரவலாக தமிழகம் முழுமையும் அமைக்கவேண்டுமேயொழிய சென்னையிலேயே அமைத்து விடக்கூடாது. சென்னையிலே தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஒரு குழு ஏற்படுத்தி வசதி செய்ய இருப்பதால், சென்னையிலே மட்டும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு

ஊக்கம் அளிப்பதாகத்தான் இது எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, அதை மற்ற பகுதிகளில் தமிழகத்தில் பரவலாக அமைப்பதற்கு நமது மின்சார வாரியம் என்ன செய்யவேண்டும் என்று பரிசீலனை செய்தால் அது நலமாக இருக்குமேயொழியே இங்கேயே தொழில்கள் குவிந்தால் அது மக்களுக்கு அதிக பிரச்சினைகளை உண்டாக்கும். அது தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கோ, முன்னேற்றத்திற்கோ ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் அமையாது என்று குறிப்பிட விரும்புகிறேன் .

அடுத்தபடியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நமது உற்பத்தித் திறன் சுமார் 500 மெகவாட் அளவு தேவைக்கும் குறைவாக இருக்குமென்று கூறப்படுகிறது. அப்படி இருக்குமென்று சொல்லுகின்ற நேரத்தில், அதற்குப் பரிகாரம் காண ஏதாவது திட்டங்கள் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோமா என்றால் அதைப்பற்றி எந்த விதமான விளக்கமும் இல்லை. நாம் என்றுமே இப்படி டெஃபிசிட்டாக, தேவையில் குறைவாக இருந்துகொண்டிருக்கலாமா? இதற்குப் பரிகாரம் தேட வேண்டாமா? அதற்கு திட்டங்கள் ஏதாவது உள்ளதா? அது பரிசீலிக்கப்படுகிறதா? எந்தவிதமான விளக்கமும் இல்லை. அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி விளக்கமாகக் கூறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற பல தொழிலாளர்களுக்குப் பிரச்சினைகள் நிறைய இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, பிராஜக்ட் வேலையில் பணியாற்றுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அந்த பிராஜக்ட் வேலையில் வேலை முடிந்துவிட்டால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அல்லது இன்னொரு பிராஜக்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டால் அங்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் முன்னால் கூறினார்கள். ஆனால், ரெகுலர் சிஸ்டத்திலேயே காலி இடம் ஏற்படும்போது அனுபவம் உள்ளவர்களை சேர்த்துக்கொள்ள வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எலெக்ட்ரிசிடி போர்ட் செக்ரட்டேரியட்டிலே, அதாவது தலைமைச் செயலகத்திலே, பணியாற்றுகின்ற அலுவலர்கள் குறைந்தபட்சம் பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. இதற்கு முன்னர் அக்கவுண்ட்ஸ் விங்கிலே பல பேரை வெளி இலாகாக்களிலிருந்து டெப்படேஷனில் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் திரும்ப அவர்களுடைய இலாகாக்களுக்கு அனுப்பப்படவில்லை. அவர்களில் பலரும் மினிமம் குவாலிஃபிகேஷன் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, அக்கவுண்ட்ஸ் விங்கில் இருக்கிற அனைவருக்கும் மினிமம் குவாலிஃபிகேஷன் வேண்டுமென்று சேரவேண்டும். எனவே அங்கு மினிமம் குவாலிஃபிகேஷன் உள்ளவர்களைத்தான் இருக்கச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுவாக, மின்சார வாரியத்திலே எங்கே எடுத்துக்கொண்டாலும், எந்தத் திட்டம் நடைபெறுவதற்கும் தேவையான சாமான்கள் இல்லையென்று சொல்கிறார்கள். லைன் மெட்டீரியல்ஸ், சாமான்கள் இல்லையென்ற குறை இருந்துகொண்டேயிருக்கிறது. அதிலும் குமரி மாவட்டத்திலே குறிப்பாக தக்கலை பஞ்சாயத்து யூனியனிலும் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனிலும் பல ஊர்களுக்கு மின்சாரத் தொடர்பு வேண்டுமென்று பலமுறை விண்ணப்பித்தும் பல ஆண்டுகளாக நடந்து முடியவில்லை. ஏனென்று விசாரித்தால் மெட்டீரியல்ஸ் இல்லை; தூண் இல்லை, கம்பி இல்லை, டிரான்ஸ்பார்மர் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து கொண்டிருப்போமானால் 2 வருடத்திற்குள் எவ்வாறு மின் வசதி செய்து கொடுப்போம் என்பது புலப்படவில்லை. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே விசையேற்றங்கள் அதிகமாக இல்லை. இருக்கிற ஒரு சிலருக்குக்கூட காலாகாலத்தில் கிடைப்பதில்லை. காரணம் கேட்டால் அதற்குரிய டிரான்ஸ்பார்மர்கள் இல்லை, வேறு மெட்டீரியல்ஸ் இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு, வீட்டு வசதிக்காக மீட்டர் அளிப்பதில்லை. அதன் காரணமாக, மின் இணைப்பு கிடைப்பதில்லை. மீட்டர் இல்லாமையால், மின் இணைப்பு பெற முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரி பல்லாயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். வேறு சிலர் சொந்த மீட்டர் வாங்கி வைக்கிறார்கள். மீட்டருக்கு முன்னாலே டெப்பாசிட்டாக எலெக்டிரிசிடி போர்டுக்குக் கட்டிய பணம் சொந்த மீட்டர் வைத்திருப்பவர்களுக்குத் திருப்பி அளிக்கப்படுவதில்லை என்று பரவலாக புகார் கூறப்படுகிறது. ஆகையால், மீட்டருக்காக முன்னால் கட்டப்பட்ட டெபாசிட் பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த பத்மனாபபுரம் என்ற நகரசபையில் உள்ளவர்கள் அவரவர்கள் வீட்டுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கட்ட மூலச்சல் என்ற இடத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு டெப்புட்டி சீப் அக்கவுண்டன்ட் ஆபீசர் என்று ஒரு அதிகாரி இருக்கிறார். அவருடைய அலுவலகத்திற்குச் சென்றுதான் இந்த மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தவேண்டிய நிலை இருக்கிறது. நகரசபை எல்லைக்குள்ளேயே மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்ற குறை இருக்கிறது. நிச்சயமாக மக்கள் வசதிக்காக அந்த எல்லைக்குள் மின்சாரக் கட்டணம் வசூலிக்க ஒரு அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் எங்கள் ஊரிலே ஸ்டேட் ரீ-ஆர்கனைசேஷனுக்கு முன்னால் 1956-க்கு முன்னால் திருவாங்கூர்-கொச்சி ஒப்பந்தப்படி கருங்கல்-கோழிக்கோடுக்கு 11 கே. வி. லைன் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. அதன்படி வெட்டிய மரங்களுக்குள்ள நஷ்டஈடு கொடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் 12 வருடங்களாகியும் எடுக்கப்படவில்லை, மின்சார வாரியம் அக்கறை எடுத்ததாகவும் தோன்றவில்லை. அதைப் பரிசீலித்து நஷ்டஈட்டை மின்சார வாரியம் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

வெளியீடு—30—7—1970]
Issued—30—7—1970]

தமிழ் நாட்டு ஆவணக் காப்பகம்
443/70
3 - OCT 1970
4 SO (B)
எழும்பூர், சென்னை
1029

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1969 ஆகஸ்ட் 18

Monday, 18th August 1969

தொகுதி XXI—எண் 3

Volume XXI—No. 3

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4. Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & CO., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co. .Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri D. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, .Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. AMI BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.